

# ரப்பர்

ஜெயமோகன்

# ரப்பர்

ஜெயமோகன்

மின்னூலாக்கம் -முரளி

நற்றிணை பதிப்பகம்

ரப்பர் • நாவல் • ஜெயமோகன் • © ஜெயமோகன் • முதல் பதிப்பு: 1990 • நற்றிணை முதல் பதிப்பு: ஜூலை 2013 • இரண்டாம் பதிப்பு: பிப்ரவரி 2014 • மூன்றாம் பதிப்பு: ஆகஸ்ட் 2016 • வெளியீடு: நற்றிணை பதிப்பகம் (பி) லிட்., • எண்: 6/84, மல்லன் பொன்னப்பன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600005.

Rubber • Jeyamohan• © Jeyamohan • First Edition: 1990 • Natrinai First Edition: July 2013 • Second Edition: February 2014 • Third Edition: August 2016 • Size: Demy 1/8 • Paper: 18.6 kg maplitho • Pages: 176 • Published by Natrinai Pathippagam Pvt. Ltd., No. 6/84, Mallan Ponnappan Street, Triplicane, Chennai-600005 • Phone : 044-2848 2818 • Mobile: 90956 91222

• E-mail: natrinaipathippagam@gmail.com

• Website: natrinaipathippagam.com

• Printed at: Sai Thendral Printers, Chennai - 600005 • Mobile: 90954 91222, 90956 91222

• E-mail: saithendralprinters@gmail.com

• இணையம் மூலம் புத்தகம் வாங்க : www. natrinaibooks.com



## ஜெயமோகன்

ஜெயமோகன் 1962 ஏப்ரல் 22ஆம் தேதி கன்னியாகுமரியில் உள்ள அருமனையில் பிறந்தார். தந்தை பெயர் எஸ். பாகுலேயன் பிள்ளை. அம்மா பி. விசாலாட்சி அம்மா.

இவர் பள்ளி நாள்களிலேயே எழுத ஆரம்பித்தார். முதல் கதை ரத்னபாலா என்ற சிறுவர் இதழில் வெளிவந்தது. இக்காலகட்டத்தில் குமுதம், விகடன், கல்கி இதழ்களில் பல கதைகள் வெளிவந்தன.

1985இல் சுந்தர ராமசாமி அறிமுகமானார். இவரை இலக்கியத்துக்குள் ஆற்றுப்படுத்தினார். 'கைதி' என்ற கவிதை 1987இல் 'கொல்லிப்பாவை' இதழில் வெளியாயிற்று. 1987இல் கணையாழியில் 'நதி' அசோகமித்திரனின் சிறு குறிப்புடன் வெளியானது. அதன் பிறகு 'படுகை' 'போதி' முதலிய கதைகள் வந்து கவனிக்கப்பட்டன.

1988இல் எழுதிய ரப்பர் நாவலை 1990இல் அகிலன் நினைவுப் போட்டிக்காக சுருக்கி அனுப்பினார். அதற்கு விருது கிடைத்தது. அதன் பிறகு இவரின் மகத்தான ஆக்கமான விஷ்ணுபுரத்தை எழுதி தமிழ் இலக்கியத்தின் முக்கியமான ஆளுமையாக உருவெடுத்தார்.

நாவல்கள், குறுநாவல்கள், சிறுகதைத் தொகுப்புகள் புதுக்காப்பியம், ஆன்மிக நூல், தத்துவ நூல், இலக்கிய விமர்சனம், வாழ்க்கை வரலாறு, பயண நூல், நாடகம் என எழுபதிற்கும் மேற்பட்ட நூல்கள் இதுவரை வெளியாகியுள்ளன.

கதா, சம்ஸ்கிருதி சம்மான் போன்ற பல முக்கிய விருது களைப் பெற்றுள்ளார். இவரின் விஷ்ணுபுரம் நாவல் இந்திய அளவில் மிகச் சிறந்த பத்து நாவல்களில் ஒன்றாக விமர்சகர் களால் கணிக்கப்படுகிறது.

மனைவி: அருண்மொழி நங்கை. குழந்தைகள்: அஜிதன் மற்றும் சைதன்யா. தற்போது குடும்பத்துடன் நாகர்கோவிலில் வசித்துவருகிறார்.

ஆற்றூர் ரவி வர்மாவுக்கும்
திருமதி ஸ்ரீதேவி வர்மாவுக்கும்

அன்புடன் ஜெயமோகன்

# ஆகாயப் பறவை

1988இல் நான் காசர்கோட்டில் இருந்து வேலைமாற்றலாகி வந்தேன். அதன்பின்னர் அங்கே செல்ல நேரிட்டதில்லை. அந்த நண்பர்களை வேறு இடங்களில் பார்த்துக்கொண்டிருந்தது ஒரு காரணம். இந்த வருடம் காசர்கோட்டுக்குச் சென்றேன். நான் வாழ்ந்த காசர்கோடு பூமியின் மீதிருந்து அழித்துத் துடைக்கப் பட்டிருந்தது. என் கண்முன் இருந்தது வேறொரு நகரம். அந்த காசர்கோடு என் தலைமுறையின் நினைவில் இருக்கக்கூடும். ஒருவேளை நினைவுகள்கூட மாறியிருக்கலாம்.

காசர்கோட்டில் பழைய தொலைபேசிநிலையத்தின் ஓய்வறைக் குச் சென்றேன். அங்கே இப்போது ஏதோ ஓர் அலுவலகம். அங்கேதான் ரப்பர் நாவலை எழுதினேன் என்று கூடவந்த நண்பரிடம் சொன்னேன். மழை பெய்துகொண்டே இருந்த நாட்கள். அலுவலக அறையிலும் என் தனித்த இல்லத்திலுமாக எழுதிக்கொண்டே இருந்தேன்.

நாவல் வாசிப்பதும் எழுதுவதும் அழியாக்கனவைக் காண்பது போல. மாதக்கணக்கில் ஒரு கனவில் வாழும் பேரனுபவம். அவ் வனுபவத்தை எனக்களித்த மகத்தான நாவல்கள் பல உள்ளன. ருஷ்ய நாவல்களில் தோய்ந்திருந்த நாளில் ரப்பரை எழுத ஆரம் பித்தேன். 1984இல். என் இருபத்திரண்டு வயதில். பின்னர் 1990இல் அது அகிலன் நினைவுப்பரிசு பெற்று தாகம் பிரசுரத்தாரால் நூலாக ஆக்கப்பட்டது.

அந்த முதிரா இளமைக்காலத்தின் மனஎழுச்சிகள் மொழியில் இருப்பதை பார்க்கிறேன். ஒரு கதாபாத்திரத்தை எழுதும்போது அதுவாக ஆகி, அதைத்தொடர்ந்து சென்றுவிடுவது நிகழ்ந்திருக் கிறது. திரேஸாகவும் குளங்கோரியாகவும் குழந்தை பொன்னு வாகவும் மரணப்படுக்கையில் கிடக்கும் பெருவட்டராகவும் எதிரெதிர் எல்லைகளுக்குச் செல்லமுடிந்திருக்கிறது. இந்நாவலின் கலைத்தரத்தை அந்த ஒன்றுதல்களே நிகழ்த்தியிருக்கின்றன.

ரப்பர் நாவலின் மையம் பிரான்ஸிஸ்தான். ஆரம்பம் முதலே தயக்கமும் குழப்பமும் கொண்டவனாக இருக்கிறான். இயல்பான நன்மனதுக்கும் காமத்துக்கும் பல்வேறுவகையான அகச்சிக்கல் களுக்கும் நடுவே அவன் அலைமோதுகிறான். அவனில்தான் ஒரு நூற்றாண்டு திசைமாறும் தருணத்தின் தத்தளிப்பு முழுக்க உள்ளது.

அவன் அடையும் ஒரு தரிசனமே உண்மையில் இந்நாவல். ஆற்றின் குறுக்காக காரைக் கொண்டுசெல்லும்போது கூச்சலிடும் குழந்தைகளின் குதூகலம் கண்டு அவன் மலரும் கணம். இந்நாவலுக்கு உந்துதலாக இருந்ததே நான் என் இளமையில் மாறப்பாடி ஆற்றின் குறுக்காகச் சென்ற சாலையில் கண்ட ஒரு காட்சிதான். கார் மறுபக்கம் சென்றபின் சன்னல்வழியாக குழந்தைகளுக்குக் கையாட்டிச் சிரித்த அந்த இளைஞன் அவன் ஒரு நாவலாக மாறியிருப்பதை அறிந்திருக்கமாட்டான்

'ஆகாயத்துப் பறவைகள் விதைப்பதில்லை' என்னும் பைபிள் வரியில் அவன் தன்னை உணர்கிறான். நம் தர்க்கத்தை மீறி மன ஆழத்தில் நுழையும் ஒரு வரி ஒரு மந்திரம் போல ஆகிவிடுகிறது. அந்த வரியை அர்த்தம் இழந்து அரற்ற ஆரம்பிக்கிறோம். அவ் வரியை அரற்றும் பிரான்ஸிஸின் மனம் '... ஆகாயத்துப் பறவைகள். ஆகாயத்தில் ஒரு பறவை!' என்று ஓர் உச்சத்தை வந்தடைந்து திடுக்கிட்டு நிற்கிறது. அதுதான் நாவலின் உச்சம்.

அன்றைய நான் ஒரு பிரான்ஸிஸ். நான் சென்றடைந்த புள்ளி அந்த பைபிள் வரி. அதை நாவலாக ஆக்கியபின் அந்த வரி என்னுடையதாக ஆகிவிட்டது. கிறிஸ்துவின் ஒரு வரிக்கு உரிமை கொண்டாடக்கூடியவனாக ஆவதென்பது ஒருபேறுதான்.

**ஜெயமோகன்**
***ஜூன் 23, 2013***

"எனவே நான் உங்களுக்குச் சொல்கிறேன்.
நீங்கள் மனந்திரும்பி குழந்தைகளைப் போல ஆகாவிடில்
பரலோக ராஜ்ஜியத்திற்குத் தூரமாக இருக்கிறீர்கள்."

# ... 1 ...

'தோட்டம்' என்று ஆங்கில எழுத்துகள் பொறிக்கப்பட்ட பெரிய இரும்பு கேட் திறந்து கிடந்தது. டிரைவர் ஹாரனை ஒருமுறை அழுத்திவிட்டு, காரை சாலையிலிருந்து திருப்பி நுழைத்தான். கப்பிக்கல் பாதை மீது பரவிக் கிடந்த ரப்பர் சருகுகள் சரசரவென்று நெரிந்தடங்கி, காருக்குப் பின்னால் தவித்தபடி ஓடிவந்து, மெல்ல அமைதியடைந்து படிந்தன. வளைந்து சென்றது பாதை. தார்ச்சாலையின் வெயிலை முற்றுமாக மறக்கடிக்கும் குளிரான இளம் இருட்டு. காய்ந்துகொண்டிருக்கும் ரப்பர்ப் பாலின் மாமிச மணம். ரப்பர் மரங்கள், உடல் முழுக்க வடுக்களுடனும், கரிய கறைகளுடனும் வரிசை வரிசையாக, ராணுவ அணிவகுப்பு போல, பின்னால் நகர்ந்து மறைந்தன. கிளைகள் நெருங்கி இலைகள் கரைபோல அடர்ந்து பரந்திருந்தன. காற்றின் பாய்ச்சலில் இலைப் பரப்புக்கு மேலே சலசலப்பொலி கேட்டது. வற்றிப்போன நீரோடை யின் விளிம்பு போலச் சற்று தாழ்வான பாதையின் விளிம்பில் வேர் நுனிகள் அடர்ந்து தெரிந்தன.

கார் வேகமிழந்து, மைதானம் போல விரிந்து கிடந்த, கடப்பைக் கற்களால் அமைக்கப்பட்ட, நெற்களத்தை அடைந்தது. கார் சக்கரங்கள் உருளும் ஒலி மென்மையாக மாறியது. இடதுபக்கம் கான்கிரீட் கூரை போடப்பட்ட பெரிய கார்ஷெட். ஒரு மாருதி பிஸ்கட் நிறத்தில் கிடந்தது. அதன் தெளிவான முகக் கண்ணாடிப் பரப்பில் ரப்பர் மரங்களின் இலை நிழல்கள் அசைந்து கொண்டிருந்தன. ஒரு யமஹா பைக்கும் இரு சைக்கிள்களும் நின்றிருந்தன. வலது பக்கம் மிகப்பெரிய மூன்று வைக்கோல் போர்கள்; கருகிய சாம்பல் நிறத்தில் உச்சியில் மண் கலயம் கவிழ்த்தப்பட்ட நுனியுடன், பகோடாக்கள் போல நின்றிருந்தன. அதற்கப்பால் அஸ்பெஸ்டாஸ் கூரை போடப்பட்ட இரு கட்டிடங்கள். ஒன்று, கிட்டத்தட்ட அரை பர்லாங் தூரத்திற்குக்

கோட்டை போல இருந்தது. அது தொழுவாக* இருக்க வேண்டும். மற்ற கட்டிடம் சரக்கு அறையோ களஞ்சியமோ ஆக இருக்க வேண்டும்.

களத்திலிருந்து சிமிட்டிப்படிகள் இறங்கின. மழையின் தாக்குதல் பட்டுப்பட்டு சொர சொரப்பாகிப் போன, நீளமான, வெண்ணிறப்படிகள். கீழே இன்னொரு பெரிய முற்றம். சிமிட்டிப் பாத்திகளால் விளிம்பு கட்டப்பட்ட கான்கிரீட் தரை. குரோட்டன்ஸ்கள் வெல்வெட் திண்டுகள் போல. அவைகளின் மண்ணில் நீரூட்டப்பட்ட தடம் காய்ந்திருந்தது. அங்கு அதிக வெயில் அடிப்பது போலப் பட்டது. முற்றத்தின் மறுபுறம், நீளமான வெண்ணிறச் சலவைக் கல்லாலான படிக்கட்டுகள். அவை தூய வெண்சுதையால் கட்டப்பட்ட பிரமாண்டமான மாளிகையைச் சென்று அடைந்தன.

பிரிட்டீஷ் மோஸ்தர் கட்டிடம் அது. சிற்ப வேலைப்பாடுகள் வார்னீஷில் மின்னும் பெரிய அலங்கார உத்தரத்தை வெண்ணிற இரட்டைத் தூண்கள் தாங்கி நின்றன. அதன்மீது இரண்டாம் மாடி அமர்ந்திருந்தது. அகலமான கண்ணாடி ஜன்னல்கள் விரியத் திறந்து, சிவப்பு நிறச் சல்லாப் படுதாக்கள் சிலுசிலுத்தன. கருஞ்சிவப்பு ஈட்டிமரக் கதவுகள்மீது பித்தளையினாலான சிற்ப வேலைப் பாடுகள். வெண்கலத்தாலான ஜன்னல் கம்பிகள் பூச்சு பெற்றுப் பொன் போன்றிருந்தன. முகப்பில் செவ்வக வடிவமான, நான்கு புறமும் திறந்த ஹால். சிவந்த தரைக்கம்பளத்தின் நான்கு சிம்மாசனங்கள். சிம்மாசனங்களேதான். அமருமிடத்தில் சிவப்பு வெல்வெட் மெத்தைகளுடன், பின்புறத்தில் பித்தளை வளைவு களுடன், கைப்பிடிகளில் வாய் திறந்து கர்ஜிக்கும் சிவப்புக்கல் கண்கள் ஜ்வலிக்கும் பித்தளைச் சிம்மங்களுடன், அமரத் தயங்கும் படியாக.

ராம் தயக்கத்துடன் முற்றத்தில் நின்றான். டிரைவர் மேலே களத்தில் காரை நிறுத்திவிட்டுப் பானெட்டைத் திறந்து என்னவோ செய்துகொண்டிருந்தான். ஒருவிதமான அமைதியின்மை மனசைப் படபடக்கச் செய்தது. கர்சீப்பை எடுத்து முகம் துடைத்தபடி, சூட்கேஸை கைமாற்றிக் கொண்டான்.

திறந்த பெரிய நுழைவாசலுக்கு உட்புறமாக ஒன்றன்பின் ஒன்றாக வாசல்கள் தெரிந்தபடியே சென்றன; செவ்வக வடிவக் குகையின் மறுமுனை ஒளி தெரிவதுபோல, தொலைவில் புறக்கடை வாசல் திறந்து தெரிந்தது. அங்கு ஒரு வாழையின் இலை அசைவது தெரிந்தது.

---

* மாட்டுத் தொழுவம்

ராம் செருப்பைக் கழட்டினான். தயங்கியபடி படி ஏறினான். நார்க் கம்பளத்தின் மொறு மொறுவென்ற ஸ்பரிசம் காலுக்கு இதமாக இருந்தது. சட்டென்று அழைப்பு மணியைக் கண்டான். அழுத்தியபின் காத்து நின்றான். உட்புற வாசல்களில் எங்கோ ஒரு தலை எட்டிப் பார்த்தது. பிறகு ஒரு நடுத்தர வயதுப் பெண் – வேலைக்காரி – மெதுவாக நடந்து வந்தாள். எட்டிப் பார்த்து, "வாங்க" என்று அனிச்சையாகச் சொல்லி, உள்ளே பெரிய சதுர வடிவத்தில் இருந்த ஹாலைக் காட்டினாள். காபி நிற வெல்வெட் உறைகளுடன், தலையணை திண்டுகள் சகிதம் பெரிய சோபாக்கள் கிடந்தன. ராம் தயங்கியபடி அமர்ந்தான். பொசுக்கென்று சோபா அணைத்துக்கொண்டது. மொத்தமாக அந்த அறைக்கு ஒரு மியூசிய களை இருந்தது. தவிட்டு நிறச் சுவர்கள். இதமான ஒளி. நேர் முன் சுவரில் மிகப் பெரிய எட்டடிக்குப் பதினாறடி அகலத்தில் – ஒரு எண்ணெய்ச் சாய ஓவியம். 'ரெம்ப்ரான்ட்' என்று கையெழுத்து தெரிந்தது. பெரிய பித்தளைச் சட்டம் மினுங்கியது. கூர்ந்து பார்த்தபோது, கீழே எழுத்துகள் தெரிந்தன. 'ரெம்ப்ரான்ட் த அட்ரேஷன் ஆஃப் த மாகி' ரெம்ப்ராண்டின் மகத்தான ஓவியத்தின் விஸ்வரூப நகல். வெண்ணிறத் தாடி, தலைமுடியுடன் கூடிய தீர்க்கதரிசி தரையில் முழந்தாளிட்டு அமர்ந்து, கன்னிமேரியின் மடியில் நிர்வாணமாக இருந்த மனித குமாரனைப் பரவசமான முகத்துடன் பார்த்துக்கொண்டிருந்தார். சுற்றி நின்ற முகங்கள் முழுக்க இருளில் மறைந்தும் மறையாமலும் தெரிந்தன. ஆனால் எல்லா முகங்களிலும் பயமும் பக்தியும் ஒருவித தவிப்பும் தெளிவாகத் தெரிந்தது. தீர்க்கதரிசியின் பெரிய ஜரிகை அங்கியின் பொன்னிறச் சுருங்கல்கள் கான்வாசைப் பெருமளவு நிறைத்திருந்தன. ஏதோ கனவில் இருக்கும் உணர்வு ஏற்பட்டது. தனிமை உணர்வு நெருடியது. வேலைக்காரி மறைந்ததை ராம் கவனிக்கவில்லை. தவிட்டுநிற வார்னீஷ் மின்னிய கூரையிலிருந்து மின்விசிறி தொங்கி, ஒரு இளஞ்சிவப்பு நிற புஷ்பம் போல அதிவேகமாகச் சுழன்றது. டீபாயின் மீது கண்ணாடிக் கோளத்தின் உள்ளே அதன் பிம்பம் தவித்தது. காகிதங்கள் படபடக்க, பத்திரிகைகள் கட்டிப் போடப் பட்ட பட்சிகள் போல ஒலி எழுப்பின. வீடு முழுக்கக் கடும் அமைதி நிலவியது; அங்கு தெரிந்த கம்பீரத்துடன் படாடோபத் திற்கும் முற்றிலும் பொருந்தும்படி.

மாடிப்படிகள் ஒலித்தன. மூச்சுக்குள் முனகப்படும் பாடல் ஒலியுடன், திரை விலகி, சந்தன நிறப் பட்டு வேட்டியும் ஜிப்பாவும் அணிந்த இளைஞன் வந்தான். கரிய, மெலிந்த, பெண்மை தெரியும் நீள முகம். மென்மையான மீசை. புன்னகையுடன், "டாக்டரா?" என்றான்.

ராம் எழுந்தபடி, "ஆமாம்" என்றான்.

"வாங்க டாக்டர், தாத்தா உள்ள கெடக்குதாரு" என்றபடி இளைஞன் முன்னே வழிகாட்டிச் சென்றான்.

பக்கவாட்டு அறைகள் வழியாகச் சென்றபோது எல்லா அறைகளிலும் தெரியும் அளவுமீறிய செல்வச் செழிப்பு ராமை நெருடிக்கொண்டே இருந்தது.

"எனக்கு பேரு லிவி. டேவிட் லிங்ஸ்டன். லிவின்னு எல்லாரும் விளிப்பாவ."

"என்ன செய்றீங்க?"

"மெட்ராஸ்ல எஞ்சினியரிங் படிக்குதேன், செகன்ட் இயர்."

லிவியின் பின்புற அசைவு, குரல் எல்லாவற்றிலும் பெண்மையும் விரும்பத்தக்கதல்லாத ஏதோ ஒன்றும் இருந்தன.

இரண்டு பெரிய ஜன்னல்கள் வெளிப்புறத் தோட்டத்தை நோக்கித் திறக்கும், விசாலமான, வெளிச்சமான, அறையில்; ஜன்னலோரமாகப் போடப்பட்டிருந்த பெரிய சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட கட்டிலில், கருநீலநிற மெத்தை மீது, மார்புவரை கம்பளியால் போர்த்தியபடி, ஒரு கிழவர் படுத்திருந்தார். சன்னமாகக் கரிய ரோமங்கள் சிதறி, வளைந்து நின்ற பெரிய இரட்டை மண்டை. உறுதியான துருத்திய கன்ன எலும்புகளும், அகன்ற தாடையும் கொண்ட, கன்னம் ஒட்டிய முகத்தில் பருந்தின் அலகு போல மூக்கு. ஒரு வாரத் தாடி கருமையும் வெண்மையும் கலந்து பரவியிருந்தது. அகலமான காதுகளில் கரிய ரோமங்கள். இரு சிப்பிகள் போல மூடிய இமைகள். உள்ளமுந்திய ஒன்றோடொன்று ஒட்டிய உதடுகள். முகம் ஒருபுறமாக இலேசாக இழுத்துக்கொண்டிருப்பது போலத் தோன்றியது.

"என் தாத்தா" என்றான் லிவி ஆங்கிலத்தில். "ரொம்ப வயதானவர், எண்பது தாண்டிவிட்டது. நேற்றுவரை நன்றாக நடமாடிக்கொண்டுதான் இருந்தார். இன்றைக்குக் காலையில் எழும்ப முடியவில்லை. அதனால்தான் உங்களைக் கூப்பிட்டேன். பெரிய டாக்டர் இங்கே மாதம் ஒருமுறையாவது வராமலிருக்க மாட்டார். அப்பாவிற்கு மிகவும் நெருங்கிய நண்பர். பெரிய டாக்டர் நாகர்கோவில் போயிருப்பதாகச் சொன்னார்கள்."

"ஆமாம்; மிஸ்டர் பிள்ளையின் ஆஸ்பத்திரியில் ஒரு ஆபரேஷன்."

"நாளைக்கு வந்துவிடுவாரா?"

“என்று கருதுகிறேன்.”

“பெரிய டாக்டர் ரொம்ப கெட்டிக்காரர்.”

ராம் பதில் பேசாமல் கட்டிலின் அருகே நாற்காலியில் அமர்ந்தான். மெல்லப் போர்வையை விலக்கினான். பெரிய விலா எலும்புகள் வரிவரியாகப் புடைத்த மார்பும், எலும்புகள் புடைத்து இறுகிய தோள்களும் தெரிந்தன. நுணுக்கமாய் அடர்ந்த தோல் சுருக்கங்கள். அவன் அவரது கைகளை வெளியே எடுத்தான். மிக நீளமான, கன்னங்கரிய கரம். புஜங்கள் தொளதொளவென்று சதை தொங்கி அசைந்தன. வடம் போல ஓரிரு முடிச்சுகளுடன் பெரிய நரம்பொன்று தோளில் தொடங்கி புஜம் வழியாக ஓடி, முழங்கை தாண்டி, கிளைகளாக விரிந்து, மணிக்கட்டை நோக்கிப் பரவி யிருந்தது. விரல்கள் கோணலாக விலகி வளைந்திருந்தன. நகங்கள் சிப்பிகள் போல வளர்ந்து சிதிலமாகியிருந்தன. அவை தன் விரல் களைவிட அரைப்பங்கு அதிக நீளம் என்பதை ராம் கவனித்தான். அவரது காலகட்டத்தில் முதல் பார்வையிலேயே ஒருவனை சில்லிட வைக்கும் ராட்சத உருவினனாக அவர் இருந்திருக்கலாம். அவர் மார்புச் சதைகள் இப்போதும் இறுக்கமாகவே இருந்தன. பள்ளமாய், இரு மடிப்புகளுடன், ஒடுங்கிய வயிறு.

ராம் அவர் நாடியைப் பரிசோதித்தான். தடுமாறித் தாவிக் கொண்டிருந்தது.

அவர் மெல்லக் கண்களைத் திறந்தார். தலையைத் திருப்பி ராமைப் பார்த்தார். சற்று நேரம் உயிரற்றது போலிருந்த, நரைத்துப் போன அலுமினிய நிறக்கண்கள் அவன்மீது பதிந்திருந்தன. உதடுகள் விரிந்தபோது முகம் இழுத்துக்கொண்டிருந்ததினால் அவர் கேலியாகப் புன்னகைப்பது போலிருந்தது.

“ஆரு, லிவியா?” என்றார். நடுக்கம் ஊடுருவி விட்டிருந்தது. எனினும் கனத்த குரல் ஏதோ மிருகத்தின் உறுமலை நினை வுறுத்தியது.

“ஆம் தாத்தா.”

“இதாருல, டாக்கிட்டரா?”

“ஆம தாத்தா” என்றான் லிவி. ஆனால் அருகே வரவில்லை.

“இதெல்லாம் என்னத்துக்கு!... ம்ம்...” என்று முனகினார்.

ராமை மீண்டும் உற்றுப் பார்த்தார்.

ராம் போர்வையை விலக்கி, கால்களைப் பார்த்தான். சுண்டு விரலால் மூட்டிலும் முழங்காலிலும் சுண்டிப் பார்த்தான்.

எலும்புக்கணுக்களில் நீர் கோத்துக் கொண்டுவிட்டது. கணுக் காலும் வீங்கிவிட்டிருந்தது. மேற்பாதம் சுருக்கங்கள் விரிந்து மினுங்கியது. உட்புறப் பாதத்தில் வளைவு நிரம்பி வீக்கம். மெல்லத் தொட்டு, "தொடுறது தெரியுதா?" என்றான்.

"ம்ம்..." அவர் அசிரத்தையுடன் சொன்னார்.

விரல்களை லேசாய் ஒடித்து, "வலிக்குதா" என்றான்.

"ம்ம்..." என்றார் கிழவர்.

"என்ன செய்யறது?" என்றான் ராம் போர்வையால் அவர் கால்களை மூடியபடி.

"காலில் நல்ல தணுப்புண்டு. நீரு கெட்டிப் போச்சு..." என்றார் யாரிடமோ கூறுவது போல. பின்னர் அவர் ஒரு விழி அவனை நோக்கித் திரும்பியது. மறுவிழி வேறெங்கோ பார்த்தது. அவர் அவனிடமும் அவனுக்கும் அப்பால் நிற்கும் இன்னொருவரிடமும் பேசுவது போலிருந்தது.

"ம்ம்... மொகமும் பாதமும் வீங்கினா காலன் வாற சமயம் ஆச்சிண்ணு சொல்லுவாவ, வரட்டும். ம்ம்... வந்தாக் கொண்டு போவான்... செய்யிறதுக்கு இன்னி இஞ்ச ஒண்ணும் பாக்கி இல்ல. பிள்ளியளாச்சு அவிய பாடாச்சு... இன்னி கெடந்தும் காரியமில்ல... போற நேரந்தான்... ம்ம்..."

மனம் படபடவென்று அடிக்க, ராம் அவர் இதயத் துடிப்பைப் பரிசோதித்தான். அவர் வயதின் முன் தன் கல்வி சிறியதாகிவிட்டது என்று பட்டது. கிளைவிட்டு, விழுது பரப்பி, பூமியை உறிஞ்சி உறிஞ்சி சாரம் கண்ட மரம். பூமி அதற்களித்ததை முழுக்கத் திருப்பிக் கேட்கும் கணம், காற்றை சிதறடித்தபடி பூமியை நோக்கிச் சரிகிறது. காலம் தீர்மானித்துவிட்ட பிறகு நான் என்ன இயலும்?

அவர் முகம் மேலும் கோணலாகியது. இமைகள் மூடின. இமை விளிம்பில் கசிந்து, கண்ணீர் இருபுறமும் சுருக்கங்களில் தயங்கிப் பரவி வழியத் தொடங்கியது.

ராம் வாயசைவால் லிவியிடம், "போலாம்" என்றான். மெலிய காலடிகளுடன் வெளியேறினான்.

"கொஞ்சம் தண்ணியும் ஒரு துண்டு சோப்பும்" என்றான் ராம் லிவியிடம்.

"கொண்டு வரச் சொல்லுதேன் இரியுங்க..." லிவி உள்ளே போனான்.

பக்கவாட்டில் தோட்டத்தை நோக்கி ஒரு வாசல் திறந்தது. ராம் படியிறங்கி நின்று பார்த்தான். பெரிய காய்கறித் தோட்டம். ஊதாநிற மினுமினுப்புடன் கத்தரிக்காய்களும், நுணுக்கமாய்ப் பூனைமுட்கள் பரவிய வெண்டைக்காய்களும் புதுசாக இருந்தன. ஈரம் போலத் தோற்றம் தரும் கருஞ்சிவப்புநிறக் கீரைகள் புதிய தளிர்கள்.

தண்ணீருடன் சோப்புடனும் லிவி வந்தான்.

"வீட்டுக் காய்கறித் தோட்டமா?" என்றான் ராம், கை கழுவியபடி.

"ஆமா, இஞ்ச ஆருக்கும் மலக்கரி* வலிய இஷ்டமில்ல. பின்ன, தாத்தா திம்பாரு... வேலைக்கு எண்ணு எண்ணும் நாப்பது அம்பது பேரு உண்டும். மீனும் எறச்சியும் வாங்கிப் போட்டுக் கட்டுமா? அதுக்குத்தான்..."

ராம் கையைத் துடைத்தபடி ஹாலுக்கு வந்தான்.

"இரியுங்க. காப்பி குடிச்சோண்டு போலாம்" என்றான் லிவி. பிறகு உள்ளே போனான். ராம் சோபாவில் அமர்ந்தான்.

லிவி திரும்பி வந்தான். "அம்மயும், அப்பனும் திருவனந்தபுரம் போயிருக்கினும். அங்க டன்லப்பு கம்பெனி மானேசருக்க மூத்த மொவளுக்குக் கல்லியாணம். நாளைக்குதான் வருவாவ. அப்பன் வந்தா கேப்பாரு, டாக்டர்கிட்ட காட்டினியா எண்ணு. அதாக்கும் விளிச்சது. வலிய டாக்டரு இல்லாத்ததுக்கு அப்பன் என்னமாம் செல்லுவாரோ என்னாமோ?" பேச்சின் இடையே லிவி உள்ளே எட்டிப் பார்த்தான். "காப்பிக்க கூட என்ன திம்பிய?"

"ஒண்ணும் வேண்டாம்."

"நீங்க பிராமின்ஸ் இல்லியா?... காப்பி குடிப்பியளா?"

"காப்பி மட்டும் போதும்."

"பளம் திம்பியளா?"

ராம் புன்னகைத்தான்.

லிவி, "வீட்ல அம்ம இல்ல அதாக்கும்" என்றான்.

"நீங்க எத்தனை பேரு?"

"நாங்க அஞ்சாளு. மூத்த மூணு அக்கமாருக்கும் கல்லியாணம் களிஞ்சாச்சு. ஒருத்தி லண்டன்ல இருக்கா. அவ அங்க டாக்டர்.

---

* மரக்கறி

அவளுக்க அஸ்பெண்டும் டாக்டர்தான். ரண்டாமத்தவ டெல்லியில. அவளுக்க அஸ்பெண்ட் ஐ.ஏ.எஸ்., மூணாமத்தவ ஃபிலாய்ல எஞ்சினியரா இருக்கா. அவளுக்க அஸ்பெண்ட் வலிய எஞ்சினியர்... போன மாசம் பேப்பரில படம்கூட வந்தது. என்னவோ வால்வு கண்டுபிடிச்சதுக்கு பிரைஸ் கிட்டியிருக்கு...”

“அதுசரி...”

“நாலாமத்தவன் எனக்கு நேர மூத்த அண்ணன். பிரான்ஸிஸ் எண்ணு பேரு. கேள்விப்பட்டிருப்பிய.”

“ஞாபகமில்லை...”

“எல்லாருக்கும் தெரியும் அவனை” என்றான் லிவி இறுகி மாறுபட்ட குரலில்; ஆங்கிலத்தில். “அவன் ஒரு தனி ரகமான ஆள். ஊர் சுற்றுவது தவிர வேறு வேலையே இல்லை. எட்டாம் வகுப்பு வரைதான் படித்தான். எஸ்டேட்டுகளைப் பார்த்துக் கொள்வதாகப் பேச்சு. எஸ்டேட்டுகளில் பார்த்துக்கொள்ள என்ன இருக்கிறது? அதற்கு வேறு ஆட்கள் இல்லையா? இவன் தினமும் ஐயாயிரம் ரூபாய் செலவு செய்யத் தயங்கமாட்டான். சரியான முரடன். கவுரவமானவர்கள் அவனுடன் பேசிப் பழக முடியாது...” லிவியின் முகம் சட்டென்று சிவந்து, கண்கள் ஒருவித தர்ம சங்கடத்தில் அகப்பட்டவை போலத் தவிக்கத் தொடங்கின. அளவு மீறிப் பேசிவிட்டோமோ என்று சந்தேகப்படுபவன் போலத் தடுமாற்றத்துடன் வேறெங்கோ பார்த்தபடி மவுனமானான். ராம் மிகச் சங்கடமான நிலையில் தன்னை உணர்ந்தான்.

உள்ளிருந்து ஒரு பெண் தட்டில் காப்பியுடன் வந்தாள். பாவாடை தாவணி அணிந்திருந்தாள். முகமும் கழுத்தும் வெளிறிய வெண்ணிறத்தில், மெல்லிய தேமல்களுடன் இருந்தன. ஆரோக்கிய மின்மை அவள் உடலெங்கும் தெரிந்தது. கண்கள் மட்டும் பெரிதாக, பிரகாசமாய், தயக்கத்தையும் சட்டென்று புலப்படக் கூடிய ஆவலையும் காட்டக் கூடியனவாய் இருந்தன. காபியை வைத்தபோது அவள் பார்வை ராமின் கண்களைத் தொட்டு விலகியது.

“குடியுங்க” என்றான் லிவி.

ராம் மெல்ல உறிஞ்சினான்.

“தாத்தாவுக்கு என்ன கொளப்பம்?”

ராம் குடிப்பதை நிறுத்தி, தயங்கி, ஆங்கிலத்தில், “அவர் முழுகிக் கொண்டிருக்கிறார்” என்றான். இப்படிக் கூறலாமா என்ற சந்தேகமும், தன்னை சாவகாசமாய்க் கேட்பவனிடம் சொன்னால் என்ன என்ற எண்ணமும் ஒருங்கே எழுந்தன.

“தெரிகிறது” என்றான் லிவி சாதாரணமாக.

“அவர் உடலும் மூளையும் மெதுவாய் இயக்கத்தை நிறுத்தத் தொடங்குகின்றன; வயதுதான் காரணம், வேண்டுமானால் ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் வைத்திருக்கலாம். அதனால் பிரயோசனம் ஏதும் இல்லை. அவருக்கு வலியோ, தூக்க மின்மையோ இல்லை. இதெல்லாம் அவருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.”

“ஆஸ்பத்திரிக்குத் தாத்தா வரமாட்டார்” என்றான் லிவி. “அவர் ஆஸ்பத்திரிக்குப் போனதே கிடையாது. சில தடவை டாக்டர்கள் வந்து பாத்திருக்கிறார்கள். அதுவும் அவருக்குப் பிடிக்காது, பாருங்கள், இந்த வயதானவர்களே பெரிய தொல்லை இல்லியா?”

ராம் புன்னகை பூத்தான். “அப்ப நான் வரேன்.”

“செரி” என்றான் லிவி. “தங்கம்...”

“ஓ” என்றபடி அந்தப் பெண் வந்தாள்.

“எடுத்தாச்சா?”

“ம்ம்...”

“கொண்டு போய் சார் காரில வையி.”

“என்னது?” என்றான் ராம்.

“கொஞ்சம் மலக்கறி, பிராமின்ஸ் வேற ஒண்ணும் திங்க மாட்டிய?”

ராம் சிரித்தான்.

பெரிய பனைநார்ப் பெட்டியைச் சுமந்தபடி, அந்தப் பெண் தொடர்ந்து வந்தது.

காரின் முன்புறம் சாய்ந்து டிரைவர் பீடி பிடித்துக் கொண்டிருந்தான். ராமைக் கண்டதும் பீடியைக் கீழே போட்டு மிதித்துவிட்டு, வந்து கார் கதவைத் திறந்தான். அவளைப் பார்த்து புன்னகை புரிந்தான். பொட்டலத்தை வாங்கி உள்ளே வைத்தபிறகு, அவளிடம், “சுகம்தானே?” என்றான், மலையாளத்தில்.

“ம்ம்” என்றாள் அவள் தயங்கிய புன்னகையுடன்.

“வேலப்பன் வீட்டுக்கு வருவதே இல்லை, இல்லையா?”

“ஆமாம்” என்றாள், விலகி நின்று கூந்தலைச் சரி செய்தபடி.

"அம்மாவிடம் நான் கேட்டதாகச் சொல்லு என்ன..."

"சரி" என்று புன்னகைத்தபின் ராமைப் பார்க்காமல் அவள் திரும்பிச் சென்றாள்.

கார் வளைந்து முன்னகர்ந்தபோது ராம் யதேச்சையாக அதைக் கண்டான். லிவி வாசலில் கையைக் குறுக்கே வைத்தபடி நின்றுகொண்டிருந்தான். அவள் உள்ளே நுழைகையில், அவன் ஏதோ சில்மிஷம் செய்ய முயல்வது தெரிந்தது. ஒரு நொடிதான் எனினும், அவள் காட்டிய இணக்கமும் தெரிந்தது.

சாலைக்கு வந்ததும், "காலம் போற போக்க பாத்தியளா?" என்றான் டிரைவர்.

"என்ன" என்றான் ராம்.

"அந்தப் பெண்ண பாத்தியளா?"

"ஆமா அவளுக்கு என்ன?"

"அவ அறைக்கல் குடும்பத்துப் பொண்ணாக்கும்."

"அறைக்கலா?"

"இந்த ஊர் ராஜவம்சம் சார் அது. இந்த ஏரியாவே முன்னே அறைக்கல் குடும்பச் சொத்துதான். காலம் போற போக்கப் பாருங்க! என்ன இருந்தாலும், விதி எண்ணு ஒண்ணு இருக்கு, என்ன சொல்லுதிய?"

ராம் பதில் கூறவில்லை.

## ... 2 ...

அதிகாலையில் கிழவர் கண் விழித்தார். உண்மையில் அவர் தூங்கவில்லை. சுய ஞாபகம் இரவு முழுக்க இருந்துகொண்டேதான் இருந்தது. வெளியொலிகள் துல்லியமாகக் காதில் விழுந்தபடியே இருந்தன. ஒலி மாறுபாடுகளுக்கேற்ப அவருடைய எண்ணங்கள் முன்னும் பின்னும் தாறுமாறாக ஓடிக்கொண்டிருந்தன. முகமோ அடையாளமோ இல்லாத மழுங்கலான நினைவுகள் சருகுகள் போலப் பறந்து விழுந்து அசைவிழந்து உறைந்தபடியே இருக்க, பளீரென ஒரு பயங்கரக் கனவு போலக் கூர்மையுடன், சகல நுணுக்கங்களுடன், ஒரு பழைய நினைவு அவர் உடலை அதிர வைத்தபடி கடந்து செல்லும். அது ஒரு நினைவுதான் என்ற பிரக்ஞையே அப்போது இருக்காது. மனம் வலியிலும் தாபத்திலும் தவிக்கும். முனகியபடி கட்டிலில் புரள்வார். சட்டென்று விழித்துக் கொண்டு எங்கிருக்கிறோம் என்ற பிரக்ஞை கூட இல்லாமல் இருளை வெறிப்பார். மெல்லமெல்ல அந்தப் பீதி வழிந்து, ஆசுவாசமும் சூனியமும் மனசை நிரப்பும். அப்போது இருள் அவருக்குப் பெரும் பீதியைத் தருவதாக இருந்தது. விளக்குகளைப் போட வேண்டும் என்றும் அறை முழுக்க வெளிச்சம் நிரம்பி இருக்க வேண்டும் என்றும் அவர் மனம் தவிக்கும். அவர் கால்மாட்டில் தரையில் குஞ்சிமுத்து படுத்திருந்தான். சீரான ஒலி அவனிடமிருந்து வந்துகொண்டிருந்தது. ஆரோக்கியமான உடலின் ஓய்வொலி. அவன் இப்போது எவ்வித சஞ்சலமும் இல்லாத நிலையில் இருப்பான். காலையில் புத்துணர்ச்சியுடன் எழுவான். அவருக்குக் கோபம் வந்தது. மூச்சிரைப்புடன், மங்கிய இருளில் நிழல்போலத் தெரிந்த குஞ்சிமுத்துவை உற்றுப் பார்த்தார். எழுந்து அவனை ஓங்கி உதைக்க வேண்டும் போலிருந்தது. அவர் அந்தக் கணம் தான் முழு அர்த்தத்துடன் தன் நிலைமையை உணர்ந்தார். அவரது கால் குனிந்து, தனித்த ஒரு பொருள் போல, விலகிக் கிடந்தது. அதன்மீது அவருக்கு எந்த ஸ்வாதீனமும் இருக்கவில்லை.

பெருவட்டரின் கோபம் தலைக்கேறியது. மூச்சு புரைக்கேறியது. "குஞ்சி, எலெய் குஞ்சி" என்று அழைத்தார். குஞ்சியின் குறட்டை

சற்று தடுக்கி, மீண்டும் சீரடைந்தது. அவர் குரல் பெரிய பங்களாவின் அனேகமாய்க் காலியான அறைகள்தோறும் அலைந்து திரிவதுபோலத் தோன்றியது. யாரும் அக்குரலைக் கேட்கவில்லை என்று அப்போது எண்ணினார். எல்லாரும் தூங்கிக் கொண்டிருப்பார்கள். பிரான்ஸிஸ் வந்திருப்பானா? இருக்கலாம். இரவில் பிந்தி காரின் ஒலி கேட்டது. அவனும் தூங்கிப் போயிருக்கக் கூடும். இந்தக் கணம் இறந்து போனால் யாருக்குத் தெரியும்? காலையில் விறைத்துக் குளிர்ந்த உடலைக் கண்டெடுப்பார்கள். அவர் வயிறு ஜில்லிட்டது.

மரணம்! அவர் அதைப்பற்றி யோசிக்க ஆரம்பித்து ரொம்ப நாளாகிறது. கிழவியின் மரணத்துடன் அவரையும் உலகையும் பிணைக்கும் கண்ணிகளில் வலுவான ஒன்று உடைந்துவிட்டது. எஞ்சியவை, பசுக்கள். தினமும் அதிகாலையில் பசுக்களின் ஞாபகத்துடன்தான் விழித்தெழுவார். பனிக்கு மப்ளரைக் கட்டிக் கொண்டு, கம்பைத் தூக்கியபடி, மிதியடி உரசி ஒலிக்க, நடந்து அவர் வாசலைத் திறக்கும் ஒலி கேட்டுத்தான் வேலையாட்கள் விழித்துக்கொள்வார்கள். நேராகத் தொழுவத்திற்குச் செல்வார். அப்போது பண்ணையாட்கள் பசுக்களைக் கறந்துகொண்டி ருப்பார்கள். மின்விளக்குகளைச் சுற்றி ஈக்களும் கொசுக்களும் மின்னிப் பறப்பது தெரியும். அவரை அறியும் பசுக்கள் கழுத்து வலிக்கக் கயிற்றை இழுத்துத் திரும்பிக் கண்கள் மினுங்க "ம்ரங்" என்று விசாரிக்கும். அவைகளின் வால்கள் வரிசையாகச் சுழல்வது ரிப்பன் நடனம் போலிருக்கும். ஒதுக்கி வைத்திருக்கும் சாணியி லிருந்து சிவப்பு விளக்கொளியில் புகை கமழும். மூத்திர வாடையும் சாணி மணமும் நாசியைத் துளைக்கும். பசுக்கள் கால் மாற்றி அசையும்போது, பண்ணையாட்கள் 'சர் சர்' என்று கறந்தபடியே, "அய்... அய்" என்று அதட்டுவார்கள். அவர் யாரிடமும் ஏதும் சொல்லமாட்டார். அவருடைய கண்களில் சதா தெரியும் வெறுப்பும் அதிருப்தியும் அவர்களிலும் எப்போதும் பிரதிபலிக்கும். தொழுவின் கூரைக்குப் பின்னால் காலைவானம் சன்னமாக வெளிறத் தொடங்கும் வரை பசுக்களைத் தட்டியும் தடவியும் அங்கு நிற்பார். பின்பு மெல்லத் தோட்டம் வழியாக நதிக்குப் போவார். தோட்டத்திலிருந்து உதிர்ந்த மாவிலைகளைப் பொறுக்குவார். முதலில் கண்ணில் பட்டதை எடுத்துக்கொள்வார். பிறகு அதைவிட நல்லது கிடைத்தால் இதைப் போட்டுவிட்டு அதை எடுத்துக் கொள்வார். நதியை அடையும்போது ஏழெட்டு இலைகளை மாற்றியிருப்பார். தாழைமரப் புதர்க் கோட்டைகள் இருபுறமும் விளிம்பு கட்டிய வெண்ணிற மணல் வெளியில், கரிய நீர்த் திராவகம் போலப் பதிந்து அமைதியாகக் கிடக்கும் நதி! கரை

மணலின் மினுங்கல், மேலே வானக் கண்ணாடியில் பிரதிபலிப்பது போல விடிவெளிச்சம். புகைபோல மெல்ல ஆவி எழும் ஜலம். புன்னை மரத்தடியில் பூக்கள் சுழிக்கும் சிறுகுழி. சோப்பு ஒட்டியிருக்கும் பனிபடிந்த துவைகல். நீர்த்துளிகள் ஏந்திய புற்கள் மரக்கிளைகள் பனிசொட்ட, நீர் சிலிர்க்கும். தண்ணீர் குளிர்ந்து விட்டிருக்கும். அடியற்ற ஆழமெனப் பிரமை தரும் கருமை. நீர் மெல்ல வெளிறி, கீழே மணற்பரப்பு தெரிய ஆரம்பிக்கும்வரை, குளிப்பார்.

சட்டென்று அவர் உடல் கூசிக்கொண்டது. குளிர்ந்து உடம்பு ஈரமாக இருப்பது போலப் பிரமை எழுந்தது. இருட்டுக்குள் கண்களைத் திறந்தார். இருள் ஜலப்பரப்பு போலத் தேங்கி, அதன் ஆழங்கள் குளிரக் குளிர மூழ்கிக்கொண்டிருப்பதாக உணர்ந்தார். கைகால்களை அசைக்க முடியவில்லை. முட்டி, மூழ்கி, அடியற்ற ஆழம் நோக்கிப் போவது போலிருந்தது.

தலையை உதறி, அந்த பிரமையைத் தள்ளினார். தொழுவிற்குப் போய்ப் பசுக்களைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. வேறு எந்த மனிதக் கண்களையும் பார்க்க அப்போது அவருக்குப் பிடிக்கவில்லை. அதேசமயம் இனிமேல் பசுக்களைப் பார்க்கவே முடியாது என்பதும் ஞாபகம் வந்தது.

"எலெய் குஞ்சி" என்று வீரிட்டார்.

திடுக்கிட்டு, குஞ்சிமுத்து எழுந்தான்.

"வெளக்கப் போடுல நாய்க்குப் பெறந்த பயலே..."

குஞ்சி பாய்ந்து விளக்கைப் போட்டான். பெருவட்டர் ஒருபுறம் கோணிய முகத்துடன், மூச்சிரைத்தபடி, வாய்திறந்து, அமர்ந் திருப்பதைக் கண்டான். அவர் உடல் வியர்வையில் ஈரமாக இருந்தது.

"கொளல் வெளக்கப் போடுல" என்றார் பெருவட்டர்.

குழல் விளக்குகள் எரிய, அறை பகல் ஒளிபோல மின்னியது. பெருவட்டர் குரோதத்துடன் அவனை உற்றுப் பார்த்தார். "ஏம்பில மூதி, ஒறங்கியதுக்காவில ஒனக்குச் சம்பளம் தாறது?"

குஞ்சி சுவரின்மீது சாய்ந்து பேசாமல் நின்றான். பீதியுடனும் அருவருப்புடனும் பெருவட்டரின் பார்வை அறைக்குள் அலைந்தது. அந்த ஒளியிலும் நிழல்கள் பலவாறாக விழுந்து கிடந்தன. நிழல்களைப் பார்க்க அவரால் முடியவில்லை. கண்களைத் திருப்பிக்கொண்டார். பிறகு மூஞ்சியையே உற்றுப்

பார்த்தார். அவனது ஆரோக்கியமான உடலை அவர் அப்பொழுது தீவிரமாக வெறுத்தார். அவனை உதைக்க விரும்பினார். எவ்வகை யிலாவது சித்திரவதை செய்ய விரும்பினார்.

"மெளுகுதிரி இருக்காயில நாயே."

"இருக்கு பெருவட்டரே?"

"அந்த மேசய்க்கு அடியில கொளுத்தி வையிலே."

குஞ்சி தடுமாறினான்.

"வையில பன்னி..." பெருவட்டர் கத்தினார்.

மெழுகுவர்த்திகள் அறைக்குள் சுடர் அசைய தடுமாறின.

பெருவட்டர் முகத்தின் மீது போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டார். சில நிமிடங்களுக்குள் அதை அகற்றினார். "மெளுகுதிரி அணையப்பிடாது கேட்டியா?" என்று குரோதத்துடன் குஞ்சியிடம் சொன்னார். கண்களை மூடிய பிறகும் அதற்குள் கருவிழிகள் ஓடிக்கொண்டிருப்பது இமைகளின் அசைவில் தெரிந்தது. அவர் முகம் நெரிபட்டபடியே இருந்தது. திடீரென்று கண்களைத் திறந்து உடம்பு நடுங்க, "பிராஞ்சி" என்றார்.

"பெருவட்டரே" என்றான் குஞ்சி.

"பிராஞ்சி விளிவில!" பெருவட்டர் கத்தினார்.

குஞ்சி வெளியே ஓடினான்.

தூக்கம் கலங்கிய கண்களுடன், களைத்த முகத்துடனும் பிரான்ஸிஸ் வந்தான். இரவு உடை சிலுசிலுத்த கரிய நெடிய உடல், தாடை விரிந்த எடுப்பான முகம். அது பெருவட்டரைக் கொண்டிருந்தது. மெழுகுவர்த்திகள் எரியும் அறையை அவன் அதிர்ச்சியுடன் பார்த்தான்.

"என்ன தாத்தா?"

அவர் அவனை உற்றுப் பார்த்தார். "ராத்திரி எப்பம்பில வந்தே?"

"கொஞ்சம் பிந்திப் போட்டு."

"எங்கயாக்கும் சர்கீட்டு."

"பேணு எஸ்டேட்டில."

"ம்ம்... ஒண்ணும் ஆரும் அறியலேண்ணு நெனச்சாண்டாம். கொறெசெ வேணும். கூடிப்போவப்பிடாது கேட்டியா?"

"ஓம் தாத்தா."

பெருவட்டர் கண்களை மூடினார். பிரான்ஸிஸ் குஞ்சியைப் பார்த்தான். போவதா நிற்பதா என்று குழம்பியவனாக.

பெருவட்டர் திடீரென்று, "பிலேய் பிராஞ்சி, சென்னு ஓதேசிய கூட்டிக்கிட்டு வாயில" என்றார்.

"தாத்தா!"

"ஓதேசியா கூட்டிக்கிட்டு வாயில!" பெருவட்டர் கத்தினார்.

பிரான்ஸிஸ் குழம்பியபடி "ஓம் தாத்தா" என்றான்.

"கும்ப சரிச்சணும் எண்ணு செல்லு, இப்பம் வேணும்..."

பிரான்ஸிஸ் அடிவயிற்றில் ஒரு அறை போல அதை உணர்ந்தான். தாத்தா என்ன சொல்கிறார்! கடைசி பாவ மன்னிப்புக்குப் பாதிரி வேண்டும் என்கிறாரா? சாகப் போகிறாரா? தாத்தாவா? அந்த எண்ணத்தையே மனம் மறுத்தது.

குஞ்சி போகும்படி சைகை காட்டினான்.

பிரான்ஸிஸ், "இப்பம் விளிச்சோண்டு வாறேன் தாத்தா" என்றபடி வெளியேறினான்.

ஆனால் விடிந்த பிறகுதான் பாஸ்டர் ஜோசப் ராஜேந்திரன் வந்தார். பிரான்ஸிஸ் அவரைக் காரில் அழைத்துவந்தது அவருக்கு மிகுந்த திருப்தியைத் தந்தது. வரும் வழியில் ஜன்னலோரமாய் அமர்ந்து, கண்ணில் பட்டவர்களுக்கெல்லாம் சிரித்தபடி கும்பிட்டும், ஸ்தோத்திரம் கூறியும், நலம் விசாரித்தும், முகமன் செய்தார். புதிய பாலிஸ்டர் அங்கியும், அதன்மீது ஏழு பவுன் தங்கச் சங்கிலியும் அணிந்து, தங்க விளிம்பு போட்ட மூக்குக் கண்ணாடி வைத்திருந்தார். அப்பமும் புனிதநீர் அடங்கிய பையும், பைபிளும், அவர் மடிமீது இருந்தன. வந்து சோபாவில் அமர்ந்த உடனே சூடாகக் காப்பி கிடைத்ததில் அவர் மேலும் மகிழ்ச்சி அடைந்தார். அந்த ரெம்ப்ரான்ட் ஓவியத்தை அவர் திகைப்புடன் பார்த்தார். அதில் மேரியும் கிறிஸ்துவும் அவருக்குச் சொந்த மேசையும் நாற்காலியும் போல ஆகிப் போனவர்கள். மற்றவர்களை அவர் புரிந்துகொள்ளவில்லை. ஆனால் பாஸ்டர் என்ற முறையில் அதைப் பற்றி உணர்ச்சிவசப்பட்டு எதையாவது சொல்ல வேண்டுமென்பது மிக அவசியமானது என்று அவருக்குத் தோன்றியது. எனவே உள்ளிருந்து பிரான்ஸிஸ் வந்த உடனேயே, முன்பின் சம்பந்தமின்றி, "ரிமார்கபிள்" என்றார். பிரான்ஸிஸ் "ஃபாதர்" என்றான்; குழம்பிப் போனவனாக "என்ன அற்புதமான ஓவியம்!" என்றார் ஃபாதர்,

"ஆஹா! இன்றைய தினமே எனக்கு ஆசீர்வதிக்கப்பட்டதாக மாறிவிட்டது! ஸ்தோத்திரம் கர்த்தாவே" என்றார். பிரான்ஸிஸ் நொடியில் அவர் மனசைப் புரிந்துகொண்டு கோபம் கொண்டான். "பாரீஸ்ல இருந்து ஒரு சாயிப்பு அப்பனுக்குக் குடுத்தது" என்றான். "பாக்கியம் செய்திருக்கணும் இப்படியொரு படம் வீட்டில இருக்கியதுக்கு" என்று பாஸ்டர் தொடர்ந்தார். "ஸ்தோத்திரம் கர்த்தாவே, பிரான்ஸிஸ் போலாமா? எங்க பெரியவர்?" என்றார். நிதானமாகவும், கம்பீரமாகவும் நடக்க பாஸ்டர் சிரத்தை எடுத்துக் கொள்வது தெரிந்தது. பிரான்ஸிஸ் அருவருப்பும் கூச்சமும் அடைந்தான். வீட்டின் ஆடம்பரம் பாஸ்டரைக் கிளறிவிட்டு விட்டது என்று அவனுக்குப் புரிந்தது. அது மட்டுமல்லாமல் அவர் தாத்தாவின் மரணத்தை நிகழ்த்த வந்திருக்கிறார் என்பதும் அவனுக்கு ஆங்காரத்தை எழுப்புவதாக இருந்தது.

கிழவரைக் கண்டதும் பாஸ்டர் சற்றுக் கூசிப் போவது தெரிந்தது. எனினும் அவர் கம்பீரத்தைக் கைவிடாமல், பொருட்களை சீராக டீபாயில் வைத்தார். பிறகு பிரான்ஸிஸிடம், "நான் அவரிட்ட ஒற்றய்க்குப் பேசணும் மிஸ்டர் பிரான்ஸிஸ்" என்றார்.

பிரான்ஸிஸ் வெளியே போனான். குஞ்சி வெளியே போகும் முன் பெருவட்டரைப் பார்த்தான். அவர் முகம் கொடூரமாக இருந்தது.

தன்மீது பெருவட்டரின் கூரிய பழுத்த கண்கள் பதிந்திருப்பதை பாஸ்டர் உணர்ந்தார். எங்கோ பேயோட்ட வந்திருப்பது போலத் தான் அவருக்குத் தோன்றிக்கொண்டிருந்தது. "சைத்தான் சைத்தான்" எனத் தனக்குள் சொல்லிக்கொண்டார். தன் தோரணை மட்டுமே தன்னைக் காப்பாற்றும் என்று அவருக்குப் பட்டது. கழுத்தில் சிவப்பு ரிப்பனைப் போட்டுக்கொண்டார். அதன் சுருக்கம் கவலை அளித்தது. இழுத்து இழுத்து விட்டார். நிமிரவில்லை. அதிருப்தியுடன் விட்டுவிட்டு நிமிர்ந்தபோது, ஆக்ரோஷமான கிழவரின் பார்வையை அவர் சந்தித்தார். அவர் மூத்திரப்பை கூசியது. பெட்டியிலிருந்த அப்பமும் புனித நீரும் எடுத்துக்கொண்டார். அவர் அருகே சென்று நின்றபடி கனிவுடன் சிரித்தார். பாதிரிமார்களுக்கே உரிய நீளக்குரலில், "உங்களுக்கு சொகமாயிப் போடணும் எண்ணு கர்த்தர்கிட்ட வேண்டிக் கிடுயதுக்குத்தான் வந்திருக்கேன்" என்றார்.

பெருவட்டரின் கோபம் தடைகளைக் கடந்தது. "சீ நாயே, போல வெளியே" என்று சீறினார்.

புரியாதவராக பாஸ்டர் தடுமாறியவராக, "என்னது?" என்றார்.

“போல வெளியே, பட்டிக்களுவேறிக்க மோனே, சவிட்டி பல்லப் பிடுங்கிப் போடுவேன், வந்திருக்கான்...”

பாஸ்டர் பதறிப்போய் கைகளும் உதடும் நடுங்க, “கொஞ்சம்... கொஞ்சம் நெதானமா?” என்று உளறினார்.

“ஓடுல... நீ இஞ்ச ஒண்ணும் செய்யாண்டாம். சோலியப் பாத்துக்கிட்டுப் போல, தெண்டி.”

பாஸ்டர் சடாரென்று எகிறினார். “நாக்க அடக்கும்வேய்” என்றார். “என்னவே, சும்மா நிண்ணா தலையில கேறுதீரே... இல்ல, தெரியாமத்தான் கேக்குதேன்; நீரு ஆரு கிட்டவே பேசுதீரு...?”

“பிராஞ்சி! பிலேய் பிராஞ்சி!” என்று பெருவட்டர் கத்தினார்.

அதற்குள் பிரான்ஸிஸே ஓடிவந்தான். பதறியபடி, “என்ன தாத்தா? பாஸ்டர் என்ன இதொக்கெ...?” என்றான்.

“பிலேய், இவன ஆருல கூட்டிக்கிட்டு வந்தது? பிச்சக்காச குடுத்து வெரட்டுல இவனெ.”

பாஸ்டர் குரல் உடையக் கத்தினார். “என்னவே இது பிரான்ஸிஸ்? பைசா உண்டும் எண்ணு சொன்ன வாயில நாக்கு கெடக்காதோ? வேய், நானும் செளியில நீந்தி வளந்தவன்தாவே. ஓம்மக் காட்டியும் வாத்தயப் போடத் தெரியும் வேய்...”

“வெளியில போலே நாய்க்குப் பொறந்த பயலே!”

“பாஸ்டர், பிளீஸ், அவியளுக்குச் சொகமில்ல. நீங்க வாங்க செல்லட்டு.” பிரான்ஸிஸ் அவர் கையைப் பற்றி இழுத்தான்.

பாஸ்டர் குரோதத்துடன் திமிறியபடி கிழவரை உற்றுப் பார்த்தார். பிரான்ஸிஸ் அவரை வெளியே இழுத்தான். அவர் மூச்சிரைத்தபடி, கையை நீட்டி, “நீ... நீ... சைத்தானுக்குக் குஞ்சு... சைத்தான், பிசாசு” என்றார்.

“வாங்க ஃபாதர்” என்று பிரான்ஸிஸ் அவர் கையை இழுத்தபடி கெஞ்சினான். அவர்கள் வெளியேறுகையில் கிழவரின் உரத்த முனகலும் உறுமல்களும் கேட்டன.

“குஞ்சி, பாஸ்டர் சாமான்களை எடு! வாங்க பாஸ்டர் பிளீஸ்...”

“பிலேய் பாவத்த செஞ்சுப்போட்டுப் பாஸ்டர் மேலே கோவப்பட்டு தீராதுவேய். கணக்குச் செல்ல வேண்டிய எடத்தில செல்லுவேயிலே” என்று பாஸ்டர் கத்தினார்.

ஹாலுக்கு வந்ததும், பாஸ்டர் கண்ணாடியைச் சரி செய்து தலைமுடியைக் கோதினார்.

"அவியளுக்கு மனசு சரியில்லை ஃபாதர்."

"மனசு செரியிலெங்கி வல்ல குருசடியிலயும் கொண்டு செண்ணு தள்ளணும்."

"மன்னிச்சிடுங்க ஃபாதர்."

"இது சர்ச்சுக்குத் தெரிஞ்சா என்ன ஆகும் தெரியுமா?"

"பாஸ்டர், நீங்க கோபப்படலாமா? கிறிஸ்துவுக்கு பேரால கேக்குதேன்."

"கிறிஸ்து நொட்டினாரு, நான் இதுக்கு ஒரு வளி உண்டா எண்ணு பாக்குதேன்."

லிவி ஹாலுக்கு வந்தான். "என்னது" என்றான் பிரான்ஸிஸிடம். பிரான்ஸிஸ் சட்டை செய்யவில்லை. "என்னது ஃபாதர்" என்றான் லிவி. பாஸ்டர் அழுமாட்டாக் குறையாக விவரிக்கத் தொடங்கினார்.

பிரான்ஸிஸ் உள்ளே போய், கவரில் ஆயிரம் ரூபாய் போட்டு எடுத்து வந்தான்.

லிவி கத்தினான். "என்னது இதொக்கே? வயதாச்சிண்ணு சென்னா செத்து ஒளியணும், மத்தவங்களுக்கு இஞ்ச சீவிச்சாண்டாமா?"

"லேய், இஞ்ச பாரு, பேச்ச நிறுத்திக்க, செல்லியாச்சு" என்றான் பிரான்ஸிஸ்.

"விளிச்சு வருத்திமானம் கெடுத்தா ஆரும் கேக்க இல்லே எண்ணு நெனச்சாண்டாம்." லிவி தொடர்ந்து கத்தினான். "வாயை மூடல நாயே" என்றான் பிரான்ஸிஸ் கூர்மையாக. லிவி வாயடைத்துப் போனான்.

"அதிகம் பேசினே மின்னப்பின்னப் பாக்க மாட்டேன்." பிரான்ஸிஸ் கண்கள் ஒளிரச் சொன்னான். பின் பாஸ்டரிடம் "நீங்க வாங்க பாஸ்டர்" என்றான்.

பாஸ்டர் தயங்கியபடி வந்தார். பணத்தை மறுத்தார். தொகையைக் கூறியபோது சற்றுத் தயங்கினார். விஷயம் வெளியே தெரிந்தால் பாஸ்டருக்கும் அவமானம்தான் என்று விளக்கியபோது யோசித்தார்.

பின்பு பணத்தை வாங்கியபடி, "கிறிஸ்துவுக்காக; பணத்துக்காக இல்லை" என்றார்.

பாஸ்டர் போன பிறகு, லிவி மீண்டும் சத்தம் போட ஆரம்பித்தான். பிரான்ஸிஸ் சோபாவில் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்தான். லிவியை அவன் புறக்கணிக்க முயன்றான். ஆனால் அது முடியவில்லை. மனம் அவன் குரலுக்கு எதிர்வினை தந்து பொங்கியது. தொடர்ந்து பல்லைக் கடித்து அடக்கிக்கொள்ள வேண்டியிருந்தது.

என்ன ஆயிற்று தாத்தாவுக்கு? தராதரம் தெரியாத காட்டு மனிதர்தான், ஆனாலும் இப்படியா?

ஆக்ரோஷத்துடன் எழுந்து அவர் அறைக்குப் போனான். ஆனால் அவரைக் கண்டதும் அவன் மனம் தணிந்தது.

கட்டிலில் ஜன்னல் வழியாகப் பார்த்தபடி கிடக்கும் சுருங்கிய நீண்ட உடல் நான்தான் என அவனுள் ஒரு எண்ணம் ஓடியது. அதே பார்வை, அதே முகம்.

அவன் மனம் பதறியது.

திரும்பிய பெருவட்டர் அவனைப் பார்த்தார். "ஏம்பில, வேற ஆரும் கிட்டேல்லியாவில ஒனக்கு?" என்றார்.

"தாத்தா!"

"தூ... பாஸ்டரக் கூட்டிக்கிட்டு வந்திருக்கான். கள்ள நாறிப்பய. அவனச் சவிட்டாம விட்டது தெற்று. எலெய், நான் பெண்ணு கெட்டதுக்குப் பாஸ்டரக் கேக்கல்ல; சாவியதுக்குத்தான் கேட்டேன், மனசிலாவுதா?"

"ஓம் தாத்தா."

"போ எனக்குக் கண்ணுமின்ன நிக்காத!" கிழவரின் முகம் வெறுப்பால் எரிந்தது. தளர்ந்த குரலில், "மனச் சமாதானத்தோட சாவுயதுக்கும் பளுதில்ல" என்றார்.

பிரான்ஸிஸ் தனக்குள் ஒரு அடியை ஏற்றான். அவன் மனம் பதைத்தது. அவரை அணுகித் தொட வேண்டும் போலிருந்தது. சமாதானமாய் எதுவோ கூற வேண்டும் போலிருந்தது.

எதுவும் முடியவில்லை.

அவனிடம் மட்டும் அபார அன்பைக் காட்டி வந்த தாத்தா, அவனுக்கென மட்டும் பிரத்யேகமாய் ஒரு முகமும், குரலும் வைத்திருந்த தாத்தா, அவனுடைய முதிய உருவம்.

ஆனால் அவருக்குத் தர அக்கணம் அவனிடம் ஏதும் இருக்கவில்லை. தனக்கு மிக நெருக்கமான ஜீவன் என அவன்

நம்பியிருந்த ஒரே ஆத்மா அவனிலிருந்து வெகு தொலைவில் எங்கோ இருந்தது.

பிரான்ஸிஸ் மெல்லக் கதவருகே நகர்ந்தான்.

"எல பிராஞ்சி!"

"தாத்தா?"

தாத்தாவின் முகம் ஒரு நிமிடத்திற்கு முன் இருந்தது போல இல்லை என்று பிரான்ஸிஸ் கண்டான். அவர் முகம் ஏதோ கனவில் மிதந்துகொண்டிருந்தது.

தவித்த பார்வை அவன் முகத்தில் அலைய, கிழவர் கேட்டார், "ஏல பிராஞ்சி குடியான்ல கள நடந்து இப்பம் எம்பிடு வரியம்பில ஆவுது?"

"தாத்தா?" என்றான் பிரான்ஸிஸ், பீதியுடன்.

கிழவரின் முகம் இறுகியது. "செரி செரி நீ போ."

பிரான்ஸிஸ் அப்படியே நின்றான்.

"போலெ!" கிழவர் சீறினார்.

பிரான்ஸிஸ் வெளியேறினான்.

## ... 3 ...

குன்னத்துக்கல்லில் இருந்து கூண்டு வண்டியில் புறப்படும் போது பொன்னுமணிக்கு நாலு வயது. முதல்முறையாக அவன் கூண்டு வண்டியில் ஏறிய தருணம் அதுதான். முதலில் அவனால் அதை நம்பவே இயலவில்லை. அவர்கள் வசித்திருந்த பெரிய தோப்பின் அருகே, சிவந்த பொடி மண்ணில் கால்தடங்கள் பதிந்து சொத சொதவென்றிருந்த பாதையில், ஒரு மாட்டு வண்டி வந்து நின்றபோது, அவனும் மற்றவர்களுடன் ஓவென்று கூவியபடி வந்து சூழ்ந்துகொண்டான். நினைவு தெரிந்த நாள் முதலே பெரும் மர்மமாக இருந்த பாதை அது. பனித்துளிகள் தங்கிய பசும்புற்கள் விளிம்பில் அடர்ந்திருக்க, சிவப்பான நதி போல, கீழே பாறைச் சரிவின் இடுக்கிலிருந்து உதித்து அடிவானை அடைந்து அது மறைந்தது. காளைகள் மிக உயரமான ராட்சசப் பிறவிகள் போலத் தோன்றின. அவற்றைப் பார்க்கவே ஒருவித கிளர்ச்சியும் அச்சமும் தான் ஏற்பட்டது. கொய்யா மரக்கிளைகள் போன்ற அவற்றின் கொம்புகளைப் பார்க்கையில் மூத்திரம் கூசியது. கட்டை விரலை வாய்க்குள் போட்டபடி, பாதுகாப்பான தூரம் விட்டு, நின்று கொண்டான். வெண்ணிற ரோமம் பரவிய காளைகளின் உடல் ஆங்காங்கே சிலிர்த்தது. அடிக்கடி குளம்புகளை மாற்றி மிதித்துக் கொண்டன. புஸ்ஸ் என்று மூச்சுவிட்டபடி, குனிய முயன்றன. நுகம் தடுக்க, கழுத்தைக் குலுக்கிக்கொண்டன. கொம்புகள் நுகத்தில் மோதி கடகடவென்ற ஒலி கேட்டது. அவற்றின்மீது ஈக்கள் மொய்த்தன. வாலைச் சுழற்றியபடி அவற்றை அவை துரத்தின. திரும்பி நாவால் கழுத்தை நக்கிக்கொண்டன. அவற்றின் உருட்டி விழித்த கண்கள் தம்மீது படிவதாக அவனுக்குப் பட்டது. வண்டி யோட்டி தரையில் இறங்கி அவற்றின்மீது தட்டியபடி நின்றான். அவன் மீசை முறுகிக் கன்னங்களைத் தொட்டது. அவனைப் பார்க்கப் பார்க்க ஏதோ உத்வேகத்தில் சிறுமனம் விம்மியது. சுய ஞாபகமே அற்றுப்போய், பெரிய உருண்ட கண்களால் பார்த்தபடி, நின்றான். உடம்பின் ரணங்கள் மீது மொய்க்கும் ஈக்கள் தலையைத் துளைக்கும் குத்தல் சட்டென்று பிரக்ஞையைத் தாக்கும்போது,

சற்று குதித்துக் கைகளால் அவற்றைத் துரத்தியபடி விலகி நிற்பான். அந்த வண்டியில் ஏறுவது பயணம் செய்வதுமெல்லாம் அவன் கற்பனைக்கே அப்பாற்பட்டதாக இருந்தது.

அவன் அப்பா ஒரு பெரிய நார்ப்பெட்டியைச் சுமந்தபடி வருவது தெரிந்தது. அவர் அதைச் சிரமப்பட்டு வண்டிக்குள் வைத்த பிறகு, திரும்பித் தலைத்துண்டை எடுத்து முகத்தைத் துடைத்தார். அவனை அப்போதுதான் அவர் கண்டிருக்க வேண்டும். "நாய்க்குப் பெறந்த பயலே, இஞ்சயா நிக்குதே? ஓடுல... வீட்டுக்குப் போல..." என்று சீறியபடி, குனிந்து சிறு கல் ஒன்றை எடுத்தபடி வந்தார். அவன் கிரீச்சிட்டபடி திரும்பி, ஓடிக் குப்புற விழுந்து, எழுந்து, மண்ணைத் துடைக்காமலேயே வீறிட்டழுதபடி, விரைந்தான். குடிசையின் முன் அம்மாவும், அடுத்த குடிசைக் காரியும், அவன் குழந்தைகளும், அண்ணன்களும், தங்கையும் நின்றிருந்தார்கள். குழந்தைகள் எல்லோரும் புதிசாய்க் கோமணம் அணிந்திருந்தார்கள். அம்மா வியர்வை வழிய, தவிப்பாகக் காணப்பட்டாள். கையில் ஒரு சாக்குப்பையும், தலையில் ஒரு நார்ப் பெட்டியும் வைத்திருந்தாள். அவன் ஞாபகமே அவளுக்கு இருக்க வில்லை. ஓவென்று அழுதபடி அவன் ஓடிப்போய் அவளைக் கவ்விக்கொண்டான். அவள் ஒரு கையால் அவனைப் பிய்த்தபடி, "எங்கல கெடந்த சவத்து மூதி?" என்றாள். தரதரவென்று இழுத்து, கும்பலில் நிறுத்தினாள். உடனே அவன் அழுகையை நிறுத்திக் கண்ணீர் வழியும் கன்னத்துடன், உதட்டைத் துருத்தியபடி, சூழலை ஆராயத் தொடங்கினான். என்னவோ வித்தியாசம் இருப்பது சற்றுப் பிந்திதான் உறைத்தது. "அம்மா, எடி அம்மா" என்று சிணுங்க ஆரம்பித்தான். "ஏம்பில..." என்று அவள் அதட்டினாள். "எனக்கும் கோமணம்..." என்றான். "சும்மா வருவியா? மூஞ்ச கிளிச்சுப் போடுவேன் பாத்துக்க..." என்றாள் அவள். அவன் கால்களை மாற்றி மாற்றி உதைத்துச் சிணுங்கியபடி நின்றான்.

அப்பா தூரத்தில் வந்து நின்று, "அங்க எவனுக்காட்டு பொளந்துகிட்டு நிக்குதே? வண்டி வந்து நிக்கியது காணேல்லியா?" என்று கத்தினார். அம்மா, "ஏல ராசு, கொண்டு போல பிள்ளியள, சவத்துக்குப் பெறந்த பயலே" என்றாள். கூட்டமாய் எல்லாரும் நடந்தார்கள். அவனுக்குள் உத்வேகம் புகுந்துகொள்ளத் தொடங் கியது. அண்ணன் கையைப் பிடித்துக்கொண்டான். அவன் அதை உதறிவிட்டு முறைத்ததுகூட இவனுக்குத் துக்கமாகப் படவில்லை. வண்டியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறோம் என்று உணர்ந்த கணம் அவன் தன் கைகளை காலிடுக்கில் செருகி, முன்னால் வளைந்து, தொண்டை நரம்புகள் புடைக்க, "வண்டீ வண்டீ அய்

வண்டீ...” என்று கிரீச்சிட்டான். “சும்மா வருவியா அலவ திருப்பணுமா” என்று அம்மா கோபித்தாள்.

வண்டிக்குள் குழந்தைகளையும், அவன் அம்மாவையும், சுமைகளையும் ஏற்றிக்கொண்டார்கள். அவன் அம்மா கர்ப்பமாக இருந்தாள். அவள் அதற்குள் புஸ்ஸ் புஸ்ஸ் என்று மூச்சுவிடத் தொடங்கியிருந்தாள். ஒருவித மாமிச மணத்துடன் அவள் மூச்சு அவன்மீது பட்டுக்கொண்டிருந்தது. வண்டியின் பின்புறக் கம்பிகள் மாட்டப்பட்டு, மற்றவர்கள் கும்பலாகப் பின்தொடர, அது நகரத் தொடங்கிய பிறகுதான் அதில் ஏறியிருக்கிறோம் என்ற நம்பிக்கை அவனுக்கு ஏற்பட்டது. அப்பா முரட்டுத்தனமாகப் பிடித்து ஏற்றிய வலி விலாவிலும் புஜங்களிலும் இருந்தது. அவன் ஒருவிதமான பரவச நிலையில் அப்படியே மனம் நிறைந்து, ஸ்தம்பித்து விட்டிருந் தான். அவன் கண்முன் அவன் கற்பனையில் இராத தோட்டங் களும், பாறைக்கட்டுகளும், குடிசைகளும், நீரோடைகளும், தோன்றி பின் நகர்ந்துகொண்டிருந்தன. அவன் கண்களில், கனவு படிந்து விட்டிருந்தது. சிறிய மார்புக்கூடு விம்மி விம்மித் தணிந்து கொண்டிருந்தது. வண்டியை விட்டு இறங்கி, மரவள்ளிக் கிழங்கை வழியோரத்தில் அடுப்புமூட்டி வேகவைத்து சாப்பிட்டார்கள். குழந்தைகள் பேச ஆரம்பித்தால் பெரியவர்கள் கோபித்து அடக்கி னார்கள். அம்மா ஏதாவது கேட்டால் அப்பா கோபத்தில் சிறுத்த முகத்துடன், அடக்கிய குரலில் திட்டினார். இரவு கவிழத் தொடங்கியபோது, ஒரு ஆற்றை அவர்கள் இறங்கிக் கடந்தார்கள். மணலில் வண்டிச் சக்கரம் கிருகிருவென்று அமுழுந்தும் ஒலி கேட்டது. பிறகு நீரில் ஆரக்கால்கள் குழாவும் கிளுகிளுப்பு. பலமாகக் காற்று. அப்பாவும் மற்றவர்களும் நீரில் இறங்கியபோது குனிந்து நீரை அள்ளி முகத்தில் விட்டுக்கொண்டார்கள். “அம்மா எடியம்மா, நானும் குளிக்கட்டாடி!” என்று பொன்னுமணி கெஞ்சினான். “சும்மா இருபில” என்று அவள் அவனை அதட்டி ஒடுக்கினாள். ஆற்றைக் கடந்த பிறகுதான் வெண்மையான மணற்பரப்பில் நீலப்படிகமாய்ப் படிந்த நதியும், மணல் மேட்டுக்கு அப்பால் மேகங்கள் சூழ வட்டமான சிவப்புத் தகடு போலத் தெரிந்த சூரியனும், அவன் பார்வையில் நன்கு தெரிந்தன. கனவில் காண்பது போலிருந்தது எல்லாமே. மெல்ல மெல்ல இருள் எங்கும் கவிழத் தொடங்கியது. முதலில் இரு கரைகளிலும் தெரிந்த தோப்புகளின் உட்புறங்கள் இருண்டு கறுத்தன. கிரீச்சென்ற தொடர்ச்சியான ஒலி அங்கு கேட்க ஆரம்பித்தது. மரங்களின் மேல்நுனியில் இலைகள் பசும்நிறம் இழந்து இருண்டன. ஒளிரும் வெண்மையும், சிவப்பும், சாம்பல் திண்டுகளும் கலந்த வானப் பின்னணியில் அவை நிழற் படங்கள் போலத் துல்லியமாகத் தெரிந்தன. பிறகு

வானமும் மங்கி இருளத் தொடங்கியது. வெண்ணிறமெல்லாம் சிவப்பாக மாறிற்று. சிவப்பு கடுமை பெற்றது. கருமைத்திட்டுகள் சிவப்பில் மிதந்தன. மெல்லப் படங்கள் கரைந்து, மொத்தையான இருள் எங்கும் வியாபித்தது. முன்புறம் நடந்த அப்பா ஓரமாக அமர்ந்து, தென்னை ஓலைப் பிசிறில் தீப்பற்றச் செய்து, பந்தமாக்கிக் கொண்டார். நெருப்பு திகுதிகுவென்று கொழுந்துவிட மர இலைகள் மின்னல் மின்னலாகத் தெரிந்து மறைந்தன. தோப்பு களுக்குள் நூற்றுக்கணக்கான நிழலசைவுகள் ஏற்பட்டன. அச்சமூட்டும் உருவங்களாக அவை நடனமிட்டு ஓய்ந்தன. அப்பா பந்தத்தை வீசி வீசி அனல்படுத்தி, மிதமான வெளிச்சம் தந்தபடி நடந்தார். அவர் பந்தத்தை வீசும்போது நெருப்பு அரைவட்ட வடிவிலான பிரகாசமான வடம் போல இருளில் சுழன்றது. பின் அசைவு நின்றபோது சுடர்விட்டுத் தத்தளித்தது. பேச்சொலிகள் முற்றிலும் அவிந்து மவுனம் நிலவியது. காளைகளின் மணியோசை மட்டும் இதுவரை கேட்காத அளவு உரக்கக் கேட்டுக் கொண்டி ருந்தது. படைபடையாகப் பூச்சிகளும் கொசுக்களும் ரீங்கரித்தபடி வந்து மொய்த்தன. அவை வாயில் பட்டு அவன் துப்பியபடியே இருந்தான். அம்மாவின் மடியில் அவன் தலைசாய்த்திருந்தான். அவள் மார்பின் துடிப்பும், உடம்பின் சூடும் அவன்மீது பட்டன. அவள் அவனிடம் குனிந்து "பொன்னு" என்றாள். அவன் முனகினான். அவள் "ஒறங்கேல்லியாவில?" என்றாள். கனிவாய் ரகசியமாய் அவள் குரல். வண்டிக்குள் மூச்சுகள் ஒலித்துக்கொண்டி ருந்தன. அவள் குரல் அவனை அழச் செய்தது. அவன் காய்ச்சலாகக் கிடக்கும்போதுதான் அவள் அப்படிக் கேட்பாள். அவன் மூக்கை உறிஞ்சினான். அவள் தன் கையை அவன்மீது வைத்தாள். வண்டி தொட்டில் போல ஆடிக்கொண்டிருந்தது. அவன் சற்று மல்லாந்திருந்ததனால், வானம் தெரிந்தது. உண்மையில் வானமும் திசைகளும் வித்தியாசமின்றிக் கருநிறமாக இருந்தன. எங்கும் நட்சத்திரங்கள். அவனுக்கு அவை ஒருவித மயக்கம் தவிர எதையும் சொல்லவில்லை. அவை பறந்துவிட்டிருப்பதாக அவனுக்குப் பட்டது. அதற்குமுன் அவன் அவற்றைப் பார்த்ததே இல்லை. பிரமை நிலையில் அவை என்ன என்ற எண்ணமே அவனுக்கு வரவில்லை. வண்டி வயல்வெளியின் மத்தியில் புகுந்தபோது, திடீரென ஒலிகள் மாறுபட்டன. சில்வண்டின் உடையாத ரீங்காரத்தைச் சிதறடித்தபடி, தவளைகளின் கூட்ட ஒலிகள் பீரிட்டன. பெரும் ஊதுகுழலால் ஊதப்பட்டது போல காற்று குளிராக முகத்தை அறைந்தது. அம்மா சேலையால் அவனைப் போர்த்தினாள். அவன் முகத்தை விடுவித்துக்கொண்டு பார்த்தவாறிருந்தான். அம்மாவின் கையின் வெப்பம் இப்போது அதிகரித்திருந்தது.

திடீரென்று, வண்டியினால் சிதறடிக்கப்பட்டவை போல, கூட்டம் கூட்டமாக, நட்சத்திரங்கள் உயர்ந்து வளைந்து பறந்தன. வானத்து நட்சத்திரங்கள் வழியாக அவை ஊடுருவித் தடுமாறி தடுமாறிப் பறந்தலைந்தன. ஒன்று அவனுக்கு மிக அருகே பறந்து சென்றது இளம்பச்சை நிற ஒளியுடன். வண்டி முன்னகர்ந்தபோது, அவை மீண்டும் தரை நோக்கி விழத் தொடங்கின. ஒவ்வொன்றாக வானிலிருந்து தவழ்ந்து தரையிறங்கின. அவன் மனசுக்குள் ஏக்கம் நிறைந்தது. கண்கள் இருபுறமும் காதை நோக்கி சூடான கண்ணீர் துளிகளை உதிர்த்தன. அவன் விக்கும் சப்தம் கேட்டு அம்மா குனிந்தாள். “ஏம்பில” என்றாள். அவன் வெறுமே மூக்கை உறிஞ்சினான். “ஒறங்கு” என்றாள் அம்மா, மெதுவான குரலில். அவள் கரம் அவன் வயிற்றைத் தட்டியது. ரொம்ப நேரம் கையின் ஸ்பரிசமும், வண்டியின் குலுக்கமும், அவனுள் இருந்துகொண்டிருந்தது. அவன்மீது கவிழ்ந்திருந்த அம்மாவின் பற்களும் கண்களும் மினுமினுவென்று தெரிந்தன. மூடிய கண்களுக்குள்ளும் இருந்துகொண்டே இருந்தன.

## ... 4 ...

வீட்டிலிருந்து கிளம்பும்போதே பிரான்ஸிஸ் நல்ல மன நிலையில் இல்லை. ஒருவிதமான எரிச்சலோ, தவிப்போ மனம் முழுக்க இருந்தது. தாத்தாவைப் பற்றிய அவன் கணிப்புகள் ஆட்டம் கண்டு விட்டிருந்தன. அவர் ஒரு கருங்கல் கோபுரம்; பயம், சோகம் முதலான அற்ப உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட மாமனிதர். இதெல்லாம்தான் சிறு வயதிலேயே அவனில் அவர் பற்றி உருவாகியிருந்த பிம்பம். தவித்தபடி அலையும் தாத்தாவின் கண்கள் அவன் மனக்கண்முன் வந்து, மறைந்துகொண்டிருந்தன. குற்ற உணர்வும் பயமும் தத்தளிக்கும் கண்கள். மிகத் தெளிவாக அவனால் தாத்தாவின் மனநிலையைப் பார்க்க முடிந்தது, அவனுள்ளேயே.

தாத்தாவின் படுக்கை அருகே நிற்க அவனால் இயலவில்லை. ஆனால் அவர் அவனைக் கண்டித்தது மிகவும் ஆறுதலாக இருந்தது. அந்தக் கண்டனம் வழக்கமானதுதான். முற்றிலும் இழக்காமல் எதையோ தக்கவைத்துக்கொள்ள அதுதான் உதவி செய்கிறது என்று எண்ணிக்கொண்டான். அவன் வீட்டுக்கு வருவதே தாத்தாவிற்காகத்தான். வீட்டை அவன் வெறுத்தான். அந்த அமைதி அவனுக்கு உள்ளூர பதைப்பை அளித்தது. அந்த ரெம்ப்ரான்ட் ஓவியத்தை நிமிர்ந்து பார்க்க இயலாது அவனால். நீண்ட வெண்தாடியும், கவலையும், பக்திப் பரவசமும் கொண்ட தீர்க்கதரிசியின் முகம் அவனுக்குத் தாத்தாவை நினைவுறுத்தியது. தாய் மடியில் அமர்ந்த மனித குமாரன். அந்த ஃபிரேமுக்குள் புனிதம் தேங்கியுள்ளது. வீடு முழுக்கத் தாத்தாவின் கடுமையும் தீவிரமும் அமைதியும் தேங்கியிருப்பதாய் அவனுக்கு ஒரு உள் பிரக்ஞை. எனவே, வீடு இயல்பாக இருக்க இயலாத இடம் அவனுக்கு. வழக்கமான மன வக்கிரங்கள் அங்கு மேலும் குற்ற உணர்வைத் தரக்கூடியவையாக மாறிவிட்டிருக்கும். வீட்டில் எந்த உயிரிலும் அவனுக்கு இணக்கம் இல்லை. லிலியை அவன் தீவிரமாக வெறுத்தான். அவன் பேச்சில், பார்வையில், அசைவில், ஒவ்வொரு

அணுவிலும் தேங்கிய அற்பத்தனம் எரிச்சல் மூட்டுவது. அப்பாவின் முகம் பார்த்துப் பேசி ஞாபகமில்லை. அவருக்கு அவன்மீது அன்பில்லை என்று இளமையிலேயே ஒரு எண்ணம் அவனுக்குள் ஊறிப் போயிருந்தது. அதை அகற்றிக்கொள்ள அவன் முயன்றது மில்லை. அவர் அவன் போக்கை ஒருபோதும் தடுத்தவரல்லர். அதை அவன் அக்கறையின்மை என்று வியாக்கியானம் செய்து கொண்டான். அவன் எட்டாவது படிப்பை நிறுத்திக்கொண்ட போது, அம்மாதான் லபோதிபோ என்று அடித்துக்கொண்டாள். அவளுக்குக் கவுரவக் குறைச்சல். அப்பா, "வேண்டாமெங்கி வேண்டாம். அவன் படிச்சு என்ன எளவுக்கு!" என்று சொல்லி விட்டார். "படிக்யத விட்டுப்போட்டு என்னல செய்யப்போற? ஒண்ணி படி, அல்லெங்கி கிருஷி* செய்யி. சும்மா இருந்து திண்ணா மனசில ஒட்டாது" என்றார் தாத்தா. "கிருஷி செய்யுதேன் தாத்தா" என்றான். தாத்தா, கொஞ்ச நேரம் உற்றுப் பார்த்தார். "சத்திய மாட்டுதான் செல்லுதியா?" என்றார். "ஓம் தாத்தா. புஸ்தகம் படிச்சா மனசிலாவேல்ல. நான் கிருஷி செய்யுதேன்" என்றான். தாத்தா நெருங்கி வந்து, தோளில் கையை வைத்தார். "அது மதி மக்கா, படிச்சுப் போட்டு கால் நிக்கர் இட்டோண்டு அலையியதுக்கு ஆயிரம் பேரு இருப்பாவ. கிருஷி செய்யணும் எண்ணு தோணுயதக்குப் போன சென்மத்துல புண்ணியம் செய்திருக்கணும் பாத்துக்க. நீ நல்லா வருவேயில. பாத்து நடந்துக்க. கிருஷில இருக்குத சொகம் தெரிஞ்சா விடமாட்டே" என்றார். அவர் குரலில் கடுமையும் கண்டிப்பும் தவிர இன்னொரு உணர்வும் ஏற இயலும் என அவன் அன்று அறிந்தான். பிரான்ஸிஸ், தன் கரங்கள் ஸ்டீரிங் மேல் நடுங்குவதை உணர்ந்தான். காரின் வேகத்தைக் குறைத்தான். அருமனை தாண்டிவிட்டிருந்தது. தாத்தா மகிழ ஒரு விவசாயியாக அவன் உருவாகவில்லை. செலவாகும் விதம் அறியாமல் செலவு செய்யும் இரு கரங்களைத் தவிர வேறு ஏதுமில்லை அவனிடம். ஒன்றும் தெரியாது, ஒன்றுக்கும் உதவாதவன். பணக்கார வீட்டுச் செல்லப்பிள்ளை. போகம், களியாட்டம் என்று இருபத்தைந்து வருடங்கள். அதன்பின், காதோரம் இலேசாக நரை வர ஆரம்பித்து விட்டது.

தாத்தா ஒரு முறைதான் இவனோடு மனம் முறிவடைய நேரிட்டது. இவன் தட்டிக் கழித்த இருபதுக்கும் மேற்பட்ட கலியாண ஆலோசனைகளுக்குப் பிறகு அப்பாவின் பழைய கூட்டாளி கொண்டு வந்த ஒரு இடத்தையும் இவன் உதற முயன்றபோது, அம்மா அழுது மன்றாடிப் பார்த்தாள். அவளது

* கிருஷி – விவசாயம்

பவுடர் பரவிய, வெளிறிய முகமும் மெலிவான உதடுகளும் வெட்டி உருமாற்றப்பட்ட புருவங்களும் காதோரம் செயற்கையாய் சுருட்டப்பட்ட மயிரும் – இவன் மனசுக்குள் எழுப்பிய கடும் எரிச்சல் அன்று அவன் முகத்தை விகாரமடையச் செய்திருந்தது. அவனிடம் அவள் கத்தக் கத்த அவள் முகமும் மூக்கும் சிவந்து, கண்கள் ஈரமாகி வழிய, தொண்டை மனசுக்குள் நரம்புகள் புடைத்து, விகாரமடைய, இவன் மனசுக்குள் குதூகலம் பொங்கிப் பொங்கி எழுந்தது. இவளைப் புண்படுத்துவதற்காகவேணும் கல்யாணம் செய்துகொள்ளக் கூடாது என்று உள்ளூர எண்ணங்கள் குமிழியிட்டன. மேஜை மீது காலைத் தூக்கிப் போட்டபடி, நுனிவிரலை ஆட்டியபடி, கொஞ்சம்கூடக் கூசலில்லாமல், அவள் துள்ளலைக் கண்கள் மின்னப் பார்த்தவனாக, ஒரே விஷயத்தையே சொல்லிக்கொண்டிருந்தான், "எனக்குப் பிடிக்கேல்ல."

"ஏம் பிடிக்கல்ல? ஒனக்கு இன்னி ராஜகுமாரி வருவா இருந்துக்க..."

"நான் கேட்டேனா ஒனக்ககிட்ட ராஜகுமாரிய கொண்டு வா எண்ணு? நீ போடி ஒஞ்சோலியப் பாத்துக்கிட்டு."

அவள் முகம் துடிதுடிக்க, "பின்ன என்ன நெனச்சிருக்கேவில? இப்பிடியே இருந்துப் போடலாமிண்ணா? செல்லுல..." என்று கத்தினாள்.

"ஏன், இருந்தா என்ன கொள்ளெ?"

அவள் இவனை வெறித்தாள். "சாவக்கிடக்கும்பம், வெள்ளம் தர தேவிடிச்சிய வரமாட்டாளுவ பாத்துக்க" என்றாள்.

"ஓ, கெட்டிப்போட்டா மட்டும் வந்துடுவாளுவ. அப்ப எவ எவன்கூட இருக்கா எண்ணு ஆரு கண்டது?" என்றான் பிரான்ஸிஸ், தெளிவற்ற தாழ்ந்த குரலில்.

"என்னல சொன்னே?" அவள் கண்களில் சட்டென்று எச்சரிக்கையும் ஒருவித ஒளியும் ஏறியது. மெல்ல அவனருகே வந்தாள்.

அவளது சென்ட் மணம் இவனுக்குள் எரிச்சலைப் பொங்க வைத்தது. "ஆம சொன்னேன். கெட்டின பெஞ்சாதி கண்டவன் கூடப் போனாலும் ஆரு கேக்குயது எண்ணு, எல்லாவளும் யோக்கியமானவளுதான், ஆருக்கும் தெரியாதாக்கும்..." என்றான்.

உடம்பு பதற அவனைப் பார்த்தபடி, மூக்குச் சுருங்கி விரியக் கழுத்தைப் பாம்புபோல முன்னால் நீட்டியபடி நின்றாள். அவள் முகம் தாள் போல வெறுத்துப் போய்விட்டது. கண்களில் வந்த

விகாரமான வெறிப்பு இவனுக்குள் சஞ்சலம் ஏற்படுத்தியது. உடனே அங்கிருந்து போய்விட வேண்டும் என்று இவன் மனம் துடிக்க ஆரம்பித்தது. வினாடி வினாடியாக இவன் உடம்பிலிருந்து வெறி வெளியே ஒழுகிச் சென்றது. அருவருப்பும், சுய வெறுப்பும், கூச்சமும், உடல் முழுக்க நிறைந்தது. மேஜை மீதிருந்த காலைக் கீழே எடுத்தான். அவள் பார்வையைத் தவிர்த்தபடி, கைக் கடிகாரத்தை எடுத்து சாவி தரத் தொடங்கினான். அவள் சேலையின் கீழ்ப்புற நுனி காற்றில் அலைபாய்வதை அர்த்தமின்றிப் பார்த்தவாறிருந்தான்.

"செரி, இன்னி ஒனக்கிட்ட பேச்சு இல்ல, எப்பிடியேம் போ" என்று உடைந்த சொற்களில் மெதுவாகச் சொன்னாள். பற்கள் கிட்டித்துக் கொண்டமையால் உச்சரிப்பு கசங்கி, குரல் மிக வினோதமாக ஒலித்தது. பிறகு சரசரவென்று, சேலை உரசும் ஒலியுடன், நடந்து மறைந்தாள். அக்கணம் அவனுள் பெரும் களிப்பு வந்து குமிழியிட்டது. அவன் தன் விரல்நுனிகள் பதற்றம் அடையு மளவு உல்லாசத்தில் விம்மினான். எழுந்து அறைக்குள் உலவினான். இன்னது செய்ய வேண்டுமென அறியாதவனாக அறைக்குள் நடந்தான். உத்வேகம் மெல்லத் தணிந்தபோது ஒருவிதக் குற்ற உணர்வும் கூச்சமும் ஏற்பட்டது. அவளைக் கண்டு மன்னிப்புக் கேட்டு இந்தக் குறுகுறுப்பைத் தவிர்த்துவிட வேண்டும் என விரும்பினான். ஆனால் மறுகணம் அவள்மீது அருவருப்பும், கோபமும் பீறிட்டது.

அன்று பிற்பகல் தாத்தா இவனைக் கூப்பிட்டுப் பேசினார். இவன் 'பிடிக்கவில்லை' என்ற அதே பதிலை மீண்டும் கூறினான். தாத்தா முகம் சுளித்தபடி சற்று நேரம் ஜன்னல் வழியாக வெறித்தார். பிறகு மெல்லக் குரலைத் தாழ்த்திப் "பாவப்பட்ட எடத்தில் வல்லதும் பார்க்கணுமா? பணக்காரியோ படிச்சவளோ வேண்டா மெங்கி வேண்டாம்..." என்றார். இவன் மனம் உறைந்தது. கண்கள் மங்குவது போலிருந்தன. இவனுள் புகுந்து எல்லா ரகசியங்களையும் தாத்தா பார்த்துவிட்டார் என்று தோன்றியது. அது பீதியையும் அதே சமயம் ஒருவித பாரமின்மையையும் ஏற்படுத்தியது. "வேண்டாம் தாத்தா?" என்றான். "ஏம்பில?" "எனக்குப் பிடிக்கல்ல." தாத்தா குரலை உயர்த்திப் "பொண்ணு கெட்டாம களியலாம் எண்ணு உண்டா மனசில?" என்றார். அவன் அதற்குள் மனசைக் குவித்துக்கொண்டு விட்டிருந்தான். நிதானமாய் "ஓம் தாத்தா" என்றான்.

அதிர்ந்து போனவராகத் தாத்தா, பார்த்தவாறிருந்தார். அவர் தலை நடுங்கியது. சுருக்கங்கள் மண்டிய முகம் நெளிந்தது. பிறகு மெல்ல 'செரி போ" என்றார். பிறகு அதைப் பற்றிப் பேசியதே

இல்லை. ஆனால் அவரை அது மிகவும் வருத்தமுறச் செய்து விட்டது என்று அவனுக்குத் தெரிந்தது. பலமாத காலம் அவர் அவனிடம் பேசவில்லை. தொடர்ந்து கோபமாகவும், எப்போதும் எரிச்சலாகவும் இருந்தார். பிறகு பாட்டியின் மரணம் அவர் மனசை வேறுவழியில் திருப்பி விட்டுவிட்டது. குடும்பம் சம்பந்தப்பட்ட எதிலும் ஆர்வம் இல்லாதவராகவும், அமைதியானவராகவும் மாறிவிட்டார். அது இவனுக்கு ஆறுதலளிப்பதற்குப் பதில், ஏக்கத்தையும் குற்ற உணர்வையுமே ஏற்படுத்தியது. தாத்தா மீண்டும் கோபக்காரராக மாற வேண்டும் என்றும் கண்டிக்க வேண்டும் என்றும் உள்ளூர எதிர்பார்த்தான்.

சில சமயம் இரவில் கண்விழிக்கும்போது, அதிசயமாய் போதை தெளிந்து, மிகத் துல்லியமான ஒரு மனநிலை ஏற்படும். முன்னும் பின்னும் மனம் பெண்டுலம் போல அசையும். அந்தக் கணம் வரை செய்து வந்தவை முழுக்க எப்பேற்பட்ட அற்பத்தனங்கள் என்று மனம் திடுக்கிடும். அந்த அற்பத்தனங்களுக்காய் உள்ளூரத் தன் மனம் வெட்கிச் சுருண்டு கொள்வது தெளிவாய்த் தெரியும். அவற்றுடன் தனக்கு சம்பந்தமில்லை என்று எண்ணிக் கொள்வதன் அபத்தம் உறைக்கும். எவ்வாறு ஒருவரின் செயல்களுடன் அவனுக்கு சம்பந்தமில்லாமல் ஆக இயலும்? அவன் செயல்கள்தான் அவன். விபச்சாரம், சோம்பல், குடி இதெல்லாம் தான் பிரான்ஸிஸ். தன்னைப் பற்றிப் பிறர் என்ன எண்ணிக்கொள்கிறார்கள் என அப்போது மனம் குறுகுறுக்கும். நாளை விடிந்த நிமிடம் முதல், புதிய வாழ்வும் புதிய முகமும் என்று எண்ணிக்கொள்வான். தன்னைப் பற்றிக் கேவலமான எண்ணம் கொண்டிருப்பவர்களுக் கெல்லாம் அப்போது தெரியும், பிரான்ஸிஸ் யார் என்று. உத்வேகம் தாங்க மாட்டாமல் புரண்டு புரண்டு படுப்பான். எப்போது விடியும் எனத் தவிப்பான். ஆனால் காலையில் எல்லாமே வெகுதூரமாய் மாறிவிட்டிருக்கும். அலுப்பூட்டும் வெறுமையுடன் தினம் அவன்முன் விரிந்து கிடக்கும்.

தாத்தாவின் தத்தளித்த முகம் மீண்டும் நினைவை அறைந்தது. என்ன அது? அவர் எதைப் பற்றியோ சொன்னார். அப்போது அது மனசைத் தாக்கவில்லை. அவர் முகத்தில் ஏன் அந்தத் தவிப்பு? மரண பயமா? தாத்தாவுக்கா? மரண பயமில்லை. அது அவனுக்கு நன்கு தெரிந்த தவிப்பு. மீள வழியின்றி அமிழ்ந்துகொண்டி ருப்பவனின் தவிப்பு. பாவ மன்னிப்புக்குப் பாதிரியை ஏன் கேட்டார்? சடங்குக்காக அல்ல, அவர் பாஸ்டரை விரட்டியடித்தது, அவரது போலித்தனம் தாங்க முடியாமல்தான். பாவ உணர்வு உண்மையாகவே தாத்தாவைப் படுத்துகிறதா? – என்ன பாவம் செய்தார் அவர்? சூனியத்திலிருந்து தனக்கென ஒரு சாம்ராஜ்யமே எழுப்பிக் கொண்ட தாத்தா!

சட்டென்று தாத்தா கேட்ட கேள்வி மனசில் உதித்தது. குடியான் ரகளை. தாத்தாவின் முகம் அப்போது கனவில் இருப்பது போலிருந்தது.

குடியான் ரகளையின் போதுதான் குன்னத்துக்கல்லில் இருந்து தாத்தாவின் குடும்பம் அகதிகளாக இடம்பெயர்ந்து வந்தது என அவன் கேள்விப்பட்டிருந்தான். வழியில் நாயர்கள் கும்பலாக வந்து தாக்கித் தாத்தாவின் குடும்பமே ஒருவர் பாக்கியில்லாமல் கொலை 'யுண்டது என்றும், தாத்தா மட்டும் எப்படியோ தப்பித்துக் கொண்டார் என்றும் கதை கேட்டிருக்கிறான். பாட்டி நீட்டி முழக்கிக் கதை சொல்வாள். ஆனால் அவளுக்குத் தெரிந்தது சொற்பம். வக்கணையாகச் சொல்லக் கற்பனையும் கிடையாது. சின்னஞ்சிறு தாத்தா தன்னந்தனியாக வந்து, காடுவெட்டி, விவசாயம் செய்து முதலாளியானதும், எல்லாம் ஒரு புராணக்கதை போலத்தான் அவனுக்கு. குடியான் ரகளை பற்றிக் கேள்விப் பட்டதும் நம்ப முடியாததாகவே இருந்தது. இரண்டு தலைமுறை களுக்கு முன் நடந்தது. ஆனால் இன்று புராணக்கதை போல ஆகிவிட்டது எல்லாம். ஒரு காலத்தில் தன்னுடைய சாதி – ஆடுமாடுகளைப் போலத் தொழுவங்களில் வசித்து, நுகங்களில் மாட்டப்பட்டு, அடிமை வேலை செய்து, வாழ்ந்து வந்தது என்பது அவனுக்கு ஒரு செய்தியாகத்தான் தெரிந்தது. அதைக் கற்பனையில் விரித்துக்கொள்ளவே இயலவில்லை. அரை வயிற்றுக் கஞ்சி குடித்து அடிமைகளாக வாழ்ந்த வர்க்கம், ஆண்மை கொண்டெழுந்து கலகத்திற்கு முயலும் என்பதும் ஆச்சரியமான விஷயம்தான். இன்று கடைத் திண்ணைகள் தோறும் அமர்ந்து, வம்பு பேசி, சீட்டாடி, குலப்பெருமை கூறி, சோம்பி, காலம் கடத்தும் நாயர்கள் ஒரு காலத்தில் கீழ்ச்சாதிப் பெண்களை மானம் காக்க உடை அணியக் கூட அனுமதிக்காதவர்கள். கிறிஸ்தவக் கல்வி மூலம் மனித பிரக்ஞை பெற்ற சமூகம், அதற்கு முயன்றபோது கத்தியாலும் ரத்தத்தாலும் அதை எதிர்த்தவர்கள். தெருத் தெருவாக நாடார்களை வெட்டிச் சாய்த்தவர்கள். எல்லாம் பொய்யோ எனச் சந்தேகப் படும்படி ஆகிவிட்டது. இன்று பெருவட்டர்களின் வயல்களில் நாயர்கள் கூலிவேலை செய்யும் அளவு காலம் மாறிவிட்டது.

அவனுக்குள் எப்போதும் நாயர்கள் மீது ஒரு கனிவு உண்டு. இன்றுவரை ஒரு நாயரை 'அடே!' என்று கூப்பிட அவனால் முடிந்ததில்லை. அவன் மதிப்பீட்டில் மரியாதைக்குரிய அம்சங்கள் உடைய எந்த நாயரையும் அவன் பார்த்ததில்லை. இந்த மனப் பலவீனம் ஏன் தனக்குள் இருக்கிறது என்று பிரான்ஸிஸ் நினைத்ததுண்டு. அவன் மூதாதையரைத் தெருவில் வெட்டிச்

சாய்த்த சாதி அது. காலம் விரையும் வேகத்துடன் விரைய மனித மனங்களால் முடியவில்லை போலும். பாட்டன் யானை மீது அமர்ந்ததன் தழும்பு தன் உடம்பிலும் இருப்பதாகக் கூறித் திரியும் நாயர்கள் கூட இறந்த காலத்தில் வாழ்பவர்கள் தாம். இந்த சுகேசினி, அவளுக்குள் கூட ஒரு நாயர் தரவாடு இருக்கிறது.

பிரான்ஸிஸ் சட்டென்று தன்மீது ஒரு ஏளன உணர்வை அடைந்தான். தன்னையறியாமலேயே அவன் கார் களியல் தாண்டி, கடையல் எஸ்டேட் நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. இப்போது அந்த எரிச்சலின் வேர் அவனுக்கே தெரிந்தது. அவன் கடையல் எஸ்டேட்டுக்குத்தான் புறப்படுகிறான் என்ற உள்ளுணர்வுதான் அது. அங்கு போகாமலிருக்க மனம் செய்துகொண்ட முயற்சிகள் தாம் தாத்தாவையும், வீட்டையும் பற்றிய நெகிழ்ச்சியான நினைவுகள் போலும். தான் செய்துகொண்டிருப்பதிலேயே மிகக் கீழ்த்தரமான விஷயம் இதுதான் என அவன் மனம் நம்பி வந்தது. அதைத் தவிர்க்க அது ஆரம்பித்த நாள் முதல் தினமும் பிரதிக்ஞை எடுத்துக் கொள்வான். ஆனால் மனத்தளவில் எதிர்த்துப் போராடப் போராட அதிகமான குற்ற உணர்வும், குற்ற உணர்விலிருந்து அதிகமான பரபரப்பும் அவ்விஷயத்தில் ஏற்பட்டிருந்தது. தீமையின் பரபரப்பு, அவனுடைய அலுப்பூட்டும் வாழ்வில், அலுப்புடன் போராடுவதே வாழ்வு என்றாகிவிட்ட வாழ்வில், இந்தப் பரபரப்பு ஆயிரம் கரம் கொண்ட மோஹினி போலக் கவர்ந்து அழைத்தது. அதிகபட்சம் இரண்டு நாள். அதற்கு மேல் அவனால் கடையல் எஸ்டேட்டுக்குப் போகாமலிருக்க முடிந்ததில்லை.

பிரான்ஸிஸ் டாஷ் போர்டிலிருந்து விஸ்கிப் புட்டியை எடுத்தான். நேராக வாயில் விஸ்கியை விட்டுக்கொண்டான். அனலை விழுங்கியதுபோல அது இறங்கும் பாதை புரிந்தது. வயிறு எம்பித் தொண்டையை அடைத்தது. வாந்தி போன்ற குமட்டலில் இருமுறை உடம்பு உலுக்கிக்கொண்டது. சில நிமிடங்களுக்குப் பிறகு நரம்புகள் பட்பட் என்று இறுக்கமிழந்து தொய்யத் தொடங்கின. கதகதப்பான நீராவி காது மடல்களில் வீசியது. மனமூட்டம் கலைந்தது. நெகிழ்ச்சியும் தவிப்பும் இறங்கின. ஏதோ ரீங்காரம் மட்டும் வெகுதொலைவில் போலக் கேட்டுக் கொண்டிருந்தது.

எதுவோ ஒரு ஞாபகம் ஈ போல முகத்தை மொய்த்து, பறந்து சுழன்றபடி, கூட வந்துகொண்டே இருந்தது. என்ன அது என்று யோசித்தான். முகம் பிடிதராமல் அது வழுக்கிச் சென்றது. கார் திற்பரப்புப் பாலம் தாண்டி, கடையல் எல்லைக்குள் புகுந்து விட்டது. அந்தத் தேடலை விட்டுவிட்டுத் தெருவோரக் காட்சிகளில்

மனம் தாவியலைந்தபோது, திடீரென்று அந்த எண்ணம் அவனுக்குள் புகுந்துவிட்டது. காலை முதலே மனசுக்குள் ஏதோ, கசப்பை நிறைத்து, ஓய்வோடு ஞாபகத்தின் இடையேயும் கசிந்து, எல்லாவற்றையும் கசப்பாக்கிக்கொண்டிருந்தது அது.

அந்தப் பெண், தங்கம் என்றுதானே அவள் பெயர்? பிரான்ஸிஸ் மனசைக் குடைந்தான். என்ன பெயரானால் என்ன என்று அலுப்புடன் ஒதுங்கினான். சில நிமிடம் அலைபாய்ந்துவிட்டு மனம் மீண்டும் அங்கேயே வந்தது. அவளில் ஒரு மாறுதல் இருக்கிறது என்று இன்று காலை அவளைப் பார்த்த கணமே எண்ணினான். அது விரும்பத்தகாத ஒன்று என்றும், உடனே மனம் பிடித்துக்கொண்டுவிட்டது. தொடர்ந்து யோசிக்கும் முன் தாத்தாவின் அறையில் பாஸ்டரின் ஓலம் கேட்டது. இதற்கு முன் இல்லாதிருந்த ஒரு மெருகு அவளில் ஏறியிருக்கிறது என்றுதான் முதலில் பட்டது. அவள் முகம் பொலிவடைந்திருக்கிறது. கன்னங்களில் சிவப்பும் திரட்சியும் ஏறியிருக்கிறது. பருவின் சிவப்புத் திட்டுகளுக்கு நிறம் கூடியிருக்கிறது. கழுத்தின் வளைவில் தோலின் மினுமினுப்பு, நடையில் எச்சரிக்கை, பார்வையில் மிரட்சி, எதையோ மனசுக்குள் அசைபோடும் கனவுச்சாயை. பிரான்ஸிஸ் தன் அனுபவத்தால் ஒன்றை அறிந்தான். அவள் இன்னமும் கன்னி அல்ல.

அப்படியானால் அது யார்? வேறு யார் அவனன்றி? லிவி. அவன் விடுமுறை நாட்களில்கூட வீட்டுக்குள் அடைந்து கிடக்கிறான். உடனே இதுவரை பார்க்க நேர்ந்த, மனம் பொருட் படுத்தாத, சிறு சிறு விஷயங்கள் அவன் மனசுக்குள் விரிந்தபடியே சென்றன. அவை ஒன்றுக்கொன்று முற்றிலும் பொருந்தி, தெளிவான ஒரு சித்திரம் உருவானது.

பிரான்ஸிஸ் சற்றுப் பரபரப்படைந்தான். அந்த பெண் அவனுக்கு ஒரு பெண் என்றே இதுவரை தோன்றியதில்லை. குழந்தைகளை அவனுக்குப் பிடிக்காது என்றில்லை. அவை அசவுகரியமானவை என்று கருதி வந்தான். ஆனால், விளையாடும் குழந்தைகளையும், அம்மா மார்பில் ஒட்டியிருந்து பெரிய கண்களால் பார்க்கும் உப்பலான கன்னங்கள் கொண்ட குழந்தைகளையும் அவன் தன்னையறியாமலேயே கவனித்ததுண்டு. அப்போதெல்லாம் ஒருவித நெகிழ்ச்சிக்கு ஆளாவான். அதை யாரும் பார்த்து விடாமலிருக்க உடனே திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொள்வான். இம்மாதிரியான ஒரு பரிவு இந்தப் பெண்ணிடமும் அவனுக்கு இருந்தது. அவள் யார் என்று அவனுக்குத் தெரியும். பிறருக்குத் தருவதைவிட அதிகம் சம்பளம் அப்பா அவளுக்குத் தருகிறார்

என்பதும் தெரியும். அதற்குக் காரணமும் தெரியும். விருந்தினர்களிடம், அவள் காபி பரிமாறி உள்ளே போய்விட்ட பிறகு, ரகசியமாய், அவள் எந்தக் குடும்பத்தைச் சார்ந்தவள் என்றும், வாழ வழியில்லாத கட்டத்தில் அவளுக்கு வேலை தந்து அந்தக் குடும்பத்துக்குப் பண உதவி செய்ததைப் பற்றியும் கூறி அப்பா பெருமைப்படுவதை அவன் கண்டதுண்டு. அவர் முகம் குழந்தைத்தனமாகக் கிளர்ச்சியும் பெருமையும் கொண்டு சிவந்து காணப்படும். இடையிடையே காரணமின்றி சிரிப்பார். பரிதாபம், உதாரகுணம் ஆகியவை அர்த்தமாக வரும் வார்த்தைகளைக் கூறும். அப்போது ஏனோ அவர் முகம் மட்டும் அவற்றுடன் ஒட்டாமல் வெட்கப் படுவது போல இருக்கும். அவளுக்குத் தரும் சம்பளத்தைப் பற்றி ஒவ்வொரு முறையும் சொல்வார். கேட்பவர்கள் அதனால் அசவுகரியம் கொள்வதை அவர் உணர மாட்டார். "அறைக்கல் ஸ்ரீதரன் தம்பிய நீங்க கண்டிருக்க மாட்டிய. மனுசன் கொஞ்சம் பணமா அளிச்சான்? கூத்தியா வீடு, அங்கேருந்து கோர்ட்டு... ஊருக்கொரு வப்பாட்டி வச்சிருந்தான். கஞ்சிக்கு வளியில்லாம பெண்டாட்டியையும் பெண்ணையும் விட்டுப்போட்டு விளுந்தான். வாதம். ஒரு கையும் காலும் அனக்கப் பளுதில்ல. கேட்க ஒரு நாதி உண்டுமா? நமக்கொண்ணும் இல்ல. அப்பிடி எத்தன பேரு கஞ்சிக்கு வளியில்லாம கெடக்கணும், என்ன செல்லுது?... பின்ன அப்பனுக்கு வலிய காரியம். அவியளுக்காவ இஞ்ச நின்னுக்க எண்ணு சென்னேன். ஹெ... ஹெ..." என்பார். "அந்தப் பெய இப்பளும் கோலேரத்தில் தான் இல்லியா?" என்பார் வந்தவர். "நாற்றக் கேஸ அவுக்காதிய மச்சான். அந்தப் பெய – விடுங்க என்னத்துக்குப் பேசி வாயப் பளுக்க வெச்சது? விடுங்க. ஸ்ரீதரன் தம்பி மூணு வரியம்ல கெடந்தாரு, வெட்டிப் போட்ட வாள மாதரி? ஒருக்கா வந்து பார்த்தானா! இப்படியும் மனுஷ்யங்க உண்டுமா... செல்லாதிய!" என்பார். ஆனால் அந்த விஷயம் எத்தனை பேசினாலும் அலுக்காது அவருக்கு.

அல்பர்கள் என்று எண்ணிக்கொண்டான் பிரான்ஸிஸ். பிறர் வீழ்ச்சி எத்தனை குதூகலத்தைத் தருகிறது! அதை எப்படியெல்லாம் பயன்படுத்திக் கொள்கிறார்கள்! அந்தக் கூட்டத்தில் நான் எப்படிக் கலக்க முடியும்? எனக்கு மட்டும் எப்படி அந்த மனம் இல்லை? எதிலும் தனக்குச் சாதகமாய் எதையும் காண ஏன் முடிவதில்லை?

இப்போது என்ன ஆகப் போகிறது? லிவி தெய்வீகக் காதல் என்று கூறப் போகிறானா? அப்படி நடக்காது என்றும் லிவி அற்பத்தனமாகவே நடந்துகொள்வான் என்றும் அவனுக்குப் பட்டது. அவளைக் காமத்துடன் அணுக இவனால் எப்படி முடிந்தது? வெறுப்புத்தான் வாயில் குமட்டி வந்தது.

மெல்ல நினைவுகள் குழம்பி அலைபாய்ந்தன. உடம்பு முழுக்க ஒருவிதமான வெப்பம் பரவியது. கார் இடையல் ஜங்ஷனைக் கடந்து, சிறிய பாதையில் சருகுகளை அரைத்தபடி, ஓடியது. அவன் உடம்பில் முறுக்கம் ஏறியது. ஒருபுறம் அடர்ந்த ரப்பர்க் காடும், மறுபுறம் வயற்பரப்பும், விரிந்திருக்க, செம்மண் புழுதி மீது சருகுகள் விரிந்த அந்தப் பாதை. அதன் மணங்களும், ஒலிகளும் அவன் மனசுக்குள் காம உணர்வுடன் சம்பந்தப்பட்டிருந்தன.

கேட்டருகே கார் தயங்கி, ஓலமிட்டது. உள்ளிருந்து அந்தக் கரிய சிறு பையன் – அவன் சுகேசினியின் மாமா மகன் என்பது அவள் சொல்லியிருந்தது – வந்து கதவைத் திறந்தான். காரை உள்ளே நிறுத்திவிட்டு பிரான்ஸிஸ் இறங்கினான். தரையில் கால் பட்டபோது சுற்றுப்புறமே ஆடுவது போலிருந்தது. ஆனால் தலைக்குள் ரீங்காரம் குறைந்துவிட்டிருந்தது.

வாசற்கதவைத் திறந்தபடி, உள்ளிருந்து சுகேசினி வந்தாள். குளித்து முடித்து, கூந்தலை விரித்துப் போட்டிருந்தாள். சிறிய சந்தனக் கோடு நெற்றியில். பவுடர்பூச்சுடன் கூடிய, மூப்பு வழவழப்பை இழக்கச் செய்த முகம். வெளிறிய கன்னங்களிலும், வாயைச் சுற்றிலும் சுருக்கங்கள். கண்களின் கீழே நிழல். தடித்த புஜங்கள். மடிப்புகள் விழுந்த இடை. பெரிய வாயின் உதடுகள் விரிய சிரித்தபடி, மலையாளத்தில், "என்ன இரண்டு நாட்களாகக் காணோம்?" என்றாள்.

பிரான்ஸிஸ் தன் உடல் முழுக்க வெறி பரவி உஷ்ணம் அடைவதையும், தசைகள் முறுகி விம்முவதையும் உணர்ந்தான். "நாவருகோயில் வரே போனேன்" என்றான்.

"உட்காருங்க. என்ன சாப்பிடுகிறீர்கள்?" என்றவள் மூக்கைச் சுளித்தபடி, "காலையிலேயே போட்டாகிவிட்டது போலிருக்கிறதே" என்றாள். சிரித்தபடி பேசும்போது எச்சில் தெறித்தது.

பிரான்ஸிஸ் சோபாவில் அமர்ந்தான். அவளையே கண் கொட்டாமல் பார்த்தான். அவன் உடம்பு முழுக்க ஜ்வரம் தகித்தது. அவள் அந்தப் பார்வையைக் கவனித்தாள். ஆனால் சற்றும் கூசவில்லை. அவள் சகஜ பாவம் மாறியது. அவள் புன்னகை பெரிதாகியது. "என்ன ரொம்ப குஷியாக இருக்கிறீர்கள் போலிருக் கிறதே" என்றாள். பிறகு சட்டென்று திரும்பி உடம்பை அளவுமீறி ஆட்டியபடி, பக்கவாட்டு அறையை நோக்கி நடந்தாள். ஒரு முறை பிரான்ஸிஸைத் திரும்பிப் பார்த்தபிறகு, அவனுக்கு நிறைய அர்த்தங்களைத் தரும் பார்வை ஒன்றை அளித்தாள்.

பிரான்ஸிஸ் சோபா கிரீச்சிட எழுந்து, இரண்டு எட்டில் அவளை அடைந்தான். அறை வாசலிலேயே அவளை இறுகப் பிடித்தான். "இருங்கள்" என்று அவள் ஓசையிட்டுச் சிரித்தபடி நெளிந்தாள். அவன் ஸ்பரிசத்தின் கூச்சம் தாளாதவள் போலத் துடித்தாள். அவள் வெட்கமும், இளம் பெண் நடிப்பும் மிக ஆபாசமாக இருந்தன. அது அக்கணங்களில்கூட அவனைப் பாதித்தது. ஆனால் அந்த ஆபாசமே அவனைக் கிளர்ந்தெழச் செய்தது. சட்டையைக் கழட்டி அவன் அவளிடம் தந்தான். அதை அவள் ஹாங்கரில் மாட்டி முடிப்பதற்கு முன்பே அவளைப் பற்றிக்கொண்டான். அவளது முதிய முகம் அவன் முகத்தருகே வந்தது. வியர்வையின் ஈரமும், வாயின் வாடையும், இளம் பெண்களுக்கு இல்லாத ஒரு துவர்ப்பு வீச்சமும் அவனைத் தாக்கின. அவன் தன் உடலை முறுக்கியபடி, மூர்க்கமான ஒரு வேகம் சுருண்டெழுவதை உணர்ந்தான். கைகள் உத்வேகம் தாளாமல் தினவெடுத்தன. அவனுள் குமுறிக்கொண்டிருந்த ஆங்காரம் முழுக்க வழிய ஆரம்பித்தது. வெறி மின்னும் கண்களுடன், அவளை முரட்டுத்தனமாக முன்னும் பின்னும் அசைத்தான். "நேத்தய்க்கு இஞ்ச ஆருடி வந்தது?" என்று கூவினான். அவன் தொண்டை குறுகி, நரம்புகள் புடைத்திருந்தன. கண்கள் உந்தி, நெற்றியில் நரம்புகள் நெளிந்தன. "செல்லிப்போடு, இல்லெங்கி வெட்டிக் கூறுபோட்டுப் போடுவேன்" என்று முரட்டுத்தனமாகக் கத்தினான். ஆனால் அவன் உள்ளூரப் பொருட்படுத்தவில்லை என்பது தெரிந்தது. எனினும் இமைகள் படபடக்க அளவுமீறி நடுக்கமும் பயமும் காட்டி, கைகளை முன்னால் நீட்டி, "இல்லே, ஆரும் வரேல்ல" என்று கெஞ்சினாள். மூக்கு அசைய முகம் அழுகைக்குத் தயாரானது.

"ஆரும் வரேல்லியா? பின்ன எதுக்குடி அந்த கொளம் கோரிப்பய இஞ்ச வந்தான்? கள்ளம் செல்லுதியா, பட்டிகளு வெறிக்க மோளே?" என்று கூச்சலிட்டான். "அறியிலாம்டி ஒனக்க வம்சத்த... ஒனக்க லேசமும் டான்சும் தூ..."

அவள் கண்கள் உடனே மாறுதலடைந்தன. கிரீச்சிட்ட குரலில், மலையாளத்தில், "போடா... வம்சத்தை இவன் கண்டான் பெரிதாய், உன் வம்ச மகிமையெல்லாம் தெரியும்டா நாயே" என்று கத்தினாள்.

"என்னடி அறியிலாம் ஒனக்கு? வாய நீட்டாதே, கொண்ணு போடுவேன்."

"சீ போடா நாயே, உன் வம்சம் வளர்த்த கதை தெரியும்டா; திருடியும், ஏமாற்றியும் நாலு காசு சேர்த்தால் எசமானாகி

விடுவானாடா?" இப்போது அவள் நிதானமாகிவிட்டிருந்தாள். அவனை வெறிகொள்ளச் செய்யும் வார்த்தைகளாகப் பொறுக்கிப் போட்டாள்.

பிரான்ஸிஸ் மதம் பிடித்த யானை போல அறைக்குள் அங்குமிங்கும் உலவினான். சுயநினைவற்றவன் போலக் கெட்ட வார்த்தைகளைக் கொட்டியபடி, மேஜை மீதிருந்த பொருட்களை எடுத்துத் தரையில் வீசினான். "இதெல்லாம் விபச்சாரம் செய்து சம்பாதித்த சொத்து. உன் தாத்தா மாதிரி சாதுக்களைக் கொன்று கூட்டி வைத்த சொத்து இல்லை. வைடா அங்கே..."

பிரான்ஸிஸ் அவளைப் பிடிக்கத் தாவினான். "போடி வாயத் தெறக்காதே, கொண்ணு போடுவேன்."

"ஒனக்க அம்மய விடப் பெரிய மோசமானவ எவடா இருக்கா?"

அவள் கூர்மையாகத் தமிழில் கேட்டாள். "மதம் பிடிச்சவளைக் கேட்கத் துப்பில்லை, வயித்துக்கு வழியில்லாதவளைக் கேக்க வாறான்... தூ..."

அவன் அவள்மீது பாய்ந்தான். அவளை மிருகத்தனமாக அடிக்க ஆரம்பித்தான். அவன் காய்ப்பேறிய பெரிய உள்ளங்கை அவள் சதைகளில் படீர் படீர் என்று நெறித்தது. அவள் ஒலியெழுப்பியபடி, துவண்டு துடித்தாள். அவள் துடிப்பு அவனை மேலும் வெறிகொள்ள வைத்தது. அவள் ஓலமிட அவனுக்குள் பரவசம் நிறைந்தது. அவன் உடம்பு பரபரப்புடன் அலைமோதியது. அடியின் வலியில் குறுகிப் போய், அவள் தன் முகத்தையும் கண்களையும் கைகளால் மூடியபடி, குலுங்கிக் குலுங்கிக் கேவி அழுதாள். அவன் அவள் உடைகளைப் பிய்த்து வீசினான். அவள் தலை மயிரைச் சுழட்டித் தரையில் போட்டு மிதித்தான். தலை தூக்கி, அவள் அழுவதைப் பார்த்தான். அவள் ஊளையிடும் ஒலியுடன், குரல் விளங்காமல், அழுதுகொண்டிருந்தாள். "அடிக்காதே... அடிக்காதே" என்றாள். மூச்சிரைத்தபடி, வியர்வை முதுகுவழியாகச் சூடாக வழிய, அவளை பிரான்ஸிஸ் கண் கொட்டாமல் பார்த்தான். அவன் வெறி அடங்கிக்கொண்டிருந்தது. அவனுக்குள் இனம் புரியாத கனிவு சுரந்தது. சோகம் பொங்கி தொண்டையை அடைத்தது. அவன் ஒரு கண்ணில் இருந்து கண்ணீர் வழிந்து அவள்மீது சொட்டியது. அவன் அவள் கைகளைப் பிடித்து விலக்கினான். அவள் உதட்டைக் கூப்பியபடி, கண்ணீரால் ஈரமான கன்னங்களுடன் அவனைப் பார்த்து விசித்தாள். அடிபட்ட இடங்கள் சிவந்து கன்றிப் போய்விட்டி

ருந்தன. அவன் முதுகெலும்பு கூசியது. அவள் உதட்டைக் கோணி, "ஸ்ஸ்" என்றாள். பிரான்ஸிஸ் அவளை முத்தமிட ஆரம்பித்தான். அவன் வயிற்றிலிருந்து பொங்கியபடி அழுகை வந்தது. உதடு துடிக்க விம்மி விம்மி அழுதபடி, வெறியுடன் அவளை முத்தமிட்டான். அவள் முகத்தில் இறுக்கமும் அலுப்பும் தெரியத் தொடங்கின. முகம் ஒருபுறமாகச் சரிந்து, அவள் பெரிய இமைகள் மூடின.

## ... 5 ...

திருவனந்தபுரத்திலிருந்து திரும்புகையில் தன் கணவர் நல்ல மனநிலையில் இல்லை என்பதைப் பெருவட்டத்தி காணாமல் இல்லை. ஆனால் அவள் அதைப் பெரிதாகக் கருதவில்லை. அவருக்கு எத்தனையோ கவலைகள், பிரச்சனைகள், வெறிகள். அவை அவளுக்கு அன்னியமானவை. எதையும் அவளுடன் பங்கிட்டுக்கொள்ள அவர் தயாரானதில்லை. அறியும் ஆவலும் அவளிடம் இல்லை. வெறும் ஒரு வேட்டைச் சுகத்திற்காகத்தான் அவர் பைத்தியம் போல ராப்பகல் அல்லாடுகிறார் என்றும், எல்லாப் பிரச்சனைகளும் அவர் உருவாக்கித் திளைப்பவைதாம் என்றும், அவளைவிடத் தெரிந்தவர்கள் யாருமில்லை. அவரை அவள் உள்ளூரப் பொருட்படுத்தியதே இல்லை. அவரது பணம்தான் அவள் அவரை மணந்துகொள்ள ஒரே காரணம் என்பதும் அவளுக்கு உள்ளூரத் தெரியும். ஆனால் ஒருபோதும் அதை ஒப்புக்கொள்ள மாட்டாள்; தனக்குத்தானே கூட. இரக்கமும் அம்மாவின் மீது கொண்ட அன்பும்தான் அந்தக் கலியாணத்திற்கு ஒப்புக்கொள்ளக் காரணமாக இருந்தவை என எண்ணிக் கொள் வாள். மணமாகி வந்த நாள் முதல் அவள் அவரை, நுணுக்கமாக அலட்சியம் செய்து வந்தாள். அதற்குத் தனக்கு அருகதை இருப்பதாகவும் நம்பினாள். அவள் மட்டுமல்ல, அவரே அப்படி நம்பினார் என்பதுதான் இன்னமும் முக்கியம். அவளது அழகு, அதைவிடப் படிப்பு, இவற்றால் பிரமிப்பில் ஆழ்த்தப்பட்டவராக அவளை அவர் சுற்றி வந்த அந்த ஆரம்ப நாள்களில் அவள் அலட்சியம் உச்சநிலையில் இருந்தது. பிற்பாடு பிரமிப்பு ஓய்ந்து, வெறுப்பு அவரில் குடியேறியபோது, அதை உணராத அளவு தூரத்தில், அவள் அவர் பணத்தைக் கொண்டே, ஒரு தனி உலகை ஸ்தாபித்துக்கொண்டிருந்தாள். அவர் அதைப் பொருட்படுத்த வில்லை. சில முக்கியமான வேடங்களை அவள் அவருக்காகப் போட்டால் போதுமானது என்று ஒதுங்கிவிட்டார்.

காரின் பின்னிருக்கையில் சாய்ந்தபடி, வெளியே ஓடி மறையும் கடைத் தொடர்களைப் பார்த்தாள். பிரக்ஞையில் எதுவும்

படியவில்லை. முற்பகல் வெயில் சோர்வு தரும்படி கூசியது. மாணவிகள் கூட்டம் கூட்டமாகப் போய்க்கொண்டிருந்தார்கள். கூந்தலை விரித்துப்போட்டு, மஞ்சள் சந்தனக் கீற்றுத் திலகத்துடன், பாவாடை சட்டை அணிந்த, மலையாளப் பெண்கள். கரிய பெரிய விழிகளுடன் கூடிய மாநிறப் பெண்கள். எண்ணெய் மின்னும் மஞ்சள் சருமம் கொண்ட, நாயர் என்று முகத்தில் எழுதி ஒட்டியிருந்த பெண்கள். எல்லாருமே அழகுதான் என்று பெருவட்டத்தி இயல்பாய் அவளுக்குள் அடிக்கடி எழும் எண்ணத்தை மீண்டும் அடைந்தாள். அவர்கள் குறைவான நகைகளே அணிந்திருப்பதும், வழக்கம்போல அவள் கவனத்தை அழுத்தியது. 'குடிக்கக் கஞ்சிக்கு வளியில்லேங்கிலும் வலிய சுந்தரிக்கோதைங்க எண்ணுதான் நெனப்பு, மலையாளத்துச் சவங்க' என்று உடனே இன்னொரு மனம் கரித்தது. அவளுள் ஊறிய ஏக்கத்திற்கு மாற்று அளித்தது. அந்தப் பெண்களிலிருந்து மனசை நீக்கவே இயலவில்லை. அந்த இளமையும் குதூகலமும்தான் தன்னைப் படுத்துகிறதா என்ன? தன்னையறியாமலேயே கை மூக்குக் கண்ணாடியை மேலேற்றித் தலையை வருடிக்கொண்டது. பெருமூச்சுடன் கண்களை மூடிக்கொண்டாள்.

இளமையில் சர்ச் அவளுக்கு மிக முக்கியமான ஒரு இடமாக இருந்தது. லிட்டில் ஃப்ளவர் ஸ்கூலில் மெட்ரிகுலேஷன் முடித்த பிறகு வீட்டில் சும்மாதான் இருந்தாள். உண்மையில் சும்மா அல்ல. சங்கீதப் பாடம், தையல் பாடம் என்று பகல் முழுக்க அவசரம்தான். ஆனால் தன்னைக் காட்டிக்கொள்ள வேறு ஒரு சூழல் தகையவில்லை. பள்ளியில் ஒன்றாம் வகுப்பு முதலே பிறர் பாராட்டும் சுகத்தை அனுபவித்து வந்தவள். "திரேஸ் என்ன அழகு!", "திரேஸ் ஒரு பாட்டுப் பாடு", "திரேஸ் நீதான் ஃபஸ்ட்..." அவை அவளுக்குள் தான் அசாதாரணமான ஒரு விசேஷப் பிறவி என்ற எண்ணத்தைத்தான் ஏற்படுத்தியிருந்தன. மற்றவர்களுக்காக எவ்விதத்திலும் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டிய கடமை தனக்கு இல்லை என்று அவள் எண்ணினாள். ஒரு எதிர்மறை எண்ணமாகவோ வீராப்பாகவோ அல்ல. இயல்பாகவே, எப்போதும் அவளைப் பற்றியே அவள் மனம் எண்ணிக்கொண்டிருந்தது. இளமை முதலே அவள் உடல் பற்றிய ஞாபகம் அவளுக்குள் ஊறிவிட்டிருந்தது. அனேகமாய்ப் பத்து வயதுக்குள்ளாகவே - தன்னைவிடப் பெரியவர்களின் உடலமைப்புடன் ஒப்பிட்டுக் கொள்ளுதல், கண்ணாடியில் மணிக்கணக்காக சுயபிம்பம் பார்த்தல், திரும்பத் திரும்ப அலங்காரம் செய்துகொண்டே இருத்தல், பொது இடத்தில் எல்லாக் கவனங்களும் தன்மீதுதான் குவிந்திருக்கின்றன என்று எண்ணிக்கொள்ளல், எல்லாம் இயல்பாகவே படிந்து

விட்டது. அவள் வளர வளர, எங்கும் கண்கள் அவளையே மையம் கொள்ளத் தொடங்கின. எனவே பொது இடங்களை அவள் மனத்துடிப்புடன் விரும்பினாள். சிறு அலட்சியம் கூட அவளைப் பெரும் கோபாவேசத்தை நோக்கித் தள்ளிவிடும். ஒரு முக்கியமான பேச்சின் நடுவே தன்னை மையம் கொள்ளாது கவனங்கள் விலகிவிட்டன என்று உணர்ந்தாளென்றால், அவளுக்குப் புகை மண்டத் தொடங்கிவிடும். முகம் சுருங்கும். முதலில் கவனமின்மை காண்பிப்பாள். மேஜை அலங்காரத்துடன் விளையாடத் தொடங்குவாள்; அல்லது சம்பந்தமின்றி ஏதாவது கேட்டுச் சிணுங்குவாள்; 'பசிக்கிறது' என்று அம்மாவை நச்சரிப்பாள். நாளைக்கு ஒரு புது ஜாக்கெட் வேண்டும் என்று அப்பாவைத் துளைத்து எடுக்கத் தொடங்குவாள். அப்பாவும் அம்மாவும் அவளை ஏதோ விசேஷமான கலைப்பொருள் என்று கருதி வந்தார்கள். அவளுக்குப் பதினெட்டு வயதான பிறகும் குழந்தை போலவே நடத்தி வந்தார்கள். அப்பா ஸி.எம்.எஸ். ஆஸ்பத்திரியில் டாக்டர். அவளைப் பெயர் சொல்லிக் கூப்பிடமாட்டார், "ஸ்வீட்டி" என்பார்.

சட்டென்று அவள் மனம் இளகியது. அப்பாவின் ஷேவிங் பச்சைக் கன்னங்களும், பூனைக் கண்களும், லேசாய்ச் செம்பட்டை மின்னும் மீசையும், மனசைத் தாக்கின. உதட்டை இறுக்கியபடி, சாலை நோக்கிப் பார்வையைத் திருப்பினாள். கண்கள் இலேசாகப் பனித்தன. வெகு காலத்துக்கு இப்பால் நின்று யோசித்தபோது, அவரளவுக்கு வேறு யாரும் தன் உள் மனசை அசைத்ததில்லை என்று தோன்றியது. அதற்குக் காரணம், அவரளவிற்கு அவள் அழகை ஆராதனை செய்தவர்கள் - அவளைத் தவிர வேறு அழகை அடையாளம் காண மறுக்குமளவு தீவிரமாக ஆராதித்தவர்கள் - வேறு யாருமில்லை என்பதுதான். ஆனால் மாரடைப்பால் அவர் ஆஸ்பத்திரியில் இறந்தபோது, அவள் பெரிதாக சோகம் எதையும் அடையவில்லை. முதல் வலித் தாக்குதலுக்குப் பிற்பாடு, அவர் தன் முகத்தின் அழகையும், இனம்புரியாத கம்பீரத்தையும் - டாக்டர்களுக்கே உரியது இது என்று பட்டது அவளுக்கு - இழந்து விட்டவராக, புதுப்புதுச் சுருக்கங்கள் தெரிந்த முகத்துடன் படுத்திருந்தபோது அவர் ஒரு பெரிய தொல்லை என்றுதான் அவளுக்குத் தோன்றியது. அப்படி நினைப்பதில் குற்ற உணர்வுகூட அப்போது ஏற்பட்டதில்லை. அவளைக் கண்டால் அப்பாவின் முகம் விரியும். பக்கத்தில் வந்து அமரச் சொல்வார். அவள் கைகளைப் பற்றித் தன் கைக்குள் வைத்தபடி, கொஞ்சிக் கொஞ்சிப் பேசுவார்; குழந்தை போல. தன்னைக் குழந்தை போல மற்றவர்கள் நடத்துவதை அவள் பெரிதும் விரும்பியிருந்தாள். எனினும், அவை

அப்போது மிகுந்த அருவருப்பையே அளித்தன. தன் உள்ளே கசந்த வெறுப்பைக் காட்டாமல் முகத்தை இயல்பாய், களங்கமற்றதாய், வைத்துக்கொள்ளவும், கனிவுடனும், கருணையுடனும் பேசவும் எப்படி முடிந்தது என்பதே புதிர்தான். ஆனால் எக்காலமும் அதற்கு முடிந்திருக்கிறது. அந்தந்தக் காலங்களுக்கேற்ற வேடங்களை மிகத் திறமையாகப் போட அவளுக்கு ஒருபோதும் சிரமம் இருந்ததில்லை.

சாகக் கிடக்கிற அப்பாவை, ஒரு நாய் போல உடல் குழையத் தன்னைச் சுற்றி நடனமிடும் அவரது ஆராதனையை ஏற்றபடியே, வெறுத்தாள். அவர் சாகப் போகிறார் என்று ஓர் உள்ளுணர்வு கூறிக்கொண்டிருந்த போதும், அவள் மனம் அலைக்கழியவில்லை. காரணம், அக்காலங்களில் அவளுள் இன்னொரு முகம் இருந்தது. அந்த முகத்தை அவள் தனக்கேற்றபடி மாற்றி, தன் மனசில் வரைந்து வைத்து, கொஞ்சிக்கொண்டிருந்தாள். எபன். அவனின் இளமையும் அழகும் தெரிந்த முகத்துடன் அப்பாவை அவள் ஒப்பிட்டுக் கொண்டிருக்கலாம். இளமைக்கான தவிப்பே முதுமையையும் மரணத்தையும் வெறுக்கத் தூண்டியிருக்கக் கூடும். அப்பா குளிர்ந்து போய், மூக்கில் பஞ்சு வெண்மையாய் மூடியிருக்க, வெளிறிப் போய் யாருடையதோ போல் ஆன முகத்துடன், முன் ஹாலில் படுத்திருந்த போது, அவள் அவர் கால்மாட்டில் அமர்ந்து அலறி அழுதபடி இருந்தாள். எனினும் அவள் பிரக்ஞையின் ஓரம் எபன் எபன் என்று அலைபாய்ந்துகொண்டுதானிருந்தது.

சர்ச் அவளுக்கு சுயத்தை நிறுவிக்கொள்ளும் மேடையாக இருந்தது. உடைகள் சரசரக்க, தலையை நளினமாய்ச் சிலுப்பித் தோழிகளுடன் பேசியபடி ஓரக்கண்ணால் ஆண்களைப் பார்த்தபடி, உடலை வருடும் பார்வைகளை உவகையுடன் அலட்சியம் செய்தபடி, போகலாம். பியானோ இசைக்கேற்ப வெள்ளி உருகிக் கம்பியாய் நீள்வது போன்ற குரலில் பாடலாம். மொத்த விழிகளிலும் ஆராதனை, 'நீ தேவதை' என்ற செய்தி. அந்தச் சுகத்தில் விம்மி, மனம் பதைத்து, கன்னங்களில் சிவப்புத் திட்டுகள் தோன்றி மறைய, கண்மூடி ஜெபம் செய்வதாக பாவிக்கலாம். அப்போதெல்லாம் தினம் வந்து உடலை மொய்க்கும் எத்தனையோ பார்வைகளில் ஒன்றாக இருந்தது எபன் பார்வை. முதலில் மற்றவற்றைப் போலவே அதையும் அலட்சியப்படுத்தினாள். ஆனால் பிறகு அவன் முகம் தன் உள்ளே பதிந்துவிட்டிருக்கிறது எனத் தனிமையில் உணர நேரிட்டபோது அவள் அகங்காரத்தை அது அசைத்தது. எனவே வேகத்துடன் அவனை மேலும் அலட்சியம் செய்ய ஆரம்பித்தாள். அலட்சியம் செய்கிறோம் என்பதை அவன் காண வேண்டும் என்பதற்காக மீண்டும் மீண்டும் அவன் முன் தோன்றவும், அவன்

பார்வையைச் சந்திக்கவும் முயன்றாள். அவன் முன் தோன்றும் போது மனசுக்குள் ஏற்படும் படபடப்பும், நரம்புகளில் ரத்தப் பீரிடலும் தரும் சுகமே அவ்வாறு செய்ய உண்மையில் தன்னைத் தூண்டுகிறது என அவள் உணர்ந்திருக்கவில்லை. இந்த அலட்சியம் காரணமாக அவன் புண்பட்டு விலகிப் போய்விடக் கூடாது என்ற பயமும் அவளுக்குள் அடிமனசில் இருந்தது. எனவே எப்போதும் செய்துகொள்வதைவிடப் பலமடங்கு அதிகமாய் அலங்காரம் செய்துகொண்டாள். தோழிகளின் கவனம் மெல்ல இவ்விஷயத்தில் திரும்பியது. அவர்கள் கிண்டல் செய்யும்போது முகம் சிவக்கக் கோபம் கொள்வாள். உள்ளூர அவை கிளுகிளுப்பூட்டின. அவர்கள் கிண்டல் செய்யாமலிருக்கும் பட்சத்தில் அதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கித் தரும் பொருட்டுப் பேச்சைக் கவனமாய் அத்திசை நோக்கி இட்டுச் செல்வாள். எபன் அவளை விட்டு விலகிப் போவான் என்ற எண்ணமே தாங்க முடிவதாக இருக்கவில்லை அவளுக்கு. அதே சமயம், இது எங்கே கொண்டுபோய்ச் சேர்க்கும் என்ற பீதியும் அலைக்கழித்தது. அரக்கில் சிக்கிய பறவை போல, விடுபடுவதற்கான சிறகடிப்பே மேலும் சிக்கிக்கொள்ளக் காரணமாக அமைந்தது. ஒருநாள் எபன் இவளைப் பார்க்கத் தவறினால், "அதென்ன திமிர்! பெரிய துரை என்று நினைப்பு" என்று உள்ளுக்குள் குமுறுவாள். "பெரிய இவன் என்று நினைப்பு. அவனும் அவன் மீசையும்" என்று திட்டித் தீர்ப்பாள். அவன் கவனம் வேறு எங்காவது போகிறதா என்று மனசு தவிக்கும். அடுத்த ஞாயிறு வரை அந்த வீராப்பைத் தக்கவைத்துக்கொள்ள இயலாது அவளால். எபன் விட்டுவிட்டுப் போய்விடுவானோ என்ற சந்தேகம் வளர்ந்து, முளைவிட்டுக் கிளை பரப்பி 'விட்டுவிட்டான்; அதில் சந்தேகமே இல்லை' என்ற தீர்மானம் வரை வந்தடைந்து, அதற்கு ஆயிரம் ருசுக்கள் கண்டுபிடித்துப் புண்பட்டு, அவள் மனம் எரியும். உடனே அதற்குக் காரணம் எபன் வேறு எவள் மீதோ திரும்பி விட்டமைதான் என்று தோன்றும். பிறகு அதைத் தாங்க முடியாமல் துடிப்பாள். தவிப்பில் இரவுகள் தூக்கமின்றி நீண்டு நீண்டு போகும். உற்சாகமும் துருதுருப்பும் இல்லாமலாகும். இனம்புரியாத சோகத்துடன், இரவில் இருளில் தலையணையில் முகம் புதைத்து அழுவாள். தனிமையில் அமர்ந்து, தன்னை மிகுந்த இன்னல்களுக்கு உள்ளாகும் அபலை போலச் சித்தரித்துப் பகல் கனவு கண்டு, அவ்வேதனையில் திளைப்பாள். மாற்றி மாற்றி செயல்திட்டங்கள் வகுப்பாள். அம்மா, "என்னடி? என்ன ஆச்சு?" என்று துளைத்தெடுக்க, அப்பா உடம்பு சரியில்லையா என்று கவலைப்பட முகம் வெளிறி, உதடுகள் உலர்ந்து, கண்களில் ஜ்வரம் தெரிய, நடமாடுவாள். மெல்ல மெல்ல ஞாயிறு நெருங்கும்.

என்னென்ன அலங்காரங்கள் செய்துகொள்ள வேண்டும் என்று யோசித்து யோசித்து சனி இரவு அலைமோதுவாள். எல்லாவற்றையும் விட அலங்காரமே முக்கியமான விஷயம் என நம்பினாள். ஞாயிறு எப்படியோ அதிகாலையிலேயே விழிப்பு வந்துவிடும். உற்சாகத்தில் மனம் புறாச் சிறகு போலப் படபடக்கும். ஊடே பீதியும் தவிப்பும் வலிபோக மனசைத் தாக்கும். சர்ச் நேரம் ஆக ஆக மெல்ல அவள் உற்சாகம் வடியும். பீதி எப்படியோ உச்சத்துக்குப் போயிருக்கும். வேண்டாம், சர்ச்சுக்குப் போகவே வேண்டாம் என்று எண்ண ஆரம்பித்துவிடுவாள். உடல் முழுக்க ஒரு நடுக்கம் பரவித் ததும்பும். வாயும் தொண்டையும் உலர்ந்து, வயிற்றுக்குள் குளிர் நிறையும். அம்மா கிளம்பி முற்றத்தில் நின்று கூப்பிடும்போதும் கூட சர்ச்சுக்குப் போவதா வேண்டாமா என்று தான் தவிப்பாள். சர்ச்சில் மிக மோசமான எதுவோ காத்திருக்கிறது என்று தோன்றும். ஆனால், போகாமலிருக்க இயலாது. பெரும் சோகமாக இருக்கலாம். அதை எதிர்கொள்ளலாம். இந்தத் தவிப்பில் தொடர்ந்து உயிர் வாழ்தல் சாத்தியமல்ல. அவள் நடை தடுமாறும். “கர்த்தரே ஜேசுவே” என்று ஒரு குரல் மனசுக்குள் ஒலித்தபடியே இருக்கும். பைபிளைப் பற்றிக்கொள்ள இயலாமல் கைகள் வழுக்கி நடுங்கும். தொடைகளும் கழுத்தும் வேர்த்துவிட்டிருக்கும். நீண்டு, நீண்டு முடிவின்றிச் சென்றுகொண்டிருப்பதாகப் பிரமை தரும் பாதையில்; துளி நம்பிக்கையும், பயங்களின் பெரும் அலைகளும், மாறி மாறி மனசில் கொந்தளிக்கும். திடீரென்று சர்ச் கோபுர நுனி தெரிதல், அல்லது கூட்ட மணியோசை, குளிர்ந்த நீரை மேலே கொட்டிவிட்டது போல அவளைத் தாக்கும். படியேறித் தோழிகளைக் கண்டதும் வழக்கமான முகமும் சிரிப்பும் காட்டி, சர்ச் முற்றத்தை அடையும் வரை, கண்கள் தேடித் தேடி அலையும். எபன் தன் கண்ணில் பட்டதும், அவள் உடம்பு உலுக்கிக் கொள்ளும். ஒரு நொடிதான், அவன் கண்கள் அவளை நோக்கித் திரும்பும். அவற்றில் ஜ்வரம் அலையடிக்கும். தாபத்தில் பொசுங்கிய முகம் அவளுக்குள் குளிர் நிறைக்கும். எல்லாம் உதிர்ந்து, இறகுபோல மிதக்கத் தொடங்கிவிடுவாள். தொண்டை அடைக்கும். கர்வத்தில் மார்புகள் விம்மித் தணியும். கண் நுனிகள் கண்ணீரில் நனைந்து, காற்றில் குளிரும். இமைகளைக் கொட்டி, கண்ணீரை உலரச் செய்ய முயல்வாள். அவன் கண்களைச் சந்தித்து, உடல் பூரித்து, உதடுகள் விரியப் புன்னகைப்பாள். அவள் பெண்மையின் நளினம் முழுக்க ஒரு சிறு உடலசைவில் - கழுத்துச் சொடுக்கலில், அல்லது முந்தானை சரி செய்வதில், அல்லது தலைமயிரை ஒதுக்குதலில் - வெளியே கொட்டும். செயற்கையாக அல்ல, இயல்பாகவே அவனை அழைக்கும் பாவனைகள் அவள் உடலில் கூடிவிடும். அதை

அடக்கும் முயற்சியில் அவள் அசைவுகள் முழுக்கச் செயற்கையாகவும் மாறிவிடும். எபன் பூரித்துப் போவதையும், அவன் உடல் முழுக்க ஒரு துள்ளல் குடியேறுவதையும் அவள் காண்பாள். அவன் முகம் அசடு தட்டத் தொடங்கிவிட்டிருக்கும். உடனே அதிகமாய்க் கொடுத்து விட்டோமோ என்ற தயக்கம் மனசை உறையச் செய்துவிடும். அகங்காரம் மீண்டும் சிலிர்த்தெழும். அடுத்த ஞாயிறு வரை எபனை முற்றிலும் அலட்சியப்படுத்துவாள். அவன் காண இன்னொரு இளைஞனிடம் சகஜமாகப் பேசிச் சிரிப்பாள். சிலுப்பிக் கொள்வாள். எபன் சோர்ந்து, முகம் சிவந்து, சிறுத்துப் போவதைக் காணும்போது அவள் உள்ளுக்குள் உவகையும் தவிப்பும் கூடும்.

அலைக்கழிப்பின் உச்சியில், ஒரு நாள், எபன் இவளுக்கு ஒரு கடிதம் எழுதிவிட்டான். அந்த வாசகங்களின் தாபமும் அசட்டுத்தனமும் உத்வேகமும், இன்றுகூட அவளுக்கு ஞாபகம் இருக்கிறது! அதை ஒரு சிறுவன் அவளிடம் தந்துவிட்டு, “எபன் அண்ணா தரச் சொன்னார்!” என்றான். சட்டென்று பையனின் பார்வை திரும்பிய திசையில் அவள் பார்த்தாள். எபன் தலைமறைவது தெரிந்தது. மனசு ஜில்லென்று காற்றில் எழும்பியது. புடைத்த பாய்மரம் போல் உடல் முறுக்கிக் கொண்டது. அதை பைபிளில் செருகிக்கொண்டாள். அன்றிரவு அதை எத்தனையோ முறை படித்தாள். இரவெல்லாம் அதைப் படிப்பதும், மூடிவிட்டுப் படுப்பதும், தவிப்புத் தாங்காமல் எழுந்து மீண்டும் படிப்பதுமாக இருந்தாள். அவளை அறிந்த அனைவரும் அதைப் படிக்க வேண்டும் என்ற எண்ணம்தான் அப்போது ஏற்பட்டது. அதே சமயம் பெரும் பயமும் எழுந்தது. தோழிகளிடம் சற்றும் பிடிக்காதவள் போல நடித்தபடி, மறுநாள் அதைக் காட்டினாள். ஆவலுடனும், துடிப்புடனும் அவர்கள் அதை முட்டி மோதிப் படிப்பதைக் கண்டபோது, அவர்கள் முகத்தில் ததும்பிய உத்வேகத்தையும், பொறாமையின் நெளிவுகளையும் கவனித்தபோது, அவளுக்குள் உத்வேகம் பொங்கியது. அவள் அழகைப் பற்றி அவன் எழுதியிருந்த வரிகளை அவள் கிண்டலாக அவர்களுக்குச் சொல்லிக் காட்டி, சிரித்தாள். அவர்களும் மிகவும் செயற்கையாக உரக்கச் சிரித்தனர். “இப்படிப்பட்ட ஆளா இவேன்...?” என்று ஒருத்தி நீட்டி முழக்கிச் சொன்னாள். இவளுக்கு அவளைக் குதறிவிட வேண்டும் என்ற கோபமும் ஏளனமும்தான் ஏற்பட்டது.

கடிதத்துக்கு எவ்வித பதிலையும் அவள் தரவில்லை. அவனை முற்றிலும் புறக்கணித்து, கடும் முகபாவம் காட்டி நடந்தாள். எபன் பித்தனைப் போலத் தலை கலைந்து அலைவது அவளுக்குப்

பரிதாபமாகவும் சுகமாகவும் இருந்தது. விடிகாலை ஜெபம் முடிந்து ஒருமுறை அவள் திரும்பும் வழியில், இருள் பிரியாத நேரம். சர்ச்சுக்கும், கான்வென்ட்டுக்கும் இடைப்பட்ட குறுக்கு வழியில், எபன் எதிர்பாராத விதமாக அவள் முன் தோன்றினான். அவள் அப்படியே நின்று, கண்களை இடுக்கியபடி, அவனைப் பார்த்தாள். அவள் மூச்சு துரிதமடைந்து மார்பு அறையத் தொடங்கியது. "என்ன வேணும்?" என்றாள் அவள், கடுகடுப்பாக. "நான்.. எனக்க லெட்டர் கெடச்சுதா?" என்று எபன் உடைந்துபோய் வினோதமான குரலில் கேட்டான். சுரம் கண்டவன் போலிருந்தான். அவன் உடம்பே பதறிக்கொண்டிருந்தது. அவள், "வழிய விடுங்க" என்று கடுகடுப்புடன் சொன்னாள். "நீ என்ன நெனக்குதே?" என்றான் எபன், கொஞ்சும் குரலில். அவள் உதட்டை நக்கியபடி, சுற்று முற்றும் பார்த்தாள். எங்கோ நிறைய கண்கள் பார்த்துக்கொண்டிருப்பது போல அவளுக்குப் பட்டது. நெற்றியில் வியர்வை அரும்பியது. மார்பிடுக்கில் வியர்வை வெப்பமாக வழிந்தது. அவனைப் புண்படுத்தும்படி எதையாவது கூறிவிட வேண்டும் என்று விரும்பினாள். ஆனால் ஏதும் கூற இயலவில்லை. மூச்சில் மார்புகள் விம்மி உள்ளாடைக்குள் இறுகின. அதைத் திடீரென உணர்ந்து, எபன் கண்களைப் பார்த்தாள். அவன் பார்வை அங்கிருந்தது. அவள் உடம்பு புல்லரிப்பில் குளிர்ந்தது. அவள் உதடுகளில் அவளையறியாமலேயே ஒரு புன்னகை விரிந்தது. அது எபனை எங்கோ தாக்கியிருக்க வேண்டும். "திரேஸ்!" என்று தாபத்துடன் கூவியபடி அவன் அவளைக் கட்டிக்கொண்டான். அவன் வியர்வையின் ஈரமும், சரும வெப்பமும், துவர்ப்பான வாடையும், அவளைப் பொதிந்தன. அவனின் அசுரபலம் தன்னை நெரிப்பதை உணர்ந்தாள். அவனின் ஜ்வலிக்கும் கண்களும் முகமும் அவள் முகத்துக்கு மேலே தெரிந்தன. அவள் காதுகளிலும் கண்களிலும் நீராவி அலையடிப்பது போலிருந்தது. கூச்சம் தரும் ஸ்பரிசம்... மூக்கு நுனியைத் தொட்ட அவன் மீசையின் வருடல்... "என்ன இது? அய்யோ..." என்று திமிறினாள். அடி வயிற்றுத் தசைகள் இழுத்துக்கொண்டன. "விடமாட்டேன்" என்று எபன் சொன்னான். அதில் தெரிந்த மூர்க்கம் அவளை மயிர்க்கூச்சிடச் செய்தது. "அய்யோ! நடு வளியில... விடுங்க" என்று கெஞ்சினாள். "நீ எம்பிடு அளகா இருக்கே தெரியுமா 'திரேஸ்...'" அவள் கண்களை நிறைத்து, கண்ணீர் கன்னத்தில் சூடாக ஸ்பரிசம் உணர்த்தி, வழிந்தது. அவன் மார்பில் முகத்தைப் பதித்தாள். இதுவரை அறிந்திராத அக்னி வயிற்றுக்குள் கொழுந்துவிட்டபடி ஆடித் தாவியது. அவள் கண்கள் மூடிக்கொண்டன. எபன் உதடுகள் தன் உதடுகளைக் கவ்வுவதை உணர்ந்தாள். அறிமுகமற்ற ஒரு புது உலகின் பிரமாண்டம் அவளைத் தாக்கியது. ஓரிரு நிமிடம்தான்.

சட்டென்று தன் சுய உணர்வை மீட்டெடுத்து, அவனைப் பலம் கொண்ட மட்டும் உதறி விலக்கினாள். சேலையை அள்ளிப் போர்த்திக் கீழே விழுந்து கிடந்த பைபிளை எடுத்துக்கொண்டாள். கைகளால் தலைமயிரைச் சரிசெய்து, கழுத்திலும் முகத்திலும் வழிந்த கொதிக்கும் வியர்வையைத் துடைத்தபடி, நாற்புறமும் மிரண்டு பார்த்தாள். "திரேஸ்" என்றபடி எபன் மீண்டும் ஒரு எட்டு எடுத்து வைத்தான். "நான் போறேன்" என்றபடி அவள் விலகினாள். அதற்குள் காற்றில் உடல் குளிர்ந்து அவளுக்குப் புல்லரித்தது. பெருமூச்சு விட்டபடி, "நான் போறேன்" என்று கிசுகிசுத்தாள். பிறகு தன்னையறியாமலே அவன் முகத்தைப் பார்த்து புன்னகைத்து விட்டு, திரும்பி ஓடினாள். உடலின் ரகசியங்கள் ஒரு பொறி போல மின்னிப் பற்றிக்கொண்டுவிட்டன. வாசல்கள் திறந்துகொண்டே இருந்தன. நடந்தபோது தன் உடலில் ஏற்பட்டிருந்த மாறுதல்கள் தெரிந்து, அருவருப்பும், ஒரு கிளர்ச்சியும் ஏற்பட்டது. அதுவரை இருந்த அலைபாய்தல்கள் ஓய்ந்து, மனம் தென்றலின் குளம்போலச் சிலுசிலுக்கத் தொடங்கியது.

எபன் யார் என்ற விஷயம்கூட அவளுக்குப் பிறகுதான் உறைத்தது. அவன் அவள் அப்பாவின் ஆஸ்பத்திரியிலேயே கம்பவுண்டராக இருந்த ஞான அற்புதத்தின் மகன் என்று தெரிந்தபோது ஒருவிதமான குறுகுறுப்பு அவளுக்குள் ஏற்படாமல் இல்லை. ஆனால் அக்கணங்களில் எதுவுமே பிரதானமாகப் படவில்லை. காமம். அதுதான் அவளை நிறைத்திருந்தது. உண்மையில் எபனுக்கு அவள் உள்ளே ஏதாவது இடம் இருந்ததா? அவளது முதல் ஆண். ஆனால் அதில் என்ன இருக்கிறது? எபன் அவள் உள்ளைப் பாதிக்கவில்லை என்றே பட்டது அவளுக்கு. காமம் அவளுள் எழும்பும் அலைக் கொந்தளிப்புக்கு அவன் ஒரு காரணமாகவும், நிமித்தமாகவும் இருந்திருக்கிறான். எனவே, அப்போது அவனை அவளுக்குப் பிடித்திருந்தது. ஆனால் அப்போதெல்லாம் அதைத் தெய்வீகமான பிணைப்பு என்றுதான் நம்பியிருந்தாள். எபன் கீழ்மட்டத்து அப்பாவியான ஒரு இளைஞன் என்றும், அவனை நாகரீகப்படுத்திக் கடைத்தேற்றுதல் தன் கடமை என்றும் நம்பிவந்தாள். எபன் தொடர்ந்து தன்னிடம் நன்றியும் வழிபாட்டுணர்வையும் காட்டிக்கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்த்தாள். அப்படிப்பட்ட வார்த்தைகளை அவன் கூறும் போது அதை அலட்சியம் செய்வதாகக் காட்டுவாள். அதே சமயம் அவன் இயல்பாக இருக்கும்போது அவன் குற்ற உணர்வு கொள்ளும் விதத்தில் பேச ஆரம்பிப்பாள்... உருகிப் போய் அவன் அவள் எதிர்பார்ப்பது போலப் பேச ஆரம்பிக்கும் வரை.

எபன் கவனம் அவளைவிட்டு விலகி வருவதை அவள் உணர மிகவும் தாமதமாகிவிட்டது. அவளுக்கும் அவனுக்குமான உறவு நட்பு வட்டாரங்களைத் தாண்டி, அவள் வீட்டையும் அடைந்து விட்டிருந்தது. அம்மா அழுதும், மன்றாடியும், கோபாவேசம் கொண்டு திட்டியும், பயமுறுத்தியும், அவனை மறந்துவிடும்படி கூறினாள். வீடு தினம் போராட்டக் களமாயிற்று. சர்ச்சுக்குத் தினமும் அம்மா துணைவர ஆரம்பித்தாள். எபனைப் பார்ப்பதே கஷ்டமாக இருந்தது. மிகுந்த சிரமப்பட்டு ஏற்படுத்திக்கொண்ட சந்திப்புகளில் தன் கஷ்டங்களைக் கூறி அழவே அவளால் முடிந்தது. எபன் அவற்றை முழுக் கவனத்துடன் கேட்கிறான் என்றே அவள் நம்பினாள்.

எபன் கல்லூரியிலிருந்து நீக்கப்பட்ட விவரம் கூட மிகவும் தாமதித்தே அவளை அடைந்தது. அவன் மாணவர் போராட்டத் துக்குத் தலைமை வகித்தான் என்று அவள் நம்பவில்லை. அதெல்லாம் அவள் வட்டாரத்தில் சில சமயம் கேலிக்குரியதாகவும், பல சமயம் பாவமாகவும் கருதப்பட்டு வந்த விஷயங்கள். எபன் தலைமையில் ஒரு மாணவர்குழு மொழிவாரி மாநிலம் கேட்டுத் தெருவில் கோஷம் போட்டுக்கொண்டு போனதாக அவள் தோழி சொன்னாள். போலீஸ் எட்டு பேரைக் கைதுசெய்து, பிறகு விட்டு விட்டதாகத் தெரிய வந்தது. அவளால் அப்போதும் நம்ப இயலவில்லை. தன்னை ஆராதிப்பதைவிட வேறு ஒரு உலகம் எபனுக்கு இருக்க முடியும் என்றே அவளுக்குப் படவில்லை. அவள் சூழல் கொந்தளித்துக்கொண்டிருப்பதையும், அவள் அறியவில்லை. பட்டம் தாணுப்பிள்ளையின் போலீஸ் குழித்துறையிலும், ஆற்றூரிலும் துப்பாக்கிச் சூடு நடத்தியதும்; நேசமணியும், தாணுலிங்க நாடாரும் கைது செய்யப்பட்டதும் எல்லாமே அவள் இளமை முதல் கேள்விப்பட்டு வந்ததும், எங்கோ வெகுதொலைவில் நடப்பதாக நம்பி வந்ததுமான, ஏதோ கிளர்ச்சி பற்றிய செய்தி களாகவே அவளுக்குத் தோன்றின.

ஆனால், எபனை நேரில் சந்திக்கக் கிடைத்த ஒரு நாள் அவள் கற்பனைகள் பொடிப் பொடியாக உதிர்ந்தன. கொதிக்கும் முகமும், தடுமாறும் வார்த்தைகளும், பரபரவென்ற கண்களும் கொண்ட பழைய எபனை அவள் பார்க்கவில்லை. அவன் முற்றிலும் மாறி விட்டிருந்தான். பரதேசி போலக் காணப்பட்டான். முகம் ஒட்டி, உதடுகள் உலர்ந்து காணப்பட்டன. அவன் அப்பா அவனை வீட்டை விட்டுத் துரத்திவிட்டது உண்மைதானா என்று கேட்டாள். அலட்சியத்துடன் தோளைச் சிலுப்பினான். அவள் அழத் தொடங்கினாள். எபன் அலுப்புடன் பார்த்தபடி, பேசாமல்

நின்றான்; அவள் எதிர்பார்த்தது போல அவளைச் சமாதானப் படுத்த அவன் முயலவேயில்லை. தப்ப விரும்புபவன் போலச் சுற்றுமுற்றும் பார்த்தான். "என்ன எளவுக்கு இதுக்கெல்லாம் போனிய? போலீஸ் அடிச்சாவளா?" என்று அவள் கரிசனத்துடன் கேட்க, "ஓ... அடிச்சா என்ன? ஓரொருத்தன் சவிட்டுக்கொண்டு செத்திருக்கான், மலையாளத்துப் பயல எம்பிடு நாள் களிக்கணும் எண்ணு பாப்போம்..." என்றான் அவன். அவள் அவனைப் பீதியுடன் பார்த்தபடி, "அதுக்கு ஓங்களுக்கு என்ன, ஆரெங்கினும் எங்கெயெங்கிலும் செத்தா...?" என்றாள். அவன் "நீ சும்மா கெட... ஒனக்கு ஒண்ணும் தெரியாது. மொந்தப்பளம் போல வீட்டில் இருக்க எனக்கு ஒக்காது" என்றான்.

அவள் அதிர்ந்து போனாள். முதல் முறையாக எபன் அவளைத் தூக்கி எறிந்து பேசுகிறான். அவள் அவனுக்காக நரகத்தில் வாழ்ந்திருக்கும்போது, அவன் அவளைத் திட்டுகிறான்; புறக்கணிக்கிறான். "அப்பம் இப்படியே போறதுக்குத்தான் நெனப்பா?" என்றாள். "பின்ன?" என்றான் அவன். அவள் தயங்கி, "படிப்புக்கு என்ன செய்விய? பெரிய ஐயர் காலில் விழுந்தெங் கிலும் காலேஜுக்குப் போற வளியப் பாருங்க" என்றாள்.

"நீ ஒன் சோலியப் பாரு, எனக்குத் தெரியும் என்ன செய்யணும் எண்ணு." எபன் சட்டென்று கோபம் கொண்டான். "நாய்ப்பயலுவ பத்துத் தலமுறயா அடக்கிப் போட்டினும், இன்னும் பாத்துக்கிட்டுச் சும்மா இருக்கச் செல்லுதியா? பாப்பம்..." என்றான்.

அவள் மவுனமாய் நின்றாள்; தன் பிடிப்பை விட்டு எபன் விலகிவிட்டான் என்று நன்கு உணர்ந்தவளாக, "என்னை ஒனக்கு இஷ்டமெங்கி கொஞ்சம் காத்திருந்துக்க... இந்த பெயவள ஒதுக்கின பெறவுதான் மீதி ஒக்கெ... நாங்க கொஞ்ச பேரு சபதம் எடுத்திருக்கம்..." என்றான் எபன்.

அவள் மாறிய பார்வையுடன் எபனைப் பார்த்தபடி நின்றாள். அவனுக்குப் புத்தி பிசகிவிட்டதா என்று அவளுக்கு சந்தேகமாய் இருந்தது. மொத்தத்தில் எபன் இத்தனை ஆங்காரம் கொள்ள என்ன காரணம் என்பதே அவளுக்குப் புரியவில்லை. எபன் ஆபத்தை நோக்கிப்போகிறான் என்றும், அந்த ஆபத்தில் தானும் சிக்கிக்கொள்ளாமலிருக்க உடனே எபனை விட்டு விலகிவிட வேண்டும் என்றும் அவள் உள்ளுணர்வு கூறியது.

"அப்பம் இனிம என்னைக் காண வரமாட்டிய?" என்று கடுமையான குரலில் கேட்டாள். "நீ எங்க இருக்கிய? நேத்தய்க் குள்ள பேப்பரிக் கண்டியா? தாணுலிங்க நாடார அரெஸ்ட்

செய்திருக்கான். சும்மா விட்டுப் போடச் செல்லுதியா? நாங்க பையன்கள் எல்லாம் ஒண்ணு சேர்ந்து இந்த சர்க்கார ஓட விடாமச் செய்யப் போறம். நாங்க போஸ்டாபீஸக் கொளுத்திறதுக்குத் திட்டம் போட்டிருக்கம்..." அவள் அதிர்ந்தாள். "ஐயோ ஏசுவே" என்று வீரிட்டாள். எபன் நாக்கைக் கடித்துக்கொண்டான். அவளிடம் அளவு மீறிப் பேசிவிட்டோம் என்று உணர்ந்தவனாக, "இப்பம் இல்ல, பெறவு" என்றான். பிறகு சுற்றுமுற்றும் பார்த்தான்.

"என்ன கூத்து இதொக்கெ? ஒங்களுக்கென்ன கிறுக்கா?" என்றாள். எபன் தணிந்த குரலில், "திரேஸ்! இஞ்ச பாரு" என்றான். "நான் பாஸ்டர்கிட்ட சொல்லுவேன்." எபன் தடுமாறினான். "திரேஸ்! நான் சும்மாதான் சொன்னேன்டி" என்றான்.

"இல்ல, செத்தொளிஞ்சு போவியதுக்குத்தான் திட்டம் போட்டிருக்கிய, செத்துப் போவியத்துக்குத்தான்..." அவள் கேவிக் கேவி அழத் தொடங்கினாள். எபன் பேசாமல் நின்றான். அவனுக்குள்ளும் பயம் புகுந்துகொண்டது. "இல்லை திரேஸ், எல்லாவற்றையும் விட்டுவிடுகிறேன்" என்று கூறிவிடலாமா என்று யோசித்தான். ஆனால் எப்படி நண்பர்களை எதிர்கொள்வது? எபன் ஒரு நுனியில் நின்று தத்தளித்தான். இன்னும் கொஞ்சம் அழுதுவிட்டு அவள் கெஞ்சியிருந்தால் அவன் விழுந்து விட்டிருப்பான். ஆனால் கெஞ்சல் அவளறியாதது; மிரட்டுவதும் கட்டளையிடுவதுமே அவளுக்கு இயல்பானவை. "இதயொக்க விட்டுப் போட்டு எனக்க அடுக்க வந்தா மதி" என்று தீர்மானம் தெறிக்கும் குரலில் சொன்னாள்.

"இதொக்கெ தீரும் திரேஸ்... இஞ்ச பாரு, மார்ஷல் நேசமணி..."

"நேசமணி நொட்டினாரு." சீறும் பார்வையுடன் அவள் சொன்னாள். அவளுக்கு மூச்சிரைத்தது.

"இஞ்ச பாரு அனாவசியம் சொன்னயெங்கி..." என்றான் எபன்.

ஆங்காரத்துடன், "ம்ம்? என்ன செய்வியோ?" என்றாள் அவள், ஈரக்கண்களால் குரோதமாய்ப் பார்த்தபடி, எபன் நின்று தவித்தான். "சீ! ஒனக்க கிட்ட வந்து சொன்னேன் பாரு" என்றான்.

"ஓ இவிய வலிய பகத்சிங்கு! சோலிய பாத்து போவியளா?" என்றபடி அவள் உதட்டைச் சுழித்தாள்.

பிறகு கண்ணீரைத் துடைத்தபடி, "இனி என்னய பாக்கியதுக்கு எண்ணு வராண்டாம், பகத்துசிங்கோ, காந்தியோ எப்பிடி

வேணுமெங்கிலும் வேசம் கெட்டி ஆடுங்க...” என்றபடி திரும்பி நடந்தாள்.

“திரேஸ்” என்றான் எபன் அவளுக்குப் பின்னால். அவள் மனம் ஜில்லிட்டது. அவன் வந்து பணிவுடன் அன்புடன் மன்னிப்பு கேட்கப் போகிறான் என்ற எண்ணம் மின்னலடித்தது.

ஆனால் அவன் மிரட்டும் குரலில், “திரேஸ்! நாம இப்ப பேசினதை ஆருகிட்டயும் சொல்லப்பிடாது” என்றான். அவள் முகத்தில் ரத்தம் பீறிட்டது. பேசாமல் நடந்துவிட்டாள். மனம் கொதித்துக்கொண்டிருந்தது.

அன்றிரவும் தொடர்ந்து சில நாட்களும் திரேஸ் உறங்க வில்லை. அமைதியிழந்து வீட்டுக்குள் சுற்றிச் சுற்றி வந்தாள். எரிந்து விழுந்தாள். தனிமையில் அழுதாள். போஸ்டாபீசுக்குத் தீ வைப்பது பற்றி எபன் சொன்னதெல்லாம் பெரிய விஷயமாய் அவளுக்குப் பட்டது. அதை எபன் செய்ய முடியும் என்றும் அவள் நம்ப வில்லை. எபன் மனம் திரும்பி எக்கணமும் தன்னைத் தேடி வருவான் என அவள் உள்ளூர எதிர்பார்த்தாள்.

அவன் வரவில்லை. நாலாம் நாள் எபனை போலீஸ் கைது செய்துவிட்டதாகத் தெரிந்தது. போலீஸ் வண்டியில் தூக்கி வீசப்பட்ட எபன் பிறகு வீடு திரும்பவில்லை. தாங்கள் அவனைக் கைது செய்யவேயில்லை என்று போலீஸ் கூறிவிட்டது.

தனக்குள் இழப்புணர்வும், அதே சமயம் ஒருவித ஆறுதலும் ஏற்படுவதை அவள் உணர்ந்தாள். அக்கணங்களில் குற்ற உணர்வு ஏற்பட்டது. மெல்ல சமாதானங்கள் கண்டுகொண்டாள். எபனுக்கு அளவு மீறிக் கொடுத்துவிட்டதுதான் அவன் கவனம் தன் மீதிருந்து விலகக் காரணமாக அமைந்தது என்று நம்பினாள். எபன் அவளை மிகக் கொடூரமாக நடத்தினான் என்று பற்பல சம்பவங்களை நினைவுகூர்ந்து, தனக்குத்தானே ஸ்தாபித்துக்கொண்டாள். அவனை மறக்கவும் தன் சுயத்தில் மீண்டும் மூழ்கிக்கொள்ளவும் இயல்பாக அவளால் முடிந்தது. எபனுடனான தன் உணர்வுக் கொந்தளிப்பு முட்டாள்தனமானவை என்று மெல்ல அவள் கண்டடைந்தாள். அவன் இறந்ததுகூட நல்லதுதான் என நம்ப ஆரம்பித்தாள். ஒரு வருடத்துக்குள் பெருவட்டரின் திருமண ஆலோசனை வந்தபோது அவள் பிரதானமாகக் கணக்குப் போட்டது அவரது பணத்தைத் தான். பெருவட்டரின் வட்டாரத்தில் புகுந்த சில நாட்களுக்குள் ளேயே எபன் எத்தனை பெரிய முட்டாள் என அவள் புரிந்து கொண்டாள். எபனும் மற்ற எத்தனையோ பேரும் உயிரிழந்ததும் வாழ்வைக் குலைத்ததும் யாருடைய நன்மைக்காக என்பது

அப்போது தெரிந்தது. குமரி மாவட்டம் உருவான நாள் மார்த்தாண்டத்தில் ரப்பர் முதலாளிகளின் விருந்து நடைபெற்றது. முதல்முறையாக அன்றுதான் அவள் மதுவருந்தினாள். எபனை எண்ணி அன்றிரவு முழுக்கச் சிரித்தாள்.

நினைவின் ஆழங்களிலிருந்து எபன் முகத்தை மீண்டெடுக்க அவள் சிலசமயம் முயல்வதுண்டு. வேண்டுமென்றே முயன்றால் அவன் முகம் சிக்கவே சிக்காது. அதே சமயம் கனவில், அசாதாரணமான கூர்மையும் ஒளியும் தெறிக்கும் கண்களுடன், எபன் வருவான், பேச மாட்டான். மவுனமாய் மிதக்கும் முகம். ஆனால் அதுபோதும், பயந்து போய் வியர்வை வழிய எழுந்து அமர்ந்து, மூச்சிளைப்பாள்.

மெல்ல அதுவும் உதிர்ந்தது. அவள் மனம் முழுக்கக் கட்டுமஸ்தான, தசைகள் நெளியும், மயிர் மண்டிய, ஒரு கரிய ஆண் உடல் அமர்ந்துகொண்டது. முகமற்ற உடல். இரவும் பகலும் அவளுக்குள் இயங்கும் ஆண்மை. அவள் இளமைத் தவிப்புகளும், வலிகளும், இன்று உடலுக்குள் இறங்கிவிட்டன. உடலே வாழ்வைத் தீர்மானிப்பதாக ஆகிவிட்டது. பணத்திலும் காமத்திலும் திளைக்கையில், மிக அபூர்வமாகவே தன் இளமையைப் பற்றி எண்ணிக்கொள்வாள். சில நிமிடங்கள் சூனியம் தாளாமல் மனம் பதைத்துப் போகும்.

பெருவட்டத்தி மூக்குக் கண்ணாடியைத் தொட்டாள். ஈரமாக இருந்தது. பெருமூச்சுடன் நெளிந்து அமர்ந்தாள். வெளியே சாலை ஓடிக்கொண்டிருந்தது.

## ... 6 ...

தொடுவெட்டிக்கும் குலசேகரத்துக்கும் போய்விட்டு இரவு சற்றுப் பிந்தித்தான் பெருவட்டரும் பெருவட்டத்தியும் வீட்டை அடைந்தார்கள். நாய்கள் ஓடிவந்து காரை இனம்கண்டு உற்சாகக் குரல் எழுப்பின. செல்லையா பெருவட்டர் அலுப்புடன் டாஷ் கண்டைத் தாடையில் உதைத்துத் தள்ளினார். அது உற்சாகமாய் வாலாட்டியபடி அவர் பின்னாலேயே வந்தது. திரேஸ் சேலை நுனியால் கழுத்தை மூடிக்கொண்டிருந்தாள். வாசலைத் திறக்கப் பலமுறை மணியடிக்க வேண்டியிருந்தது. லிவிதான் கதவைத் திறந்தான். அவர் செருப்பைக் கழட்டிக்கொண்டிருக்கும்போதே, தயங்கிய குரலில், “அப்பச்சிக்கு சுகமில்லை” என்றான். திரேஸ் கவனிக்காமல் உள்ளே போய்விட்டாள். வேலைக்காரி எழுந்துவர, உள்ளே அவளை திரேஸ் கண்டிக்கும் ஒலி கேட்டது. செல்லையா பெருவட்டர் ஜிப்பாவைத் தலை வழியாகக் கழட்டினார். வேலைக்காரி வந்து அதை வாங்கிக்கொண்டாள். பெரிய தங்கவடம் புரளும் வெற்று மார்புடன், அவர் சோபாவில் அமர்ந்து, கால்களை மடித்துத் தூக்கி வைத்துக்கொண்டார். வேலைக் காரியிடம், “என்ன இருக்கு?” என்றார். அவள் “ஜூஸ்” என்றாள். சற்று நேரம் சுவரைப் பார்த்தபடி யோசித்துவிட்டு, “நாரங்கா பிளிஞ்சு கொண்டா, மதி” என்றார். அவள் அகன்ற பிறகு அதில் சற்று ஜின் விடச் சொல்லியிருக்கலாமோ என்ற எண்ணம் வந்தது. அவள் போய்விட்டாளா என்று எட்டிப் பார்த்தார். அவளைக் காணவில்லை. சதை தோய்ந்த வெளிறிய மயிரற்ற மார்பைக் கையால் வருடிக்கொண்டார். பிறகு லிவியை நிமிர்ந்து பார்த்தார். அவன் என்னவோ சொன்னான் என்பது ஞாபகம் வந்தது. “ம்ம்?” என்று புருவம் தூக்கிக் கேட்டார்.

“அப்பச்சி...” என்றான் லிவி.

“என்ன பண்ணுதாம்?”

“ஒரு கையும் காலும் விளுந்து போச்சு இப்பம். பெரிய டாக்டர் இல்லியாம். அய்யரு வந்து பாத்தாரு.”

"ம்ம்..." என்றார் பெருவட்டர்.

லிவி சற்று தயங்கி, "ஒண்ணும் செய்யிததுக்கு இல்ல; ஒக்கெ ஆயிப் போச்சு இங்காரு..." என்றான்.

பெருவட்டர் ஜூஸ் வருகிறதா என்று எட்டிப் பார்த்தார். பிறகு, "பெரிய டாக்டர் எப்பம் வருவாரு எண்ணு கேட்டியா?" என்றார்.

"காலம்பற ஆகும் எண்ணு சொன்னாரு."

"ம்ம்..."

ஜூஸ் வந்தது. நிதானமாகக் குடித்து முடித்து டம்ளரை நீட்டியபடி, பெருவட்டர் எழுந்தார்.

"என்ன செய்யிணும் இப்பம்?"

"ஒறங்கியாச்சு எண்ணு தோணுது..."

"பிராஞ்சி வந்தானா?"

"காலத்த போனான்..."

"ம்ம். செரி, நாள பாப்பம்" என்றபடி எழுந்தார். சிறிதாக ஏப்பம் விட்டபடி நடந்தார்.

தன் அறைக்கு வந்து கதவைச் சாத்திக்கொண்டபோது குடிக்க வேண்டும் என்ற உந்தல் ஏற்பட்டது. சுவரின் மீது ஒரு பித்தானை அழுத்த, ஒரு சிறு பகுதி சுழன்று திரும்பியது. காலிக் குப்பிகளைத் தொட்டுத் தொட்டு உடைக்காத ஒரு குப்பியைத் தேடி எடுத்தார். அதை இரு தடவை தலைகீழாகப் பிடித்துக் குலுக்கிவிட்டுக் கோப்பையுடன், கட்டில் அருகே இருந்த டீபாயை அணுகி, மூங்கில் நாற்காலியில் சரிந்தார். புழுங்கியது. எழுந்து மின்விசிறியைப் போட்டார். பிறகு எதையோ யோசித்தபடி தயங்கி நின்றார். வெளிச்சம் தவிப்பை ஏற்படுத்தியது. குழல் விளக்கை அணைத்து விட்டு, இரவு விளக்கைப் போட்டார். நீல ஒளி அந்தரங்கமாய் இருந்தது. ஐஸ் துண்டங்கள் இருக்கிறதா என்று சிறிய பிளாஸ்க்கை எடுத்துக் குலுக்கிப் பார்த்தார். குடிக்குமுன் சில நிமிடங்கள் வெற்று யோசனையில் இருப்பது அவருக்குப் பிடிக்கும். மீசையை வருடியபடி சற்று அண்ணாந்து மின்விசிறியைப் பார்த்தபடி அமர்ந்திருந்தார். மனம் தாவிக்கொண்டிருந்தது.

என்ன அது மனசைப் போட்டுக் குடைகிறது என்று எண்ணியபடி அசைந்து அமர்ந்தார். எதுவும் இல்லை. ஒரு செய்தி, செய்தித் துணுக்கு. அதைச் சாதாரணமாகத்தான் ஒருவர்

சொன்னார். அதன் முழு ஆபத்தையும் உணரவில்லை எனினும், எப்படியோ ரொம்ப முக்கியமான விஷயம் அது என்று மனம் உணர்ந்துகொண்டுவிட்டது. ஒரு அதிர்வு, பிறகு எல்லாமே கலங்கிப் போய்விட்டது. பழக்க தோஷம்; சிரிக்கவும், பேசவும், முகத்தை சாதாரணமாக வைத்துக்கொள்ளவும் முடிந்தது. ஆனால் அமைதியின்மை பெருகிப் பெருகி வந்தது. திரும்பும்போது அது பெருகி வளர்ந்து பீதியூட்டுவதாக மாறியது. என்ன இது? வெறும் வதந்தி என்று திரும்பத் திரும்ப அறிவால் மனசை சமாதானப் படுத்திக்கொண்டே இருந்தார். ஆனால் மனம் அதை ஏற்றுக் கொள்ளவே இல்லை.

தலையை உசுப்பியபடி கோப்பையை எடுத்தார். தண்ணீர் எடுக்கவில்லை என்பது ஞாபகம் வந்தது. வைத்துவிட்டு, எழுந்து சென்று தண்ணீர் குப்பியை எடுத்து வந்தார். கோப்பையில் நீர் ஊற்றி, அதில் ஐஸ் துண்டங்களைப் போட்டார். அவை கரைந்து, மெலிந்து, கண்ணாடிச் சில்லுகளாக மாறி, மிதப்பதைக் கண்டபடி அமர்ந்திருந்தார். பிறகு குப்பியை எடுத்துச் சரித்துப் பிடித்து அடைப்பைக் கழட்டினார். அதன் அடிப்பகுதியை உள்ளங்கையில் ஓங்கி மோதினார். கார்க் தெறித்தது. நுரைத்து வழிந்தது. மணம் கம்மென எழுந்தது. குப்பியை விளக்கருகே தூக்கித் திரவத்தைப் பார்த்தார். மஞ்சள் குப்பிக்குள் கருஞ்சிவப்பாக இருந்தது. நீரில் அதை மெதுவாக விட்டார். திரவம் நீரில் மெல்லப் பரவுவது தெரிந்தது. நிறத்தின் உள்ளே பனிக்கட்டிகள் கரையாமல் மிதந்தன. வாயருகே கோப்பையைத் தூக்கி ஒரு துளி உறிஞ்சினார். மூச்சு வழியாக அதன் எரிதலை வெளித் தள்ளினார். வயிறு கும்மென்று மேலெழுந்தது. ஒரே உறிஞ்சில் கோப்பையைக் காலி செய்துவிட்டு, ஏப்பம் விட்டார்.

இன்னொரு கோப்பை ஊற்றிக் கையிலெடுத்தபடி, தொலைபேசியை அணுகி, சுழட்டும்போதுதான் விரல்கள் நடுநடுங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். மணியடித்தது வெகுநேரம். பிறகு குழறிய குரல் கேட்டது. “ஹலோ!”

“கோட்டயம், டூவன் டூஃபோர்?”

“யா!”

“மாத்தச்சனா? இது செல்லையா?” என்றார் மலையாளத்தில்.

“எங்கேயிருந்து கூப்பிடுகிறாய்? எப்போ வந்தாய்?”

“இது எஸ்.டி.டி. இங்கேயிருந்துதான் கூப்பிடுகிறேன்.”

“என்ன விசேஷம்?”

"ஒன்றுமில்லை, வந்து... இன்றைக்கு காலையில் ஒரு சிறு பார்ட்டிக்குப் போயிருந்தேன், திருவனந்தபுரத்தில்."

"ஆபிரகாம் மகளுக்குத் திருமணம் தானே? என்னால் வர முடியவில்லை; கூப்பிட்டிருந்தான்."

"ஆமாம். அங்கே ஒரு செய்தி கேள்விப்பட்டேன்."

"என்னது?"

"ஸ்டேஜ் ஆட ஆரம்பித்திருக்கிறதாமே?"

"அது என்றைக்கு ஆடாமலிருந்தது?"

"இது அதில்லை. உண்மையிலேயே."

"அப்படியா?"

"உனக்குத் தெரியவே தெரியாதா?"

"இல்லையே, ரொம்ப அமைதியாக இருக்கிறது போலத்தான் இருந்தது. முந்தாநாள் கூட ஜாக்கியைப் பார்த்தேன். ஒன்றும் சொல்லவில்லை."

"அவன் சொல்வானா?"

"இந்தத் தடவை யார்? பச்சைகளா?"

"இல்லை யானை."

"அடப்பாவி!"

"எனக்குத் தெரியாது, வெறும் வதந்தியாகக்கூட இருக்கலாம்."

"ஆமாம் என்னாலும் நம்ப முடியவில்லை."

"ஆனால் என்னால் விட்டுவிட முடியாது. இது சரிந்தால் நாயரைத் தூக்கிவிடுவார்கள். என் வண்டி சரிந்துவிடும். எனக்கென்னவோ பயமாக இருக்கிறது."

"பயப்படாதே ஒன்றும் ஆகாது..."

"சரி வைக்கட்டுமா?"

"ஆகட்டும்."

பெருவட்டர் மீதி விஸ்கியையும் விழுங்கினார். முகம் வியர்த்து விட்டது.

அப்படியானால் கேள்விப்பட்டதெல்லாம் உண்மைதான். மாத்தச்சன், கள்ள நாய். எத்தனை எத்தனை தடவை உதவி கோரி வாலைக் குழைத்துப் பின்னால் சுற்றி வந்தவன்!

அவருக்கு மூச்சிளைத்தது.

மீண்டும் தொலைபேசியைச் சுழட்டினார். நாகர்கோவிலில் சுந்தரலிங்கம் எடுத்தார்.

"சுந்தரமா? இது நான் செல்லையா."

"என்னது, சத்தம் ஒரு மாதிரி இருக்கு?"

"ஒண்ணும் செல்லாண்டாம்; ஒக்கெ கொளமாயிப் போடும் எண்ணுதான் தோணுது."

"என்ன சங்கதி? பெருவட்டர் இப்படிப் பேசமாட்டியளே?"

"காலம்பற ஒரு நூஸ் கேட்டேன். கேரள கவுர்மெண்டு மறியப் போவுது எண்ணு. மாத்தச்சன் தான் முக்கிய கட்சியாம். சோசப்பு அவனுக்க ஆளு எண்ணு தெரியுமே!"

"அது செரி..."

"கம்மூனிஸ்டு பயல ஆனையச் சேத்துக்கிட்டு கசேரகளிக்கு எறங்கியாச்சு எண்ணு சென்னாவ. மாத்தச்சனுக்குக் கண்ணு செம்மீன்லயும் காப்பிலையும். அது செரியாக்கிக் குடுத்தா சோசப்புக்கு நாலு குதிரைகளை வாங்கிக்கிட்டு மறுவசம் சாடுயதுக் குண்டான பணத்தை அவன் குடுப்பான். சோசப்புக்கு ரெவின்யூ கிட்டுமாம்."

"அது செரி."

"மாத்தச்சன இப்பம் விளிச்சேன். ஒண்ணுமே தெரியாதுண்ணு வேசம் கெட்டுதான். அவன் சத்தம் கேட்டப்பம் தெரிஞ்சுப் போட்டு, பய களிக்குதான் எண்ணு. நாய்க்குப் பெறந்த பய, சதிச்சுப் போட்டான்."

"அவன நம்பிப்பிடாதுண்ணு அப்பவே சென்னேன்..."

"அவன ஆரு நம்பினா? காரியம் நடக்கணுமே எண்ணு கழுதயக் கூட்டிக்கிட்டு அலஞ்சதுதான்."

"இப்பம் என்ன செய்யியது?"

"கம்மூனிஸ்டுகாரன் வந்தா ரப்பர் போர்ட விட்டுக் குடுக்க மாட்டான். எந்த நாறி வந்து கசேரல கேறி இருந்தாலும் அஞ்சு நிமிஷத்துக்குள்ள ஒக்கெ வெளிய தெரிஞ்சுப் போவும். எனக்கு மயித்தப் பிடுங்கிச் சாவணும் போல வருது..."

"ஒண்ணும் பண்ண ஒக்காதா?"

"விளுந்த பெறவு ஒண்ணும் செய்ய ஒக்காது. விளாம பாக்கிலாம் ஓ... எனக்கு ஒண்ணும் தெரியல்ல. ஒண்ணும் ரெண்டுமா, சக்கறம் நாலு வலுதுல்லா அன்னிய தேசத்தான் கையில இருக்கு! எனக்குச் சமயம் செரியில்ல, இஞ்ச அப்பனும் விளுந்து கெடக்கினும்..."

"என்னது பெரிய பெருவட்டருக்கு?"

"என்ன எளவு? சாவுக்க தீனம்தேன் செத்து ஒளிஞ்சா ஒரு பாரம் கொறஞ்சுது. நீ நாளைக்கு இஞ்ச வா. கொறெ காரியங்க செல்லுயதுக்குண்டு."

"நம்ம ஏ.பி. இப்பம் எந்தக் கட்சியில."

"அவனுக்கென்ன... எப்பளும் ஆளும் கட்சிக்க நல்ல பிள்ள. எங்க இருந்தா என்ன?"

"இப்பம் கம்மூனிஸ்ட்டு பயவ கூடத்தானே..."

"ஆமா... அதிலயும் காரியம் உண்டு. ஆனா நாமளா தேடிப் போனா பய மேலே கேறுவான்..."

"நான் கொஞ்சம் சைடு வாக்கில செல்லிப் பார்க்கட்டுமா? விளுந்தா விளட்டும், அவனுக்கு நாலு குதிரைக்குண்டான பணத்தைக் குடுத்துப் போடலாம்..."

"பயலெ நம்ப ஒக்காது...!"

"வேற வளி இல்லியே?"

"செரி..."

"வெச்சட்டா?"

"ஆட்டும்."

பெருவட்டர் மறுபடியும் வந்து சேரில் அமர்ந்தார். மது நரம்புகளைத் தொய்வடையச் செய்து, கண் இமைகளைக் கீழே இழுத்தது. போதையில் மனம் இளகியபடியே சென்றது. சற்றுமுன் கூறிய வார்த்தைகள் அவருக்குத் திடீரென்று மனசை அறைந்தன. அப்பனையா செத்து ஒழியும்படி சொன்னோம்! கடவுளே! அவர் விசும்பத் தொடங்கினார். கண்ணீர் வழிய ஆரம்பித்தது. அப்பன் மீது அவருக்கு உள்ளூர ஒருவித அச்சம்தான் இருந்தது. ஆனால் இப்போது கனிவு அவரை மீறி வெளிவந்தது. "எனக்க ஐசரியம் ஒக்கெ போச்சு எனக்க அப்போ!" என்று கரகரத்த குரலில்

சொன்னார். தலைதொங்கி, மோவாய் மார்பில் படிந்தது. கைகள் விழுந்தன. முனகி அழுதபடி, “எனக்க ஐசரியம் போச்சு! எனக்க அப்போ, நான் நசிச்சேன் எனக்க அப்போ” என்று புலம்பினார்.

திடீரென்று அப்பனைப் பார்க்கவேயில்லை என்பது ஞாபகத்துக்கு வந்தது. எழுந்தார். தள்ளாடியபடி சுவரைப் பற்றியபடி, நடந்து சென்றார். கிழவரின் அறைக்குள் இளம் இருளில் நிழல் போல அவர் கட்டில் தெரிந்தது. கதவு ஒருக்களித்திருந்தது. வீடு முழுக்க மவுனம். வெளியே பனி சொட்டும் ஒலி.

திடீரென்று யாரோ முனகும் ஒலி கேட்டது. அது ஒரு வன மிருகத்தின் உறுமல் போலிருந்தது. அவர் முதுகெலும்பு ஜில்லிட்டது. ஏதோ அமானுடக்குரல் மெதுவாய் இருளில் “ச்சீ... ச்சீ...” என்று சொல்லியது. இதயம் எகிற, அப்படியே சுவரில் சாய்ந்து நின்றார். சுவர் ஜில்லிட்டிருந்தது. அவர் கைகள் நடுங்கின.

மெதுவாய், கிழவர்தான் கம்மிய குரலில் பாச்சி பாச்சி என்று சொல்லிக்கொண்டிருக்கிறார் என அவருக்குப் புரிந்தது. அங்கு பீதியூட்டும் ஏதுவோ சான்னித்தியம் கொண்டிருந்தது. உடனே அங்கிருந்து விலகிப் போய்விட வேண்டும், தன் அறைக்குள் பாதுகாப்பாய் ஒதுங்கிவிட வேண்டும் என்று தோன்றியது அவருக்கு.

# ... 7 ...

பொன்னுமணி வீட்டுக்கு வந்தபோது பேச்சி இல்லை. பகலில் அவள் இருப்பதில்லை. விடிகாலையில் கிளம்பினால் இரவில்தான் திரும்பி வருவாள். குடிசைக்குள்ளும், திண்ணை மேலும், அழுகலில் புழுக்கள் போல குழந்தைகள் நெளிந்துகொண்டிருந்தன. கைகால் சூம்பிப் போன இரண்டு குழந்தைகள் கவிழ்ந்து தவழ்ந்து தரையிலிருந்து எதையோ பொறுக்கித் தின்றுகொண்டிருந்தன. சில, குடிசைக்கு வெளியே ஈரப் புழுதியில் அளைந்தன. குடிசைக்குள் சுவரோரமாய் விறகுக் குவியல் போலக் காசநோயாளி தலைமேல் குச்சிக் கைகளை வைத்து மடங்கி அமர்ந்திருந்தான். அவன் உடலெங்கும் எச்சில் வழிந்தது. அவனைச் சுற்றி மூத்திர வாடை. அழுதும், பரஸ்பரம் சண்டையிட்டும், ஓயாது ஒலித்துக்கொண்டிருந்த குழந்தைகள் இவனைக் கண்டதும் சட்டென்று அமைதியடைந்தன. முற்றத்தில் உட்கார்ந்திருந்த ஒன்று மூக்கு வழியும் முகத்தைத் தூக்கி, பீளை கட்டிய தன் பெரிய விழிகளால் பார்த்தபடி, எதையோ அவசரமாய் வாய்க்குள் திணித்துக்கொண்டது. வீட்டுக்குப் பின்புறமிருந்து பொன்னுமணியின் அளவேயிருந்த அவனளவு உரமில்லாத ஒரு சிறு பையன் வந்து குரோதத்துடன் பார்த்தபடி நின்றான். குடிசையின் வாசலில் இருந்த இரு முகங்கள் எட்டிப் பார்த்தன. ஒரு குழந்தை சட்டென்று இரண்டு வெண்பற்கள் மட்டும் தெரியும் வாயைத் திறந்து வீரிடத் தொடங்கியது. அவன் காலருகே மலத்தின்மீது அமர்ந்து தவழ்ந்து அழுதுகொண்டிருந்த, பெரிய வயிறும் சூம்பிய கை கால்களும் கொண்ட குழந்தை சட்டென்று அழுகையை நிறுத்திவிட்டு, மூக்கை உறிஞ்ச, உதட்டைப் பிதுக்கியபடி, அவனைப் பார்த்தது. குரோதம் பீறிட்ட முகத்துடன் கைவீசியபடி "போ... போ..." என்றது. உடனே திண்ணையில் நின்ற குழந்தைகளும் "தூதூ" என்று முற்றம் நோக்கித் துப்பத் தொடங்கின. பையன் தரையிலிருந்து ஒரு கல்லை எடுத்துக்கொண்டான். குடிசையே, தாக்க வரும் ஒரு வனமிருகம் போல முறைத்துப் பார்த்தபடி அவன் முன் நின்றது. பொன்னு மணியும் தரையிலிருந்து ஒரு கல்லை எடுத்துக்கொண்டான். எச்சரிக்கையுடன் பார்த்தபடி அப்படியே நின்றான்.

ஒரு குழந்தை, "பண்ணி! பண்ணி! போ... போ..." என்று கத்தியது. உடனே மற்ற குழந்தைகளும் அதையே கூவத் தொடங்கின. கீச்சுக் குரல்களில் ணீ ணீ என்ற ஒலி கலகலவென்று கேட்டது. வெறுப்பும் குரோதமும் பொங்கும் பிஞ்சு முகங்களின் ஈரமான பெரிய கண்கள் அவன்மீது ஊன்றியிருந்தன.

பொன்னுமணி திரும்பிவிடலாமா என்று யோசித்தான். ஆனால் பசி அவனை இம்சித்துக்கொண்டிருந்தது. காலையில் எழுந்தது முதல் இரவு உறங்கும் வரை ஓயாது உள்ளுக்குள் எரியும் தீ. அது அவனை வேட்டை மிருகமாய் ஆக்கிவிட்டிருந்தது. குடிசையில் அந்நேரம் பசித்த குழந்தைகளின் அழுகை ஒலிகள்தாம் கேட்டபடி இருக்கும். அன்று சண்டை நடந்துகொண்டிருந்தது. அங்கு தின்பதற்கு எதுவோ இருக்கிறது என்று அவனுக்குப் பட்டது. ஒவ்வொரு குழந்தையின் வாயாக அவன் ஆராய்ந்தான். எதிலும் எதையாவது தின்ற அடையாளங்கள் இல்லை. குடிசைக்குள் நுழைந்து தேடிப் பார்க்கலாம். ஆனால் அதற்கு ஒரு யுத்தமே நடத்த வேண்டியிருக்கும்.

பொன்னுமணி சற்று முன்னகர்ந்தான். உடனே இரண்டு குழந்தைகள் வீரிட்டபடி குடிசைக்குள் ஓடின. பையன் கல்லை இறுகப் பற்றியபடி சற்று முன்னால் நகர்ந்தான்.

பொன்னுமணிக்குப் பேச்சி உள்ளே இருக்கிறாள் என உள்ளூர தோன்றிக்கொண்டே இருந்தது. அவளிடம் மட்டும்தான் அவனுக்குப் பயம். அவளைக் குடிசையோடு சம்பந்தப்பட்ட ஒவ்வொரு ஜீவனுமே பயந்துதான் வந்தன. பெற்றுச் சலித்த பெரிய உடல் கருமையாக, ஒரு தவளை எழுந்து நிற்பது போலிருக்கும். உந்தி, சற்றத் தொங்கிக் கிடந்த வயிற்றுக்கு மேல் மார்புகள் வெளிப்பக்கமாய்ச் சரிந்து தொங்கி அசையும். இடையில் துண்டு மட்டுமே வேஷம். இடைவிடாத பிள்ளைப் பேறு. எண்ணிக்கை நிர்ணயிப்பது சுலபமல்ல. அவை சதா இறந்தும் வந்தன. எப்போதும் அவள் வாய் அசைந்தபடியே இருக்கும். எதையும் தின்பாள். இலைகள், குருத்துகள், மாவுள்ள எந்தக் கிழங்கும். இதற்குமேல் எலி அணில் பூனை ஆகியவற்றைப் பிடித்துச் சுட்டுத் தின்பாள். பசி வந்தால் அவளது குரூரம் எல்லை மீறும். கையருகே சிக்கிய அனைத்தையும் எலும்பு முறிய அடிப்பாள். அனேகமாய் அவளுக்குச் சிக்குவது நகர முடியாத காச நோயாளிதான். அவள் மூன்றாவது புருஷன். கைக்குக் கிடைத்ததைக் கொண்டு அவனை அடிப்பாள். கைகளைத் தலைக்குமேல் வைத்து, எலும்புக் குவியலாகத் தன்னை அவன் ஆக்கிக்கொள்வான். எலும்பின்மீது கட்டை மோதும். பின் அடி அவன் கைகளைத் தாக்கும்போது

பிசாசுத்தனமாய் சிரிப்பாள். அடித்து ஓய்ந்த மறுகணமே அவன் தலையைத் தூக்கி வலியின் ஒளி தெரியும் குரங்குக் கண்களால் பார்த்தபடி, மிருகத்தின் குரலில், உணவுக்குக் கெஞ்ச ஆரம்பிப்பான். விடியும்போது முதல் இரவு வரை குடிசையில் அவன் கெஞ்சல் கேட்டபடிதான் இருக்கும். இம்சை அவனுக்குப் பழகிப்போன ஒன்று. குழந்தைகள் அவனைப் புழுவை மொய்க்கும் எறும்புகள் போலப் பற்றிக் கிடந்து தாக்கும். அவன்மீது சிறுநீர் கழிக்கும். துப்பும். மண்ணை அள்ளி வீசும். உடம்பெல்லாம் எச்சில், நரகல் வழிய திண்ணை மூலையில் அமர்ந்திருப்பான். பொன்னுமணி மட்டும் அவனை ஏதும் செய்வதில்லை. பெரும் அருவருப்பைத் தான் அவன் இவனில் ஏற்படுத்தி வந்தான்.

பேச்சியின் வீட்டிலிருந்து பொன்னுமணி துரத்தப்பட்டு வெகு நாட்களாகிறது. அகதிகளாய் உயிருக்கு நிச்சயமற்ற நிலையில் இருந்தபோது கிடைத்த குழந்தை மீது பேச்சிக்கு மானுட உணர்வுகள் எழுந்ததும், தன் குழந்தைகளுடன் கூட்டி வந்ததும் நிஜம். ஆனால் பிற்பாடு பசியில் மிருகம் போல ஆகிவிட்ட பிறகு அவன் அவளால் மிகவும் வெறுக்கப்படும் ஒரு பொருளாகவே மாறினான். அவள் ஆங்காரமெல்லாம் அவன்மீது திரும்பிக்கொண்டிருந்தது. கால் முளைத்தபோது அவன் வெளியேறிவிட்டான். காட்டில் படுத்தும் கண்டதைத் தின்றும் வளர்ந்தான். அவனை எங்கு கண்டாலும் பேச்சி எருமை போல ஒலி எழுப்பியபடி தலை சரித்து, பாய்ந்து வருவாள். அவள் இல்லாதபோது அவன் அவள் வீட்டை ஆக்ரமிக்க வருவான்.

வெகுநேரமாய் அப்படியே நின்றுகொண்டிருப்பதுபோல அவனுக்குப் பட்டது. ஆரம்பத் தயக்கமே பெரிய தடை. அதை உடைத்துவிட்டால், எதையுமே செய்ய முடியும். பிறகு, அவனருகே தரையில் இருந்து மலத்தில் புரண்ட குழந்தை இப்போது மெல்ல நகர்ந்து விலகிவிட்டிருந்தது. அவன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான். காலால் அதை ஓங்கி அறைந்தான். பூனை போலத் தெறித்து மல்லாந்தது. ஒருகணம் அதன் குரல் சிக்கிக்கொண்டது. மறுகணம், அது ஓலமிட்டது. ஒலி பொன்னுமணியின் வயிற்றை அதிரச் செய்தது. அதே சமயம் உடலை முறுக்கியபடி வெறியும் கிளர்ந்தது.

பொன்னுமணி குடிசையின் வாசலை நோக்கி ஓடினான். அந்தப் பையன் கல்லை வீசி எறிந்தான். அது படவில்லை. எறிந்தவன் உடனே பயந்து வீரிட்டபடி, பக்கவாட்டில் புதர் மண்டிய சரிவில் குதித்து ஓட ஆரம்பித்தான். பொன்னுமணி உள்ளே புகுந்தான். அவன் அடிக்கும் முன்னரே குழந்தைகள் வீரிட்டு அழுதன. அவன் சகட்டுமேனிக்கு அறைந்தான். உதைத்தான். ஓட

முடிபவை வீட்டை விட்டு ஓடின. மற்றவை தரையில் கவிழ்ந்து கொண்டன. மெல்லிய மாமிசத்தின் மீது கைகால்கள் மோதுண்ட போது அவன் மனம் சிலிர்த்தது. உள்ளூர ஓடும் எக்களிப்பு நரம்புகளைச் சுண்டியது. அந்த உத்வேகம் காரணமின்றியே தாக்கும்படி தூண்டியது. தரை முழுக்க சுட்ட கிழங்கின் தோல் கிடப்பதை அவன் கண்டான். அவனுள் கோபம் பரவியது. தனக்கு ஒரு அநீதி இழைக்கப்பட்டதாய்த்தான் அதை உணர்ந்தான். குடிசைக்குள் பரபரத்தபடி அலைமோதினான். கையில் கிடைத்த பானைகளைப் போட்டு உடைத்தான். அவன் வெறி தணிந்தபோது குடிசை தாறுமாறாகக் கிடந்தது. கால்கள் சூம்பின. குழந்தை தரையில் குப்புறப் படுத்தபடி எதையோ மூடிக்கொள்வதை அவன் கண்டான். சூம்பிப்போன பிருஷ்டத்தின் கீழே அது ஒளிக்க முயல்வதன் ஓரம் தெரிந்தது. சுட்ட கிழங்கு. பொன்னுமணி ஒரே பாய்ச்சலாக அதன்மீது பாய்ந்தான். அது தன் முழு பலத்துடன் கிழங்கைப் பிடித்திருந்தது. அவன் அதைப் பிய்த்தெடுக்க முயல கிழங்கு உடைந்தது. சிதைந்தது. வெறியுடன் அலறியபடி குழந்தை திமிறியது. அதன் பிடியை நெகிழ வைக்கவே முடியவில்லை. அவன் முஷ்டி சுருட்டி அதை ஓங்கி அறைந்தான். மண்டை மீது முஷ்டி மோதி அவன் கை தெறித்தது. மல்லாந்து அது நிலத்தில் விழ, கிழங்கு இவன் கைக்கு வந்தது. எழுந்து நின்று அதை அவசரமாய்த் தின்னத் தொடங்கினான். குழந்தை அவன் காலைப் பற்றிக் கடித்தது. வலியுடன் காலை உதறி ஓங்கி மிதித்தான். 'ஈக்' என்ற விநோதமான ஒலி கேட்டது. அவன் கிழங்கைத் தின்று முடித்த பிறகுதான் குழந்தை தரையில் மல்லாந்து அசைவற்றுக் கிடப்பதைக் கண்டான். பயத்துடன் அதைப் பார்த்தான். செத்த பல்லி போல வயிற்றின் வெண்மை தெரிய, சூம்பிய கைகால்களை விரித்து கண்கள் திறந்தபடி நிற்க, அது கிடந்தது. அது செத்துவிட்டது என்று உடனே புரிந்தது. ஒரு கணம் சிந்தனை உறைந்து அப்படியே நின்றான். குடிசையின் புறவாசல் வழியாக இரு குழந்தைகள் எட்டிப் பார்த்தன. ஒன்று "அப்பீ... அப்பீ..." என்று வீரிட்டது. உடனே மற்றவையும் "அப்பீ... அப்பீ..." என்று அலறத் தொடங்கின. பொன்னுமணி சட்டென்று காசநோயாளியின் மிருக ஒளி தெரியும் கண்களைப் பார்த்தான். அவை இவனை ஏற்கனவே பார்த்துக்கொண்டிருந்தன. உள்ளங்கால் முதல் முதுகு வடம் வரை கூசியது. சட்டென்று வெளியே பாய்ந்து ஓட ஆரம்பித்தான். சில நிமிடம் ஓடிய பிறகு, காட்டுக்குள் நின்றான். மேலே ஓட முடிய வில்லை. ஆர்வமா பயமா என்று அறியாத ஏதோ உணர்வு அவனைப் பின்னோக்கி இழுத்தது. அதை மீண்டும் பார்க்க வேண்டும் போலிருந்தது. புதர்களின் ஊடே நரிபோல ஊடுருவித்

திரும்பி வந்தான். குடிசை முற்றத்தைப் பார்த்தபடி தவிட்டைப் புதருக்குள் ஒளிந்திருந்தான்.

குடிசைக்குள் அழுகை ஒலிகள் நிரம்பின. காச நோயாளியின் குரல் கேட்டது. சற்று நேரம் கழித்து பெரிய பையனும் இன்னொருவனுமாய் அந்த உடலைக் கையால் பிடித்துத் தூக்கி, முற்றத்தில் கொண்டுவந்து போட்டபிறகு, திரும்பிப் பாராமல் உள்ளே ஓடினார்கள். பிறகு சற்று நேரம் கழிந்து, வாசல் வழியாக இரு தலைகள் எட்டிப் பார்த்தன. கசகசவென்று ரகசியக் குரல்கள் கேட்டன. பிறகு இரு குழந்தைகள் தயங்கியபடி வெளியே வந்தன. ஒன்று திண்ணைமீது தயங்கித் தூணைப் பிடித்தபடி நின்று கொண்டது. இன்னொன்று சற்று முன்வந்து நின்று, திரும்பி, மற்ற குழந்தைகளைப் பார்த்தது. கலவரத்துடன் பிணத்தைப் பார்த்தது. பிறகு தணிந்த குரலில், ரகசியமாய், “பாச்சி... பாச்சி” என்று கூப்பிட்டது. பதில் வராமல் போவது கண்டு, மீண்டும் மற்ற குழந்தையைத் திரும்பிப் பார்த்தது. அதன் முகத்தில் தவிப்பு நிறைந்திருந்தது. பின்னால் நின்ற பெண் குழந்தையின் முகம் சிணுங்கியது. அது உதட்டைப் பிதுக்கியபடி அழுகைக்குத் தயாரானது. முன்னால் நின்ற குழந்தை சற்று குனிந்தபடி நின்று உரத்த குரலில், “பாச்சி எடி பாச்சி அம்மா வாராடி...” என்றது. பின்னால் நின்ற குழந்தை “வா” என்று கை நீட்டியபடி ஆண் குழந்தையை அழைத்தது. அது திரும்பி “போடி” என்று கோபமாய்த் தலையை அசைத்தது. பிறகு திரும்பி “பாச்சி... ப்யூய்... பாச்சி... ப்யூய்” என்றது. பாச்சி திரும்ப எழுந்து பின்னால் ஓடி வருவாள் என்ற நம்பிக்கையுடன் வீட்டுக்குள் ஓடுவது போல பாவலா காட்டியது. பெண் குழந்தை கையை நீட்டியபடி, “வா” என்று கூப்பிட்ட பின்பு குரலெடுத்து அழத் தொடங்கியது. அழுகை சத்தம் கேட்டு குடிசையின் உள்ளிருந்து அந்தப் பெரிய பையன் வந்தான். “உள்ளே போல” என்று சிறிய பையனை அதட்டினான். அழுத குழந்தையின் தலையில் அடித்தபடி, “உள்ளே போடி” என அதட்டினான். குழந்தைகள் அழுதபடி ஓடின. பையன் பிணத்தைப் பீதியுடன் திரும்பிப் பார்த்தபடி, உள்ளே போனான். கதவு சாத்தப்பட்டது.

முற்றத்தில் பிணம் மல்லாந்து கிடந்தது. அதன் உடல் வெளிறியிருந்தது. தலை சற்று சரிந்து, கழுத்திலும் மெல்லிய புஜங்களிலும் பச்சை நரம்புகள் தெரிந்தன. சூம்பிய கைகால்கள் இருபுறமும் விரைத்து நிற்க, விரல்களை எதையோ பற்றுவது போலச் சுருட்டியபடி, பிணம் கிடந்தது. அவன் அதையே பார்த்தபடி புதருக்குள் அமர்ந்திருந்தான். உடம்பு முழுக்க எறும்புகள் ஓடின. சற்று அசைந்தால்கூட புதர் அசைந்தது போலவும், எழப்போவது

போலவும், சிணுங்கல் ஒலி கேட்பது போலவும் தோன்றிக் கொண்டிருந்தது. சட்டென்று அது மூச்சு விடுகிறது என்று தோன்றியது. மனம் படபடக்க உற்றுப் பார்த்தான். இல்லை என்றும் தோன்றியது.

திடீரென்று மலைப் பகுதிகளுக்கே உரிய வினோதமான வேகத்துடன் காடு இருண்டது. தடதடவென்று மழை பெய்யத் தொடங்கியது. செம்மண் நீர் பிணத்தின் விளிம்புகளை அரித்தபடி ஓடியது. அதன் உடலருகே ஜலம் தொடக் கூசி ஒதுங்கிப் போவது போலிருந்தது. சருமம் ஈரமாய்ப் பளிச்சிட்டது. மழை ஓய்ந்தபோது, அது ஒரு பொருள் போல ஆகிவிட்டிருப்பதாய் அவனுக்குத் தோன்றியது. அதன் உடல் முழுக்கச் செம்மண்ணும், மழை நீரில் வந்த குப்பைகளும் ஒட்டியிருந்தன. சற்றுமுன் உயிரோடு இருந்த குழந்தை அது என்பது நம்ப முடியாமல் ஆகிவிட்டிருந்தது. இலைகள் சொட்டி ஓய்ந்தன. பொன்னுமணியின் உடல் உலர்ந்தது. தலைமயிரிலிருந்து நீர் வழிந்தது. பிணம் மேலும் வெளிறி உப்பியது. அதன் புறங்கைகள், விரல்கள், பாதங்கள் முதலானவை வீங்கிச் சின்னஞ்சிறு குழந்தையின் கைகால்கள் போல ஆயின. நீல நரம்புகள் புடைத்த சருமம் மேலும் தெளிவு பெற்றது. குடிசையின் உள்ளிருந்து காச நோயாளியும், மற்ற குழந்தைகளும் அதை அடிக்கடி எட்டிப் பார்த்துக்கொண்டிருக்கக் கூடும் என்று பட்டது. எழுந்து ஓடிவிட வேண்டும் என நினைத்தான். அசைய முடியவில்லை. அது எழுந்துவிடும், எல்லாம் சரியாகிவிடும் என உள்ளூர இருந்த நம்பிக்கை வற்றிப் போய்விட்டது. அவனால் எழவோ அவ்விடம் விட்டுப் போகவோ முடியவில்லை.

இருள் மெல்லப் பரவத் தொடங்கியது. தூரத்துக் காடுகள் நிழலாக மாறின. எனினும் குடிசை முற்றத்தில் மெல்லிய வெளிச்சம் இருந்தது. அந்த மங்கல் ஒளியில் பிணத்தின் வெண்சருமம் பிரகாசிப்பதாய் பட்டது. மெதுவாய் அவன் நரம்புகள் தொய் வடைந்து கொண்டிருந்தன. சிந்தனைகள் மந்தமடைந்து, உடம்பு தளர்ந்தது. பெரிய வெண்ணிற நண்டு ஒன்று அவன் முகத்துக்கு நேராகக் கால்களை நீட்டிவைத்துக் கொடுக்கசைய வந்துகொண்டே இருப்பது போலப் பிரமையெழுந்தது. ஆனால் ஓசைகளும் காற்றும் அவனை அடைந்துகொண்டுதானிருந்தன. தன் தலை ஆடுவது கூடத் தெரிந்தது. சட்டென்று உடல் அதிர்ந்தது. இரண்டாவது ஒலியில் அது ஒரு சீறல் என்று தெரிந்தது. திடுக்கிட்டுக் கண் விழித்தான். புதரில் குப்புற விழுந்திருந்தான். நல்ல இருள். வானின் மேற்கு மூலையில் மங்கிய ஒளியில் சில மேகங்கள். குடிசையின் மேல் விளிம்பு மட்டும் சன்னமாய்த் தெரிந்தது. சில வண்டுகள்

ஒலித்தன. சட்டென்று மனம் பகீரிட்டது. அது அங்கு இல்லை. இருளில் உற்றுப் பார்த்தபோது, வெண்மையாய் அது தெரிவது போலவும் இருந்தது. எழுந்து எச்சரிக்கையுடன் நடந்து அணுகிப் பார்த்தான். முற்றம் காலியாக இருந்தது. புதரின் உள்ளே மூச்சுப் போல சீறல் ஒலிகள் கேட்டன.

# ... 8 ...

அறைக்கல் பாஸ்கரன் நாயர் பின் மதியத்தில் தோட்டம் பங்களாவுக்கு வந்தார். வழக்கமாய் உடனிருக்கும் யாரும் இல்லை. அதே அழுக்குக் கதர் சட்டை, கதர் வேஷ்டி, கரிய ஃபிரேம் கண்ணாடி, வெள்ளைத் தலைமயிர், மீசையற்ற வெண்முகம். காரை களத்தில் நிறுத்திவிட்டு படிகளில் இறங்கி, வீட்டுமுன் தயங்கி நின்றார். உள்ளிருந்து அவரைப் பார்த்துவிட்டு செல்லையாப் பெருவட்டர் சிரித்தபடி வெளிவந்து, கைகளை விரித்தபடி, "வரணும்... வரணும்" என்று வரவேற்றார். "காணணும் எண்ணு அப்பளே நெனச்சது" என்றார். பாஸ்கரன் நாயர் கண்ணாடியைக் கழட்டிவிட்டு, கர்ச்சீப்பால், சிவந்த கொழுத்த முகத்தைத் துடைத்தார். அளவாகச் சிரித்தபடி, மலையாளத்தில், "பெருவட்டருக்கு உடம்பு சரியில்லை என்று கேள்விப்பட்டேன்" என்றார்.

செல்லையாப் பெருவட்டர் சோகமான முகத்துடன், "கெடக்கினும் ஒரு வசம் தளந்து போச்சு" என்றார்.

"கஷ்டம் தான் இல்லையா?" என்றார் ஏ.பி. நாயர்.

"போற வயசு தானே" என்றார் பெருவட்டர்.

"எவ்வளவு நாள் ஆகிறது?"

"ரெண்டு நாள்தான். ஏ.பி. வாங்க இரியுங்க, என்ன குடிக்கிது?"

"இப்போ ஒன்றும் வேண்டாம்."

பெருவட்டர் கண் சிமிட்டியபடி, "எரிவுள்ளது வல்லதும் எடுக்கணுமா?" என்றார்.

ஏ.பி. சிரித்தார். "பார்க்கலாம், பெருவட்டர் எங்கே?"

"உள்ளேதான்... வாருங்க..." ஏ.பி.யைப் பெருவட்டர் வழி நடத்தினார்.

ஏ.பி. உள்ளே நுழைந்ததும் பெருவட்டர் தயங்கி நின்றார். அறைக்குள் சென்று பொன்னுப் பெருவட்டரைக் கூப்பிட முடியாமல் அவர் மனம் குறுகுறுத்தது. கழுத்துவரை போர்த்திப்

படுத்திருந்த பொன்னுப் பெருவட்டரை ஏ.பி. உற்றுப் பார்த்தார். மெல்லப் பக்கத்து ஸ்டூலை இழுத்துப் போட்டு அமர்ந்தார்.

ஓலி கேட்டுப் பெருவட்டரின் கண்கள் அசைந்தன. ரோமங்கள் இல்லாத இமை அசைவது புழு ஒன்று உடல் அசைப்பது போலிருந்தது. வெளிறிய விழிகள் ஒரு வினாடி ஏ.பி. மேல் நிலைத்தன. பின்பு அவை உயிரற்றுத் தாவின. செல்லையா பெருவட்டர் தணிந்த குரலில், "அறைக்கல் வீட்ல... நம்ம ஏ.பி." என்றார். சட்டென்று கிழவரின் முகச் சுருக்கங்கள் வலது கண்ணை நோக்கி இழுபட்டன. உதடுகள் உள்ளமுந்தித் துடிக்க ஆரம்பித்தன. இறுக்கம் சில வினாடிகள் நீடித்தது. பிறகு அவர் கன்னச் சதைகள் தொய்வடைந்தன. வாய் பிளந்தது. கண்கள் மூடின. இமை விளிம்பை நனைத்தபடி கண்ணீர் சொட்டத் தொடங்கியது. "ஏமானா?" என்றார். குழறிய குரல் வேறு எங்கிருந்தோ போல கேட்டது. ஏ.பி., பெருவட்டரின் கையைத் தொட்டார். பெருவட்டர் மெல்ல மூச்சை ஊதி ஊதி வெளிவிட்டபடி, தன்னை அடக்கிக் கொள்ள முயல்வது தெரிந்தது. பிறகு "எப்பம் வந்தது?" என்றார் அவர். ஏ.பி. தணிந்த குரலில், "இப்போதுதான், நேராக இங்கேதான் வருகிறேன்" என்றார். மக்கிய கண்களின் பார்வை தன்மீது உறைந்திருப்பதை ஏ.பி. உணர்ந்தார். அவரால் அமர்ந்திருக்க இயலவில்லை. பெருவட்டரின் கண்கள் நிறைந்து வழியத் தொடங்கின.

"வலிய தம்புரானக் கண்டது மாதிரி இருக்கு." பெருவட்டர் திணறித் திணறிச் சொன்னார். "ஒக்கெ இன்னேற்று கழிஞ்சது போல இருக்கு." முகம் மேலும் மேலும் மார்பை நோக்கி வந்தது. தலையிலும் நெற்றியிலும் நரம்பு வடங்கள் இறுகி விரியத் தொடங்கின.

"பெருவட்டர் சமாதானமாக இருக்க வேண்டும். எல்லாம் சரியாகிவிடும்" என்றார் ஏ.பி.

"என்னத்தை செரியாவ? போற காலம் ஆயாச்சு, போவ வேண்டியதுதான். ஒக்கெ கூடி நெனச்சு பாக்கும்பம் என்னத்துக் குண்ணு இருக்கு. கொண்ணும் கொள்ளையடிச்சும் வலியனாவி என்னத்த கண்டேன்? எனக்கு ஒரு மன சமாதானம் இல்ல ஏமானே. தண்ணி விழுந்து குளுந்து இந்தக் கும்பி அடங்காது. ஒண்ணும் நெனச்சாண்டாம் எண்ணு கருதினா ஒக்குதா? எனக்கு மனசடங்கேல்ல ஏமானே..."

"பெருவட்டர் அமைதியாக இருக்க வேண்டும்..."

கிழவர் விசும்ப ஆரம்பித்தார்.

செல்லையா பெருவட்டர், ஏ.பி.யின் தோளைத் தொட்டார். "போவோம்" என்றார் மெல்ல.

இருவரும் வெளியேறும்போது செல்லையா பெருவட்டர் ஏ.பி.யின் சிவந்து கலங்கின முகத்தைக் குறுகுறுப்புடன் பார்த்தார். வெற்றுச் சடங்காகவோ, வேறு உள் நோக்கங்கள் கொண்டோதான் ஏ.பி. வந்திருக்கிறார் என்று நம்பினார். ஏ.பி.யின் முகத்தில் ஒரு உண்மையான உணர்ச்சியை அவர் அப்போதுதான் பார்க்கிறார். 'கள்ள நாய்ப்பய, நடிப்பப் பாரு' என்று தோன்றியது. அந்தக் கலக்கம் நிஜம்தான் என்றும் பட்டது. "வாங்க, உள்ள போய்ப் பேசுவம்" என்றபடி அழைத்துச் சென்றார். விருந்தினர் அறையை அடைந்தபோது, ஏ.பி. நிதானமாகிவிட்டிருந்தார். "என்ன குடிக்கிது?" என்றார் செல்லையா பெருவட்டர். "வேறு ஒரு வேலை இருக்கிறது. குலசேகரத்தில் ஒரு மீட்டிங்" என்றார் ஏ.பி. "மீட்டிங்கு வையிட்டுதானே? இப்பம் ஒரு ஸ்மால் போடுங்க" என்றார் பெருவட்டர். ஏ.பி. அனுகூலமாகப் புன்னகை புரிந்தார்.

பெருவட்டர் நிதானமாக, ஒரு ஸ்மால் கலக்கினார். ஏ.பி. கண்ணாடியைத் துடைத்து மாட்டியபடி, "பையன்கள் எப்படி இருக்கிறார்கள்?" என்றார்.

"இருக்கினும்" என்றார் பெருவட்டர்.

"மூத்தவன்?"

"பிரான்ஸிஸா? அப்பிடித்தான் இருக்கான். ஒண்ணும் செல்லுயதுமில்ல, கேக்கியதுமில்ல."

"நம்ம தலையெழுத்து பெருவட்டரே. நாம் ஓடியாடி, வாய்கட்டி வயிற்றைக்கட்டி சம்பாதிக்கிறோம். பிள்ளிய கொண்டுபோய் வாண வேடிக்கை நடத்துவார்கள். சம்பாதிக்கிறவனுக்குச் செலவழிக்க முடியாது. செலவழிக்கிறவனுக்குச் சம்பாதிக்கவும் முடியாது. என்ன இழவிற்கு அகப்பட்டவன் கழுத்தை அறுத்து இப்படிச் சம்பாதிக்க வேண்டும் என்று தோன்றிவிடுகிறது."

பெருவட்டர் ஏதோ முகம் சிறுத்தார். கோப்பையை டீபாயில் வைத்தார். உடனே சுதாரித்தபடி சிரித்தார். "என்ன ஆச்சு ஏ.பி.? அப்பனுக்க தத்துவம் ஏ.பி.யில ஒட்டியாச்சு எண்ணு தோணுதே" என்றார். நாய்ப்பயல் ஆழம் பார்க்கிறானா என்றும் தோன்றியது.

ஏ.பி. பெருமூச்சுடன், "சும்மா சொல்லவில்லை பெருவட்டரே. முரளி என்ன ஆகப் போகிறான் என்று யோசித்தாலே பயமாக இருக்கிறது. என்னால் ஒன்றுமே சொல்ல முடியவில்லை" என்றார்.

பெருவட்டருக்கு ஆர்வமே ஏற்படவில்லை. எனினும், "அவன் இப்பம் எங்கே இருக்கான்?" என்றார்.

"யார் கண்டது! மெட்ராஸில் ஏதோ சினிமா நடிகைக்குச் செருப்புத் துடைத்து விடுகிறானாம். அவன் பெயரில் இனி ஒரு பைசா கிடையாது. ஆனால், ஒரே பையன், என்னால் விட முடியாது என்று எல்லாவனுக்கும் தெரியும். வாரம் ஒருவன் கடன் கொடுத்த கணக்கைச் சொல்லித் தேடி வருவான். தலையெழுத்துத் தான், வேறென்ன சொல்ல?"

"சினிமாக்காரியா?"

"ஆ ஏதோ ஒரு ரம்யஸ்ரீயோ என்னவோ பெயர் சொன் னார்கள். நாய் ஜென்மம், திருவனந்தபுரத்திலோ, கேரளாவிலோ இருந்தாளென்றால் இந்நேரம் பிச்சை எடுக்க வைத்திருப்பேன் அவளை."

வேகத்துடன் கண்களைத் தூக்கிய ஏ.பி., பெருவட்டர் கண்களைப் பார்த்தார். உடனே அவர் மனம் அடங்கியது. உணர்ச்சிகள் உள்ளிழுக்கப்பட்டு, அமைதியும் அவதானிப்பும் நிறைந்த முகபாவம் வந்தது.

பெருவட்டர் அதைக் கண்டார். அவர் மனமும் எச்சரிக்கை அடைந்தது. ஏ.பி. வந்த விஷயத்திற்குப் போகப் போகிறார் என்றது உள்ளுணர்வு.

ஏ.பி. ஒரு ஸிப் உறிஞ்சினார். பிறகு கண்ணாடியைச் சரி செய்தபடி, "சரி, அதை விடுங்கள். என்ன ஆயிற்று உங்கள் ரப்பர் விவகாரம்?" என்றார்.

பெருவட்டர் ஏ.பி.யின் கண்களைப் பார்த்தார். 'கள்ள ராஸ்கல் அரச்சுக்குடிச்சுப் போட்டு வந்திருப்பான். கேக்குததப் பாரு ஒண்ணும் அறியாத்த பாவல் போல' என்று மனம் கறுவியது. "ஒரு மாதிரி போவுது" என்றார்.

"என்னமோ பிரச்சனை என்கிறார்களே?"

பெருவட்டர், "ஏ.பி.... சத்தியமாட்டுச் செல்லும். ஓமக்கு ஒண்ணும் தெரியாதா?" என்றார்.

"கொஞ்சம் தெரியும், ஒரு மாதிரி குழப்பமாய் இருக்கிறது எல்லாமே. நீரே விளக்கமாய்ச் சொல்லும்."

பெருவட்டர் கடைசி இழுப்பில் விஸ்கியை முடித்தார். வாயைத் துடைத்தபடி சாய்ந்தார். பிறகு மலையாளத்தில் சொல்ல ஆரம்பித்தார்.

"சங்கதி எக்ஸ்போர்ட் லைசன்ஸ் விஷயம்தான். ஒன்றைத் தொட்டு இன்னொன்று என்று என்னைச் சிக்க வைத்துவிட்டது. புலிவால் பிடித்த கதை, பிடித்திருக்கவும் முடியாது, விடவும் முடியாது."

"சொல்லும்..."

"ஏ.பி.க்குத் தெரியுமே – எக்ஸ்போர்ட் லைசன்ஸ் எடுப்பது என்றால் என்ன கஷ்டம் என்று? மைசூர்காரன் ஒருவன், ராமண்ண ரெட்டி என்று பெயர், என்னைத் தூண்டிவிட்டான். அப்போது ஜனதா ஆட்சிக்காலம். அவனுக்கு மேலே யார் கையிலோ பிடி இருப்பதாய்ச் சொன்னான். ஒரு லைசன்ஸ் இருந்தால் நான்கு பங்கு விலைக்கு ரப்பரை நேரடியாக விற்கலாம்; ரப்பர் உறை தயாரிக்கும் கம்பெனிகளுக்கு ரப்பர் பாலாகவே ஏற்றுமதி செய்யலாம் என்றான். என்ன சொல்ல, அவன் பேச்சில் நானும் விழுந்தேன். முதல் பத்து லட்சம் போட்டேன். பிறகு அதை இழக்கத் தயங்கி, மீண்டும் பணம் போட்டேன். கடைசியில் ஏற்றுமதி லைசென்ஸ் கைக்கு வந்தபோது கறுப்பும் வெள்ளையுமாய் அறுபது லட்சம் போய்விட்டது. விசாரித்தபோதுதான் எவ்வளவு பெரிய சதி இது என்று தெரிந்தது. முதலில் உலக மார்க்கெட்டில் தெற்காசிய ரப்பர் வந்து குவிகிறது. அதனுடன் போட்டியிட நம்மால் இயலாது. என் லைசென்ஸில் ரப்பர் மட்டும்தான் ஏற்றுமதி செய்ய முடியும். வரிகள் வேறு பிய்த்துப் பிடுங்கிக்கொண்டிருந்தன. ரப்பர் ஏற்றுமதியை ரப்பர் போர்டுகள்தான் இன்று செய்ய முடியும். நஷ்டமும் இல்லை, லாபமும் இல்லை என்று அட்ஜஸ்ட் செய்து போகலாம், அவர்களுக்கு வரி இல்லை பாருங்கள்."

"உண்மைதான்."

"நான் அகப்பட்டுக்கொண்டேன். என்ன செய்வது என்று தெரியாமல் விழிக்கும்போதுதான் மாத்தச்சன் உதவிக்கு வந்தான். இதெல்லாமே அவன் திட்டம்தான். கள்ள நாய்ப்பயல். கடைசியில் முதுகில் குத்திப்போட்டான்."

ஏ.பி. சிரித்தார்.

"மாத்தச்சன்தான் சொன்னான். ரப்பர் போர்டு செயர்மான் அவன் ஆள். ராமச்சந்திரன் நாயர் என்று பெயர், மகா கள்ளன். தெரியுமோ ஏ.பி.க்கு?"

"நன்றாகத் தெரியும்."

"ரப்பர் போர்டு கொடுத்துக்கொண்டிருக்கிற விலை அதிகம் என்று ஒரு மார்க்கட் ரிசர்ச் ரிப்போர்ட் தயாரிக்க வேண்டியது.

போர்டைச் சமாளித்து விலையைக் குறைத்துவிட வேண்டியது. அந்த விலையைவிடக் கொஞ்சம் அதிக விலைக்கு நாம் ரப்பர் கொள்முதல் செய்தால் எல்லோரும் சரக்கு நம்மிடம் விற்பார்கள். மாத்தச்சன் ரப்பர் சேகரித்துத் தருவான். எல்லோருக்கும் லாபத்தில் பங்கு உண்டு."

"போர்டுக்குக் கோடிக் கணக்கில் நஷ்டம்" என்றார் ஏ.பி.

பெருவட்டர் ஒன்றும் கூறவில்லை.

"சொல்லுங்கள்." ஏ.பி. ஊக்கினார்.

"இப்படி ஒரு மாதிரி நயம் விலைக்கு ரப்பர் இங்கே கிடைத்தால், இன்டர்நேஷனல் மார்க்கெட்டில் ஓரளவு சமாளிக்க முடியும். கொஞ்சம் லாபமும் கிடைக்கும். போட்ட பணம் கைக்கு வந்தால் சனியனைத் தொலைத்துத் தலைமுழுகி விடலாம். எப்படியும் அஞ்சு வருஷம் இந்த சர்க்கார் இருக்கும். ஜோசப் மாத்தச்சனின் ஆள். அவர் உள்ளவரை பயமில்லை. இப்படியெல்லாம்தான் திட்டம் போட்டேன். ரொம்பப் பெரிய கான்ட்ராக்டுகளில் கையெழுத்துப் போட்டிருக்கிறேன்."

"அடாடா!"

"ஒண்ணும் ரெண்டுமில்லை, வருஷம் அஞ்சு லட்சம் டன் சப்ளை செய்யணும். சப்ளை செய்யாமலிருந்தால், அதற்குண்டான நஷ்டம் நான் கொடுக்க வேண்டும்... இதுதான் இப்போதுள்ள நிலைமை."

"இப்போது மந்திரி சபை விழுந்துவிட்டால் கஷ்டம்தான்."

"ஒன்றும் சொல்ல வேண்டாம். யார் வந்து ரப்பர் போர்டு தலைமையில் இருந்தாலும் பத்து நிமிஷத்தில் எல்லாம் தெரிந்து போகும். கம்யூனிஸ்டுகாரர்களுக்கு இப்போதே சந்தேகம் உண்டு."

"உங்களை ஒன்றும் செய்ய முடியாதே!"

"யாரையும் எதுவும் செய்ய முடியாது; ராமச்சந்திரன் நாயர் இரண்டு மூன்று வருடங்களில் ரிட்டயர் ஆகிவிடுவார். மார்க்கெட் ரிசர்ச் ரிப்போர்ட் ரொம்பப் பலமாக இருக்கிறது. என்குயரி வந்தாலும் பயமில்லை. அவர்களை ஏதும் ஒன்றும் செய்ய முடியாது. அகப்பட்டவன் நான்தான்; எனக்குத்தான் இந்தக் கான்ட்ராக்டை உதற முடியாது. இனி மூன்று வருடம், வெளி மார்க்கெட்டில் ரப்பர் விலை உயர்ந்தால் என் கதி அதோ கதிதான்."

"பெரிய பொறிதான்."

“அடுக்களைச் சாமானை விற்று நான் நஷ்டம் கட்ட வேண்டியிருக்கும்.”

ஏ.பி. தலையசைத்தார்.

“ஒரு வழிதான் இருக்கிறது. என்ன செய்தாவது, எதை விற்றாவது மந்திரிசபை விழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்த மந்திரி சபை விழுந்தால் பிறகு வேறு கதியில்லை. தோட்டம் பெருவட்டன் மண்வெட்டி தூக்கிக் கூலி வேலைக்குப் போக வேண்டியதுதான்.” பெருவட்டரின் தொண்டை சற்று இடறியது. எழுந்து சன்னலுக்குத் திரும்பிக்கொண்டார்.

ஏ.பி. புன்னகை புரிந்தார். பிறகு, “விஷயங்களின் போக்கு பெருவட்டருக்குத் தெரியுமே?” என்றார்.

“ம்ம்...”

“மாத்தச்சனுக்குக் காபி போர்டும், செம்மீன் ஏற்றுமதி லைசென்சும் கிடைக்கப் போகிறது. காபி போர்டுக்கு ஆண்டனி மாத்யூ என்று ஒருவன், மாத்தச்சனின் உறவினன் என்று நினைக்கிறேன், சேர்மனாக வரப் போகிறான். ஜோசஃப் நாலு குதிரை திரட்டி விட்டான். திருமேனி டெல்லியிலிருந்து சிக்னல் தர வேண்டும் – அவ்வளவுதான்.”

பெருவட்டரின் முகம் திகிலடைந்தது. மூச்சு தடைப்படுவது தெரிந்தது.

“பெருவட்டர் பயப்பட வேண்டாம்” என்றார் ஏ.பி. மெல்ல, நாற்காலி கிறீச்சிட எழுந்து, அருகே வந்தார். “நாலு குதிரைகள் என்னிடமும் இருக்கின்றன. அந்த நாலுக்கு இந்த நாலு சரியாப் போகும்.”

பெருவட்டர் சந்தேகமாகப் பார்த்தார்.

“பெருவட்டருக்குச் சந்தேகமென்றால் வேண்டாம்.”

“சேச்சே, ஏ.பி. மேலே சந்தேகமா?”

“எல்லாம் நான் சரி செய்துவிடுவேன். ஆனால் கொஞ்சம் தாமதமாகும்.”

“கம்யூனிஸ்ட்காரர்களா?”

“இல்லை, ரெண்டு பேர் எங்கள் கட்சி. ஒருவன் எஸ்.ஆர்.பி. இன்னொருவன் என்.சி.பி.”

“எவ்வளவு ஆகும்?”

"பணமாய் ஒரு பெரிய பூஜ்யம்."

பெருவட்டர் பெருமூச்சு விட்டார். "செரி, போனா போவுது செல்லும், ஏ.பி.க்கு என்ன வேணும்?"

"எனக்கு இரிகேஷன் அன்ட் ஃபாரஸ்ட்."

"மந்திரிக்கசேரயா?" என்றார் பெருவட்டர் அதிர்ந்து போய். ஏ.பி. புன்னகைத்தார். "அது கஷ்டம்தான் ஏ.பி." ஏ.பி. புன்னகை மாறாமலேயே "கஷ்டம் என்றால் வேண்டாம். சிவப்பன்கள் மந்திரி சபை அமைத்தாலும் எனக்கு ஸ்போர்ட்ஸாவது கிட்டாமல் இருக்காது" என்றார்.

"இரிகேஷன்ல ஏ.பி.க்கு என்னமோ கோளு உண்டு எண்ணு தோணுதே" என்றார் பெருவட்டர். "அதைப் பற்றிப் பெருவட்டருக்கு என்ன? எனக்கு என் விஷயம், பெருவட்டருக்குப் பெருவட்டர் விஷயம்" என்றார் ஏ.பி. "நான் சி.எம். கிட்டப் பேசிப் பாக்குதேன்" என்றார் பெருவட்டர். "பேசினால் மட்டும் போதாது. இது அவருக்குப் பெரிய சான்ஸ். ஆட்சி அப்படி நாறிப் போயிருக்கிறது. விழுந்தால் எழும்ப முடியாது" என்றார் ஏ.பி.

"செல்லிப் பாக்குதேன், மந்திரி சபை விழுந்து போகும்ணு சொன்னா கேக்காம இருக்க மாட்டாரு" என்றார் பெருவட்டர். "பணம் ஒரு வாரத்துக்குள்ள கிட்டுமா?" என்று ஏ.பி. கேட்டார். "பார்க்கிறேன்" என்றார் பெருவட்டர். "பெருவட்டருக்குக் கஷ்டம் தான்." ஏ.பி. அனுதாபப்பட்டார். "அத நீரு என்னத்துக்குப் பாக்குதீரு? பேணு எஸ்டேட்ட வித்துப் போடலாம் எண்ணு பாக்கு தேன், பின்ன கொறை ஷேர் உண்டு. ம்ம் பாக்கிலாம்" என்றார் பெருவட்டர்.

சாப்பிட்டு விட்டு, ஏ.பி. கிளம்பிப் போனார். போவதற்கு முன் பெருவட்டரிடம், "பிறகு ஒரு வார்த்தை, பெருவட்டர் என்றுமே எனக்கு வேண்டியவர்தான். அதனால்தான் சொல்கிறேன். இந்த பிஸினஸ் விஷயம் எல்லாம் இனி நமக்கு வேண்டாம். பெருவட்டர் ஒரு விவசாயி. பிஸினஸ் தந்திரங்கள் உங்களுக்குச் சரிப்படாது" என்றார்.

அப்போது கோபம் வந்தது. ஆனால், அன்று மாலை பேணு எஸ்டேட்டின் தஸ்தாவேஜுகளைத் தேடி ஆபீஸ் அறையில் நுழைந்தபோது, முழு வலிமையுடன் ஜன்னலை மோதித் திறந்து அறைக்குள் வீசும் குளிர் காற்றுப் போல, அந்த வார்த்தைகள் அவர் மனசை அறைந்தன. பீதியில் மனம் விரைத்துக்கொண்டது. உள்ளூர அவரைத் தொடர்ந்து வரும் பீதிதான் அது. சென்ற

நாற்பது வருடங்களாக அது அவரைப் படுத்தி வந்தது, ஓயாமல் அணையாமல்.

நாற்பது வருடங்களுக்குமுன் அறைக்கல் அப்புக்குட்டன் நாயர் தன் தந்தையைத் தேடிவந்த காட்சி அவருக்கு அப்போதும் கண்களுக்குள் இருந்தது. அவருள் அழியாமல் பதிந்துவிட்டிருந்த வடு அது. பேணு எஸ்டேட்டில், பெரிய பண்ணை வீட்டின் சாணி மெழுகிய களமுற்றத்தில், வந்து தயங்கி நின்ற கிழவரை அவர்தான் முதன்முதலாகப் பார்த்தார். தென்னைகளுக்கு எரு போடுபவர் களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவர், அங்கிருந்தே கிழவரை ஆராய்ந்தார். மண் நிறமான சுருங்கிய வேட்டி; அது கணுக்காலுக்கு மேல் தூக்கி நின்றது. பெரிய வெள்ளிப்பூண் போட்ட கைத்தடி. அள்ளி ஒருபுறமாய்ச் சரித்துக் கட்டப்பட்ட நரைத்த குடுமி, இரண்டு வாரத் தாடி, தோளில் ஜரிகை பழுத்த பழைய அங்கவஸ்திரம், இடக்கையில் வெள்ளியிலான வெற்றிலைச் செல்லம். அவர் எட்டி எட்டி, வீட்டின் ஜன்னல்களையும், கதவு களையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தார். இவன், அவர் பின்னால் வந்து "என்ன வேணும்?" என்று சட்டென்று கேட்ட போது, திடுக்கிட்டு உடல் அதிரத் திரும்பினார். உடனே அதற்காக வெட்கப்பட்டு முகம் சிவந்து, சிரித்தபடி, "பெருவட்டரைப் பார்க்க வேண்டும், நான் ஊரிலிருந்து வருகிறேன்" என்றார். அவரது மலையாள உச்சரிப்புக்கூட வித்தியாசமாகப் பிராமணர்கள் பேச்சுப் போல இருந்தது.

"அப்பன் விளையில இருக்கினும்; விளிச்சுதேன் இரியுங்க."

"வேண்டாம். நான் இங்கேயே நிற்கிறேன்" என்றார் அவர் மேலும் கூச்சமாய்.

"கருக்குக் குடிப்பியளா?"

"ஒன்றும் வேண்டாம்."

"நான் அப்பன விளிச்சுதேன்."

சற்று நேரத்தில் பொன்னுப் பெருவட்டர் வந்தார். உடனேயே இவனிடம், "நீ போவில" என்று ரத்தம் கட்டிய கண்களால் முறைத்துப் பார்த்துக் கனத்த குரலில் சொன்னார். அவன் விலகி மறைந்து நின்று கவனித்தான்.

"ம்ம்?" என்றார் பொன்னுப் பெருவட்டர். திண்ணை மீது அமர்ந்து, இடுப்பிலிருந்து பாளை அரிவாளைக் கையில் எடுத்தபடி.

"என்னைத் தெரியவில்லையா, நான்..."

"அறியலாம் – காரியத்த செல்லும்..."

கிழவர் முகம் சுருங்க நின்றார்.

பெருவட்டர் தலைத்துண்டை எடுத்து, துடைத்து, மடியில் போட்டுக்கொண்டார். அரிவாளால் உள்ளங்கையில் உலர்ந்த சேற்றைச் சுரண்டியபடி சரித்துப் பார்த்தார். "பாட்டமும் மிச்சவாரமும் ஒன்றும் இப்போது தருவதில்லை."

"பாட்டமா?"

கிழவர் பதில் சொல்லவில்லை.

"நீரு எனக்குப் பாட்டத்துக்கு என்னவே தந்தீரு?"

கிழவரின் தலை வெடவெடவென்று நடுங்கியது. உதடுகள் துடிக்கத் தொடங்கின. வெற்றிலைப் பெட்டியை இறுகப் பிடித்துக் கொண்டார்.

"வல்ல ரேகையும் உண்டுமா?"

"ஆதாரம் இல்லை என்பதற்காகக் கொடுத்தது கொடுக்க வில்லை என்று ஆகிவிடுமா?"

"ஆருவே குடுத்தது? குடுக்கியதக்கு நீ ஆருவே? காட்டைக் கைகாட்டி விட்டீரு. ஓமக்க காடு எண்ணு ஆரு சென்னா? சோர நீராக்கி அத்துவானிச்சு பொன்னு வெளையச் செய்தது நாங்க. இப்பம் வந்து கைய நீட்டுதீரு. நான் ஆருகிட்டயும் கடன் செல்லுயதுக்கு இல்ல. இது எனக்க மண்ணு. ஒரு சல்லிப்பைசா ஒரு பயலுக்கும் தர ஒக்காது. செண்ணு சோலியப் பாரும் வேய்..."

"பெருவட்டரே, கடவுள் என்று ஒருவர் உண்டு."

"அப்பம், அது அறியலாம் இல்லியா? பாவங்களுக்க சோர குடிச்சு உண்டாக்கின மொதலு இல்லவே இதொக்கெ. அத்துவானிச்சு உண்டாக்கினதாக்கும். வல்லதும், செல்லுயதுக்கு உண்டு எண்ணு சென்னா கோடதியில செண்ணு செல்லும். தெய்வத்துக்க கிட்ட போவாண்டாம். அவிய கொற கண்டிருக் கினும். நீங்க செய்த தொக்கெ..." பெருவட்டர் எழுந்தார்.

"பெருவட்டரே" என்று பரிதாபமான குரலில் அப்புக்குட்டன் நாயர் அழைத்தார். "தரவாட்டிலே காரியங்கள் ரொம்பக் கஷ்டம்தான் இப்போது."

"அதுக்கு?" என்றார் பெருவட்டர்.

கிழவர் குறுகிப் போய் நின்றார்.

“நம்மாட்டி எடுத்துக்கிட்டுச் சோலிக்குப் போவும் வேய். அத்துவானிக்க மனவில்லெங்கி பட்டினி கெடந்து சாவும். கஞ்சிக்கு வளியில்லாத்தவனுவ இஞ்ச வேறயும் உண்டு.” பெருவட்டர் திரும்பி நடந்தார்.

“பொன்னுமுத்து” என்று ஆக்ரோஷத்தால் நடுங்கிய கிழக்குரல் பின்னால் கூப்பிட்டது. அவர் கைகளும் தலையும் வெடவெடத்தன. “பொன்னுமுத்து. அல்பனுக்கு வாழ்வு வந்தால் என்ன ஆகும் என்று காட்டிவிட்டாய். பரவாயில்லை. நன்றாக இரு. பிள்ளை குட்டி களுடன் சவுக்கியமாய் இரு... ஆனால், ஒன்று, ஏற்றமும் இறக்கமும் கண்டவன் சொல்கிறேன், கேட்டுக்கொள். ஏறினால் இறங்க முடியாது. எல்லோரையும் எப்போதும் அகங்கரிக்கக் கடவுள் விட மாட்டார். நான் சாபம் போட மாட்டேன். நான் வயிறெரிந்து சபித்தால் பலித்துவிடும்.”

பெருவட்டர் திரும்பிப் பாராமல் போய்விட்டார்.

தடுமாறியபடி கிழவர் நடந்தார். விழுந்து விடுவார் என்று பட்டது. மேல்துண்டால் முகத்தை ஒற்றிக்கொண்டார். விம்மலில் தோள்கள் குலுங்கின. அன்று போனவர் பின்பு படுக்கை விட்டு எழும்பவில்லை. ஒரு மாசத்துக்குள் அவர் உயிர் துறந்த சேதி வந்தது.

பெருவட்டர் கண்களைத் தொட்டார். ஈரமாக இருந்தது. அழுகிறோமோ, யாருக்காக? அவமான பாரத்தில் நெஞ்சு அடைத்து செத்த கிழவருக்காகவா? அவருக்காக அன்றுகூட அழவில்லை. அவர் அவருக்காகவே அழுதார். வேறு யாருக்காகவும் அழுததில்லை; அழ முடிந்ததில்லை இன்றுவரை.

சாபம் என்பதில் உண்மை இருக்குமா? அன்று பேணு வீட்டின் முற்றத்தில் விழுந்த கண்ணீர்த் துளியின் விளைவா இதெல்லாம்?”

உடைந்து விடும் போல மனம் பீதிகொண்டு துடித்தது. மார்பைக் கையால் அழுத்திக்கொண்டார்.

அப்படியானால் அறைக்கல் மாளிகை முற்றத்தில் எத்தனை எத்தனை சாபங்கள் ஒலித்திருக்கும்? அதனால்தான் இந்த இடம் புல் முளைத்துப் போய்விட்டதா என்ன? கடவுளே, சாபம் ஏற்காத ஒரு மாளிகை முற்றமாவது உண்டா என்ன?

எழுந்தோடித் தன் அறைக்குப் போய்ச் சுயநினைவு சிதறும் வரை குடிக்க வேண்டும் போலிருந்தது அவருக்கு.

## ... 9 ...

வயல்வெளியின் வகிடு போலிருந்தது விசாலமான பாதை. செம்மண் புழுதி பாதம் பட்டுபட்டு மிக மென்மையாகப் படிந்திருந்தது. காலைப் பனியின் குளுமை அதிலிருந்தது. பாதை விளிம்பில் புல் நுனிகளில் பனித்துளிகள் மினுங்கின. இருபுறமும் பச்சை ஜலப்பரப்புப் போல நாற்றுகள் அலைமோதின. தொலைவில் தொடுவானுக்குக் கீழே, பச்சை நிற வரம்பு போலத் தெரியும் தென்னைமரக் கூட்டங்கள் வரை, அந்த வெளி விரிந்து கிடந்தது. காற்று, மேல் துண்டைப் பறக்கச் செய்தது. பாதை முடிவின்றி நீண்டு செல்வதாகப் பட்டது. தூரத்தில் தோப்பு! கண்ணில் பட்டதும் பொன்னுமணி துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டான். அங்கிருந்தே உடலை வளைத்தபடி நடக்க ஆரம்பித்தான். பாதை மெல்ல வளைந்து, மேலேறி, தோப்புக்குள் மறைந்தது. காடு போலத் தென்னையும் மாவும் பலாவும் அடர்ந்த பெரிய தோப்பு. மரக்கூட்டங்களின் இடையே மாளிகையின் பித்தளைக் கூம்பு வடிவக் கூரையின் முனை தெரிந்தது. அது வெய்யிலின் ஜ்வலிப்பில் விளக்கு போல மின்னிக்கொண்டிருந்தது.

பாதையிலிருந்து தோப்புக்கு ஏறுவதற்கு முன்பு பொன்னுமணி திரும்பிப் பார்த்தான். அவனுக்குப் பின்னால் காணிக்கைப் பொருட்களுடன் நடந்து வந்த சுமையாட்கள் அந்தக் காலையிலும் வியர்வையால் மூடப்பட்டிருந்தனர். "வெக்கம் பாத்து நடபில" என்று காரணமின்றியே ஒரு அதட்டல் போட்டுவிட்டுப் பொன்னுமணி மெல்ல எச்சரிக்கையுடன் நடந்தான். பாதை நேராகச் சென்று கற்கள் பாவப்பட்டு, பனியாலோ, கழுவப் பட்டமையினாலோ ஈரமாய் ஆங்காங்கே நீர் தேங்கிய பளபளப் புடன் அகன்று கிடந்த முற்றத்தை அடைந்தது. முற்றத்தின் ஒருபுறம் மாளிகையின் இரண்டாம் வாசலும் திண்ணையும் முகப்பும் இருந்தன. திண்ணை முது மரத்தாலான பெரிய சிற்ப வேலைப் பாடுகள் பின்னிப் பிணைந்திருந்த பத்தாயப்புரை. அதன் கூரை தாழ்ந்து வந்த நுனி சற்று வளைந்து நின்றது. பத்தாயப்புரை மீது ஒரு பெரிய பித்தளைக் கிண்டியும், எச்சில் துப்பும் படிக்கமும்

இருந்தன. முற்றத்தின் இன்னொரு மூலையில், முற்றிலும் கல்லாலான சிறு கோயில். சிறு கோபுரமும், முகப்பு மண்டபமும் தெரிந்தது. கோயிலுக்கு முன், ஒரு பல்லக்கு தரையில் வைக்கப்பட்டிருந்தது. கனமான, தேக்கு மரத்தாலான பல்லக்கு. வெள்ளிச் சிற்ப வேலைப்பாடுகள் அதன்மீது பதிக்கப்பட்டிருந்தன. ஓரங்களில் ஜரிகை மின்னும் சிவப்பு துளு நாடான் பட்டுச் சீலைகள் தொங்கின. வீட்டுக்கு முன்னால் குதிரை நின்றுகொண்டிருந்தது. மாந்தளிர் நிறக் குதிரை. அப்போதுதான் உருவிவிடப்பட்டதுபோல அது பளபளத்தது. வாலைச் சுழட்டி விசிறியபடியும், கால் மாற்றியும், தலையைச் சற்று குனிந்து தன் பிடரி மயிரைச் சிலுப்பியும், நிமிர்ந்து கடிவாளத்தை மென்றும், அது நின்றது. அதன் வார் தரையில் பாதி, முதுகில் பாதியாகக் கிடந்தது. அடிக்கடி அது வீட்டுக்குள் எட்டிப் பார்த்தது. ஆனால் ஒலி ஏதும் எழுப்பவில்லை. மறுபுறம், வீட்டின் பிரதான பூமுகத்தில், ஆட்கள் உரக்கப் பேசும் ஒலி கேட்டது. கோயிலுக்குள்ளிருந்து, போத்தி வெளியே வந்தார். பின்புறம் மடைப்பள்ளிக்கு அவர் போவது தெரிந்தது. இலைகளின் ஒலி தவிர வேறு ஒலியே இல்லை. முற்றத்து ஈரத்தில் நிழல்கள் பிரதிபலித்து அசைந்தன.

பாதையின் ஒரு கிளை பிரிந்து விலகி, தோப்புக்குள் அறப்புரையை நோக்கிச் சென்றது. ஓடு வேயப்பட்ட மரச்சுவருடன் கூடிய அறப்புரை; மரக்கூட்டங்களின் இடையே ஒளிந்து நின்றிருந்தது. முற்றத்து சருகைக் கூட்டி ஒருபுறமாக ஒதுக்கி வைத்திருந்தார்கள். கீழ்ச்சாதிக்காரர்கள் வயல் பாதை வழியாக வந்து, படிப்புரைக்கோ அறப்புரைக்கோ தான் போக வேண்டும். கோயிலின் முகப்பு வழியாக வரும் பாதையிலோ, வீட்டின் பிரதான வாசலிலோ முற்றத்திலோ, அவர்களுக்குப் பிரவேசனம் இல்லை.

பொன்னுமணி அறப்புரை முற்றத்தின் ஓரமாக நின்றான். அறப்புரை வராண்டாவில் பெரிய தாம்பாளம் நிறைய வெற்றிலையும், இன்னொரு தாம்பாளம் நிறைய பாக்கும் இருந்தது. அறப்புரையை விட்டு விலகிச் செல்கிற இன்னொரு பாதை யானைக் கொட்டிலுக்குப் போனது. அங்கும் பாத்திர ஒலிகளும், பேச்சொலிகளும் கேட்டன. யானைக்கு உணவு சமைக்கப்படுகிறது போலும்.

சுமையாட்கள் முற்றத்தில் இறக்கி வைத்தார்கள். எல்லாரும் சற்றுத் தள்ளிக் கும்பலாக நின்றுகொண்டார்கள். குசுகுசுவென்று பேசிக்கொண்டார்கள். விலகி நின்ற பொன்னுமணி திரும்பி, உறுத்துப் பார்த்தான். பேச்சொலி அடங்கியது. ஆட்கள் பார்வைகளைத் தாழ்த்தினார்கள்.

அங்கிருந்து வீட்டின் பக்கவாட்டுத் தோற்றம் தெரிந்தது. பெரிய எட்டுக்கட்டு மாளிகை அது. சதுர வடிவிலான சுற்று வராண்டாவின் உள்ளே, மேலும் உயர்ந்து, உச்சியில் பித்தளை முனைகளுடன், நீளக்கூம்பு வடிவில் முடிந்த மையக் கட்டிடம். அதன் இணைப்பாகச் சற்று உயரம் குறைந்து நீள்சதுர வடிவில், பெரிய அம்மச்சிப்புரை. அதற்கும் பின்னால் ஒரு தனியான கட்டிடமாக, ஆனால் இருபுறமும் மூடப்பட்ட பாதைகளால் இணைக்கப்பட்டதாக சமையலறை. சமையலறைக்குப் பின்னால், உதிரியாக சில ஓட்டுக் கூரைகள். மொத்தத்தையும் பொதிந்த பெரிய கற்சுவர். அது நீண்டு சென்று, சரிந்து, கரிய ஜலம் அலையடிக்கும் குளத்தில் இறங்கி மூழ்கியது. குளக்கரையில் குளிப்புரைகளின் ஓட்டுக் கூரைகள் மீது காகங்கள் வரிசையாக அமர்ந்திருந்தன. குளிப்புரைக்கும் கட்டிடங்களுக்கும் இடைப்பட்ட பகுதி தோட்ட மாக இருக்கலாம். மரம் செடிகளின் உச்சிகள் தெரிந்தன.

முற்றத்தைத் தாண்டி, கட்டை குட்டையான ஒருவர் வருவது தெரிந்தது. கரிய, தொந்தி தொப்பையுடன் கூடிய உடல். உருண்ட முகம். உருண்ட மூக்கு. காதுகளில் ரோமம். குடுமிக்கு முன்புறம், நெற்றிக்கு மேல், மயிர் வெண்மையாகப் பிசிறடித்து நின்றது. ஒற்றைத் துண்டு மட்டும் கட்டியிருந்தார். அவருக்குப் பின்னால் இரு வேலையாட்கள் வந்தனர். காரியஸ்தர் கொச்சுப்பிள்ளை அவர்தான் என்று பொன்னுமணி அனுமானித்துக் கொண்டான். திரும்பிச் சுமையாட்களை உருட்டி விழித்துப் பார்த்தான். அவர்கள் தலைகுனிந்து மேலும் ஒடுங்கினார்கள்.

காரியஸ்தர் கொச்சுப்பிள்ளை படிப்புரைக்கு வந்து, காணிக்கைப் பொருட்களையும் அவர்களையும் ஒருமுறை பார்த்துவிட்டு, திண்ணையில் அமர்ந்தார். அவர் முகம் பணிவும் அதிகாரமும், பயமும் கர்வமும் கலந்த வினோதக் கலவை. சரியாக ஏறி உட்கார்ந்தபோது அவர் மார்புகள் தொந்தி மீது படிந்தன. இரண்டு தளிர் வெற்றிலைகளை எடுத்து, காம்பைக் கிள்ளிப் போட்டு, பின்புறத்தில் சுண்ணாம்பைத் தடவியபடி, அவனை உற்றுப் பார்த்தார். பாக்கைச் செதுக்கித் துண்டம் செய்து, வாயில் அடக்கிக் கைகளைத் தட்டிக்கொள்வது வரை, அந்தப் பார்வை நீடித்தது. பொன்னுமணி கைகளை மார்மீது கட்டி, வளைந்து நின்றிருந்தான்.

“பொன்னுமணிதானே உன் பெயர்?”

“அடியன்... ஓம் ஏமானே.”

“ம்ம்” என்றபடி மென்றார். பிறகு, தலையைக் குலுக்கியபடி, திரும்பிப் புகையிலைக்காகப் பார்த்தார். ஒரு வேலையாள்

புகையிலைச் செப்பை எடுத்து நீட்டினான். அதிலிருந்து ஒரு துண்டை எடுத்து, விரல்களால் இறுகச் சுருட்டியபடி, "எந்த ஊர் உனக்கு என்று சொன்னாய்?" என்றார்.

"அடியன், குன்னத்துக்கல் எண்ணு கேட்டிட்டுண்டு. இஞ்ச வந்து வரியம் கொறெ ஆவுது."

"உன் அப்பன் பெரிய ரகளைக்காரனாமே?"

"அடியன், அப்படியில்ல ஏமானே. நாங்க இஞ்ச வாலாட்டுத நாய்க... நண்ணி மறக்க மாட்டம்."

"ம்ம்..." என்றபடி புகையிலையை வாயில் அடக்கிக் கொண்டார். மேலும் சற்றுப் புகையிலையைக் கிழித்து, முன் வாய் ஈறில் தேய்த்துக் கடைவாயில் எங்கோ செருகினார். இன்னொரு பிசிறு எடுத்துக் கீழ்வாய் ஈறில் தேய்த்துச் செருகினார். "தம்பு ரானிடம் சொல்லியிருக்கிறேன். இப்போது குளியல் நடந்துகொண்டி ருக்கிறது. இன்றைக்கு பிரதோஷம். அம்மைக்கு விசேஷ பூஜை. அது முடிந்துதான் அமிர்தேத்து. இங்கேயே நில்லு, வருவார். ராகவா..."

"அடியன்" என்றான் வேலையாள்.

"இதையெல்லாம் கொண்டுபோய் நாராயணியிடம் கொடு... மத்தியான்னம் வரமாட்டேன் என்று சொன்னதாகச் சொல்லு." நீட்டித் துப்பிவிட்டு, "இரு. மூத்தவனை நான் இங்கே வரச் சொன்னேன் என்று சொல்லு" என்றார்.

எழுந்தபடி, இடுப்புத் துண்டை இறுகக் கட்டினார். "குஞ்ஞிகுட்டனுக்கு எப்படி இருக்கிறது, வைத்தியர் என்ன சொன்னார்?" என்றபடி யானைக் கொட்டிலுக்குக் கிளம்பினார்.

"அடியன், உருளை நாலுநாள் கொடுக்கச் சொன்னார்" என்றான் வேலையாள்.

"ஓலை எடுக்கிறானாமா?"

"அடியன் கொஞ்சம்."

குரல்கள் மறைவது வரை பொன்னுமணியில் விரைப்பான ஒடுக்கம் இருந்தது. பிறகு உடல் நெகிழ்ந்தது.

மத்தியானத்திற்கு மேல், மாலை குளியலுக்குத் தயாரெடுப்பதற் காகச் சிறிய தம்புரான் படிப்புரைக்கு வந்தார். வெள்ளையான, பலவீனமான உடலில் ஒரு பெரிய தங்க வடம் கிடந்தது. அசட்டுத் தனமும் ஆர்வமும் காட்டும் நுனி வளைந்த மூக்கு, தாவுகிற கண்கள்.

உடைத்து உடைத்துப் பேசினார். பட்டு வேஷ்டியால் பஞ்சக் கச்சம் கட்டி, மேலே சரிகை அங்கவஸ்திரம் அணிந்திருந்தார். அவருக்குச் சற்றுப் பின்னால் காரியஸ்தர் பிள்ளையும், ஒரு சதுரங்கப் பலகையை ஏந்தியவராகக் குண்டாகத் தளதளப்பாக இருந்த உற்சாகமான ஒரு நம்பூதிரியும் வந்தனர். சற்றுத் தள்ளி வேலையாட்களும், கையில் ஒரு பெட்டி ஏந்திய கிழவர் ஒருவரும் வந்தனர்.

அப்புக்குட்டன் தம்புரான் படிப்புரையில் அமர்ந்தார். நம்பூதிரி உடனே சதுரங்கப் பலகையை அவர் முன் வைத்தார்.

"இருங்கள் திருமேனி, கொச்சுப்பிள்ளை என்னமோ சொல்கிறான் கேப்போம்" என்றார். தம்புரான், "பிறகு என்ன கொச்சுப்பிள்ளை?" என்றார்.

"பண்ணிமலை விஷயமாய்..."

"உம்..."

"அது இப்போது ஒன்றுக்கும் உதவாத காடுதான். ஒரு சல்லிப்பாட்டமோ வாரமோ இல்லை. சும்மா போட்டிருக்கிற இடத்தை இந்தப் பயலுக்குக் கொடுத்தால் பாட்டத்துக்குப் பாட்டம். பத்து ஜீவன் பசியாறும்..."

சற்றும் கவனமில்லாமல் தம்புரான் கிழவரைப் பார்த்து, "வைத்தியரே இப்போதே பூசி விடலாமே; எனக்கு நேரமில்லை தெரியுமே, குஞ்ஞிக் குட்டனுக்கு உடம்பு சரியில்லை..." என்றார்.

வைத்தியர், "அதற்கென்ன பேஷாக" என்றபடி முன்னால் வந்து, அக்குளில் இருந்த பெட்டியைத் தரையில் வைத்துத் திறந்தார். மரச்சம்புடம் ஒன்றை வெளியே எடுத்து மூடியை அகற்றினார். பச்சிலை எண்ணெயின் வீச்சம் பொன்னுமணியை எட்டியது. அதற்குள் ஏதோ குழம்பு இருந்தது. அதை இரு விரல்களினால் மெதுவாகத் தோண்டி எடுத்துத் தம்புரானின் உச்சந்தலைமீது வைத்தார் அந்த வைத்தியர். அவர் விரல்கள் நடுங்கின. வலுக் கூட்டியபோது அவரது கழுத்து நரம்புகள் புடைத்தன. கையின் தோய்ந்த சதைகள் பிதுங்கின. குழம்பை அழுத்திப் பூசியபோது தம்புரானின் தலை ஆமாம் ஆமாம் என்பது போல ஆடியது. பிறகு குழம்பைக் கழுத்தில் வழித்துத் தோள்களில் பூச ஆரம்பித்தார். நம்பூதிரி சதுரங்கக் காய்களைக் கட்டங்களில் பரப்புவதில் கண்ணாக இருந்தார்.

கொச்சுப் பிள்ளை குனிந்து, "அடியன், தம்புரான் ஒன்றும் சொல்லவில்லை" என்றார்.

"என்னது?"

"இந்தப் பயலின் விஷயம்."

"என்ன விஷயம்?"

"பன்றி மலைக்காட்டை இவனுக்கு..."

"கொடு கொடு. வைத்தியரே, இந்தக் காயகல்பம் ஒன்றும் பிரயோசனமாகத் தெரியவில்லையே. நேற்று நாணியும் சொன்னாள். பெரிய மாற்றம் ஏதும் இல்லை என்று." நம்பூதிரி தலைநிமிர்ந்து புன்னகைத்தார்.

"அடியன், ஒரு மண்டலம்கூட வேண்டி வரும்" என்றார் வைத்தியர்.

"என்ன மண்டலம்... உடம்பு பூரா காயகல்பம் ஓடுகிறது. ஒன்றுக்கும் முடியவும் முடிவதில்லை..." தம்புரான் திடீரென்று கோபமாகிச் கொச்சுப்பிள்ளையைப் பார்த்து, "இன்னும் என்ன? அதுதான் சொல்லிவிட்டேனே" என்று சீறினார்.

"அடியன், அனுப்பிவிடுகிறேன்" என்றார் பிள்ளை. பிறகு பொன்னுமணியிடம் திரும்பி, "கேட்டாயா? பன்றி மலைக்காட்டை உனக்குத் தம்புரான் தானமாகத் தந்திருக்கிறார். பாட்டமும் வாரமும் ஒழுங்காய்த் தந்துவிட வேண்டும். நன்றாய் உழைத்து சவுக்கியமாய் இரு."

"அடியன், நாங்க இந்த உப்ப தின்னுத சாதி, தின்ன நண்ணி ஒருக்காலும் மறக்கமாட்டம்" என்றான் பொன்னுமணி.

"சரி போ, புத்தியாய்ப் பிழை!"

பொன்னுமணி பின்புறம் காட்டாமல் நகர்ந்து, பாதையை அடைந்து, திரும்பிச் சென்றான். சுமையாட்கள் என்னவோ சொல்வது கேட்டது.

"என்னல?" என்றான்.

"ஒண்ணுமில்லை" என்றான் ஒருவன்.

"நாக்க அடக்கிப் போடு... ஆ... பொளந்து போடுவேன் அல்லெங்கி. நாய்க்குப் பொறந்த பயலே!" என்றான் பொன்னுமணி.

## ... 10 ...

தங்கம் அன்று மத்தியானமே திரும்பிவிட்டாள். திருவனந்த புரத்திலிருந்து பெருவட்டரும் மனைவியும் திரும்பி வந்த பின்பு, வீடு நிறைய ஆட்கள். பெரிய பெருவட்டருக்கு உடல்நிலை மேலும் மோசமாகிவிட்டது என்று அந்த ரகளை சொன்னது. இரண்டு டாக்டர்கள் வந்திருந்தார்கள். நாகர்கோயிலில் இருந்து பிஷப் கூட வந்திருந்தார். டாக்டர்கள் சிகிச்சை ஏதும் செய்வதாகத் தெரிய வில்லை. ஹாலில் அமர்ந்து, உரத்த குரலில், அனைவரும் உரையாடிக் கொண்டிருந்தார்கள். காபியும், நொறுக்குத் தீனியும் தொடர்ந்து ஹாலுக்குச் சென்றுகொண்டிருந்தன. நடந்து நடந்து அவளுக்கு இடுப்பு வலித்தது. கெண்டைக்கால் தசைகள் ஒவ்வொரு அசைவிலும் இறுகித் தெறித்தன. வீட்டின் மற்ற வேலைக்காரிகள் அவளிடம் ஒருவிதமான கனிவுடன்தான் நடந்து வந்தார்கள். அந்தக் கனிவு அவளுக்குப் பெரும் கூச்சத்தையும் அசௌகரிய உணர் வையும் ஏற்படுத்தும். அதிலிருந்து தப்ப எப்போதும் முற்றிலும் மவுனமாகவும், உணர்ச்சியற்ற முகபாவத்துடனும் இருக்க முயல்வாள். ஆனால் அவள் கண்களில் ஆர்வமும், சங்கடமும் ஓயாது வெளிப்பட்டுக்கொண்டிருந்தன. அந்த அனுதாபத்தை அவள் வெறுத்தாள். அதே சமயம், அது இல்லாமல் வாழவும் முடிவதில்லை அவளால்.

பக்கத்து ஊர்களிலிருந்தெல்லாம் பெரிய தனக்காரர்களும் பெருவட்டர்களும் மனைவிகளும் தொடர்ந்து வந்துகொண்டி ருந்தனர். களமுற்றம் முழுக்க கார்கள். விதவிதமான நிறங்களில், வடிவங்களில். டிரைவர்கள் கூடி அமர்ந்து, புகைத்தபடி பேசினார்கள். அவர்களுக்கு காபி, பானம் தரவும் அவள்தான் போக வேண்டியிருந்தது. பெரிய மனிதர்களின் அலட்சியப் பார்வை களைச் சந்திக்க அவள் நன்கு பழகிவிட்டிருந்த போதும், டிரைவர் களின் துளைக்கும் பார்வைகளையும், அருவருப்பூட்டும் பரிவையும், எதிர்கொள்ள நிரம்பக் கூசினாள். குனிந்த தலை நிமிராமல் பரிமாறிக் கேள்விகளுக்கெல்லாம் ஒற்றை வார்த்தைகளில் பதில் கூறிவிட்டு, ஓடி வருவாள். முட்புதரில் சிக்கித் தப்பிய உணர்வுதான்

அப்போது ஏற்படும். முதுகுக்குப் பின்னால் மற்றவர்கள் பேசுவ தெல்லாம் தன்னைப் பற்றித்தான் என அவளுக்கு எப்போதும் தோன்றி வந்தது. எனவே ஒரு இடத்தை விட்டு வெளியேறும்போது ஒருமுறை திரும்பிப் பாராமலிருக்க இயலாது அவளால். அப்போது ஏதாவது கண்களை அவள் சந்திக்க நேர்ந்தால் விதிர் விதிர்த்துப் போய்விடுவாள். அடுத்த அரைமணி நேரம் மனம் அதைப் பற்றியே உழட்டிக் கொள்ளும்.

பெரிய பெருவட்டர் படுக்கையானதும், உள்ளூர்ப் பெரிய மனிதர்கள்கூட வந்து எட்டிப் பார்க்கவில்லை. ஆனால் பெருவட்டர் திரும்பிய சில மணி நேரத்துக்குள்ளேயே ஃபோன் ஒலிக்கத் தொடங்கியது. ஆட்கள் வந்து குழுமத் தொடங்கினர். வந்ததும், ஒருமுறை பெரிய பெருவட்டரைப் போய்ப் பார்ப்பார்கள். கட்டிலைச் சுற்றி நின்று தயங்கி, அரைகுறையாக எதையாவது கேட்பார்கள். அவர் அதற்குக் கடுமையுடனும், அலட்சியமாகவும், அவர்களைத் திரும்பியே பாராமலும், ஓரிரு வார்த்தைகளில் பதில் கூறுவார். பிறகு அவர்கள் முன் ஹாலுக்கு வந்து, அவரை முற்றிலும் மறந்துவிட்டு, வேறு விஷயங்களைப் பேச ஆரம்பிப்பார்கள். சிரிப்பும், உற்சாகமுமாய், பரஸ்பரக் கிண்டலும் உறவுமுறை வைத்துக் கூப்பிட்டுக் கொள்ளலுமாய் ஹால் அமர்க்களப்படும். பெண்கள் ஆண்களுடன், சரிசமானமாய் அமர்ந்து, கால்மேல் கால் போட்டபடி, வாய் திறந்து, தொண்டை புடைக்க, சிரித்தும்; செயற்கை பாவனைகளுடன் கழுத்தை நொடித்தும்; உதடுகளைப் பல்வேறு விதமாய்க் குவித்தும் நீட்டியும் பேசினார்கள். லிவி ஓரமாய் அமர்ந்து, அதிகம் பேசாமல் கவனித்தபடி இருப்பான். அவன் பாதி கவனம் அப்பா மேலேயே இருக்கும். அவன் உடல் முழுக்க பவ்யம் கமழும். அவர் அவனை அடிக்கடி ஏவுவார். ஃபோன் அடிக்கும் போது, “லேய் லிவி, என்னான்னு கேளுல” என்பார். ஒற்றை வார்த்தையில் அறிமுகப்படுத்துவார். ஆனால் அவருக்கு அவனிடம் உள்ளூர இருந்த பிரியம் தெரியும். பெருவட்டத்தி அமராமல், உபசரிப்பதும், உபசாரம் கூறுவதுமாய், பறந்து அலைந்தாள்.

யாருமே பெரிய பெருவட்டரைக் கவனிக்கவில்லை என்பது தங்கத்துக்கு வியப்பை அளிக்கவில்லை. அவர்மீது எல்லாருக்கும் பயமும் வெறுப்பும்தான் என்பதை அவள் அறிவாள். அவளைக் காணும் போதெல்லாம் அந்த அலுமினிய நிறக்கண்கள் அவள்மீது பதிந்து, வெறுப்புடன் விழிக்கும். அவள் அவரை சுச்ருஷை செய்யும்போது கூட அவர் முகம் வெறுப்பையும் கோபத்தையுமே காட்டும். உடல்நிலை மோசமாக ஆக, பெருவட்டர் பெரும்

தொல்லையாக மாறிப் போனார். புரண்டும், முனகியும் பகல் முழுக்கத் தவித்தார். இடையிடையே சம்பந்தா சம்பந்தமின்றி உளறியபடி அழுதார். சில சமயம் மவுனமாய் தியானத்தில் போல அமர்ந்திருந்தார். இரவில் அறை முழுக்க விளக்குகளேற்றி வைத்துத் தூங்காமல், புரண்டபடி, கூவியும், திட்டியும், சபித்தும் இம்சைப் படுத்தினார். வேலைக்காரர்கள் உட்பட எல்லாரும் அவர் மரணத்தை உள்ளூர விரும்ப ஆரம்பித்தனர். எல்லாரையும் விட லிவிதான் கிழவரை அதிகம் வெறுத்தான். அவளிடம், “இன்னும் ஒரு வாரம் கெளவன் இப்படிக் கெடந்தானெங்கி சத்தியமாட்டு சொல்லுதேன் தங்கம், வெஷத்த கலக்கிக் குடுத்துப் போடுவேன்” என்பான் அடிக்கடி.

லிவியின் பார்வை அவள் ஞாபகத்தை வருடியது. ஹாலில் அவள் காப்பி கொண்டு போகும் போதெல்லாம் அவன் கண்கள் அவள்மீது படிந்து, நுணுக்கமாய் வருடியபடி தொடரும். அது தன் கழுத்தில் மயிலிறகு ஸ்பரிசம் போல வருடுவதை உணர்வாள். முன்பு ஒருமுறை, லிவி அவள் தலைமயிரைக் கையால் அள்ளிக் கீழே இழுத்து மோவாயை மேலே உயரச் செய்து, மேலுதடும் நெற்றியும் வியர்வையில் ஈரமாகி ஃபேன் காற்றில் குளிர்ந்த இவள் முகத்தருகே அவன் முகத்தைக் கொண்டுவந்து, மார்புக்குள் ஒலிப்பது போன்ற அந்தரங்கமான குரலில், “ஒனக்க உடம்பில எனக்கு ரொம்பப் பிடிச்சது இந்தக் கழுத்துதான். பட்டு மாதிரி... மெலிஞ்சு கள்ளம் இல்லடி; சத்தியமா” என்றான். அவள் உடம்பு முறுக்கிக்கொண்டது. அவன் அண்மையின் வெப்பமும் ஈரமும் மிகுந்த வாடை! கண்களை மூடிக்கொண்டாள். அவன் மீசை அவள் கழுத்தை வருடியது.

பீங்கான் தட்டு கைதவறிய பின்பே அவள் அதை உணர்ந்தாள். பிடிக்கப் பதறியபோது, மொத்தமாய்ச் சரிந்து, தரையில் கணகண வென்று விழுந்தது. விருந்தினர்களின் உரையாடல்கள் சட்டென்று நின்றன. சங்கடமான ஒரு மவுனம் நிலவியது. அவள் பார்வை இயல்பாய், ஆதரவு தேடும் பாவனையில், லிவியை நோக்கித் தாவி மீண்டது. அவன் வேறுபுறம் திரும்பிக் கொண்டான். வயதான தாடிக்காரர் மெல்லச் சிரித்தபடி, “போட்டும் கை தெற்றிப் போச்சு” என்று மவுனத்தைக் கலைத்தார். அவளுக்கு அழுகை வந்தது. வயிறு கும் கும் என்று பொங்கியது. என்ன செய்வது என அறியாமல் நின்றாள். மற்றவர்கள் கவனங்களை விலக்கிக்கொண்டு, மீண்டும் பேச ஆரம்பித்தார்கள். சத்தம் கேட்டு வந்த பெருவட்டத்தி முகம் சிவந்து, “சவம் கையும் வெளங்காது காலும் வெளங்காது” என்றாள். பெருவட்டர் சற்று அசைந்து அமர்ந்து, அலுப்புடன்

கூறும் பாவனையில், "கை தெற்றிப் போச்சு அத்திரதானே, போட்டும், நீ போ" என்றார். இவளிடம் அதற்குள் ராஜம் வந்து முறத்தில் உடைசல்களைத் திரட்டத் தொடங்கினாள். இவள் அவளுக்கு உதவுவதா வேண்டாமா என்று தெரியாமல் தயங்கி நின்றாள். அதற்குள், கண்கள் நனைந்து, இமைகளில் பிசிறாகிக் கண்ணீர் கன்னங்களைத் தொட்டுவிட்டது. "நீ உள்ளே போ" என்று பெருவட்டர் சொன்னார். உள்ளே ஓடிப்போய் சமையலறை மூலையில் நின்றாள். அழுகை பீரிட்டு வந்தது. குலுங்கும் தோள் களைக் குலுக்கியபடி நின்று அழுதாள். ஓசை கேட்காமலிருக்க வாயைப் பொத்திக்கொண்டாள்.

சரசரவென்ற காலடியோசையுடன் பெருவட்டத்தி அவளருகே வந்தாள். அவளுக்குத் தங்கத்தின் மீது விசேஷப் பரிவு ஏதும் இல்லை. பெருவட்டரின் கனிவுக்காகக் கண்டனம்தான் உண்டு. தங்கம் மெல்ல முகம் திருப்பிக் கடைக்கண்ணால் பெருவட்டத்தி யைப் பார்த்தாள். அவள் இடுப்பில் கைவைத்து உற்றுப் பார்த்தபடி நின்றிருந்தாள். அவள் கூறப்போகும் வார்த்தைகளுக்காக இவள் உடலும் மனமும் பதைக்கத் தொடங்கியது.

"இஞ்ச ஆளுகிட்ட காட்டுதே, ஒனக்க கரச்சிலும் பிளிச்சிலும்?" என்றாள் பெருவட்டத்தி. "சோலி செய்ய ஒக்காதெங்கி செல்லிப் போடு!"

தங்கம் மூச்சடக்கி நின்றாள்.

"இருந்து திண்ணுத வம்சமில்லா. சோலி செய்யக் கையும் காலும் வெளங்காது எண்ணு அறியிலாம். ஓடச்சியதுக்கும் எறியியதுக்கும் இஞ்ச அறைக்கல் வீட்ல இருந்துகொண்டு வந்து வச்சிருக்கேல்ல, பாத்துக்க..."

தங்கம் விசும்பினாள்.

பெருவட்டத்தி சட்டென்று தணிந்தாள். "சுகமில்லியா; இல்லெங்கி அதச் சொல்லிப்போடு – வீட்டுக்குப் போவணுமா?"

"ம்ம்.."

"செரி போ... நாசம் பிடிச்ச சென்மம். வேறு ஆளா இட்டாது சோலிக்கு? என்னமோ ஆனயக் கொண்டாந்த கத தான். செரி செரி கண்ணுமின்ன நிக்காத."

விடுதலை உணர்வுடன் தங்கம் கிளம்பினாள். தோட்டம் காம்பவுண்டைத் தாண்டியதும் வழக்கமாய் அவளிடம் உற்சாகம் வந்து தொற்றிக்கொள்வது வழக்கம். வேடிக்கை பார்த்தபடியும்,

வாய்க்குள் பாடியபடியும், பாவாடை காற்றில் பறக்க நடப்பாள். அன்று அடிவயிற்றில் ஒரு எரிச்சல்தான் இருந்தது. யார்மீதோ கோபம் போல.

குடிசை பூட்டப்பட்டிருந்தது. சாவி சுவர் மீது மண் இடுக்கில் இருந்தது. அதை எடுத்துக் குடிசையைத் திறந்தாள். உள்ளே இருட்டும், ஈரப் பழந்துணிகளின் வீச்சமும் நிறைந்திருந்தது. கொடியி லிருந்து துண்டை எடுத்துக்கொண்டாள். ஏழெட்டு இடங்களில் தேடி சோப்புத் துண்டைக் கண்டெடுத்தாள். வெளிவந்து கதவை மூடினாள். முற்றம் வெயிலில் வெறிச்சிட்டுக் கிடந்தது. பறவைகளின் ஒலி தவிர நிசப்தம்.

திண்ணையோரம் மாம்பலகை சாத்தி வைக்கப்பட்டிருந்தது. அதைப் பார்க்கும்போதெல்லாம் சிறு மனச்சிலிர்ப்பு அடைவாள். அதில்தான் ஆறு வருஷம் அவள் அப்பா படுத்திருந்தார்; துணிப் பொம்மை போல. அவர் கண்கள் மட்டும் உருண்டபடியே இருக்கும். மூத்திரம் திண்ணை முழுக்க வழிந்திருக்கும். பேச யத்தனிப்பவர் போல வாயை அடிக்கடி கோணி அசைப்பார். சில ஒலிகளை மட்டுமே அவரால் எழுப்ப இயலும். பேச முடியாமல் போனதுகூட நல்லதுதான் என்று பட்டது. அவரால் பிறருக்கு வரும் தொல்லைகள் அதனால் வெகுவாய்க் குறைந்து போய்விட்டது. காலையில் பழையது பிசைந்து ஊட்டிவிட்டு, அவளும் அம்மாவுமாய் அவரைத் தூக்கிப் பலகை மீது படுக்க வைத்துத் திண்ணைமீது விட்டுவிட்டுப் போய்விடுவார்கள். சாய்ந்திரம் வரும்போது திண்ணை முழுக்க மூத்திர வாடையுடன், பலகையைச் சுற்றி எச்சிய துப்பிய தடயங்களுடன் அவர் கிடப்பார். கழுவிக் கஞ்சி ஊட்டித் தூக்கி உள்ளே படுக்க வைப்பார்கள். அம்மாவின் ஆரம்ப காலத் துக்கம், கோபம், விரக்தி எல்லாம் போய் ஒரு மாதிரி அந்த வாழ்வுக்குப் படிந்து போய்விட்டாள். அவளுக்கும் அந்த நிலை பழகிவிட்டது. அவளுக்குத்தான் கடைசிவரை அந்த உடம்பைத் தொடுகையில் கையும் மனமும் கூசும்.

அப்பா தன்னை ஒரு மரச்சாமான் போல ஆக்கிக்கொண்டு விட்டிருந்தார் என அவளுக்குப் பட்டது. கடைசி காலத்தில், அவர் முகத்தின் மீது இம்சையின் தடங்களும், வலிச் சுருக்கங்களும், அகன்று, கண்கள் குழந்தையின் கண்கள் போல ஆகிவிட்டிருந்தன. முற்றத்தில் பறக்கும் ஒரு காக்காயைப் பார்த்தால்கூட, அவை ஆர்வத்துடன் மலரும். முகம் களிப்பில் விரியும். அவைகளும் அவருடன் ஒருவிதமான இணக்கம் கொண்டு விட்டிருக்க வேண்டும். அவர் உடம்பின்மீதும் வந்து அமரும், எச்சமிடும். ஆனால்

கொத்தவோ துன்புறுத்தவோ செய்யாது. அவர் உடம்பின் மீதாக ஏறும்பு வரிசை ஏறி இறங்கிப் போவதைக்கூட அவள் கண்டிருக்கிறாள்.

வீடு அவளுக்கு அமைதியின்மையையும் அடைக்கல உணர்வையும் ஒருங்கே அளிக்கும் இடமாக இருந்தது. அங்கு தாங்க முடியாத, இறுக்கமான, ஒருவித அமைதி இருந்தது. புலன்களை உறைய வைக்கும் அந்த மட்கும் மணம். சில சமயங்களில் அம்மா வேலை முடிந்து வரும் வழியிலேயே அம்புரோஸ் நாடானின் வீட்டுக்குப் போய் சிறிய குப்பியில் வாற்றுச் சாராயம் வாங்கி வருவாள். இரவு கஞ்சிக்குப் பின் அதைக் குடிப்பாள். அம்மாவிற்கு எப்படி இந்தப் பழக்கம் ஏற்பட்டது என்று தங்கம் சில சமயம் வியப்பு கலந்த பீதியுடன் எண்ணிக்கொள்வாள். ஏகாதசி நோன்பும், பிரதோஷ பூஜையும், குலப் பெருமையும், குடும்பச் சண்டையுமாய் முக்கால் வாழ்நாளைக் கழித்தவள் எப்படி அனாயசமாய் மாறிக் கொண்டாள். அதைவிட அதை அத்தனை அதிர்ச்சியின்றி ஏற்றுக் கொள்ள எப்படித் தன்னால் முடிந்தது? எல்லாமே மனசுக்கு எட்டாத புதிர்கள்தாம். தங்கள் குலத்தின்மீது விழுந்துவிட்ட சாபம்தான் எல்லாவற்றுக்கும் காரணம் என அவள் நம்பினாள். திரும்பத் திரும்பக் கூறப்பட்டு அறைக்கல் குடும்பம் முழுக்க ஆழப் பதிந்திருந்த நம்பிக்கைதான் அது. அந்த சாபம்தான் அப்பாவை வழி தவறச் செய்தது. தாசிகளுக்கும், குடிக்கும், வக்கீல்களுக்கும் குடும்பச் சொத்தை முழுக்க அள்ளி வீசச் செய்தது. பாஸ்கரன் பெரியப்பா குடும்பத்தை வெட்டிப் பிளக்க வைத்தது. யோசிக்க யோசிக்க அவள் உடம்பு சிலிர்க்கும். எதிர்காலம் பற்றிய பீதி மனசைக் கவ்வும். அம்மா குடித்துவிட்டு வரும் நாட்களில் தூங்க விடாது. அது மனசைப் பிசையும். குடித்துவிட்டுத் திண்ணை மீது அமர்வாள் அம்மா. குடிக்க நேர்ந்ததற்கு வருந்துபவள் போல விசும்பத் தொடங்குவாள். மெல்ல மெல்ல விசும்பல் உச்சஸ்தாயியில் எழுந்து, திட்டும் சாபமுமாய் எங்கும் நிறையும். மார்பில் அறைந்தபடி அலறி விழுவாள். அவள் குலப்பெருமையும், வாழ்ந்த வாழ்வும், இருந்த இருப்பும், முழுக்கப் புலம்பலாக வழியும். எல்லாவற்றுக்கும் காரணம் அப்புக் குட்டன் தான் காரணம் என்று நம்பினாள். அவர் குல தெய்வத்துக்குச் செய்த அபவாதமே வம்ச நாசத்துக்கு வழி வகுத்தது என்று அவளை மாதிரியே அனைவரும் நம்பி வந்தனர். இன்னொரு சாபத்துக்குரிய ஆத்மா அறைக்கல் பாஸ்கரன் நாயர். கடல் போன்ற தரவாட்டை உடைத்துச் சிதிலப்படுத்தியவர். எதையும் கேளாதவராய் அப்பா கிடப்பார். அவள் குரல் அந்த இரவு முழுக்க அரைத் தூக்கத்தில் கேட்டபடி இருக்கும்.

ஒரு சாயந்தரம் வந்து அப்பாவைத் தூக்கியபோது அவர் உடம்பு குளிர்ந்து கிடந்தது. காக்கை எச்சம் நிரம்பியவற்றில் உடல்

ஏதோ உலர்ந்தபழ நெற்றுப் போல இருந்தது. மூக்கில் சிறிது ரத்தம் உலர்ந்திருந்தது. அம்மா திகைத்தவள் போல இவளைப் பார்த்தாள். பிறகு தலைமயிரைக் கலைத்துவிட்டுக்கொண்டாள். தலைமாட்டில் அமர்ந்துகொண்டாள். இவள் அதை முழுக்க வாங்கிக் கொள்ளாத வளாகத் தூணைப் பிடித்தபடி நின்றாள். அம்மா தயங்கி, இவளை மீண்டும் பார்த்துவிட்டு, திடீரென்று "வீல்" என்று அலறினாள். எதிர்பாராத ஒலியில் இவள் அதிர்ந்து போனாள். அம்மா உச்சஸ்தாயியில் அலறிவிட்டுச் சற்று நிறுத்தி, இவளிடம் திரும்பி "வாயைப் பிளந்தபடி நிற்காதே, மூதேவி ஓடு. ஓடிப்போய் ராகவனிடம் சொல்லு" என்று திட்டினாள். அவள் முகத்தில் கொந்தளித்த துவேஷம் இவளுக்குப் புரியவில்லை. தயங்கி நின்றாள். "ஓடுடீ." தங்கம் புதர்கள் வழியாக விழுந்தடித்துக் கொண்டு ஓடினாள்.

திண்ணை காலியானபோதுதான் அங்கு உயிருடன் ஒரு ஜீவன் இருந்தது என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். மவுனமான சாட்சியாக இருந்தாலும், அது தந்திருந்த பாதுகாப்பு உணர்வு அப்போதுதான் புரிந்தது. அம்மா அதன்பிறகு குடிக்கவே இல்லை. எச்சரிக்கையும் பயமும் மிகுந்தவளாக ஆனாள். தாயும் மகளும் இரவுகளில் பரஸ்பரம் ஒண்டி, உள்ளூரப் பயம் குளிரப் படுத்துக் கொண்டார்கள். சிறு இலையசைவில் கூட அம்மா விழித்துக் கொண்டு அவளைத் தடவிப் பார்த்து, "தங்கம்?" என்பாள். அவள் "இருக்கேன்" என்பாள். இருவர் உடலும் நடுங்கும். அம்மாவின் பெருமூச்சு இருளில் ஒலிக்கும். ஏனோ அந்தப் பலகை ஒருவித குற்ற உணர்வைத் தருவதாக ஆகிவிட்டிருந்தது. அதை வேறு எதற்கும் உபயோகிக்க இயலவில்லை. பிறகு வெயில் சாயத் தொடங்கியது. அவள் நிழல் அவளுக்கு முன்னால் விழுந்து, நீண்டு மடங்கிச் சென்றது.

கிராமப்புறமே ஒருவிதமான மயக்கத்தில் இருப்பதுபோல அமைதி. அலுப்பற்றவை போல ஓரிரு காகங்கள் கரையும் ஒலி மட்டும் அவ்வப்போது கேட்டுக்கொண்டிருந்தது.

அவள் அப்பி பெருவட்டனின் ரப்பர் தோட்டத்தை அடைந்தபோது, இலேசாய் மூச்சிரைக்க ஆரம்பித்திருந்தாள். அவளை அறியாமலே அவளில் ஏற்பட்டிருந்த மாறுதல்களுக்காய் மனம் ஏக்கம் கொண்டது. முன்பெல்லாம் தனிமையில் மிகச் சுதந்திரமாய் இருப்பாள். துள்ளலுடன்தான் நடப்பாள். மூச்சுக்குள்ளே பாடிக் கொள்வதுகூட உண்டு. தனிமையில் அவளது சுற்றுப்புறத் தகவல் ஒவ்வொன்றும் அவள் பிரக்ஞையைத் தாக்கும். குயில் குரல் கேட்டால் நின்று, திரும்பித் திரும்பிப் பார்த்து, பதில்

குரல் எழுப்பாமல் போக மாட்டாள். தனிமையில் மரங்களுக்கு இடையே இருக்கும்போது, அல்லது இரவில் சிலசமயம் விழித்துக் கிடக்கும்போது, எதையோ எதிர்பார்ப்பவள் போல மனசு அடித்துக்கொள்ளும். தாங்க முடியாத அளவு ஒரு தவிப்பு கசக்கிப் பிழியும். அக்கணம் அந்த இம்சையை ஒதுக்கி மனசை வேறெங்கோ திருப்பிவிட முயல்வாள். எனினும் பிறகு அந்தத் தவிப்பு பற்றிய நினைவு ஒரு இனிய கனவுபோல இருக்கும். இனிப்பைப் பற்றி நினைக்கும் குழந்தைபோல்தான் அதைப்பற்றி எண்ணிக் கொள்வாள்.

இப்போது அந்த இனிய தவிப்பு இல்லை. முக்கியமான ஒன்றை இழந்துவிட்டது போன்ற உணர்வுதான். அதைக் குற்ற உணர்வு எழச் சில சமயம் உணர்வாள். உடனே மனசை மாற்றிச் செலுத்திக் கொள்வாள். எனினும் ஸ்பரிசம் உணர்த்தியபடி, பாரமாய் மனம் அவளுடன் இருந்துகொண்டேதான் இருந்தது. அதன் குடைச்சல் களிலிருந்து தப்பிப் பித்துப் பிடித்தவள்போல ஏதாவது ஒரு செயலில் ஈடுபட வேண்டியிருந்தது.

அப்பி பெருவட்டனின் ரப்பர் தோட்டம் மகாதேவர் கோயிலில் இருந்து தொடங்கி, மறுபுறம் குருவிக்காடு ஜங்ஷன் வரை விரிந்து கிடந்தது, காடுபோல. வெளியேயிருந்து பார்த்தால் உட்புறம் இருளாய் இருப்பது போலத் தெரியும். எனினும் உட்புறம் நுழைந்தால் கண்ணுக்கு இனிய குளுமையான நிழல்தான். முக்கியமான இடத்தில் இருந்ததனாலோ என்னவோ, தோட்டம் முழுக்க நிறைய காலடிப்பாதைகள். அவை குறுக்கும் நெடுக்குமாய் ரிப்பன் போலக் கிடந்தன.

அதுதான் அறைக்கல். 'குடும்பவீடு' இருந்த இடம் என்று அம்மா சொல்லிக் கேட்டிருந்தாள். அவள் பிறப்பதற்கு முன்பே வீடு இடிக்கப்பட்டு, தோட்டம் காடாகிப் பற்பல கைகளிலாகச் சிதறிப் போய்விட்டது. தேவி கோயிலையும் களத்தையும் அப்பி பெருவட்டன் வாங்கியபோது, அவளுக்குப் பத்து வயது. அப்போது அப்பா குடித்துவிட்டு வந்து, வீட்டு வராண்டாவில் அமர்ந்து, வாயில் வந்தபடி திட்டியதைக் கேட்ட ஞாபகம் இருந்தது அவளுக்கு. அவள் அப்பாவும் பெரியம்மா மகன் கேசவனும், மற்றும் சிலரும் சேர்ந்து ஒரு குழு உருவாக்கி, கோயிலில் நாயர் முக்கியஸ் தர்களைக் கூப்பிட்டு உட்கார வைத்து, அதைத் தடுப்பதற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று திட்டம் போட்டார்கள். அப்பாவுடன் அம்மாவும் கோயிலுக்குப் போனாள் அன்று. அம்மாவைப் பற்றியபடி அவளும் கூடப் போனாள். அம்மாவின் அருகிலேயே நின்று எல்லாவற்றையும் கேட்டாள். அவளுக்குப்

புரிந்ததெல்லாம் அப்பாவும் மற்ற நாலைந்து ஆட்களும் கூச்சல் போட்டு ஆவேசப்படும் போதெல்லாம், புத்தம் வீட்டு தம்பியும் சஸிதரன் மாமாவும் அலட்சியமாகவும் கிண்டலாகவும் ஏதோ சொல்லி மட்டம் தட்டுகிறார்கள் என்பதுதான். கடைசியில் அப்பா துண்டை உதறித் தோளில் போட்டபடி, எழுந்து, "டேய் கேசு, வாடா! இவனெல்லாம் யார் உப்பைத் தின்றுவிட்டுப் பேசுகிறார்கள் என்று தெரியும்" என்றார். "யாருடா உப்ப தின்றது? நீதான் உப்பைத் தின்றவன், நீதான் தண்ணீர் குடிக்க வேண்டும்" என்று தம்பி மாமா சொன்னார். "அவன் தந்த பிச்சக்காசு என்ன பேச்சு பேச வைக்கிறதடா சஸி" என்று அப்பா சொன்னார். "சீ போடா நாயே" என்றபடி சஸிதரன் மாமா பாய்ந்து எழுந்தார். ஆட்கள் கலைந்து எல்லாரையும் பிடித்துக்கொண்டார்கள். சிறிது நேரம் குழப்பமான சமாதானப் பேச்சுகளும், பரஸ்பர சவால்களும் நடந்தன. பிறகு அப்பா புறப்பட்டுப் போனார். தொடர்ந்து, மேல் துண்டால் கண்ணீரைத் துடைத்தபடி அம்மாவும் நடந்தாள். "என்ன அம்மா, என்ன அம்மா?" என அவள் நச்சரித்தாள். "சும்மா வாடி. கொன்னு விடுவேன்" என்றாள் அம்மா. அவள் மேலும் சிணுங்கியபடி அழ, அம்மா அவளை நடுத்தெருவிலேயே தரதரவென்று இழுத்து அடித்தாள். தரையில் கிடந்த மூங்கில் சுள்ளியால் அடித்த அடி பழுத்து ரணமாகித் தழும்பாய் ரொம்ப நாள் இருந்தது.

தங்கம் ரப்பர் காட்டை ஊடுருவிப் போன பாதையில் நடந்தாள். அவளுக்குள் ஏதோ ஒருவிதமான அதிருப்தியும் ஊமைக் கோபமும் இருந்தன. பாவாடையின் நுனியில் தொட்டாற் சுருங்கி முள் சிக்கியிருந்தது. அதை இழுத்தபோது "சனியன்" என்று உரக்க வைதாள். பிறகு யாரும் பார்க்கிறார்களா என்று நாற்புறமும் திரும்பிப் பார்த்துக்கொண்டாள். கண்ணுக்கெட்டிய தூரம் வரை அப்பகுதியிலெங்கும் மனிதத் தலை ஏதும் தென்படவில்லை.

ஒற்றையடிப் பாதை இடிபாடுகளைச் சென்றடைந்தது. அதன் ஊடே நெளிந்து சென்று, குளத்தை அடைந்தது. தட்டையான, ஒருபுறம் வழவழப்பான கற்கள் இளகிச் சிறியவை போலக் கிடந்தன. அவற்றில் ரப்பர் மரங்களின் வேர்கள் கவ்வியிருந்தன. சருகு மண்டிய தரை முழுக்கச் சரிந்து கிடந்த கற்களின் சதுர முனைகள் தெரிந்தன. கட்டிடங்களின் அஸ்திவாரங்கள் மண்ணும் சுண்ணாம்பும் கற்களுமாகச் சிதறி, புற்களும் தொட்டாற் சுருங்கியும் அடர்ந்து கிடந்தன. பிரம்மாண்டமான கல்லறைகள் போல அரை இருளில் பாதி தெரிந்தபடி அவை உறைந்திருந்தன. குளத்தின் கல்லாலான சுற்றுச் சுவரும் இடிந்து, சரிந்து, பாதி நீரிலும் மீதி கரையிலுமாய் விழுந்து கிடந்தது. இடுக்குகளில் அடர்த்தியாய்ப்

புற்கள். படிகள் பாசிபடிந்து மரகதக் கட்டிகள் போலத் தண்ணீர் கரும் பச்சை நிறமாக இருந்தது. வெயில் படாததனாலும், சருகுகள் தொடர்ந்து விழுந்து மக்கிக் கொண்டிருப்பதனாலும், ஒருவிதமான அழுகிய வாடை உண்டு, அந்த நீருக்கு. கையால் நீரை அள்ளிப் பார்த்தால் பசுமையான துகள்களால் அது நிறைந்திருப்பது தெரியும். அங்கு வந்து குளிப்பவர்கள் குறைவுதான். தங்கத்துக்கு அந்த நீரின் மணமும் நிறமும், அப்பகுதியின் அமைதியும் குளிர்ச்சியும் பிடிக்கும். பிற்பகலில் தோட்டத்தில் எங்கும் யாரும் காணப்பட மாட்டார்கள். அங்கு வந்து படிகளின் ஈரப்பாசி மேல் அமர்ந்து பகல் கனவு காணுதல் அவளுக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. ஒரு நீண்ட பெருமூச்சுடன் சட்டென்று விழித்துக்கொண்ட நேரம் எத்தனை என்று அறியக் கண்களால் துழாவுவதும் பரபரப்பதும் அவளுக்குள் எழுப்பும் ரகசியக் கிளுகிளுப்பே அங்கு வரத் தொடங்கிய நாள் முதல் அவளைக் கவர்ந்துகொண்டிருந்தது.

தங்கம் குளத்துப் படிகளில் அமர்ந்தாள். அந்த இடிபாடுகளில் அவள் அமிழ்ந்து போய்விட்டது போலிருந்தது. ஒருவித ஒளிந் திருக்கும் சுகத்தை அது அவளுக்குத் தந்தது. காலை நீருக்குள் விட்டாள். மெதுவாய்த் துழாவினாள். மீன்கள் கூட்டம் கூட்டமாய் வந்து காலை உரசிச் சென்றன. ஒவ்வொரு உரசலிலும் கூச்சமும் கிளுகிளுப்பும் தாளாமல் காலைத் தூக்கியபடி கிளுகிளுத்துச் சிரித்தாள். பிறகு மீண்டும் நீரில் காலை விட்டாள். பெரிய மீன்கள் சிலவற்றின் கண்களைக்கூடப் பார்க்க முடிந்தது. சிறிய சிப்பித் துணுக்குகள் போலச் சிவப்பு நிறச் செவிள்கள் கொண்ட சிறிய மீன்கள். பச்சை அடர்த்தியின் உள்ளிருந்து, அவை சிறிய வெண்ணிற அசைவாய்த் தென்பட்டு, பிறகு தெளிவாக உருக் கொண்டு, மேலே வர வர நிறம் மாறுபட்டு, முற்றிலும் எதிர்பாராத வடிவமும் நிறமும் பெறும். பெரிய கண்களை விழித்தபடி, செவிள்கள் துழாவ, சலனமற்று நிற்கும். பின்பு சட்டென்று அமிழ்ந்து மறையும். மீன்களின் கண்களைப் பார்த்தபடி அவை என்ன நினைத்துக்கொள்கின்றன என்று யோசிப்பாள். அடியாழத்தில் அவற்றின் உலகம் எப்படி இருக்கும்? அவை தன்னைப் பார்க்கின்றனவா? புரிந்துகொள்கின்றனவா? அவள் கண்கள் அந்த நீருக்குள் தன்னையறியாமலேயே எதையோ தேடும். கதை என்று அறிந்திருந்தும் எந்த நிஜத்தை விடவும் அவளுள் ஆழப் பதிந்திருந்தது அது. ஒரு தங்கமீன், அது ஒரு இளவரசியாய் இருந்தது. அறைக்கல் வீடு அதன் உன்னத நிலையில் இருந்தபோது, அங்கு பிறந்து வளர்ந்த இளவரசி. அவள் அந்தப்புரத்தை விட்டு வெளி வந்ததே இல்லை, ஆனால் அவள் அழகு ஊர் முழுக்கப் பரவியிருந்தது. மகாராஜாவே அவளைப் பெண் கேட்டு வரக்கூடும்

என்று பேச்சு அடிபட்டது. போட்டிக்காரக் குடும்பத்தினர் யாரோ ஒருவனை ஏவிவிட்டார்கள். அன்று 'புலைப்பேடி' என்ற பழக்கம் பிரபலமாக இருந்தது. தம்புராட்டிகளைக் கீழ்ச்சாதிக்காரன் தொடக்கூட வேண்டாம், ஒரு கல்லை எடுத்து வீசி எறிந்துவிட்டால் கூடப் போதும்; அது பட்டால்கூடத் தீண்டி அசுத்தப்படுத்தியதற்குச் சமம்தான். அவளைப் பிடித்து அவனுக்கே தந்துவிடுவார்கள். அவளுக்கு அந்திமக்கிரியைகள் செய்து அவள் இறந்துவிட்டதாய் அறிவித்துவிடுவார்கள். புலையன் எப்படியோ அறைக்கல் வீட்டுக்குள் புகுந்து அந்தப்புரத்துக்கும் குளிப்பறைக்கும் இடைப் பட்ட தோட்டத்தில் மரக்கிளை மீது ஏறி அமர்ந்துகொண்டான். இளவரசி குளிக்கப் போகும்போது, கல்லை வீசிவிட்டுத் "தொட்டு விட்டேன், தொட்டுவிட்டேன்" என்று கூவ ஆரம்பித்தான். எல்லோரும் ஓடி வந்துவிட்டனர். இளவரசி பின்பு கொஞ்சமும் தாமதிக்கவில்லை. நேராக ஓடிப்போய் குளத்தில் குதித்துவிட்டாள். பிறகு அவளை யாருமே காணவில்லை. அவள் தங்கமீனாக மாறிக் குளத்தில் வாழ்கிறாள் என்பார்கள். அவள் குடும்பத்துப் பெண்களின் கற்பைக் காக்கும் காவல் தெய்வம் என்பாள் அம்மா. வயசுப் பெண்கள் பலர் அதைக் குளத்து நீரின் ஆழத்தில் பார்த் திருக்கிறார்கள். நீரில் மூழ்கித் திளைக்கும்போது சற்று மினுங்கலான சருமத்துடன் ஒரு மீனைப் பார்த்தால்கூடத் தங்கத்தின் மனம் சிலிர்க்கும். மார்பு துடிப்பை மறக்கும். பதற்றத்தில் ஒருவாய் நீரை விழுங்கிவிடுவாள். திணறியபடி மேலே வந்து படிகளில் அமர்வாள். என்ன பயம் எனச் சிரிப்பு வரும். ஆனால் உள்ளூர நடுக்கம் துடித்தபடியேதான் இருக்கும்.

தங்கம் நீருள் இறங்கினாள். பச்சைத் தழை மணத்துடன் நீர் அவளது நாசியில் புகுந்தது. ஏனோ நீந்தித் திளைக்க மனம் வரவில்லை. சோர்வாக இருந்தது. சோப் தேய்க்கப் படிகளை அடைந்தாள். வளையல் குலுங்கும் ஒலி அந்த மவுனத்தில் உரக்கக் கேட்டது. பயம் எழுப்புவதாய் இருந்தது அது. ஈரப்பாவாடை உடம்பில் ஒட்டியது எரிச்சலூட்டியது. தோளிலும் முகத்திலும் படிந்த கூந்தலை அலுப்புடன் ஒதுக்கினாள். உடலைத் தேய்த்துக் கொண்டிருந்தபோது, பளீரென்று அந்த எண்ணம் அவள் மனதை அறைந்தது.

அந்த அடி தாங்க முடியாமல் மார்பை அழுத்தியபடி படி களில் அமர்ந்துவிட்டாள். உதடுகளும் மூக்கும் துடிக்கத் தொடங்கின. மார்பு உச்சக்கட்ட வேகத்தில் அறைந்தது. இல்லை அப்படி இருக்காது என மறுத்துக் கொண்டபடி மனசால் கணக் கிட்டாள். கணக்குகளை மீண்டும் மீண்டும் போட்டுப் பார்த்தாள்.

எங்கோ ஒரு தவறு இருப்பதாய் எதிர்பார்ப்பவள் போல மீண்டும் மீண்டும் தவிப்புடன் தேடினாள். அந்தச் செய்தி அசைக்க முடியாத தெளிவுடன் அவள்மீது கவிந்துகொண்டது. அப்படியே தொடைகள் மீது முகம் புதைத்துக் குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தாள்.

அழுது ஓய்ந்தபோது மனம் சூனியமாக இருந்தது. அந்தச் செய்தி இன்னமும் விரிவும் பயங்கரமும் கொண்டதாய் மனதைத் தாக்கியது. ஆனால் அவளது பதற்றம் குறைந்திருந்தது. எந்த விதத்திலாவது இதிலிருந்தெல்லாம் தப்பிவிட வேண்டும் என்ற தவிப்பும் வேகமும் அவள் மனதைப் பரபரக்க வைத்தது. திரும்பத் திரும்ப யோசித்த பிறகும் அவளால் எந்தவிதத் தப்பும் வழியும் கண்டுபிடிக்க இயலவில்லை.

தலையைத் துவட்டி விட்டுத் திரும்பினாள். தேவி கோயில் வழியாக நடக்க அஞ்சினாள். பயமுறுத்தப்பட்டவள் போல ஈர உடையை மாற்றக்கூடச் சாவகாசமில்லாமல், பலமாக மூச்சுவிட்ட படி ஓடினாள். அப்போது அவளுக்குள் லிவியைப் பற்றிய சிந்தனை ஏதும் இருக்கவில்லை. விரும்பத்தகாத, அருவருப்பான ஏதோ ஒன்று தனக்குள் புகுந்துவிட்டிருக்கிறது என்றும், எப்படியாவது அதை இல்லாமல் ஆக்கிவிட வேண்டும் என்றும் மனம் தவித்தது. அதே சமயம், ஏதோ ஒரு அமானுட சக்தி முன்வந்து எல்லாவற்றையும் வெறும் கனவுபோல ஆக்கிவிடும் என்றும் அவளுக்குள் ஒரு மூலையில் நம்பிக்கை இருந்தது. ஆனால் பிரார்த்தனை செய்து கொள்ளத் தோன்றவில்லை அப்போது.

## ... 11 ...

ஐம்பது ஆட்களுடன், பணி ஆயுதங்களுடன், ஒரு மதியம் பொன்னுமணி கொராட்டி மலைக்கு வந்து சேர்ந்தபோது மலையில் மழை ஓய்ந்த முன் வசந்தம். சிவப்பு கலந்த தவிட்டு நிறப் பூக்குலைகள் ஏந்திய, தழைத்த புற்கள் மார்பளவு உயரத்தில் அடர்ந்திருந்தன. தூரத்தில் ஓரிரு மரங்களாகத் தெரிந்து, விலக விலக அடர்ந்து, பசிய சுவராக எழுந்து, திசையை மறைத்த, அடர்ந்த காடுகள். அதற்கு அப்பால் அடிவானில் தெரிந்த பச்சைநிறக் குன்றுகள். வானத்திரையில் இளநீள மையால் எழுதப்பட்டவை போன்ற மலைத்தொடர்கள். வானிலும் பூமியிலும் காற்றிலும் எல்லாம் ஈரம். இதமான குளிராக உடலைத் தழுவும் ஈரம். இலைகள் கொட்டி இலைகள்மீது விழும் இரைச்சல். தொலைவில் பன்றிமலையின் உச்சியில் பச்சைக் கம்பிளிக் குவியல் மீது குறுகி அமர்ந்த யானை போல மக்ருணிப் பாறை. அதன் உருண்ட கரிய வழவழப்பில் வெள்ளிப் பட்டைகள் போல மழை நீர் வழிந்து, வெயிலில் பளபளத்தது. ஒளிபட்டுக் கூசிய கரிய மேகங்கள் பிரகாசமான பின் நுனிகளுடன் மலைக்குப் பின்னால் சரிந்து விழுந்துகொண்டிருந்தன. பலவிதமான ஒலிகளின் கலவையாகப் பறவைக் குரல்கள். புற்பரப்பில் நூற்றுக்கணக்கான, சாம்பல் நிற அலகும் தவிட்டுநிற உடலும் கொண்ட, சிறு பறவைகள். அவை தயங்கியபடி பறந்தும், சர்ர் என்று புதரில் ஊடுருவியும், இன்னொரு இடத்தில் அம்புபோல வெளிப்பட்டும், காற்றில் சுழலும் சருகு போல மிதந்தும், ஈரம் மின்னித்தெறிக்க இறகு குடைந்தும், அப்பகுதி முழுக்க நிறைந்திருந்தன. புல் அடர்த்தியிலிருந்து நீராவி வெண் புகைபோல எழுந்து, காற்றில் பிரிந்து கலைந்தது. பெரிய வண்ண இலைகள் பறந்தலைவது போலப் பட்டாம்பூச்சிகள். காற்றில் புற்கள் ஜலப்பரப்பு போல அலைமோதின. அங்கு வந்து நின்ற சில நிமிடங்களுக்குள்ளாகவே, கால்கள் முழுக்க பச்சையான தலையும், இளம் பச்சை நிற உடலும் கொண்ட சிறு புழுக்கள் மொய்த்துக் கொண்டன. அவை கடிக்கவில்லை. குழந்தைகள் போலப் பெரிய கண்களுடன் பற்றியபடி அமர்ந்துகொண்டன. கூர்ந்து பார்த்தபோது

புல் நுனியிலிருந்து புல் நுனிக்கு அவை ஓயாமல் உடலை வளைத்து விரலாக சுண்டித் தெறித்தபடியே பயணம் செய்துகொண்டிருப்பது தெரிந்தது. பிரகாசமான வெயில். வெப்பமே இல்லாத வெயில்.

பொன்னுமணி கால்களை விரித்து, கைகளை இடையில் ஊன்றித் தலையைச் சற்றுத் தூக்கி, மலை எடுப்புகளை, பச்சை போர்த்திய திசைகளைப் பார்த்தபடி நின்றான். கரையற்ற உத்வேகம் ஒன்று மனசுக்குள் பொங்கி நிறைந்தது. பூமியின் அழகையோ, தட்பவெப்ப நிலையின் இதத்தையோ அவன் பிரக்ஞை உணரவில்லை. அல்லது அந்த மண்ணின் விவசாய சாத்தியக்கூறுகள் கூட அவன் மனசை அப்போது தொடவில்லை. மனம் மறைந்திருந்தது. மார்புக்கூட்டை உள்ளிருந்து முட்டி விம்மும் தினவு. கால்களிலும் தோள்களிலும் வலிமை தெறிப்பதுபோல உணர்ந்தான். பூதாகரமான வடிவம் பெற்றுவிட்டவன் போல எண்ணினான். கைகளை வாயுவில் வீசிப் பாய்ந்து ஓடித் திமிர்க்க வேண்டும் போலிருந்தது.

பின்னால் நின்றிருந்த முத்தன் தயங்கி, "பெருவட்டரே" என்றான். "ம்ம்" என்றான் பொன்னுமணி. "என்ன செல்லுது? திரிச்சுப் பொறதுக்கு இனியிப்பம் சவ்வரியப்படாது; இஞ்ச கடக்கியதுக்கும் பளுதில்ல..." பொன்னுமணி திடமான குரலில், "ஏறுமாடம் கெட்டினா போரும். வாக்காட்டு வல்ல மரமும் இருக்குதா எண்ணு பாரு" என்றான்.

சிலமணி நேரத்தில் ஏழெட்டு ஏறுமாடங்கள் பெரிய மரங்கள் மீது கட்டப்பட்டன. காட்டு மரக்கொம்புகளும், சனை மர ஓலைகளும், மரப்பட்டை நாரும் சேர்ந்து உருவாக்கப்பட்ட படுக்கையில் அன்றிரவு தூங்கினார்கள். மறுநாள் முதல் முதலாக விவசாயம் தொடங்கப்பட வேண்டிய இடம் தீர்மானிக்கப்பட்டது. நான்கு சிறு குன்றுகளுக்கு நடுவிலான சிறிய பள்ளத்தாக்குப் பகுதி அது. முழுக்கப் புற்களால் மூடப்பட்டு, பெரிய வயல்வெளி போலிருந்தது.

அவர்கள் அங்கேயே தங்கினார்கள். வாழைக்காய்களையும் கிழங்குகளையும் காட்டிலிருந்து சேகரித்துச் சுட்டுத் தின்றபடியும், அவ்வப்போது முயல்களையும் பறவைகளையும் வேட்டையாடிச் சுட்டுத் தின்றபடியும் வாழ்ந்தார்கள். அவர்கள் அனைவருமே காட்டுக்குப் பழகிப் போனவர்கள். காலை முதல் இரவு விழும் நேரம் வரை உழைத்தார்கள். உழைப்பின் பலனைவிட, இயற்கையின் சவால் எழுப்பும் உற்சாகமே அவர்களை இயக்கியது.

பள்ளத்தாக்கைச் சுற்றி, மூங்கில் கழிகளை மரத்தோடு மரம் சேர்த்துக் கட்டி, வேலி கட்டப்பட்டது. பிற்பாடு காடுகளுக்குள்

போய்ச் சருகும் விறகும் சேகரித்துப் புல்வெளியில் கொட்டிக் கொண்டே இருந்தார்கள். பச்சைக் கிளைகளை முறித்துப் போட்டு உலரச் செய்தனர். சருகால் பள்ளத்தாக்குகளை மூட இருவாரம் தேவைப்பட்டது.

கொண்டு வந்திருந்த வெடிமருந்து சருகில் தூவப்பட்டது. பொன்னுமணி நெருப்பைச் சிறு கழியில் பற்றச் செய்து வீசி எறிந்தான். பற்றிக்கொண்டது. எல்லாரும் நெருப்பு அணுகாத பாதை நோக்கி ஓடி, ஏறிக்கொண்டார்கள். குபுகுபுவென்று புகை எழ, நெருப்பு பரவியது. முதலில் சுவாலைகளே தென்படவில்லை. கரிய புகை மட்டும் மேகம் போல எழுந்துகொண்டிருந்தது. சடசடவெனப் பசும்புல் கருகும் ஒலி அப்பகுதியை நிறைத்திருந்தது. மெல்ல மெல்லப் புகை குறைந்தது. ஒளி அதிகரித்தது. சுடர்கள் அசைவதும், நிறமற்ற புகை வானோக்கிப் பரவி எழ, நெருப்பு வெகு வேகமாய் பரவுவதும், தெரிந்தது. வெப்பம் வெகுதூரத்துக்குத் தகித்தது. தூரத்து மரங்களின் இலைகள் கூடப் பட்பட்டென்று சுருண்டுகொண்டன. தளிர்கள் பொசுங்கி பச்சை மணம் எழுந்தது. தேனீக்கள் கலைந்து மழைபோல ஒலியெழுப்பின. பறவைகள் பறந்த கன்றன. மர இலைகளிலிருந்து பிடிப்பு விட்டுப் புழுக்கள் உதிர்ந்தன. சுடருக்கு மேலே மறுபுறம் தெரிந்த காடுகள் ஜலபிம்பம் போல நெளிந்தன. தீ ‘ட’ வடிவில் பரவிச் சென்றது. வெகுதூரத்துக்கு அப்பால், புல்லின் மேலே புகை எழுந்தது. அதுவரை தெரிந்திராத பறவைகள் உள்ளிருந்து குபீரென்று வானில் எழுந்தன. பறவைகளின் ஒலியால் அப்பகுதியே ரகளைத் தோற்றம் பெற்றது. சில பறவைகள் மட்டுமே பறந்து போவதில் ஆர்வம் காட்டின. பெரும்பான்மை இன்னது செய்வதென அறியாமல், தவித்தபடி, வானில் தங்கி நின்றன. பிரியமானவர்களைத் தரையில் விட்டு விட்டவைபோல சிறகடித்தபடி நிலம் நோக்கி வரவே முயன்றன. எளிய பறவைகள் பல அப்படியே பொசுங்கி விழுந்தன. சற்றுப் பெரியவை சேர்ந்து கீழே வந்தும், மேலெழுந்தும் புகைக்குள் அலைபாய்ந்தன. காற்றில் புகை விலகிய கணங்களில் சருகுகள் பறப்பது போல அவற்றின் சிறகசைவுகள் தெரிந்தன. தீ நிதானமாய் சுடர ஆரம்பித்தது. அதன் ஒளி வெண்ணிறமாகவும், புகையற்ற தாகவும் மாறத் தொடங்கியது. பிடிப்பின்றி அந்தரத்தில் நின்றது. சில சமயம் நீலநிறமாக நெருப்புக் குளம் போலத் தழல் அலை மோதியது. அப்பகுதியில் சிக்கிப் பறவைகள் சிறகடிக்க அவகாச மில்லாமலேயே கருகி விழுந்தன. நெருப்பு உண்டு முன்னேறிய பிறகு, எஞ்சிய கரிய நிலப்பரப்பில் கருகிய புல்லின் வேர்கள் நூலாக வெண்புகை விட்டன. அவ்வப்போது எது எதுவோ வெடிக்கும் ஒலி கேட்டது. தீப்பிழம்பு விலகி விலகிச் சென்றது. அன்றிரவு

முழுக்க எரிய நேர்ந்தால் மட்டுமே புல்வெளி கட்டாந்தரை ஆகும் என்று பொன்னுமணி உணர்ந்தான். நெருப்பைச் சுற்றிய புற்பரப்பில் மிருகங்கள் வகுந்து ஓடிய வரிகளுடன் புற்கள் சரிந்து கிடந்தன. இரவு தாழ்ந்து வந்தது. காடுகள் இருள் கப்பி நிழலாக மாறின. வானில் ஒளி மிச்சமிருந்தது. தரையில் தழலின் ஒளி சுடர்ந்தபடி முன்னேறியபடியே இருந்தது. தொலைவில் தெரிந்த குன்றுகளை நோக்கி ஒளி செல்வது தெரிந்தது. வானின் சிவப்புக் குழம்பல், கீழே நீரில் பிரதிபலித்து அலைபாய்வது போலிருந்தது. இரவின் இருண்ட படுதாவில் ஓரம் தீப்பிடித்தது போலத் தழல்கள் நடனமிட்டன பின்பு. எங்கும் கருகல் மணம் வியாபித்தது. அவர்கள் அனைவரையும் ஒருவிதமான களிவெறிதான் ஆட்கொண்டிருந்தது. மாமன் மச்சான் முறைவைத்துக் கெட்டவார்த்தை சொல்லிச் சிரித்தார்கள். பொன்னுமணி அவர்களுடன் சேரவில்லை. அவர்கள் தூங்கிவிட்ட பிறகும், விழித்தபடி தொலைவில் சடசடத்துக் கூத்தாடும் பிழம்புகளைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான். கருமண்ணின் வெந்த மணம் நரம்புகளை நிறைத்திருந்தது. ஏதோ உத்வேகம் மனதைப் பிசைந்துகொண்டிருந்தது.

## ... 12 ...

கண்டன்காணி தன் கொள்ளுப்பேரனின் தோள்பற்றி, மெல்ல நடந்தார். சாலையில் பஸ் இறங்கிக் கேட்டை அடைந்த உடனே வீடு என்பதுதான் அவர் பிரக்ஞையில் இருந்தது. பலமுறை அவர் அங்கு வந்ததுண்டு. ஆனால் அதெல்லாம் முன்பு, கணுக்கால் மூட்டிலும் கெண்டைக்கால் தசைகளிலும் சக்தி கொப்பளித்துக் கொண்டிருந்தபோது. இப்போது அவர் கண்ணெதிரே கிட்டத்தட்ட ஒரு முழு நூற்றாண்டு கடந்து சென்றுவிட்டது. அவர் சிறு பையன் களாகப் பார்த்தவர்களின் பையன்கள் பஞ்சடைந்த தலையும், கைத்தடியும், வற்றிப்போன உடல்களுமாய் திண்ணையில் அமர்ந் திருந்தார்கள். அவர் காட்டு யானைகளைக் கண்டு பயந்தோடிய கொடும் காடுகள் இப்போது சந்தைகளாலும் சினிமா தியேட்டர் களாலும் கலகலக்கின்றன. யானை ஏறாத மலைகளில்கூட மின்விளக்கும் பேருந்தும் வந்துவிட்டது.

கண்டன்காணி பேரன் வீட்டை விட்டுக் கிளம்பியே இருபது வருடங்களுக்கு மேல் இருக்கும். காலத்தின் அடுக்குகள் குலைந்து விட்டமையினால் அவர் பேச்சில் விபரீதங்கள் நிகழ்ந்த வண்ணம் இருந்தன. பொதுவாக அவர் பேச்சும் குறைந்து வந்தது. கொள்ளுப் பேரன்களையும் அவர்கள் குழந்தைகளையும் ஸ்பரிசம் மூலமாகவே அடையாளம் கண்டு வந்தார். குடும்பத்து உறுப்பினர்கள் ஊர்கள் தோறும் பரவியிருந்தனர். அவர்களில் பாதிப் பேரை அவருக்குத் தெரியவே தெரியாது. குரல்களும் காட்சிகளும் மக்கிப்போன பிறகும், அவர் நாசியும் ஸ்பரிசமும் அசாதாரணமான கூர்மையுடன் இருந்தன. பொன்னுப் பெருவட்டன் படுத்த படுக்கை என்ற செய்தி நாகர்கோவிலில் டாக்டராக இருந்த கொள்ளுப்பேரன் வழியாகத் தான் அவரை அடைந்தது. உடனே போய்ப் பார்க்க வேண்டும் என்று துடித்தார். விருப்பங்களும் பற்றுகளும் அற்று, ஒரு விருட்சம் போல ஆகியிருந்த அவரில் உருவான இந்தப் பற்று கொள்ளுப் பேரனை வியப்புறச் செய்தது. அவன் பாட்டாவைக் கூட்டிக் கொண்டு வந்தான். டாக்ஸி பிடிக்க அவர் சம்மதிக்கவே இல்லை. நடக்க முடியும் என்று உறுதியாகக் கூறிவிட்டார். ஒரு கும்பா

நெல்லை அனாயசமாய் கேட்பவனுக்குக் கொடுக்கத் தயங்காதவர். பத்துப் பைசா நாணயத்தை உயிர் போனாலும் கொடுக்க மாட்டார். கண்டன்காணி நடக்க நிரம்பச் சிரமப்பட்டார். ஒவ்வொரு அடியும் பாரமாகக் கனத்தது. பெரும் மலைமீது ஏறும் சிரமம். தூரம் முடிவற்றுச் சென்றுகொண்டிருந்ததாகப் பட்டது. அவர் உடலில் கூனலோ பிசகோ இருக்கவில்லை. தலை பஞ்சுப் பொதி போல இருந்தது. முன்னெற்றியில் தலை துருத்தியபடி கற்றை மயிர். அகலமான மூக்கும், பெரிய உதடுகளும், மேலுதட்டின் மீது ஒரு சில நரை மயிர்களும், சிறிய கண்களும், கரிய உடலும், ஒரு நீக்ரோவின் சாடையில் இருந்தன. தோல் கன்னங்கரேலென நுணுக்கமான சுருக்கங்கள் பரவி இலேசான மினுமினுப்புடன், உலர்ந்த வாழைப்பட்டை போல இருந்தது. கண் கீழேயும், மோவாயின் அடியிலும், தோல் தொய்ந்து தொங்கியது. அவர் முகம் அசையும்போது பல கோணங்களில் அவை இழுபட்டன. கழுத்தில் இரு வரம்புகளாகச் சதை ஊசலாடியது. மார்பிலும் வயிற்றிலும் எலும்புகள் இறுக்கமாய் புடைத்து இருந்தன. அவர் நடக்கையில் உடம்பு முழுக்க எலும்புகள் துருத்தி சம்பந்தமற்ற அசைவுகள் ஏற்பட்டன. நரம்புகள் புதைத்துத் தசைநார்கள் இழுபட்டன. கிரீச்சொலிகளும் சொடக்குகளும் கேட்டன. பேரனின் தோள் அளவு உயரம்தான் அவருக்கு. அவர் கையின் பழுதடைந்த, கூரிய நகங்கள் அவன் சட்டையை இறுகப் பற்றியிருந்தன.

களமுற்றத்துக்கு வந்தபோது, தன் கையைக் கண்மீது வைத்து, நிமிர்ந்து கட்டிடத்தைப் பார்த்தார். அவரது உள்ளடங்கிய பொக்கை உதடுகள் எதையோ மெல்வது போல அசைந்தன. கழுத்தில் நரம்புகள் பிணைந்து நெளிந்தன. கண்களிலிருந்து கண்ணீர் பொங்கி வந்து, கன்னச் சுருக்கங்களில் தயங்கிப் பலவிதமாய்ப் பரவி ஈரமானது. மூக்கை உறிஞ்சும் ஒலி கேட்டுப் பேரன் திரும்பிப் பார்த்தான். அவர் தோளை மெதுவாய்த் தொட்டு, “என்ன தாத்தா, சும்மா...?” என்று செல்லமாய்க் கண்டிக்கும் குரலில் கேட்டான். அவர் ஒன்றுமில்லை என்ற பாவனையில் கையை அசைத்தார். அவர் தலை, பக்கவாட்டில் சற்றுச் சரிந்து, மெல்ல நடுங்கிக் கொண்டிருந்தது.

படிகளில் இறங்க அவர் மிகுந்த சிரமப்பட வேண்டியிருந்தது. முதற்படியிலேயே சட்டென்று அமர்ந்து, ஒவ்வொரு படியாகக் கால்தூக்கி வைத்து அமர்ந்தபடியே இறங்கினார். பேரன் மூக்குக் கண்ணாடியை ஒரு கையால் தள்ளிவிட்டபடி, அவரை எப்படிப் பிடிப்பது என்று தெரியாமல் குழம்பினான். அதற்குள் உள்ளிருந்து விவி வந்து, வராண்டாவின்மீது நின்றான். அவன் உதவிக்கு

வரவேண்டும் என்று எதிர்பார்ப்பது போல பேரன் அவனைப் பார்த்தான். ஆனால் லிவி உணர்ச்சியற்ற முகத்துடன், பேசாமல் நின்றான். கிழவர் உட்கார்ந்தபடியே கடைசிப் படிகளையும் வேகமாக இறங்கினார். பேரன் கைப்பற்றி எழுந்து, தோள்கள் நடுங்க வேட்டியைச் சரிசெய்தார். கைகளை நெற்றிமீது நிழலாக வைத்து, வாசலில் நின்ற லிவியை உற்றுப் பார்த்தார். பிறகு உணர்ச்சியால் நெளியும் முகத்துடன் வீட்டை மாறி மாறிப் பார்த்தார்.

உள்ளிருந்து பெருவட்டர் வெளியே வந்தார். அவரைக் கண்டு, ஒரு கணம் குழம்பியவராக நின்றார். சட்டென்று அவர் முகம் விரிந்தது. உடனே ஒருவிதமான அதிருப்தி அவர்மீது கவிந்தது. எனினும் படி இறங்கி வந்து, கிழவரின் கையைப் பற்றியபடி, "ஆகா கண்டங்காணியா...? வரணும்... அப்பன் கெடப்பிலதான். எப்பளும் செல்லுவதுண்டு காண இந்நேற்றுக்காலத்தே கூட செல்லிக்கினும் வரணும்..." என்று வரவேற்றார். பேரனிடமும் புன்னகைத்தபடி "வாங்க" என்றார்.

கிழவர் புன்னகைத்தார். சதைகளின் நெளியலில் அது அழுகை போல இருந்தது. கண்ணீர் தாடை வரை வந்து, நுனியில் முத்துப்போல தொங்கி ஆடியது. வெற்று மார்பில் சொட்டியது.

"அப்பன் உள்ள கெடக்கினும். லேய் லிவி, காணிய கூட்டிக்கிட்டு செண்ணு காட்டுபில..." என்றார்.

லிவி அதிருப்தி தெரியும் முகத்துடன் வந்தான். பேரனிடம் உணர்ச்சி ஏதுமின்றி, "வாங்க" என்று கூறிவிட்டு முன்னால் நடந்தான். கிழவர் பேரனின் தோளை ஒரு கையால் பற்றி, மறுகையைச் சுவரில் ஊன்றி நடந்தார். அவர் சுவரில் கை ஊன்றியபோது முழங்கை வெடவெடத்தது. அவருடைய பாரம் இப்போது மிக அதிகமாய்ப் பேரனை அழுத்தியது. அவர் ஹாலை விட்டு அறைக்குள் போனதும் பெருவட்டர் வாசலை நோக்கி நடந்தார்.

காணி பெரிய அறையின் உள்ளே நுழைந்தபோது திகைத்தவர் போல நாற்புறமும் பார்த்தார். ஒரு கையால் வாசல் திரையை இறுகப் பற்றியிருந்தார். அவர் கையுடன் சேர்ந்து அதுவும் நடுங்கியது.

லிவி கட்டிலின் அருகே சென்று, கண்மூடிப் படுத்திருந்த தாத்தாவின் தோளில் போர்வைமீது மெதுவாகத் தொட்டான். "தாத்தா" என்றான்.

பெருவட்டரின் கண்கள் அசைந்தன. மெல்ல விரிசலிட்டுத் திறந்தன. அலுப்பும், எரிச்சலும் தெரியும் பார்வை லிவியின் மீது பட்டது. "தாத்தா காணி வந்திருக்காவ" என்றான் லிவி. "ம்ம்" என்றார் புரியாமல். அவர் இமைகள் மீண்டும் சரிந்தன... "தாத்தா மலையில் இருந்து கண்டன் காணி வந்திருக்காவ" என்றான் லிவி, உரக்க.

சட்டென்று முகம் இறுகியபடி கோணலாக, உடம்பு முழுக்க உதறல் ஓட, பெருவட்டர் அதிர்ந்தார். கண்கள் திறந்து, இமைகள் படபடத்தன. முகம் நெளிய, உதடுகள் துடிக்க, "எங்கல?" என்றார்.

காணி அதற்குள் மெல்லக் கால்களை மடக்கி, உடம்பு உதறக் குந்தித் தரையில் அமர்ந்துவிட்டிருந்தார்.

பேரன் பிடித்திருந்த கை மட்டும் அவர் தலைக்கு மேல் தொய்வாய், அவன் பிடியிலிருந்து தொங்குவதுபோல நின்றிருந்தது. அதுவும் உதறிக்கொண்டிருந்தது. மறு கையின் மூட்டை மடித்த காலின் முழங்கால் மூட்டின்மீது வைத்து, உள்ளங்கையை விரித்துத் தன் தலைமீது வைத்து கொரில்லாக் குரங்கு அமர்ந்திருப்பது போலக் காணி அமர்ந்திருந்தார். உரத்த விம்மல்களுடன் கண்ணீர் சொட்டிக்கொண்டிருந்தது.

பெரிய பெருவட்டரின் பார்வை காணியின் மீது நிலைத்தது. முகத்தின் பரபரப்பு ஓய்ந்து இறுக்கம் குடியேறியது. கோபமும் வெறுப்பும் அவர் முகத்தில் பீரிடுவது போலிருந்தது. அம்முக பாவம், இடது கண்கீழ் ஒரு தசை தொய்வாக, அரைவட்டமாகத் தொங்கித் தன்னிச்சையாகத் துடித்தது. காணியின் மீது அவர் பார்வை நிலைத்திருந்தது. காணியின் விம்மல்கள் குறைந்தன. ஆனால் கண்ணீர் மட்டும் கொட்டிக்கொண்டே இருந்தது. பெருவட்டர் கண்களில் ஈரமில்லை. ஓரிரு பெருமூச்சுகள் மட்டும், விரிந்த மார்பு விம்மித் தணிய வெளியேறின. மார்பின்மீது வைக்கப் பட்டிருந்த முரடான கையின் பெரிய விரல்கள் நடுநடுங்கிக் கொண்டிருந்தன. சட்டென்று பார்வையைத் திருப்பி, ஜன்னலுக்கு வெளியே மதிய ஒளியில் மின்னிய மர இலைகளைப் பார்த்தார். உதடுகளை இறுக்கியபடி, பார்த்தபடியே இருந்தார். இலைகளின் அசைவில் அவர் முகத்திலும் ஒளி நடனமிட்டது. லிவி வெறியேறும் ஒலி அமைதியில் ஒலித்தது. பெருவட்டர் திரும்பிப் பார்த்தார். அவன் போவதை மூளையில் வாங்காமல் உற்றுப் பார்த்தபடி இருந்தார்.

பெருமூச்சுடன் மீண்டும் காணியின் பக்கம் திரும்பியபோது, அவர் முகம் அமைதியடைந்துவிட்டிருந்தது. "இதாருல?" என்றார்.

“இது சோசப்புக்க மொவன்” என்றார் காணி. அவர் குரல் ஒரு பறவையின் குரல் போலிருந்தது. முகத்தைப் புறங்கையால் துடைத்தார். பேரன் கைக்குட்டையால் அவர் முகத்தையும் நெற்றியையும் துடைத்தான். அவர் குழந்தைபோல முகத்தைச் சிலுப்பினார்.

பெருவட்டர், “ம்ம்” என்று முனகினார். அவனையே பார்த்த படி தலையசைத்தார். “என்ன படிக்குதான்” என்றார்.

“படிக்கேல்ல, நாவரு கோவில்ல லாக்கிட்டராட்டு இருக்கு தான்” என்றார் காணி. “பெண்ணு கெட்டியாச்சுதா?” என்றார் பெருவட்டர். “ஓம் – ஒரு பய இருக்கான்” என்று காணி சொன்னார். பெருவட்டர் சிரித்தார். ஒரு கண் சுருங்க ஒரு குரூரச் சிரிப்பு போலத் தோன்றியது. அவர் “இவனுக்கு பேரு என்னண்ணு சொன்னே?” என்றார். கண்டன்காணி, “இவனுக்க பேரு, லாரன்சு, இவனுக்க பெயலுக்க பேரு... பெயலுக்க பேரு... ம்ம்... பெயலுக்க பேரு ஓர்மயில்லே” என்று பொக்கை வாய் காட்டிச் சிரித்தார். பேரனிடம் திரும்பி, செல்லுபில” என்றார். பேரன் சங்கடமாகச் சிரித்தபடி, “டேவிட் பென் எபநேசர்” என்றான். பெருவட்டர் தலையசைத்தார். பிறகு, “எப்பளு போணும் ஒனக்கு?” என்றார். பேரன் தயங்கி, “அதிப்பம்... ராத்திரிக்கு மின்ன பெய்யிட்டா...” என்று இழுத்தான். “செரி... இவன இஞ்ச நிறுத்த ஒக்காது. இஞ்ச கெடந்தா ஒறங்க மாட்டான், இல்லியாபில கண்டா?” என்றார் பெருவட்டர். கண்டன்காணி சிரித்தார்.

பெருவட்டத்தி உள்ளே வந்தாள். கண்டன்காணி அவளைத் திரும்பிப் பார்த்து புன்னகை பூத்தார். அப்போது அவள் யார் என்பதெல்லாம் அவருக்குத் தெரிந்திருக்கவில்லை. அவர் வாய் கரிய காய் ஒன்று பிளந்தது போலப் பற்களே இல்லாமல் சுத்தமாக இருந்தது. “காணிக்கு வயசு கொறெ ஆச்சுது எண்ணு தோணுதே” என்றாள் அவள். மாமனார் முன் அவள் சற்று குறுகிப் போவது போலப் பேரனுக்குப் பட்டது. சமத்காரப் பேச்சுத் தெரியாத காணி குழந்தைப் போலக் குலுங்கிச் சிரித்தார்.

“காணிக்கு, என்ன குடிக்கியதுக்கு எடுக்கட்டு?” என்றாள் பெருவட்டத்தி. “தாத்தா மோரு மட்டுந்தான் குடிப்பாவ” என்று பேரன் பதில் கூறினான். காணி ஆவலுடன் பெருவட்டத்தியிடம் கையைச் சிமிட்டா போட்டுக்காட்டி, “இம்பிடு கருப்பட்டியும் கிட்டினா கொள்ளம்” என்றார் குரலில் ஒருவிதக் கெஞ்சலுடன். பெருவட்டத்தி சிரித்தபடி, “அதுக்கென்ன கொண்டு வாறேன்...” என்றாள். பேரனிடம், “நீங்க இஞ்ச வாருங்க. அவிய வயசாளிய

பேசிக்கிட்டு" என்றாள். அவன் சிரித்தபடி, தாத்தாவை ஒருமுறை திரும்பிப் பார்த்தபிறகு, அவளைத் தொடர்ந்தான்.

மருமகள் போவதைப் பார்த்து உறுதிப்படுத்திய பிறகு பெருவட்டர் கடைவாயில் இலேசான சிரிப்புடன், "கருப்பட்டி தீற்றிக்கு இப்பளும் கொறவொண்ணும் இல்ல இல்லியாபில...?" என்றார். காணி குதூகலமாய் முகம் விரியச் சிரித்தபடி, வெட்கத் துடன், "கொறெசெ திம்பேன்" என்றார். "ஒனக்கு இருநூறு வயசுபில, பட்டிக்களுவேறிக்க மோனே. அதுக்க மின்ன காலன் வந்து விளிச்சாலும் போவமாட்டே" என்றார் பெருவட்டர். காணி கிச்சுக்கிச்சு மூட்டப்பட்டவர் போல உடல் நெளிய சிரித்தார். பெருவட்டரின் முகமும் ஒரு கண்ணும் புன்னகையில் கோணி யிருந்தன.

"எனக்க காலம் அடுத்துப் போச்சுபில கண்டா" என்றார் பெருவட்டர். காணியின் முகம் மாறுபட்டது. அவர் சுருதி இறங்கிய குரலில், "அப்பிடியொண்ணும் செல்லப்பிடாது" என்று சொன்னார். ஆனால் அதற்கு மேல் அச்சமயம் கூறவேண்டிய எந்தச் சொற்றொடரும் அவர் வாயில் வரவில்லை.

"ஏம்பில, காலன் வந்து விளிச்சும்பம் வரமாட்டேன் எண்ணு சொல்ல ஒக்குமா? கரஞ்சாலும் விளிச்சாலும் அவன் விடுவானா?" காணியின் கண்களில் மீண்டும் நீர் ததும்ப ஆரம்பித்தது. பெரு வட்டர் அதைக் கண்டார். பேச்சை மாற்ற, "ஒனக்க பிள்ளியளும் குட்டியளுமொக்க சொகமாட்டு இருக்கனுமாவில?" என்றார். காணி வெட்கியவர் போல, "பிள்ளிய ஆரும் இப்பம் இல்ல. கட்சிப்பய அம்புரோஸ் செத்து மூணு வரியம் ஆவுது. மருமவமாரில் இப்பம் பச்சயம்ம இருக்கா. பேச்சிப் பாறையில அவளுக்க பிள்ளியளுக்க ஒப்பரம் தாமஸம். பாத்து ஒருபாடு வரியமாவுது. பேரப்பிள்ளியளும் ஒக்கெ நல்லா இருக்குதுவோ" என்றார். பெருவட்டர் பெருமூச்சு விடுபவர் போல, "ஒனக்கு ரெண்டு புருஷா யிசுபில கண்டா, இருநூறு வரியம் கெடப்பே" என்றார். காணி வெட்கிக் குறுகினார். பெருவட்டர் நீண்ட பெருமூச்சு விட்டார். "காலம் எப்பிடிப் போவுது கண்டியா? ஒக்கெ இந்நேற்று களிஞ்சது மாதிரி இருக்குது" என்றார். "ஒன்ன மலையில கண்டதும், காட்டு கிருஷி நடத்தினதும், ஒக்கெ. கடசில நாம ரெண்டாளும் மிச்சம். இன்னி, என்னையும் அனுப்பிப் போட்டுதான் நீ போவ." காணி தலைகுனிந்து அமர்ந்திருந்தார். "எல கண்டா, நீ செத்தே எண்ணு கேக்க எனக்கு எடவரேல்ல. இண்ணு ஆளுவரும், நாள ஆளுவரும் எண்ணு நெனச்ச காலம் உண்டு. அதொக்கெ பத்திருவது வரியம் மின்ன. பெறவு, மாத்தச்சனுக்க கதயக் கேட்டப்பம் மனசிலாச்சு; நீ எங்களப்

போல இல்லே எண்ணு. எங்களயொக்கெ அனுப்பிப் போட்டுத்தான் நீ வருவே எண்ணு தெரிஞ்சு போட்டுல. யோகம் செய்தவம்பில நீ. நாங்க வெட்டி பிடிச்சு அடக்கினம்; வேன் கெட்டினம். என்னத்துக்கு? நீ ஒரு பைசா கூட்டி வைக்கேல்ல. மலை மாடஞ்சாமி மாதிரி இருக்குதே. ஒனக்கு ஒரு துக்கமும் இல்லை. நீ மனியன் இல்லபில கண்டா. நீ வரேல்லெங்கி நான் மனசடங்கி சாவமாட்டேம்பில..." பெருவட்டர் குரல் கம்மி அழிந்தது. கண்களை மூடிக்கொண்டார். தியானத்தில் இருப்பவர் போலக் காணி தலைகுனிந்து அமர்ந்திருந்தார்.

திடீரென்று, ஒருவித உத்வேகத்துடன் பெருவட்டர் கண்களைத் திறந்தார். "எவ கண்டா இஞ்ச அடுக்க வா. ஒன்ன தொட்டுப் பாக்கட்டு" என்றார்.

கண்டன்காணி உட்கார்ந்தபடியே நகர்ந்து, கட்டிலைத் தொட்டு, விளிம்பில் பற்றியபடி, கால் மாட்டிலிருந்து தலைமாட்டை நோக்கிப் பரவசத்தால் சுருங்கி விரிந்த முகத்துடன், நகர்ந்தார். பெருவட்டரின் துழாவும் கரம் அவர் தலைமீது படிந்தது. பிறகு சரிந்து, காரை வருடித் தோளின்மீது விழுந்து, தோய்ந்த சருமத்தை அழுத்தியது. காலத்தின் நீண்ட இடைவெளியையும், பார்வையும் செவிப்புலன்களும் கொண்ட மங்கல்களையும் மீறி, ஒரு கணம் அருகே – மிக அருகே – இருவரும் பரஸ்பரம் உணர்ந்தனர். இருவர் உடல்களும் புல்லரித்தன. பெருவட்டர் கண்களை இறுக்க மூடிக்கொண்டார். இருளும் நிழலும் நெளியும் காட்டின் உள்ளேயிருந்து, பளீரென வெயில் பொழியும் பசும்புல் வெளிக்கு வந்துவிட்டது போலிருந்தது. அவர் கண்களை மீறிக் கண்ணீர் பெருகத் தொடங்கியது. காணி கேவிக்கேவி அழ ஆரம்பித்தார்.

## ... 13 ...

கண்டன்காணி கொள்ளுப் பேரனுடன் ஆலஞ்சோலைக் குத் திரும்பி வந்தபோது இருட்ட ஆரம்பித்திருந்தது. பேரன் அவரை இறுகப் பற்றியிருந்த போதும், அலைச்சலின் சோர்வில் தசைநார்கள் தொய்ந்து போயிருந்ததனால், அவர் நிற்க மிகவும் சிரமப்பட்டார். பொன்னுப் பெருவட்டரின் வீட்டிலிருந்து கிளம்பியது முதல் அழுதுகொண்டே இருந்தார். பஸ்ஸுக்குள் அவரது மெலிய விசும்பல் ஒலி கேட்டபடியே இருந்தது. தாத்தா இயல்பிலேயே குழந்தைத்தனமானவர் என்றும், எல்லா அம்சங்களிலும் இன்றும் அவர் ஒரு ஆதிவாசிதான் என்றும் பேரன் அறிவான். நவீன வாழ்வின் எல்லா முன்னேற்றங்களையும் கடந்த முக்கால் நூற்றாண்டாகக் கண்டு வருபவர் எனினும், அப்போதும் மனத்தளவில் காட்டுவாசி போலச் சூழ்நிலையின் இயற்கையம்சம் பற்றிய தீவிர பிரக்ஞையுடனும், அதே சமயம் சுற்றியுள்ள மனசுகளின் புதர்கள் ஆழங்கள் பற்றிய பிரக்ஞை சற்றுமின்றியும், உயிர் வாழ்ந்து வந்தார். யாரையும் எதையும் உடனே நம்பி விடுபவர். புது மனிதர்களிடமும் புது விஷயங்களிடமும் இயைய எப்போதும் கூசுபவர். கொள்ளுப் பேரர்களின் மனைவிகளைப் பல வருடம் கழிந்தே ஓரளவு சுமுகமாய் எதிர்கொள்ளப் பழகியவர். பேரனுக்கு மட்டுமல்ல, அந்தக் குடும்பத்து உறுப்பினர்கள் அனைவருக்குமே அவர்மீது மரியாதைதான். உள்ளூர ஒரு இடம் அவருக்கு அவர்கள் தந்திருந்தார்கள். அவர் மற்றவர்களுக்கு அளித்து வந்த இயல்பான, களங்கமற்ற, அன்பு எல்லாத் திசைகளிலிருந்தும் அவருக்குத் திரும்பக் கிடைத்தது. குறிப்பாய்ப் பெண்கள் அவரை மிகப் புனிதமானதும், மனிதனை மீறிய சில மகத்துவங்களின் பிரதிநிதியுமான, ஒரு புராதன வஸ்து என்பதுபோலக் கருதி வந்தார்கள். புருஷன் அடித்தானென்றால் கொள்ளுப் பேத்தி ரோஸி முழுக் கோட்டிலிருந்து ஓடிவந்து அவரிடம்தான் முறையிடுவாள். மூன்றாம் நபர் கேட்கக் கூடாது என்ற எச்சரிக்கையும் அழுகையும் அவள் குரலைப் புரிந்துகொள்ளவே முடியாதபடி ஆக்கியிருக்கும் என்றாலும், அவர் அனுதாபம் தெரியத் தன் மக்கிப் போன பழுப்பு

நிறக் கண்களால் பார்த்தபடி உட்கார்ந்திருப்பார். அவளை நடுநடுவே தோளிலும் தலையிலும் தொட்டு வெகு சாதாரணமாக எதையாவது கூறுவார். எந்தப் பிரச்சினைக்கும் அவரால் எவ்விதத் தீர்வையும் தரமுடியாது என்றும், குறைந்தபட்சம் சம்பந்தப் பட்டவர்களைக் கூப்பிட்டுப் பேசவோ அல்லது நாலு ஆறுதல் மொழிகள் ஒழுங்காய்க் கூறிச் சமாதானப்படுத்தவோ கூட அவரால் இயலாது என்றும், அவள் அறிவாள். அவர் முன் அவள் பெறும் ஆறுதல் சர்ச்சில் அந்தரங்கமாய் உருகி உருகிக் கண்ணீருடன் ஒரு நீண்ட ஜெபம் செய்து முடித்ததற்கு நிகர். நான்கு தலைமுறையின் தினசரி வாழ்வின் கடும் சிக்கல்கள், மோதல்கள், விஷயங்கள், இம்சைகள், அனைத்திற்கும் கனிவான மவுன சாட்சியாக அவர் இருந்து வந்தார். மாதாமாதம் அவருக்கு முடிவெட்டி முகம் மழித்துவிட வரும் நாவிதன் கூடத் தன் குடும்பப் பிரச்சனைகளை வேலையின் இடையே அவரிடம் முறையிடுமளவு காலத்தின் பதிவுகளை ஏற்று உருக்குலைந்த பின்பும் வாழ்வின் சாராம்சமான அன்பையும் களங்கமின்மையையும் கனிவையும் காட்டுவதாய் இருந்து வந்தது அவர் முகம்.

லாரன்ஸ் குலசேகரம் வாட்டர் டாங்கையும் பள்ளிக்கூடக் கட்டிடத்தையும் அவருக்குச் சுட்டிக் காட்டினான். கண்ணீர் வழிந்த கன்னங்களுடன் பொக்கை வாய் திறந்து கண்கள் விரிய வேடிக்கை பார்த்தார். அழுகை நின்றுவிட்டிருந்தது. பஸ்ஸின் கம்பிகளை இரு கைகளாலும் பற்றியபடி திரும்பி அமர்ந்து வேடிக்கை பார்த்தபடி வந்தார். பிறகு மெல்லத் தூங்கிப் போய்விட்டார். பேரன் கர்ச்சீப்பால் அவர் கண்களைத் துடைத்தான். அவரது தொங்கிய தலை கம்பியில் மோதியது. அவன் அவரைத் தன் தோள்மீது சரித்துக்கொண்டான். அவர் வாயைச் சப்புக் கொட்டிக் கொண்டார். அவன் அவரையே பார்த்தான். ஒரு வயசாளி என்ற நிலையில் அவர் ஆரோக்கியம் நன்றாகவே இருக்கிறது என அவன் அறிவான். அவரது மீதி ஆயுளை மதிப்பிட நவீன மருத்துவ இயலில் வழிமுறைகள் இல்லை. அவர் இன்னமும் ஐம்பது வருடம் உயிரோடு இருந்தால்கூட ஆச்சரியமில்லை.

ஆரம்பத்திலேயே அவன் மனசுக்குள் ஒரு ஆதங்கம் இருந்தது. வெகுநேரம் அது பிடிக்குச் சிக்காமல் நழுவியது. அது முகம் காட்டியபோது அவனுள் எரிச்சல் எழுந்தது. அதைத் தாத்தாவிடம் பேச எண்ணினான். ஆனால் அவருக்கு அது முற்றிலும் புரியாத விஷயம் என்று தோன்றவே, அடக்கிக் கொண்டான். தோட்டம் பொன்னு பெருவட்டரின் வீட்டார் தன் தாத்தாவை நுணுக்கமாய் அவமானப்படுத்திவிட்டதாக அவன் கருதினான். அவருடைய மகத்துவம் புரியப்படாமல் போனதே ஒரு அவமானம்தான்.

வரவேற்று, உள்ளே கூட்டிச் சென்ற சின்ன பெருவட்டர் பிறகு அவரிடம் விடைபெறாமல் போய்விட்டது; லிவியின் அலட்சியம்; பெருவட்டத்தி அவரை ஒரு கிழட்டு வேலையாள் போல நடத்திய விதம்; அவன் மனம் பொருமியது. அந்த வீட்டுக்குள் பெரும் செல்வக் கொழிப்பு இருப்பதை அவன் கவனித்திருந்தான். இத்தனை செல்வம் எதற்கு மனிதனுக்கு? அது மனிதனை நல்ல வழியில் செல்லத் தூண்டாது. சுகபோகங்களைக் குற்ற உணர்வு இல்லாமல் அனுபவிப்பதுதான் மனித மனம் கொள்ளும் வறட்சியின் எல்லை. அந்த ரெம்பராண்ட் ஓவியம்; அதன் பிரமாண்டமான பளபளப்பு. பெரும் கனவை உள்ளடக்கிய அந்த ஃபிரேமுக்குள் ஒரு செய்தி இருக்கிறது. பூர்ண நிர்வாணமாய் எளிமையின் மூர்த்த ரூபமாய். அன்னை மடிமீது அமர்ந்த மனித குமாரன். அவன் முன், அறிவின் கர்வமும், செல்வத்தின் செருக்கும், வணங்கி ஒடுங்கி நிற்பதுபோல ஒரு எண்ணம் ஏற்பட்டது. ஐசுவரியவான் சொர்க்கத்தில் பிரவேசிப்பது என்பது ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவதைவிட அரிது. பலமுறை காதில் முழங்கிய, சுவர்களிலும் தாள்களிலும் கண்ணில் பட்ட பரிச்சயமான வரிகள். அர்த்தமற்றதாய் விரிவடையாது வெறும் சொற்களாகவே அவை இதுவரை மனசில் நின்றுகொண்டிருந்தன. இப்போது அவை இழை இழையாகப் பிரிந்து, பெரும் அர்த்த வியாப்தியுடன் தன்னைத் தாக்குவதை உணர்ந்தான். பிறர் உழைப்பிலும் உடைமையிலும் ஒரு அம்சத்தையாவது கவராமல் செல்வத்தை எப்படிக் குவித்துக் கொள்ள முடியும்? பணமும் பாபமும் பரஸ்பரம் பிரிக்க முடியாதவை. அந்தப் பெரிய வீட்டுக்குள் மவுனமாய் குளிர்ந்து உறைந்த வன்முறையோ, பாவத்தின் மவுன சான்னித்தியமோ எதுவோ, மனசை அமைதியிழக்கச் செய்யும் ஒன்று இருக்கிறது. தாத்தா அங்கு தங்க நேர்ந்தால் இரண்டாம் நாள் துடிக்க ஆரம்பித்துவிடுவார். அதைத்தானே பெரிய பெருவட்டர் சொன்னார்! லாரன்ஸ் தன் மனம் ஜில்லிடுவதை உணர்ந்தான். பெரிய பெருவட்டரின் தவித்த கண்கள் தாத்தாவின் அருகாமையில் அவை பெற்ற புது ஒளி. அது அப்போதுதான் அவன் மனசைத் தாக்கியது. ஏதோ ஒருவித பீதி ஏற்பட்டது. அதற்கு மேல் யோசிக்க மனம் தயங்கியது.

தாத்தா இப்பேர்ப்பட்ட ஒரு மாளிகையில் வசிக்க ஆரம்பித்தால் என்ன ஆகும்? அவர் சில வாரங்களிலேயே உயிர் துறந்து விடக் கூடும். கூட்டிலடைபட்ட காகம் போல! அவரால் பாபத்தின் அம்சத்தை உணர்ந்து பகுத்து அறிய முடியாது. ஆனால் அவர் புலன்கள் அதைத் தாங்காது வெடித்துவிடக் கூடும். செல்வங்களுக்கும் பாவங்களுக்கும் அப்பாற்பட்ட ஆதிவாசி அவர்.

நான்கூட, ஓர் ஆதிவாசியாக இருக்கக்கூடும் என்று லாரன்ஸ் எண்ணிக்கொண்டான். உள்மனசில் மாற்றமேயின்றித் தொடரும் பாரம்பரியத்தின் ஒரு கண்ணி இருக்கக்கூடும். காட்டின் உயிர்த்துடிப்பு, காட்டின் எளிமை, காட்டின் புனிதம்... நாகர் கோயிலில் கான்கிரீட் கட்டிடங்களுக்குள் நான் காடுகளுக்காகத் தவிக்கிறேன். பிரம்மாண்டமான சுதை சர்ச்சில் மனம் அலை பாய்கிறது. கார்கள், நவீன உடைகள், நவீன பொழுது போக்குகள், கட்டிடங்கள், தொழில்கள், சவால்கள் அனைத்துமே மனசின் மேற்தளத்தைத்தான் எடுத்துக்கொள்கின்றன. அடித்தளத்தின் பரப்பு முழுக்கக் காடு. மறக்காத இளமைக்காலக் காதல் ஞாபகம் போல. அதன் பசுமையும், ஈரமும், மணமும், அதன் ஒவ்வொரு அணுவிலும் துடிக்கும் இயற்கையின் ஜீவனும்தான், மனம் முழுக்க.

“வாளைக்காடு” என்பார் தாத்தா. முன்பு இந்தச் சதுப்புப் படுகையில் குளிர் தாங்க முடியாது. வாழை மரங்களின் அடர்த்தி காரணம். இலைகள் வேய்ந்த கூரையின் கீழே, வெயில் ஏற்காத, ஊற்று ஓயாத, சதுப்புக் கரியபூமி. பின்பு குடியேற்றக்காரர்கள் வந்தார்கள். வாழைக்காட்டைத் திருத்தி, வாழைத் தோப்பு ஆக்கி னார்கள். மரங்களின் ஆளுமைகளில் வாழைக்கு நிகர் இல்லை. மவுனமானது. ஆரவாரமற்றது. அதன் ஒவ்வொரு கணுவிலும் மென்மைதான். அதன் சூழிலே குளுமை. மரங்களிலேயே பறவை களுடன் அதிகம் பேசுவது அதுதான். அதன் மேனியின் மணத்தில் சதுப்பு மண்ணின் வீரியம். அதன் குருத்து இலைகளுக்குள் ஒளி திரவமாய்த் தேங்கி நிற்கும் வனப்பு. வாழையில் வன்முறை இல்லை. அதன் முதிர்ச்சியிலும், வீழ்ச்சியிலும் குட்டிகளுக்கு எருவாகும் இறுதியிலும்கூட. இயற்கையின் தாளம் தவறாத கவிதைதான். அதன் ஒவ்வொரு தோற்றத்திலும் தெரியும் நாணம் மிகுந்த பெண்மை. மனசை மருட்டும் காட்டு மரங்களின் வன்மையான ஆண்மைத் தோற்றங்களுக்கு இயல்பான மாற்று. பூமிக்குள் இருந்து ஏதோ பசியநிற யானைக்குட்டி துதிக்கை நீட்டுவது போல அதன் கன்று மேலெழும். அந்தக் குழந்தைத்தனம் மிக்க கூம்பு வெட்கி, தயங்கி, வெடித்து, இலையாகி அன்னையின் நிழலில் மெல்ல அசையும்; பிடியானையின் கால் கீழே கன்று செவி ஆட்டுவதுபோல. அதன் பசும்மஞ்சள் இலைகளில் நரம்புகள் தடித்து, இலைகள் விரியப் பறக்கத் தவிக்கும் பறவை போலாகும் அது. சரிந்து கிடக்கும் அன்னையை உறிஞ்சி அது மேலெழும் போது கன்னியின் திமிரான இளமை போலிருக்கும். மிக அந்தரங்கமாய் அதற்குள் கூம்பு உருக்கொள்ளும்போது அமைதி அடைந்துவிட்டிருக்கும். வெயில் ஏற்காமல் கூம்பை மூடிக்கொள்ள முயலும். மெல்ல மெல்லக் கூம்பு வெளிவந்து தழைய, அதன் உடல் முழுக்க வெட்கமும் மெருகும்

ஏறும். குலைமுற்றிக் காய்கள் பழுக்க, அன்னையின் அடக்கம். இலைகள் கிழிந்து, சருகுகள் சடைகளாகத் தொங்க அதன் முதுமை யிலும்கூட அழகு உண்டு. வாழை மனித வாழ்வின் நாடகத்தைத் தானும் நடிப்பது. ஆகவே மனித மனசுக்கு மிக அருகே நிற்கும் மரமும் அதுவேதான் போலும்.

ஒரு தலைமுறைக்கு முன் ரப்பர் வந்தது. முதலில் குடியேற்றக் காரர்களான கோட்டயம் மாப்ளாக்கள் அதைப் பயிரிட்டார்கள். பிறகு காடே ரப்பரால் நிறைந்தது. வாழைத் தோட்டங்கள் வெட்டிச் சரிக்கப்பட்டன. அங்கெல்லாம் மாமிச வாடையுடன் ரப்பர் மரங்கள் தளிர்த்தன. மனித அருகாமையையும் பராமரிப்பையும் அன்பையும் வேண்டாத மரம் அது. இன்று காடுகள் இல்லை. மலைச்சரிவு முழுக்க கண்ணுக்கெட்டிய தூரம் வரை இலை சலசலக்க சருகு மெத்தை மீது, அணி அணியாக ரப்பர் மரங்கள். நாகரீகம் செழிக்க அவை காடுகளில் நின்று ரத்தம் சொட்டு கின்றன. அவற்றின் உடல் முழுக்க ரத்தக் காயங்கள். கருகின காயங்கள், வடுக்கள், தடங்கள். நகரத்தின் தார்ச் சாலைகளின் யாருக்காகவோ உரசி அழிகிறது அவற்றின் ஜீவன். ஒரு ரப்பர் தோட்டம் வழியாக நடப்பது அவனுக்கு மிக இம்சையான அனுபவமாக இருந்திருக்கிறது.

பிச்சைக்கார வரிசை போலக் கோப்பைகள் ஏந்திய மரங்கள். மவுனமாய் ரத்தம் சொட்டியபடி நிற்கும் அவற்றின் சோகம். மனம் மரத்துப் போகும் இனம்புரியாத துக்கத்தால் பிரக்ஞை கனக்கும். கோடிக்கணக்கான மரங்களை இம்சைப்படுத்திப் பெறும் நாகரீகம் அதன் ஆத்மாவையே பாவத்தால் மலினப்படுத்தி விட்டிருக்கிறது. அந்தப் பாவத்தில் தெரிந்தோ தெரியாமலோ பங்கேற்கும் ஒருவனால் எப்படித் தூய மனசுடன் கண்ணீர் விட முடியும்? எப்படிக் கிறிஸ்தவனாக இருக்க முடியும்? கிறிஸ்து ஆதிவாசிக்கு உரியவர் என்ற ஒரு எண்ணம் அவனுள் பளீரிட்டது. உடனே தன்னுள் எண்ணங்கள் தீர்க்கமான அமைப்புடன் வெளிப்படுவதை உணர்ந்தான். ஏதோ ஒன்று தனக்குள் யுக்தியின் அடுக்குகளைக் கலைய வைத்துவிட்டிருக்கிறது. உணர்வின் அடித்தளத்தில் உருவாகி வரும் கருத்துகளுக்குத் தருக்கவியல் பூரணத்துவத்திற்காக அலைய வேண்டியதில்லை. அவை அவனால் முழுமனசுடன் தழுவிக் கொள்ளக் கூடியவையாக இருக்கின்றன. அவன் மனசு அப்போது வார்த்தைகளாய் எளிதில் மாறிவிடுகிறது.

ஆம். கிறிஸ்து, ஆதிவாசிக்கு மட்டும் உரியவர். ஒரு ஆட்டுக்குட்டியை அந்தரங்க எழுச்சியுடன் மார்போடு தழுவிக் கொள்ள வேறு யாரால் முடியும்? வானத்துப் பறவைகள்

விதைப்பதில்லை அறுவடை செய்வதில்லை என்பதன் சாரம் ஆதிவாசியைத் தவிர வேறு யாருக்குப் புரியும்? "உனக்குச் செய்யப்பட வேண்டும் என எதிர்பார்ப்பதை நீ மற்றவர்களுக்குச் செய்" என்ற உத்தரவை வேறு யாரால் நிறைவேற்ற இயலும்? அனைத்திற்கும் மேலாகச் செல்வத்தைக் குவிக்காமல், இயற்கையைக் குலைக்காமல், இயற்கையின் மடியில் நலுங்காமல் வாழ யாரால் இயலும்? கிறிஸ்துவை நகரங்களில் தேட வேண்டியதில்லை. கிறிஸ்து பிஷப் மாளிகையில் இல்லை. நவீன ஆஸ்பத்திரிகளில் இல்லை. கான்வென்டுகளில் இல்லை. கிறிஸ்து தேவாலயங்களில், கூட்டுப் பிரார்த்தனைகளில், கவிதை சொட்டும் ஜெபங்களில் இல்லை. கிறிஸ்து மலைகளில், காடுகளில், இயற்கையில் இருக்கிறார். இயற்கைதான் கிறிஸ்து. கிறிஸ்துவை நேசித்தல் இயற்கையை நேசித்தல்தான்.

தன் மனம் நெக்குவிட்டு இளகிப் போவதை லாரன்ஸ் உணர்ந்தான். கண்கள்கூட இளகி ஈரமாய் இருப்பதாய்ப் பட்டது. கண்ணாடியைத் தூக்கி, விரல்களால் கண்களை அழுத்திக் கொண்டான். வீடு நெருங்கிவிட்டிருந்தது. தாத்தா நிழலாகத் தெரிந்தார். வெப்பமான அவர் அருகாமை. வானம் மட்டும் லேசான ஒளியுடன் இருந்தது. சாலையில் மின் அழுத்தக் குறைவால் விளக்குகள் மங்கலாய் மினுங்கின. தோட்டங்களுக்குள், கரிய இருளில் மரச் சலசலப்பும் பறவைகள் கூட்டணையும் உரத்த கலைசல் ஒலிகளும் கேட்டன. புதருக்குள் மின்மினி போல விளக்கு மினுங்க வீடுகள் மறைந்தன. திரும்பித் தாத்தாவைப் பார்த்தான். வீட்டை விட்டுப் புறப்பட்டது முதல் அவரில் ஓயாதிருந்த சிறு பதற்றம் முற்றிலும் ஓய்ந்து, மரக்கூட்டங்களின் ஊடே ஒரு சில மரம் போல ஆகிவிட்டிருந்தார். சாப்பிட்டுப் படுத்தால் தூங்கிப் போய்விடுவார். சிறிது சுடுநீரில் முக்கூட்டுத் தைலம் விட்டு அவர் தசைகள் மீது தடவிப் பிசைந்துவிட வேண்டும் என்று எண்ணிக்கொண்டான். அவர் உடலுக்கு எந்த அலோபதி மருந்தும் ஒப்புக்கொள்வதில்லை. அவன் முக்கூட்டுத் தைலமும் காயத் திருமேனி எண்ணெயும் வாங்க ஆயுர்வேத மருந்துக்கடை முன் நிற்க வேண்டியுள்ளது.

ஆனால் தன் உடம்புக்கு அவை போதவில்லை. சிறு தலை வலிக்குக்கூட ஆஸ்ப்ரின், ஜலதோஷத்திற்கு விக்ஸ், மனதளவில் எப்படி இருப்பினும் உடல் நவீன உலகைச் சேர்ந்தது. சுகபோகங் களைக் கேட்பது. சுகங்களின் மீதான ஆவலில் இருந்து மரணபயம் - மரணபயம் ஏற்படுத்தும் நோய் பற்றிய சந்தேகங்கள், தேவை இல்லாவிடிலும் மருந்துகள். ஒரு புன்னகையுடன் சட்டென்று எண்ணிக்கொண்டான்; ஆதிவாசி காட்டைப் பற்றியும் அவனைப்

பற்றியும்கூட நினைப்பதில்லை. சிந்தித்த அக்கணமே அவன் ஆதிவாசி அல்லாமல் ஆகிவிடுகிறான். வீட்டு வாசல் முன் மேரி நின்றிருந்தாள். பஸ் இறங்கிய இடத்திலிருந்து, வீடு வரை தாத்தாவைத் தாங்க வேண்டியிருந்தது. லாரன்ஸ் மூச்சிரைத்தான். பென் அம்மாவின் தோளில் முகம் புதைத்துத் தூங்கிவிட்டிருந்தான். "ஏம்ப்டி தூக்கி வச்சோண்டு நிக்குதே?" என்றான் லாரன்ஸ்.

"அப்பச்சிய கொண்டா எண்ணு இம்பிடு நேரம் பயங்கரக் கரச்சிலும் விளியும். இப்பம்தான் ஒறங்கினான்."

"அப்பன் வந்தினுமா?"

"இல்ல; வய்யிட்டுதான் வெளைக்கு போச்சினும்" என்றாள் மேரி. தாத்தாவிடம் "வாருங்க அப்பச்சி – சீணிச்சு போச்சுதா?" என்றாள்.

"இல்ல மக்கா" என்றார் காணி. படி ஏற லாரன்ஸ் துணை செய்தான். காணி தரையில் கால் நீட்டி அமர்ந்தார்.

லாரன்ஸ் சட்டையைக் கழட்டியபடி மேரியிடம் சொன்னான். "தாத்தாவுக்குக் கஞ்சி எடு. கொறெ சூடுவெள்ளம் வேணும். காலும் கையும் திரும்மிவிடணும்." "இத கொஞ்சம் பிடியுங்க... பதுக்கெ... ஒணந்தா கரஞ்சு பெகளம் வைப்பான்" என்றாள் மேரி குழந்தையை நீட்டியபடி.

லாரன்ஸ் மகனை மெல்ல வாகாக வாங்கிக்கொண்டான். கண்ணாடியைக் கழட்டி டீபாயில் வைத்தான். காணி பயலைப் பார்த்துச் சிரித்தபடி கை நீட்டினார். "இஞ்ச கொண்டா" என்றார். "இல்ல தாத்தா தரையில நல்ல தணுப்பு. பய ஒறங்கியாச்சு, ஒணத்தாண்டாம்..." என்றான் லாரன்ஸ்.

மேரி உள்ளிருந்து, "பொன்னு பெருவட்டருக்கு எப்பிடி இருக்கு?" என்றாள். லாரன்ஸ் குழந்தையுடன் சமையலறைக்குள் போனான். "பெருவட்டருக்கு ஒக்கெ ஆயிப் போச்சு எண்ணுதான் தோணுது" என்றான். "அய்யோ வயசும் கொற ஆவுமே" என்றாள் மேரி. "நம்ம தாத்தாவக் காட்டியும் பத்திருவது வயசு கொறவுதான்" என்றான் லாரன்ஸ்.

"வலிய சீணம் போலத் தோணுதே, மொகம் கண்டா? நடந்தி யளா ஒருவாடு?" என்றாள் மேரி. "சீணமாட்டு ஒண்ணுமில்ல." லாரன்ஸ் சற்று தயங்கினான். "மேரி, நீ அவிய வீட்டப் பாக்கணும்டி. வீடு இல்லடி கொட்டாரம். சத்தியமாட்டு செல்லுதேன், அந்த மாதிரி வீட்ல இருந்தா கர்த்தாவ நெனச்ச ஒக்காது."

“ஓம்! இனிய ஒரு பாடு கண்டினும்” என்றாள் மேரி குறும்புச் சிரிப்புடன்.

“சும்மா செல்லலேல்லடி, தாத்தாவ அங்க ஆரும் வகவக் கேல்ல” என்றான் லாரன்ஸ். மேரி சட்டென்று கூர்ந்து பார்த்து, “ஏன்?” என்றாள். “ஏன் எண்ணு எனக்க கிட்ட ஏன் கேக்குதே? தாத்தா இல்லெங்கி இவியளுக்கு இந்த ஐசுவரியம் வந்திருக்குமா? இப்பம் அவியளுக்கு மனச கண்டா...ம்ம் ஒண்ணும் செல்லாண்டாம்.”

“ஓம்.. இனி நீங்க செல்லாத கொறவுதான், விடுவியளா?” என்றாள் மேரி. “செண்ணு பாருங்க அப்பச்சி ஒறங்கியிருக்கும்.”

## ... 14 ...

செல்லையா பெருவட்டர் வீட்டை விட்டு வெளிக்கிளம்பிய போது ஒரு அதிர்வடைந்த மனநிலையில் இருந்தார். கண்டன்காணியின் வருகை அவரைக் குழம்பச் செய்துவிட்டது. அவர்மீது எதையோ வீசி எறிந்தது போலிருந்தது. விரல் நீட்டிக் குற்றம் சாட்டுவது போல அந்த அமைதியின்மையை உதறத் தவித்த மனம், வயோதிகர் மீது வெறுப்பை உண்டு பண்ணிக் கொண்டது. "இந்தச் சவம் இப்பம் என்ன எளவுக்கு இஞ்ச வந்தது?" என்று தனக்குள் முனகியபடி, ஆக்ஸிலேட்டரை மிதித்தார். கார் சாலைக்கு வந்தபோது படபடப்புக் குறைந்து, ஆழ்ந்த மவுனமான சோகம் அவரை கப்பிக்கொண்டது. செயலற்றவராய் ஒரு பெரிய சோக சம்பவத்தைப் பார்த்துக்கொண்டிருந்தவர் போல ஏக்கமாய் உணர்ந்தார். குடிக்க வேண்டும் என்ற எண்ணம் வாயில் ஒரு ருசிக்குறைவாய் ஆரம்பித்து, தொண்டையில் வறட்சியாக மாறி, வயிற்றில் அமிலக் கொந்தளிப்பாகவும், விரல் நுனிகளில் நடுக்கமாகவும் பரவியது. சட்டென்று, அருகாமையில் எங்கு மது கிடைக்கும் என சிந்தனை பரபரத்தோடியது. எங்கும் ஒரு அன்னியத்தன்மை இருந்தது. தோட்டம் பெருவட்டன் வந்து அமர்ந்து குடிக்கும் கவுரவம் என்ற குடிநிலையத்துக்கும் இல்லை. புன்னகை வந்தது – தோட்டம் பெருவட்டன்! உடனே பீதி எழுந்து குளிர் காற்றுப் போல மனசைத் தாக்கி விரைக்க வைத்தது. கையால் துழாவி சிகரெட் எடுத்து, வாயில் பொருத்திக்கொண்டார். கையும் உதடுகளும் நடுங்கிக்கொண்டிருப்பதை உணர்ந்தார்.

சட்டென்று மனம் பதறியது. எங்கு போவது என்று எண்ணியிருந்தார். ஆனால் எங்கு என்பது உள்ளூரத் தீர்மானிக்கப்பட்டிருந்தது என்று அப்போது உணர்ந்தார். குலசேகரத்திலிருந்து அந்தப் பாதை பிரிந்து பொன்னுமங்கலம் கிராமத்தை நோக்கிப் போகிறது. சற்றுத் தூரம் போய், வலப்புறம் திரும்பும் செம்மண் கப்பிப் பாதை பெரிய மாளிகையின் முற்றம் நோக்கி ஓடும். பழைய கட்டிடம் அது. கிட்டத்தட்ட தோட்டம் மாளிகையை ஞாபக மூட்டுவது. அங்கு ஓரிரு முறைதான் போயிருக்கிறார். தீப்பட்ட புழுப்போல பிரக்ஞை துடிக்கச் செய்யும் அனுபவங்கள் அவை.

பெருவட்டரின் மனமும் உடலும் கசப்பால் நிரம்பின. கசப்பு வாயில், மூச்சில் கரித்தது. என்ன விசித்திரம்! எத்தனை ஆழமாய் மனசுக்குள் வேரோடி விட்டிருக்கிறது இது! ஆனால் வருஷக் கணக்கில் இதிலிருந்து மனசை வேறெங்கோ அலையச் செய்து, முற்றிலும் இதை வென்றாகிவிட்டது என்ற பிரமையில் இருந் திருக்கிறோம். சாகும் கணம்வரை கூடவே வரும்போலும் இந்தக் கசப்பு. கடவுளே, இதிலிருந்து விமோசனமே கிடையாதா...

பிரேக் ஒலிக்க கார் நின்றது. எந்த இடம்? குலசேகரம் சந்தை தாண்டி விட்டிருக்கிறது. திரும்பிவிட வேண்டும். அங்கு மீண்டும் போக முடியாது. மனசுக்குள் படமாய் உறைந்துவிட்டிருக்கும் அந்தப் பாதையையும் வீட்டையும் மறுபடியும் எதிர்கொள்வது அசாத்யம். திரும்பிவிட வேண்டும். ஆனால் திரும்பி எங்கே போவது? எத்தனை தூக்கமற்ற இரவுகளுக்குப் பிறகு எத்தனை ரத்தம் பீரிடும் மனப் போராட்டங்களுக்குப் பிறபாடு, இந்த முடிவிற்கு வந்தோம். முடிவிற்கு வரமுடியவில்லை உண்மையில். எல்லாப் பாதைகளும் சுவரில் முட்டிக்கொள்வதாக உணர்ந்து, மூளை சலித்து, கண்கள் தன்னிச்சையாக வழிய, தலையணையில் முகம் புதைத்து, போதையின் பாரத்தில் கண் இமைகள் சரிய, படுத்திருந்தபோது – அந்தக் கணங்களிலும் பீதியும் அமைதி யின்மையும் தூரத்து இரைச்சல் போல வயிற்றுக்குள் முழங்கும் அரை மயக்கத்தில் சட்டென்று பொறி போல, இந்த எண்ணம் வந்தது. ஒரு கணம், ஓரே ஒரு கணம்தான், மனம் விழித்துக் கொண்டது. நரம்புகள் வில்நாண் போல் விடுபட்டு விம்மின. மறுகணம் நரகலைத் தலைவழியாய்க் கொட்டியது போல உணர்ந்தார். கூசிப் போய் எழுந்து அமர்ந்தார். உடம்பு வெட வெடக்க அறைக்குள் உலவினார். 'மற மற' என மூளையை அடித்துச் சித்திரவதை செய்தார். சக்கரம் போல அது சுழன்று அங்கேயே போய் நிற்கத் தாங்க இயலாமல் குடித்தார். குடித்துக் குடித்து மூக்கு வழியாகத் திராவகம் பீரிடும் வரை விழித்திருந்தார். பின் தலை ஒரு பாறாங்கல் போலக் கனக்கப் படுக்கையில் விழுந்தார். போதையும், கழிவிரக்கமும் மனசைக் கரைக்க அழுதார். அழுதபடியே தூங்கிப் போனார். மறுநாள் விழித்த ஒரு நிமிடம் மனம் சாந்தமாக இருந்தது. மறுகணம், அந்தப் பீதியும் அமைதி யின்மையும் வந்து மேலே கவ்விக்கொண்டது. பகல் முழுக்க அது உள்ளுக்குள் ரீங்கரித்தபடியே இருந்தது. போலிச் சிரிப்பு, போலி அன்புப் பேச்சு, போலி சோகம், சிறு எதிர்பார்ப்புகள், ஏமாற்றங் கள், இவற்றின் ஊடே அதன் இருப்பு சிறு இடைவெளிகளில்கூட மனசை அறைவதாக இருந்தது. காற்றில் பற்றுக் கொம்புக்காகத் துழாவும் கொடிச்சுருள் தளிர்கள் போல மனம் துழாவியபடியே

இருந்தது. ஒவ்வொரு நம்பிக்கையாய் உடைந்து விழுந்தது. அவை உண்மையில் நம்பிக்கைகளே அல்ல. வெறும் மன நாடகங்கள். தோல்வி உள்ளூர எதிர்பார்க்கப்பட்டது. இந்தக் கசப்பை எதிர்கொள்வதைத் தவிர்க்க விரும்பும் மனசின் ஜாலங்கள். கடைசியில், அதுவும் தன் எல்லையை அடைய, வெறும் சூனியம். அந்தப் புள்ளியை நோக்கி சூழலும் சந்தர்ப்பங்களும் தன்னைத் தள்ளிக்கொண்டிருப்பதாய் உணர்ந்தார். வேறு வழியின்றிக் கடைசியில் அங்குதான் போய் நிற்கப் போகிறோம் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது. அப்போது தன்னிரக்கம் ஆங்காரமாய் மாறியது. மாட்டேன் மாட்டேன் என்று உள்ளூரக் கூக்குரலிட்டுக்கொண்டார். மாட்டேன், அதைவிட மரணமே மேல் என்று அரற்றிக்கொண்டார். மரணம் ஒரு வார்த்தை என்ற நிலையிலிருந்து விரிவடையத் தொடங்கியது. எல்லாவற்றுக்கும் அது முடிவு கட்டிவிடும். பிறகு வலி இல்லை, முக்கியமாய் அவமானம் இல்லை. எல்லாரிடமும் தீவிரமான பதிவை அது ஏற்படுத்தும். மரணம்தான், வேறு வழியில்லை. அது ஆறுதல் அளித்தது. இரவு முழுக்க அந்த எண்ணத்தை மனசுள் போட்டு உருட்டி விளையாடிய படி இருந்தார். நாளை என் பிணம் இங்கே கிடக்கும் என்று எண்ணினார். தன் பிணத்தைப் பார்க்க முடிந்தது அவரால். அழுபவர்களை, வருந்துபவர்களைக் கண்முன் கண்டார். மனம் கசிந்து அழுதார். அவமானப்பட்டு உயிர் வாழமாட்டேன்; நான் பொன்னு பெருவட்டனின் மகன் என்று உள்ளூர உரையாடினார். இளம்பருவ ஞாபகங்களும் அம்மா நினைவுகளும் மனசுள் குபுகுபுத்துப் பீரிட தூக்கமின்றித் தவித்தார். எப்போதோ தூங்கி, காலையில் எழுந்தபோது, தற்கொலை எண்ணம் தூர விலகிப் போயிருந்தது. முற்றிலும் அசாத்தியமானதாய், நிஜத்திற்கு சம்பந்த மற்ற அசட்டுக் கற்பனையாய்ப் பட்டது அது. தற்கொலையை நிராகரிக்கத் தாவிய மனம், பிரச்சனைகள் எல்லாமே சின்னஞ் சிறியவை என்றும், எல்லாம் சரியாகிவிடும் என்றும் எண்ண ஆரம்பித்தது. தயக்கங்களும் கூச்சங்களும் விலகிய அந்தக் கணத்தில் மாத்யூ தரகனைப் போய்க் கேட்டுப் பார்த்தால் என்ன என்று பட்டது. அப்போதுகூட மனம் கூசியது. உடனே அதை உதறிக் கொண்டார். நாகர்கோவில் போய் சுந்தரலிங்கத்தை அல்லது தக்கலைக்குப் போய் அம்புரோஸைப் பார்ப்பது என்று எண்ணிக் கிளம்பினார். அப்போதுதான் வாசலில் கண்டங்காணியைக் காண நேர்ந்தது. அவர் மன உளைச்சல்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட ஏதோ ஆசிர்வதிக்கப்பட்ட உலகத்துப் பிரஜைபோல.

பெருமூச்சுடன் பெருவட்டர் காரைக் கிளப்பினார். மனம் அடங்கிவிட்டிருந்தது. அந்த நிலையை அது ஏற்கத் தொடங்கி

விட்டிருந்தது. வேறு வழியில்லை. மரணம் தவிர. மரணத்தை ஒருபோதும் ஏற்க முடியாது அவரால் என்று அவருக்குப் பட்டது. பாதை எத்தனை தெளிவாகத் தனக்குள் பதிந்திருக்கிறது என வியப்புடன் எண்ணிக்கொண்டார். எத்தனையோ வருடமாகிறது அங்கு வந்து. ஆனால் உள்ளூர மனப்படமாக இந்தப் பாதை ஓடாத நாள் இல்லை போலும்.

மாத்யூ தரகனின் வீடு – தோட்டம் வீடு மட்டுமல்ல; பெரும் பாலும் எல்லாப் பெருவட்டர்களின் வீடுகளும் ஒரே மாதிரித்தான் இருந்தன. ஒருமுறை ஞானமுத்துவிடம் இதைப்பற்றி வியந்து கூறியது ஞாபகம் இருக்கிறது. பத்துப் பதினைந்து வருடம் முன்பு அது. "இந்த ஏரியாவுல பாதி பங்களா வீடுகள் இப்படித்தான் இருக்கும்" என்றார் ஆர்கிடெட்டும் ஆன ஞானமுத்து. ஏன் என்றபோது அவர் சொன்ன காரணம் விசித்திரமானதாகவும், உண்மையான தாகவும் பட்டது. எல்லாமே ஒரே காலகட்டத்தில் கட்டப்பட்டவை. எல்லாமே பிரிட்டிஷ் ஆர்கிடெட்டுகளால், இந்தியப் பொருட்களை உபயோகித்து பிரிட்டீஷ் பாணியில் கட்டப்பட்டவை. இந்தப் பகுதியின் பெரிய பணக்காரர்கள் முழுக்க, பெரும்பாலும் ஒரே காலகட்டத்தில்தான் பணக்காரர்கள் ஆனார்கள். ரப்பரின் வருகையும், காடுகள் ரப்பர் தோட்டங்களாக மாறியதும்தான் அதற்குக் காரணம். திடீரென்று காட்டுப் பிரபுக்கள் எல்லாரும் நாட்டு ராஜாக்கள் ஆனார்கள். என் தாத்தாவும் உன் அப்பாவும் உட்பட என்றார். உண்மையில் அது நன்கு தெரிந்த சங்கதிதான். ஆனால் அந்தக் கோணத்தில் யோசித்திருக்கவேயில்லை. ஒரே காலகட்டத்தில் நூற்றுக்கணக்கான பெரும் செல்வந்தர்கள் உருவாதல், நூற்றுக்கணக்கான பங்களாக்கள் கட்டப்படுதல் எவ்வளவு பெரிய சமூக மாற்றமாய் அது இருந்திருக்கும். அதிலும் அவர்கள் அனைவரும் முன்பு வெறுக்கப்பட்ட, ஏளனம் செய்யப்பட்ட கீழ்சாதியினர் எனும்போது?

சென்ற காலங்களை அவரால் கற்பனையில் ஒதுக்க இயல வில்லை. அவர் வீடு கட்டப்படும்போது அவருக்கு இருபது வயசு. நாகர்கோவிலில் இருந்து பெரிய துரையை வீட்டுக்கு விருந்துக்கு அழைக்க வேண்டும் என்று அப்பாவிற்கு ஆசை. பெரிய துரை சுற்றுப்புற நிலவுடைமைகள் வீட்டுக்கெல்லாம் வந்து விருந்து உண்டு போயிருக்கிறார். அவர்கள் அவருடன் அமர்ந்து விருந்துண்ணும் பெரிய புகைப்படங்கள் அவர்கள் வீட்டு ஹாலை அலங்கரித்தன. அவர்கள் அந்தஸ்து ஒரே நாளில் கும்மென்று உயர்ந்துவிட்டது. ஒரே நாளில் அவர்களுக்கிருந்த இழிவு நீங்கிவிட்டது. அப்பாவின் ரப்பர் தோழர் மாத்யூ செறியான் வீட்டுக்கு பிஷப்பும் பெரிய

துரையும் வந்து விருந்துண்ட அன்று அழைக்கப்பட்ட விருந்தினராய் அப்பாவும் போயிருந்தார். விருந்து முடிந்து பேச்சு நடந்து கொண்டிருந்தபோது, மாத்தன் அவரைத் தனியாய்க் கூப்பிட்டு, துரையை விருந்துக்குக் கூப்பிடு என்றாராம். இதுதான் நல்ல சந்தர்ப்பம், தவற விட்டுவிடாதே என்று வற்புறுத்தினாராம். அப்பா துரையையும் பிஷப்பையும் தன் வீட்டுக்கு அழைத்தார். அதற்கென்ன விரைவாய் வர முயல்கிறேன் என்று கலெக்டர் துரை சொல்லிவிட்டார். பிறகுதான் அதன் பிரச்சனைகள் அப்பா கண்ணில் பட ஆரம்பித்தன. முதலில் வீடு நல்லதல்ல, மிகவும் பெரிய வீடுதான். அது சேறு குழைத்துக் கட்டப்பட்ட மைய வீட்டைச் சுற்றிச் சுற்றி அறைகளைத் தேவைக்கேற்ப எழுப்பிச் சேர்த்துக்கொண்டபடியே போனதால் பெரிய பரப்பிற்கு விரிந்து கிடந்தது. கிட்டத்தட்ட ஒரு விவசாயக்கிட்டங்கிதான் அது. உள்ளே எப்போதும் கும்மிருட்டு. ஓடும் ஓலையும் வேயப்பட்ட தாழ்ந்த கூரை. சாணிவாடை, தூசுவாடை, மட்கும் வாடை. தொழுவும் வயலும் அருகே இருந்தமையினால் கொசுக்களும் பூச்சிகளும் ஓயாமல் படையெடுக்கும். அப்பா ஒருநாள் சாயந்தரம் கூப்பிட்டனுப்பினார். அப்போதுதான் அப்பா தோட்டத்திலிருந்து திரும்பி வந்திருந்தார். கால் முழுக்கச் சேறு. அதைக் கழுவாமலேயே திண்ணை மீது அமர்ந்திருந்தார். அருகே மோர்ச் செம்பு காலியாய் இருந்தது. இருட்ட ஆரம்பித்திருந்தது. அவனைப் பார்க்காமல் வேறெங்கோ பார்த்தபடி உட்கார்ந்திருந்தார். நிழல் போல அவர் உருவம் தெரிந்தது. அவன் திரும்பித் தயங்கி நின்றான். அவரிடம் முகம் பார்த்துப் பேசுவதில்லை அவன். அவர் சட்டென்று திரும்பிப் பார்த்துப் புருவத்தைத் தூக்கி, "ம்ம்?" என்றார். பிறகு சற்று நேரம் பேசாமல் இருந்தார். இருட்டைப் பார்த்தபடி, "ஒரு வீட்ட கெட்டிப் போடலாம் ஏம்பில?" என்றார். அவன் குழம்பிப் போய் நின்றான். என்ன சொல்வது என்று புரிய வில்லை. இப்படி அவர் அவனிடம் கருத்துக் கேட்கும் பழக்கமே இல்லை. அவர் காதில் இன்னொருவர் பேச்சு ஏறவே ஏறாது. "ஒனக்கும் ஒனக்க பிள்ளியளுக்கு வேண்டித்தான் கெட்டுவது, ம்ம்? எப்பிடியும் ஒரு நல்ல வீடு வேணும், பைசாய்க்கு புத்தி முட்டொண்ணும் இப்ப இல்லை." அவன் தயங்கிய குரலில் "ஓம் அப்பா" என்றான். அவர் சற்று நேரம் மவுனமாய் இருந்த பிறகு, "தொரய வீட்டுக்கு விளிச்சணும் எண்ணு மாத்தன் சொன்னான். எனக்கும் அதில காரியம் உண்டும்ணுட்டு தோணுது. தொரய விளிச்சணும் எங்கி பிஸப்பயும் விளிச்சணும்" என்றார். அவர் எதையோ சொல்லத் தயங்குவது போலிருந்தது. "ஒக்கெ அப்பனுக்க இஷ்டம்" என்றான் அவன். "அதில்ல பில, கிறிஸ்தவன் வீட்டுக்குத்

தான் பிஸப்பு போவாரு எண்ணு சொன்னாவ நாகருகோவில்ல செண்ணு அன்னேழிச்சணும். மாத்தன் செல்லுதான், இன்னி என்னத்துக்கு வச்சு பாக்கியது. நாமளும் வேதக்காரன் மாராட்டு ஆனா என்ன கொளப்பம் எண்ணு. நம்ம சாதியில இப்பம் ஹிந்துக்களாட்டு ஒருவாடு பேரு இல்ல. என்ன சொல்லுதே...?" என்றார். எதுவும் யோசிக்க மனம் கூடவில்லை. பெரிய மனிதனாக மதித்து அப்பா அபிப்பிராயம் கேட்டதே பெருமிதமாக இருந்தது. "அப்பனுக்க இஷ்டம்" என்றார். "ஒக்கெ கணக்குதான். இதில ஒண்ணும் வலிய காரியம் இல்ல. நாடோடும்பம் நடுவே ஓடணும் அத்திரதான்" என்றார் அப்பா.

அதன்பிறகு அப்பா தயங்கவில்லை. மறுநாளே திருவனந்தபுரத்திற்கு மாத்தன் மாப்பிள்ளையைக் கூட்டிக்கொண்டு போய், எஞ்சினியர்களைப் பார்த்தார். அவர்களே சில பணியாட்களுடன் வந்தனர். எடுபிடி வேலைக்கு உள்ளூர்ப் பணியாட்கள். வீட்டை ஊருக்குள் புதிதாய் வாங்கிய தோட்டத்தின் நடுவே கட்டுவது என்று தீர்மானமாயிற்று.

ஒன்றரை வருடத்தில் பங்களா கட்டுவிக்கப்பட்டது. அதன் பணி நடக்கும்போது அநேகமாய் தினமும் போய்ப் பார்ப்பான். முதலில் ஏதோ ஒரு வீடு கட்டப்படுகிறது என்ற பிரக்ஞைதான். மெல்ல மெல்ல என் வீடு என் வீடு என மனம் உயிர்கொண்டது. குடிவந்த ஆரம்ப நாட்களில் சுவரைத் தொடவே பயம். பால் காய்ச்சி முடிந்த பிறகு துரை விருந்துக்கு வந்திருந்தார். அந்தப் படம்கூட ரொம்ப நாள் வீட்டு முகப்பில் மாட்டப்பட்டிருந்தது. அந்த வீடு மன அளவில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. சுகபோகங்கள்மீது இருந்த தயக்கத்தை இல்லாமலாக்கியது. எந்தக் கூட்டத்திலும் தாழ்வாக உணராதபடி உள்ளூர கர்வம் நிரம்பியது. மெல்ல மெல்ல விவசாயியின் வாழ்வின் எல்லா அம்சங்களும் உதிர்ந்து, செருப்பு அழுக்காகாமல் வாழும் நிலை ஏற்பட்டது.

மாறாதவள் பெரிய பெருவட்டத்தி மட்டும்தான். மினுமினுக்கும் கண்களும், புன்னகையுமே அவள் பாஷை. உலகத்துச் சர்வ ஜீவன்களை விடவும் தன்னைத் தாழ்ந்ததாய் எண்ணிக்கொண்ட அவளுக்கு ஒருபோதும் அதிகாரம் செலுத்தும் கலை கைவரவில்லை. பிறரைத் திட்டுவது அவளுக்கு சாத்தியமே இல்லை. வேலைக்காரர்களுக்கு உணவு பரிமாறும் போதும், மாடு கன்றுகளைப் பராமரிக்கும் போதும்தான், இயல்பாக இருப்பாள். அவளுள் இருக்கும் அன்பும் கனிவும் முழுக்க அப்போதுதான் வெளியே கசியும். கணவனிடமும் பிள்ளையிடமும் பயம்தான் அவளுக்கு. பதுங்கிப் பதுங்கி வந்து, தயங்கியபடிதான் சாப்பிடவே அழைப்

பாள். பெருவட்டரின் சொத்து விபரம் அவளுக்குத் தெரியாது. அவருக்கு இருந்த சமூக செல்வாக்கோ மரியாதையோ தெரியாது. ஆனால் எப்போது அவருக்குப் பசிக்கும் என்று தெரியும். பசித்தால் எப்படிக் கோபப்படுவார் என்று தெரியும். அவளிடம் எப்போதும் அதட்டும் குரலிலேயே பெரிய பெருவட்டர் பேசுவது வழக்கம். ஆனால் அவள் ஆசையோ வேண்டுகோளோ ஒருபோதும் மறுக்கப்படாது என்பது எல்லாருக்கும் தெரியும். பெருவட்டரின் பணம் நகையாய் அவள்மீது வந்து கொட்டிக்கொண்டிருந்தது. சகட்டு மேனிக்கு உடம்பு நிறைய அணிந்துகொள்வாள். ஒவ்வொரு அசைவிலும் சலங் சலங் ஒலி கேட்க நடப்பாள். அந்த ஒலியின் நுணுக்கம் பெரிய பெருவட்டருக்குத் தெரியும். திரும்பிப் பாராமலேயே "ம்ம்?" என உறுமுவார். அவள் தணிந்த குரலில் பேசப் பேசப் பொறுமையின்மை காட்டி அதட்டுவார். ஆனால் அவள் சொன்னது நடந்திருக்கும். அவள் அதை அறிந்திருந்தாளா என்ன? பின் ஏன் அப்படிப் பயந்தாள்? வெறும் நடிப்பா அது?

அவர்கள் உறவில் ஒரு தாள லயம் இருந்தது என்று இப்போது பட்டது. மூன்றாம் நபர் அறிய முடியாத தாளம். பரஸ்பரம் புரிந்து கொண்டவர்கள். எல்லைகளையும் நிர்ணயித்துக் கொண்டவர்கள். ஒருவர் உலகில் மற்றவர் புக முயலவில்லை. பரஸ்பர ஆதிக்கங்கள் இன்றி ஆக்ரமிப்பும் அடக்குமுறையும் இன்றி, சுதந்திரமாக தங்கள் வட்டங்களுக்குள் இருந்தார்கள். மனப் போராட்டங்கள் இல்லை. பரஸ்பர குரோத பாவம் இல்லை. அகங்காரப் போட்டி இல்லை. நொந்தும், நோக வைத்தும் கொல்லும் குரூரத் தினவுகள் இல்லை. அவர்கள் வாழ்வுதான் லட்சிய தாம்பத்தியம் என்று செல்லையா பெருவட்டர் எண்ணினார். அன்பைப் பெற்றும் கொடுத்தும் வாழ்ந்த லட்சிய வாழ்வு அது.

ஆனால் அப்பாவின் மேலோட்டமான முகபாவங்களையும் கோபங்களையும் நுணுக்கமாய்த் தன்னையறியாமலேயே பின்பற்றியவர் அவர். அவளை அலட்சியப்படுத்தவும், திட்டவும் முடிந்தது அவரால். உயிரோடு இருந்த போதெல்லாம் ஒரு சிறு குழந்தையை நடத்தும் பாணியில்தான் அவளை நடத்தியிருக்கிறோம் எனச் சட்டென்று ஒரு எண்ணம் ஏற்பட்டது. ஆனால் அன்பு இல்லாமல் இருந்ததா என்ன? அம்மா என்ற தளத்தில் வைத்து அதைக் காட்டவில்லை, அவ்வளவுதான். அவள் கேட்ட விசேஷ கைமுறுக்குக்காகக் காரை போட்டபடி அலைந்ததுண்டு. "சவம்! தின்னு சாவு. வேற என்ன சோலி ஒனக்கு?" என்று திட்டியபடி அவள் முன் வீசியதுண்டு. பொடி பண்ணிப் பரம சந்தோஷமாய்த் தின்பாள். சுருங்கிய முகம் ஆனந்தமாய் இழுபடும். அதில் ஒரு

துளியைப் பேரனுக்காக நீக்கிவைப்பது கண்டு தலையிலடித்தபடி, 'முளுக்க திண்ணு வைக்காத எளவு. நாளைக்கு ஆஸ்பத்திரிக்குக் கெட்டி எடுக்க என்னைக் கொண்டு ஒக்காது" என்று கத்தியிருக் கிறார். அவளுக்கு அதில் வருத்தமில்லை. திட்டப்படுவதில்கூட சந்தோஷம்தான். தின்றும் அனுபவித்தும் சுகித்தாள். இயல்பாய் செத்துப் போனாள்.

அதே சமயம், பணத்தை வாரி இறைக்கும் திரேஸ் எதையும் அனுபவிக்கவில்லை, சந்தோஷமாகவும் இல்லை என்று அவருக்குப் பட்டது. அவள் முகத்தில் எப்போதும் அதிருப்திதான். ஒரு செயலின் அதிருப்தியை வெல்ல அடுத்த செயலுக்கு. அதை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது. அவரும் வேறொரு கோணத்தில் அப்படித் தான். ஒரு போட்டியின் தோல்வியை மறக்க இன்னொரு போட்டி யின் போதைக்குத் தாவுகிறவர். அமைதியின்மையின் ஒரு முள் மனசுக்குள் நெருடியபடியே இருக்கிறது. அதை வெல்ல முடியாது. அதைத் தவிர்க்கலாம். தன் வாழ்வு முழுக்க அந்தத் தவிர்ப்பு முயற்சியிலேயே கழிந்து போயிருக்கிறது. திரேஸ் இன்னொரு பாதையில் இதே பயணம்தான் மேற்கொள்கிறாள் போலும் என்று திடீரென்று பட்டது. அவள் பெயருடன் சேர்த்து, அவருள் எழும் ஆங்காரம் எழவில்லை. அவளையும் உள்ளூர ஒரு முள் நெருடு கிறது என்ற நினைப்பு ஆறுதலாக இருந்தது. அவள் சந்தோஷமாய் இல்லை என்பதே எப்போதும் அவருக்கு உவப்பானதாய் இருந்து வந்துள்ளது. அவள் வாய்விட்டுச் சிரித்தாள் என்றால் அவருள் குரோதம் ஊறும். அவளைப் புண்படுத்த வேண்டும் என மனம் பொங்கும். ஆனால் முற்றிலும் இயற்கையாய் அவள் உல்லாச மடைந்து கண்டதில்லை. ஒவ்வொரு சுகபோகமும் அவளுள் முன்கூட்டியே அதிருப்தியை ஏற்படுத்திவிடுகிறது போலும். முதன் முதலாகத் தோட்டம் பங்களாவைப் பார்த்ததும் முகம் சுளித்தபடி "மியூசியம் போல இருக்கு" என்றவள் அவள்.

பெருவட்டர் மீண்டும் ஒரு வட்டம் பூர்த்தியாகித் தன் எண்ணங்கள் அந்தப் புள்ளியையே அடைந்துவிட்டதை உணர்ந்தார். பொன்னுமங்கலம் கழிந்து மண்சாலை தெரிந்தது. தூரத்தில் மண்ணுக்குள் இருந்து பொங்கி எழுவது போல பங்களா எழுந்து தெரியத் தொடங்கியது. எதிர்பார்த்திருந்த அளவு மனம் நிலைவிட்டுப் போகவில்லை என்பதும், பேச வேண்டியவையும் நடந்துகொள்ள வேண்டிய முறையும் நிதானமாய் மனசுக்குள் உருவாவதும் பெருவட்டரையே ஆச்சரியப்படச் செய்தது.

கார் பங்களா முன் நின்றதும் உள்ளிருந்து பெரிய ராஜபாளையும் பின்தொடர, மாத்யூ தரகனே வந்தார். பெருவட்டர்

இறங்குவது கண்டதும் ஒரு கணம் அவர் முகம் மாறுபட்டது என்று பெருவட்டருக்குத் தோன்றியது. அல்லது பிரமையோ என சந்தேகமும் வந்தது. சிரித்தபடி "சுகமா இருக்கியளா?" என்றார்.

"வரணும்... வரணும்" என்றபடி மாத்யூ அழைத்துப் போனார். பெரிய ஹாலில் அமர்ந்ததும், தனக்குள் எஞ்சிய தயக்கமும் உதிர்ந்து நிதானமும் குரூரமான நகைச்சுவை உணர்வும் நிறைவதைப் பெருவட்டர் உணர்ந்தார். மாத்யூ தரகனின் கலவரம் திறமையாக ஒளிக்கப்பட்ட முகம் அவர் தன்னம்பிக்கையை வளர்த்தது. "என்ன குடிக்கிறது?" என்றார் மாத்யூ. "ஓ ஒண்ணும் வேண்டாம் இப்பம். பய்யெ குடிச்சிலாம். நீங்க இரியுங்க" என்று பெருவட்டர் மாத்யூவின் கண்களைப் பார்த்தபடி சொன்னார். மாத்யூ பதறியபடி விழிகளை விலக்கியபடி, தயங்கி அமர்ந்தார். அவரைச் சுதாரித்துக் கொள்ள விடக்கூடாது என்றும் நிலைகுலைந்த மனநிலையை விட்டு அவரை மீளாமல் வைத்திருப்பது பேசப்போகும் விஷயத் துக்கு உதவியாக இருக்கும் என்றும் உணர்ந்தார். "திரேஸ் போன வாரம் இஞ்ச வந்திருந்ததா சொன்னார்" என்றார். மாத்யூவின் முகம் வெளிறியது. அவர் விரல்கள் நடுங்கத் தொடங்கின. சிரித்தபடி "ஆமா..." என்றார்.

பெருவட்டர் புன்னகைத்தபடி, "ஒண்ணுமில்ல, நம்ம பேணு எஸ்டேட்டுக்க காரியம்தேன்... ஒக்கெ கூடெ நோக்கி நடத்தப் பளுதில்ல. வித்துப் போடலாம் எண்ணு நெனக்குதேன். ஆடிட்டர் என்னவோ எஸ்டேட்டோ மற்றோ வாங்க பிளான் உண்டும் எண்ணு திரேஸ்கிட்ட சென்னியளாம்..."

"இல்லை. அதில்ல..." என்றார் குழம்பிய ஆடிட்டர்.

"மனசிலாவுது. சவ்வரியம் போலச் செஞ்சா மதி. திரேஸ் கேட்கச் சொன்னா. கேட்டுப் பாப்பம் எண்ணுதேன் இம்பிடு தூரம் வந்தது. அப்பனுக்குத் தேக சொகம் இல்ல. அது கொண்டு திரேஸ் வர ஒக்காது..."

"பெருவட்டருக்கு என்னது?" என்றார் மாத்தன் தரகன்.

"வயசுக்க ரோகம்தான். அப்பம் என்ன செல்லுது? நான் வேற ஆளப் பாக்கணுமா? எஸ்டேட்டு தெரியும் இல்லியா – பேணுல பஸ்ஸ நிறுத்தியதுக்க அருவதான்..."

குறுகுறுப்புடன் கண்கள் தன் முகத்தில் பதிந்திருப்பதைப் பெருவட்டர் உணர்ந்தார். பட்சி விழுந்துகொண்டிருக்கிறது என்று உறுதியாகப் புரிந்தது.

ஆனால், மனம் உள்ளூரத் தவித்துக்கொண்டிருந்தது. மாத்யூவை மட்டுமல்ல, தன்னையும் கூடத்தான் மூர்க்கமாய் அப்போது புண்படுத்தியபடி இருப்பதாய் அவருக்குத் தெரிந்தது. தன்னுடைய வாழ்நாளில் ஒருபோதும் தன்னை மன்னித்துக்கொள்ள முடியாத செயலைச் செய்துகொண்டிருப்பதாய் உள்ளூர மனம் சொன்னது. ஆனால் குரூரமான வெறி எக்களிப்புடன் அந்த விளை யாட்டைத் தொடர்ந்தார். வேறு வழி ஏதும் இருக்கவுமில்லை.

## ... 15 ...

'அறைக்கல் வீடும் எஞ்சிய சொத்துகளும் பங்கிடப்பட்ட வருடம் பிறந்ததனால் வேலப்பனுக்கு ஒரு வயதுக்குள்ளாகவே குளம்கோரி என்ற பெயர் கிடைத்துவிட்டது. பிரிந்து பிரிந்து கிளை விட்டுத் தழைத்திருந்த, பெரும் உறவுப் பட்டாளங்களுக்கு முழுக்கக் கசப்பான நினைவுகளை எழுப்பக்கூடியவனாக அவன் இருந்தான். அவமானமும் வெறுப்பும் இளம் வயதிலேயே அவனுக்குப் பழகிப் போயிற்று. குஞ்சி லெட்சுமி அம்மாகூட அவனைக் கண்டால் முகத்தைச் சுளிப்பாள். அதற்கேற்றாற்போல ஆவணி மாதம், ஆயில்யம் நாளின் ஞாயிற்றுக் கிழமையன்று, அவன் ஜனனம் சம்பவித்தது. அவன் பிறப்பே எல்லா வீழ்ச்சிக்கும் காரணம் என எல்லாரும் நம்ப ஆசைப்பட்டார்கள். சண்டைகளில் பெண்கள் அவனைப் பெற்றதற்காகக் குஞ்சி லட்சுமி அம்மாவைத் திட்டி நொறுக்குவார்கள். அவள்கூட அதை ஒப்புக்கொண்டு அதற்குக் காரணம் பெரிய மாமா நாகதோஷம் செய்ததுதான் என்பாள். நாளடைவில் வேலப்பனும் தன்னை ஒரு குளம்கோரி என்று எண்ணிக்கொள்ள ஆரம்பித்தான். தீய காரியங்களில் சகஜமாய் ஈடுபட அது அவனுக்கு அடிப்படை அமைத்துத் தந்தது. பிறருக்கு அருவருப்பூட்டும் காரியங்களைச் செய்வதில் மிகவும் உற்சாகம் உள்ளவனாகக் குளம்கோரி மாறினான். ஆயிரங்காலட்டையைத் தொடுவான். அது சுருண்டு கொள்ளும்போது எடுத்து மடியில் கட்டிக்கொள்வான். சின்னக் குழந்தைகளைக் கண்டால் மிட்டாய் வேண்டுமா என்பான். நீட்டப்பட்ட குழந்தையின் கையில் அட்டையை வைத்துவிட்டு ஓவென்று சிரிப்பான். பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை மட்டுமே படித்தான். அதற்குள் அவ் வட்டாரங்களில் தலைமுறைகள் ஞாபகம் வைத்திருக்கக்கூடிய செயல்களைச் செய்ய அவனால் முடிந்தது. குழந்தைகள் பொட்டலச் சோற்றைச் சாப்பிடும்போது ஹால் நடுவே பொட்டலம் கட்டிக்கொண்டு வந்திருந்த மலத்தைப் பிரித்ததும், பெண் ஆசிரியை வகுப்பு எடுக்கும்போது பின் இருக்கையில் நிர்வாணமாய் ஏறி நின்றதும், அவனுக்குப் பெரும் புகழை ஈட்டித் தந்தவை. எட்டாவதுடன் படிப்பை நிறுத்திவிட்டு அவ்வயதுக்குரிய

அசிங்கங்களில் திளைக்க ஆரம்பித்தான். அவன் அப்பா இரண்டு ஜில்லாக்கள் முழுக்க தாசிகளை வைத்திருந்தவர். அந்தச் சாதனையை முறியடிப்பதில் குளம்கோரி தீவிரமாக ஈடுபட்டதில் அவன் அருகே வரும்போதே அழுகிய மாமிச வாடை அடிக்க ஆரம்பித்தது. வேசிகளில் பேதம் ஏதும் ஒருபோதும் குளம்கோரி காட்டியிருந்ததில்லை. அவன் குண இயல்புகளில் அலாதியானது கோபம் என்ற உணர்வு அவனிடம் இல்லை என்பதுதான். சொல்லப்போனால் அருவருப்பு, அவமானம், பயம் முதலான மனித உணர்வுகள் ஏதும் அவனிடம் இல்லைதான். ஸ்ரீதரன் நாயர் விழுந்து, கடன் ஏறி, வீட்டை விற்று, எஞ்சிய ஏழு சென்டில் குடிசை போட்டுத் தாயும் மகளும் தங்க ஆரம்பித்த பிறகு, குளம்கோரி ஊர்ப்பக்கம் வருவதை விட்டுவிட்டிருந்தான். அவன் வளர்ச்சி நின்றுவிட்டிருந்தது. வாளைக் கருவாடு போல வளைந்த உடலில் சாம்பல் நிறப்பூச்சு படர்ந்துவிட்டிருந்தது. காதிலும் கண்ணுக்குக் கீழேயும் சிவப்பான தடிப்புகள் ஏற்பட்டன. உதடுகள் கருமையாய் வெடித்துவிட்டிருந்தன. அனைத்திற்கும் மேலாகப் பெண்களை ஆடு மாடுகளைப் போலக் கருதும் அத்வைத நிலையை அவன் எய்தி விட்டிருந்தான்.

பிறரால் வெறுக்கப்படுதல், அருவறுத்து ஒதுக்கப்படுதல் என்பது குளம்கோரியின் பிரதான ஆனந்தமாய் இருந்து வந்தது. தாசிகள் வட்டாரத்தில் பரவலான பரிச்சயமும் இருந்தது. எனவே தொழில் இயல்பாகவே படிந்து போயிற்று. குலசேகரம் வாடகை கார் நிலையங்களில் அந்தி மயங்கின பிற்பாடு காணப்படுவான். முக்கிய புள்ளிகளை வீடுதேடிப் போய்ச் சந்திப்பதும் உண்டு. அவனிடம் பணத்துக்குத் தட்டில்லை. ஆனால் மருந்து சாப்பிடுவதில் அவனுக்குச் சற்றும் நம்பிக்கை இல்லை.

வெறி பிடித்தது போல விடிகாலை முதல் பின்மதியம் வரை சீட்டாடுவான். வெறி ஆட்டத்தைக் குழப்பத் தோற்றபடியே இருப்பான். தோற்கத் தோற்க வெறி அதிகரிக்கும். மாலையில் வெறும் கையுடன்தான் எழுவான். குலசேகரம் பொன்னுமங்கலம் பகுதியில் மாதாகோயில் பின்புறம் உள்ள சிமிட்ரிகளில் சீட்டாடும் கும்பலுக்கு பிரதானமான வருமான மார்க்கமாய் குளம்கோரி விளங்கி வந்தான்.

அறைக்கல் வேலப்பன் நாயர் என்று தன்னை அறிமுகப் படுத்திக் கொள்வதில் குளம்கோரி பெருமகிழ்ச்சி அடைந்தான். பார்ட்டிகளிடம் பக்ஷீஸ் பெற்றுக்கொண்ட பிறகு, தான் அறைக்கல் குடும்பத்து அங்கத்தினன் என்றும், எம்.எல்.ஏ. ஏ.பி.நாயருக்கு இன்ன உறவு என்றும் விரிவாகக் கூறி அதன் பொருட்டுப் பத்து

ரூபாய் அதிகம் தர வேண்டும் என்று கேட்பான். அறைக்கல் உறவினர் யாரைக் கண்டாலும் – குறிப்பாய்ப் பெண்களை – குளம்கோரி ஆனந்தப் பரவசத்துடன் பாய்ந்து வருவான். நடுரோட்டில் பத்துச் செவி கேட்கக் குசலம் விசாரிப்பான். உறவுமுறை சொல்லிக் கூப்பிட்டு அன்னியோன்னியம் காட்டுவான். டீ குடிக்க அழைப்பான். பூ வாங்கித்தர முயல்வான். அவனை அடிக்க யாரும் துணியவில்லை. அழுகல் வாடை எழும் அவன் உடல் அதற்கு யாரையும் துணியச் செய்யாது. அவனுக்குப் பயந்து, மாலை வேளைகளில் அறைக்கல்காரர்கள் யாரும் குலசேகரம் பக்கமாய் வராமல் ஆனார்கள். குளம்கோரி கவலைப்படவில்லை. அறைக்கல் வீட்டுச் சொந்த பந்தங்களில் எங்கு எந்த விசேஷமானாலும் குளம்கோரி அங்கு போவான். அநேகமாய் அவனை உள்ளே விடாமலிருக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும். கும்பலின் நெளிவு சுளிவுகள் அறிந்த குளம்கோரி அனேகமாய் எப்படியோ உட்புகுந்தும் விட்டிருப்பான். குளம்கோரியின் சாவு பரவலாகப் பிரார்த்திக்கப்பட்டு வந்த விஷயம்.

குளம்கோரி ஒரு செட்டியார் சகிதம் சுகேசினியின் வீட்டுக்குப் போயிருந்தபோதுதான் செய்தியை அறிந்தான். செட்டியார் உள்ளே நுழைந்ததும், சுகேசினி தலையை வெளியே நீட்டி, "குளம்கோரி, போகாதே இரு" என்றாள். குளம்கோரி திண்ணை மீது படுத்துக் கொண்டான். பின்னிரவில் சுகேசினி வெளியே வந்து, அவனை எழுப்பினாள். திண்ணையில் அவனருகே அமர்ந்தபடி கைதூக்கிக் கூந்தலை முடிந்தாள். வியர்வை நெடி வீசியது. கோட்டுவாயிட்ட படி சாதாரணமாய், "நீ ஊருக்குப் போனாயா" என்றாள். "ஏன்?" என்றான் குளம்கோரி. "அப்போ நீ போகவே இல்லையா?" "ஏன்?" என்றான் குளம்கோரி, அமைதியிழந்தவனாக. "தங்கத்தின் விஷயம் இப்படி ஆயிற்றே!" "என்ன ஆயிற்று?" "உனக்கு விஷயமே தெரியாதா?" "இல்லை. என்னது?" "நேற்று அவள் அறைக்கல் குளத்தில் குதித்துச் செத்துப் போய்விட்டாளாமே?"

குளம்கோரி சற்றும் பதட்டம் காட்டாமல் கோலி போன்ற கண்களை இருளில் விழித்துப் பார்த்தான். பிறகு, "எந்தக் குளம்?" என்றான். "ஏன் அப்படிப் பார்க்கிறாய்?" "சொல்லு, எந்தக் குளம்?" "அறைக்கல் குளம் என்று சொன்னேனே..." என்றாள் சுகேசினி குழம்பியவளாய். குளம்கோரி, "ம்ம்" என்றான். "கைகால்களை பாவாடை நாடாவால் கட்டிக்கொண்டு குதித்திருக்கிறாள், பாவி" என்றாள் சுகேசினி.

குளம்கோரி மவுனமாய்த் தலைகுனிந்து அமர்ந்திருந்தான். சுகேசினி அவனை உற்றுப் பார்த்தப்படி, "எதற்குச் செத்தாளாம்?"

என்றாள். "ப்சி" என்றான் குளம்கோரி. "உனக்குத் தெரியாதா?" குளம்கோரி பதில் கூறவில்லை. "அவளுக்கும் பொன்னு பெரு வாட்டன் பேரனுக்கும் தொக்காமே..." குளம்கோரி "ம்ம்" என்றான். "உனக்கு நிஜமாகவே தெரியாதா?" என்றாள் சுகேசினி மீண்டும். "இல்லை." விளையாடாதே. ஊர் வம்பெல்லாம் உன் கையில் உன் வீட்டுக்கதை உனக்குத் தெரியாது என்றா சொல்கிறாய்?" குளம்கோரி கூரிய குரலில், "தெரியாது என்றுதான் சொன்னேனே" என்றான்.

சுகேசினி பெருமூச்சு விட்டபடி "எல்லாம் விதி" என்றாள். இருட்டை உற்றுப் பார்த்தபடி அமர்ந்திருந்தபோது அவளுக்குப் பெருமூச்சுகளாய் வந்துகொண்டிருந்தது.

குளம்கோரி எழுந்து வேட்டியை மடித்துக் கட்டினான். "போகிறாயா, செட்டிக்கு வழி தெரியாதே" என்றாள் சுகேசினி. "விடிந்த பிறகு பஸ்ஸில் போகட்டும்" குளம்கோரி நடந்தான். "குளம்கோரி, பைசா வாங்கினாயா?" என்று சுகேசினி பின்னா லிருந்து கூப்பிட்டுக் கேட்டாள். குளம்கோரி இருளுக்குள் மறைந்து விட்டிருந்தான்.

விடிந்தபோது, குளம்கோரி ஊருக்கு வந்தான். அவன் தலை கனத்தது. பையில் பணம் இருந்தது. அரை கிளாஸ் வார்னிஷ் இதமாக இருக்கக்கூடும். ஆனால் குளம்கோரி தலையை உலுக்கி, அந்த நினைவை உதறினான். பாலன் நாயரின் சாயாக்கடையை அணுகி, வராண்டாவில் நின்றிருந்த பையனிடம், "மாமா இல்லையா?" என்றான். பையன் உள்ளே ஓடினான். குளம்கோரி ஸ்வாதீனமாய்க் கடைக்குள் நுழைந்து, பெஞ்சியில் அமர்ந்து கொண்டான். உடனே நாலைந்து பேர் வெளியே போனார்கள். பாலன் நாயர் கையில் கரண்டியுடன் வெளியே வந்தார். அவனைக் கண்டதும் அவர் முகம் சிவந்தது.

"மாமா எப்படி இருக்கிறீர்கள்? மாமி எங்கே? போன வாரம் மாட்டாஸ்பத்திரிக்கு வந்தீர்கள் என்று கேள்விப்பட்டேன், பார்க்க முடியவில்லை. சுகம்தானே! பேணு போயிருந்தேன். நேற்றுத்தான் வந்தேன்..."

பாலன் நாயர் விரக்தியுடன் நின்றார்.

"ஒரு சாயா கடுப்பம் அதிகமாய்" என்றான் குளம்கோரி.

"நீ ஏன் உள்ளே வந்தாய்?"

"சும்மா வேண்டாம் மாமா, காசு தருகிறேன்."

"வெளியே போடா..."

"சூடாகாமல் ஒரு சாயா எடுங்கள் மாமா."

"போடா நாயே... வெளியே போடா!" பாலன் நாயர் கொதித்தார். "போன தடவையே உன்னிடம் சொன்னேன். இனிமேல் உள்ளே வந்தாயென்றால் கொன்று போட்டுவிடுவேன் என்று. மரியாதையாய் வெளியே போவது உனக்கு நல்லது."

"கோபம் மாமாவுக்கு கொஞ்சம் அதிகம்தான்."

"போடா என்றால்..."

சிரித்தபடி, குளம்கோரி காலைத் தூக்கி பெஞ்சு மேல் வைத்தான். "ஒரு சாயா எடுங்கள் மாமா..."

"உனக்கு சாயா மட்டுமல்ல... ஆங் என் வாயில் என்னமோ வருகிறது..."

"ஆஹா, மாமா, நானும் அறைக்கல் ரத்தம்தான்."

தாங்க முடியாதவர் போலப் பாலன் நாயர் உள்ளே ஓடினார்.

குளம்கோரி எதிரே அமர்ந்திருந்த கரிய கிழவனாரிடம், "என்ன ராமா சுகம்தானே?" என்றான். ராமன் சிரித்தார். அவருக்குக் குளம்கோரியைப் பார்க்க ஆனந்தமாய் இருந்தது. அவருடைய கரிய, சுருக்கம் விழுந்த முகத்தில் பல்லில்லாதவராய் வாய் ஒரு காய் பிளந்தது போல இருந்தது.

"ராமா, நீ அறைக்கல் குடியான்தானே...?"

"பின்னே..." என்றார் ராமன் சிரித்தபடி.

"நான் யார்? அறைக்கல் சின்னத் தம்புரான் இல்லியா?"

"ஆமா" என்றபடி கழுத்து நரம்புகள் பிணைந்து அசைய ராமன் குலுங்கிச் சிரிக்க ஆரம்பித்தார்.

"உனக்கு அறைக்கல் குடும்ப மகாத்மியம் தெரியுமா? சாட்சாத் அறைக்கல் மாதவன் நாயரைக் கேள்விப்பட்டிருக்கிறாயா? என் பாட்டாவுக்குப் பாட்டாவுக்குப் பாட்டா. அவர்தான் குடும்பத்தை ஸ்தாபித்தவர். பெரிய ஆள். எனக்குக்கூட அவர் முகசாடைதான்."

கிழவர் மோவாயில் வழிந்த எச்சிலைத் துடைத்தார்.

"என்ன சிரிப்பு? உனக்குத் தெரியுமா மாதவன் நாயரின் அருமை? சாமூதிரி நாட்டிலிருந்து ஓடிவந்த அசல் நாயர் அவர். இந்த ஊர் டூக்குளி நாயர் இல்லை. திருவட்டார் கோயிலிலே

மடைப்பள்ளி காவலனாக இருந்தார். அந்தக் கால மடைப்பள்ளி வேலையென்றால் இந்தக் காலம் போல இல்லை. சோறுக்கும் சோறு. வேளைக்கொரு அச்சி. பதினஞ்சு வயசு வேண்டும் என்றால் பதினஞ்சு. அம்பத்தஞ்சு வேண்டும் என்றால் அம்பத்தஞ்சு... ஹெ ஹெ ஹெ..."

வேறு இரண்டு பேர் கதை கேட்க உள்ளே வந்து அமர்ந்தனர். "அப்புறம்" என்றான் ஒருவன், ஆபாசமாய்ச் சிரித்தபடி.

"அந்தக் காலத்தில்தான் திப்புவின் பட்டாளம் நாஞ்சில் நாடு வழி திருவிதாங்கூருக்கு வந்தது. காதர்கான் என்று ஒரு முகிலன் பட்டாளத்துடன், பொன்மனை பொன்னுமங்கலம் குலசேகரம் வழியாகக் குடும்பங்கள் தோறும் கொள்ளையடித்துப் பெண்களை எல்லாம் பிடித்துக் கற்பழித்தபடி, நாசம் பண்ணிக்கொண்டு வந்தான். யமகிங்கரம் ஒவ்வொருத்தனும்! நம்ம ஆட்கள் கையில் வாட்கள் இருந்தது நல்லதாய்ப் போயிற்று. முகிலன் வருகிறான் என்று கேட்ட உடனேயே பெண்களை எல்லாம் கொன்று போட்டுவிட்டு, வீட்டுச் சாவியையும் களஞ்சியச் சாவியையும் தயாராக எடுத்துக் கையில் வைத்தபடி நின்றார்கள். பட்டாளம் கண்ணில் பட்டதும் "அல்லாஹோ அக்பர்! ஈஸ்வர அல்லா தேரே நாம்!" என்று ஒரே சாஷ்டாங்க நமஸ்காரம்... எப்படி?"

"பயங்கரம்!" என்றது கும்பல் சிரித்தபடி.

"இதிலே தமாஷ் என்னவென்றால், முகிலன் கையில் படாமலிருக்க இளம் பெண்களைத்தான் ஏமான்மார்கள் கொன்று போட்டார்கள். முகிலன் பார்த்தனன் காயில்லா விட்டால் பிஞ்சு என்று கையில் கிடைத்ததைக் கொண்டு போனான்... ஹெ ஹெ ஹெ..."

"அப்ப கௌவிய?" என்றான் ஒருவன்.

"கேக்காதே லாரன்சே கேக்காதே" என்றபடி குளம்கோரி சிரிக்க ஆரம்பித்தான். சாயாக்கடை சிரிப்பில் அதிர்ந்தது.

குளம்கோரி தொடர்ந்தான். "முகிலன்கள் திருவட்டாருக்கு வந்து முகாம் போட்டார்கள். ஒருநாள் அவகாசம் கொடுத்தான். அதற்குள் சரண் அடைந்துவிட வேண்டும். இல்லாவிட்டால் தவிடுபொடி. கோயிலில் அவனவனுக்குத் தொந்தியைச் சுமக்கவே வலு இல்லை. சாவி வைத்துவிட்டுச் சரணடைந்துவிட யோசித்தார்கள். அவன் முகாமுக்குப் போய்ச் சரணடைவதா இல்லை இங்கே வந்த பிறகு போதுமா என்று பெரிய தர்க்கம். ஆனால் அறைக்கல் மாதவன் நாயர் ஐம்பது பேரைக் கூட்டிக்கொண்டு கோயில் யானைகளை முன்னால் நடக்க விட்டபடி, முகிலன்

களுடன் சண்டைக்குப் போனார். அவர்கள் ஆயிரம் பேர்! இவர்கள் ஐம்பது பேர். எப்படி!"

"கஷ்டம்தேன்."

"ஆனால் அது ஆள்வேறே... அறைக்கல் ரத்தம் என்றால் சும்மாவா?" புஜங்களைத் தட்டிக் காட்டினான். எல்லோரும் வயிறு விக்கச் சிரித்தார்கள். "ராத்திரி போய் ஒரே அடி. அடியென்றால் சாதாரண அடி இல்லை; எம அடி! அரண்டு போய்விட்டான்கள் முகிலன்கள். அப்புறம் சுதாரித்துக் கொண்டு துரத்தி வந்தான்கள். தந்திரமாய் அவன்களை ஆற்றுப் படுகைக்குக் கூட்டிப் போய் விட்டார் அறைக்கல் மாதவன் நாயர். என்னை மாதிரியே கூர்மை யான புத்தி அவருக்கு. இவர்கள் ஐம்பது பேரும் ஓடிப்போய் ஆற்று நீரில் குதித்த பிறகு வெடி மருந்தைக் கொளுத்தி வீசிப் போட்டார். அந்தக் காலத்திலேயே வள்ளியாற்றுப் படுகை பெரிய காடு. கமுக்க மரம் முழுக்க அப்டி அட்டியாகக் குளவிக் கூடுகள். வெடி சப்தமும் வெளிச்சமும் குளவிகள் இருக்குமா? பறந்து வந்து கொட்டிற்று பார், கொட்டோ கொட்டு என்று. முகிலன்கள் அங்கே பிடித்த ஓட்டம் மார்த்தாண்டம் தாண்டித்தான் முடிந்ததாம். ஹே ஹே..." குளம்கோரி கர்ஜனை செய்து சிரித்தான்.

கேட்டிருந்தவர்கள் புன்னகையுடன் பரஸ்பரம் பார்த்துக் கொண்டனர். குளம்கோரி உற்சாகமாய்த் தொடர்ந்தான்.

"திப்பு சுல்தான் போன பிறகு, மகாராஜா – யார்? சாட்சாத் திருவிதாங்கூர் மகாராஜ ராமவர்மா ஆயில்யம் திருநாள் பொன்னு தம்புரான் – அறைக்கல் மாதவன் நாயரையும் அவர் வம்சத்தையும் இந்த பிரதேசத்தை ஆட்சி செய்கிற மாடம்பிகளாக நியமித்தார். அப்படி உண்டான வம்சம்தான் அறைக்கல் வம்சம் – தெரியுமா?"

"அறைக்கல் என்றால் தெரியாதவர்கள் உண்டா?"

"பின்னே!" என்றான் குளம்கோரி. "என்னிடம் போன வாரம் ஒரு தமிழன் – அசல் சுரும்பனை மாதிரி இருந்தான் – என்ன கேட்டான் தெரியுமா?" குளம்கோரி ஆர்வத்துடன் முன்னால் சரிந்தான். கண்களைச் சிமிட்டி, முகத்தைச் சுளித்தபடி, குரலை மாற்றி, "ஆசானே இங்கன அறக்கல் பொண்ணுவ எண்ணு ஒரு சாதி உண்டுமாமே, கொஞ்சம் அட்ஜெஸ்ட் செய்துதர முடியுமா? நானும் ருசி பார்க்கிறேன்" என்றான்... ஹெ ஹெ..."

அதற்குள் அறை நிரம்பி விட்டிருந்தது. சிரிப்பு ஓய வெகு நேரம் பிடித்தது. ஒருவன் "அது செரி" என்றான். "அப்புறம் நல்ல இளஇளசாய் ஒரு அறைக்கல் குஞ்சை அட்ஜெஸ்ட் செய்து

கொடுத்தேன். பெண்ணை மறுநாள் இடுப்பு வலிக்காக ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டியிருந்தது. அவனுக்கு பயங்கர குஷி. ஆசானே, நீ பணமாகக் கேக்காதே பவுனாகக் கேளு என்கிறான்."

உள்ளிருந்து பாலன் நாயர் பாய்ந்து வெளிவந்தார். அவர் உடம்பு வெலவெலத்தது. விரைத்த கைகளுடன், "எல்லாரும் வெளியே போங்கடா நாய்க்குப் பிறந்தவர்களே. போங்கடா" என்று கிரீச்சிட்ட குரலில் கத்தினார்.

சிலர் உரக்கச் சிரித்தார்கள். சிலர் எழுந்தார்கள்.

"அறைக்கல் நாயரின் கோபத்தைப் பார்!" என்றான் குளம்கோரி. "காதர்கானைக் கண்ட மாதவன் நாயர்கூட இப்படித்தான் கத்தினாராம்..."

"டேய் வேலப்பா! பானையிலே கொதிக்கிற தண்ணீர் இருக்கிறது. தலைவழியே விட்டுவிடுவேன். போ வெளியே!"

"ஆஹா என்ன வரவேற்பு! குளிக்க வெந்நீர் வேறு போட்டுத் தருகிறாராம். மாமாவுக்கு என்றைக்குமே என் மேல் பிரியம்தான். ஆமாம் மாமா, தோட்டம் பெருவட்டன் உங்களுக்கு என்ன தந்தான்?"

பாலன் நாயர் அறியாமலே, 'யார்?' என்றார்.

"செல்லையா பெருவட்டன்?"

"போடா நாயே!" பாலன் நாயர் ஆங்காரத்துடன் கிரீச்சிட்டார்.

குளம்கோரி உற்சாகமாய் ரசிகர்களிடம் திரும்பினான்.

"அசல் அறைக்கல் சரக்கு. தொட்டால் துள்ளும். அதை அந்தச் சின்னப் பெருவட்டன் மூன்று வருடம் அனுபவித்திருக்கிறான். சும்மா விடலாமா? அறைக்கல் குஞ்சுக்கு ஒரு நாளைக்க ரேட் என்ன தெரியுமா? ரூபாய் நூறு எண்ணி வைத்தால் சில சமயம் போதாமல் ஆகும். மூன்று வருடத்துக்குக் கணக்குப் போட்டுப் பாருங்கள். என்ன, கேட்க ஆளில்லை என்று நினைப்பா?"

"அனியாயம் குளம்கோரி! இதை இப்படி விடக்கூடாது" என்றான் ஒருவன்.

"குளம்கோரி, ரேட் கொஞ்சம் அதிகமில்லையோ?" என்றான் இன்னொருவன்.

"என்ன அதிகம்? சரக்கு என் சொந்தத் தங்கை. எனக்குத் தெரியாதா அவள் வளமை? பணம் பணமாகத்தான் கிடைக்க வேண்டும். அந்தப் பெருவட்டனை அப்படி விடப் போவதில்லை. அதற்காகத்தான் வந்திருக்கிறேன். விடியட்டுமே என்றுதான் காத்திருக்கிறேன்."

"வேலப்பா உன்னைக் கையெடுத்துக் கும்பிடுகிறேன். சவத்தைக் குத்தாதே" பாலன் நாயர் தழுதழுத்தார். "அந்தக் கிழவி உன்னைப் பெற்றவள். அவளை நினைத்தாவது நீ போய்விடு."

"போகியேன் மாமா, ஒரு சாயா போடுங்கள்."

பாலன் நாயர் நின்ற நிலையில் உருகி வழிபவர் போலப் பார்த்தார்.

குளம்கோரி எழுந்து வேட்டியைத் திரைத்துக் கட்டிக் கொண்டான். தொடையைச் சொறிந்தபடி வெளியே போனான்.

ராமன் "ஹாய் தூ..." என்று துப்பினார். "நாய்க்குப் பெறந்தபய. வெளங்க மாட்டான்" என்றார்.

ஆங்காரத்துடன் பாலன் நாயர் கையெடுத்துக் கும்பிட்டார். "திருப்தியாயிற்றா எல்லாருக்கும்? இனிப் போகலாமில்லையா?"

அசட்டுப் புன்னகையுடன் ஒவ்வொருவராய் எழுந்து போனார்கள்.

அதற்கு அடுத்த நாள் இரவு, பாலன் நாயர் கடையைப் பூட்டிவிட்டு, பெஞ்சுகளை இணைத்து போட்டுப் படுக்க ஆயத்தம் செய்துகொண்டிருந்தபோது, கதவு தட்டப்பட்டது. லாந்தர் திரியைப் பெரிதாக்கி கையிலெடுத்தபடி கதவைத் திறந்தார். முதலில் கண்ணில் பட்டவன் குளம்கோரிதான். கதவை மூடப் போனபோது தான் அவனுக்குப் பின்னால் துணி மூட்டையுடன் குஞ்சிலட்சுமி அம்மா நிற்பதைப் பாலன் நாயர் கண்டார்.

"மாமா, எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்" என்றான் குளம்கோரி. அவன் குரல் கம்மியிருந்தது. "அம்மா இனிமேல் மிஞ்சின வாழ்நாள் முழுக்க உங்கள்கூட நின்றுகொள்ள அனுமதிக்க வேண்டும்." அது குளம்கோரியே தானா என்று சந்தேக மூட்டியது குரல்.

பாலன் நாயர் மனமுருகிப் போனார். ஆனால், ஏதும் சொல்லத் துணியவில்லை.

"சும்மா வேண்டாம் மாமா. அம்மா பேரில் ஐம்பதாயிரம் ரூபாய் பாங்கில் போட்டிருக்கிறேன். மாசாமாசம் வட்டிப் பணம்

கிடைக்கும். அவள் செலவுக்கு மேலே உங்கள் அவசியத்துக்கும் அது போதும். அவள் காலம் முடிந்த பிறகு பணத்தை நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள். வயிற்றுக்குப் பஞ்சமில்லாமல் அவளைப் பார்த்துக் கொண்டால் போதும்."

"வேலப்பா உனக்கு ஏது பணம்?"

"செல்லையா பெருவட்டன் தந்தான்."

"சீ..."

"என்ன சீ?" குளம்கோரி பாம்பு போலத் தலையை முன்னால் நீட்டினான். "உங்களுக்கு வேண்டாமென்றால் அவள் காலம் கழிந்த பிறகு அதை எடுக்க வேண்டாம். அவளுக்கு அதில் எதிர்ப்பு இல்லை. என்ன சொல்கிறீர்கள்?" பாலன் நாயர் பதில் சொல்லத் தவித்தார்.

"மாமியிடம் கேளுங்கள் மாமா..."

பாகீரதியம்மா முன்வந்து, "உள்ளே வாருங்கள் மதனி" என்றாள். குஞ்சிலட்சுமியம்மா தயங்கியபடி உள்ளே போனாள். குளம்கோரி அவன் வாயிலிருந்து அத்தனை ஆயுளில் வெளி வந்திராத உணர்ச்சி மிகுந்த குரலில், "சந்தோஷமாய் இரு அம்மா! நன்றாய்ச் சாப்பிடு. உடம்பைப் பார்த்துக்கொள்" என்றான்.

"வேலப்பா மகனே" என்றாள் குஞ்சுலட்சுமி அம்மா... அவள் பொட்டலம் கீழே விழுந்தது. கை நீட்டியபடி அவனை நோக்கி வந்தாள்.

குளம்கோரியின் உதடுகள் வக்கரிப்புடன் வளைந்தன. அவன் பின்னகர்ந்தான். தகரப் பெட்டியைத் தூக்கி உள்ளே வைத்தான்.

"மாமா அந்த ஏழு சென்ட் மண் அங்கேயே கிடக்கட்டும். விற்க வேண்டாம். எங்கே போனாலும் சாவதற்காகத் திரும்பி வருவேன். அறைக்கல் குடும்பத்தில் பிறந்துவிட்டேனே." தொண்டை அடைக்க குளம்கோரி திரும்பிக்கொண்டான். "தெருவோரம் படுத்து சாகமாட்டேன் மாமா."

"வேலப்பா, நீ உள்ளே வா" என்றார் பாலன் நாயர்.

"வேலப்பா..." என்றாள் குஞ்சிலட்சுமி அம்மா.

குளம்கோரி இருளுக்குள் இறங்கினான். கருமைக்குள் அவன் வேட்டியை மடித்துக் கட்டும் அசைவு தெரிந்தது. பிறகு அதுவும் மறைந்தது.

## ... 16 ...

தெற்கு திருவிதாங்கூரில் நூற்றுக்கணக்கான பிரபுக் குடும்பங் களின் வீழ்ச்சிக்கு மருமக்கள் வழி மான்மிய ஒழிப்புதான் காரணம் என அந்தக் கால எச்சங்களான கிழவர்கள் நம்பி வந்தனர். தங்கள் வாழ்வு முறையை மாற்றிக்கொள்வது அசாத்தியம் என்று நம்பின இளம் தலைமுறையினரும் அப்படி நம்பாவிட்டாலும் கூடக் கூறிவந்தனர். நூற்றுக்கணக்கான கூட்டுக் குடும்பங்கள் சிதறின. கோர்ட்டுகளில் நாயர் பட்டாளங்கள் வந்து நிறைந்தன. தெருத் தெருவாகப் பெரிய இடத்துச் சமாச்சாரங்கள் நாறின. ஒரு விதமான பெரிய தோற்றத்தைத் தந்தபடி நின்ற வீடுகள், சட்டென்று அவற்றின் சுய உருவம் வெளிச்சத்துக்கு வரச் சிதறி விழுந்தன. உறவுகள் சிதைந்தன. புதுவிதமான உறவுகள் உருவம் கொண்டன. அதன் எதிர்விளைவுகள் பலரையும் பலவிதங்களிலும் பாதித்தன. அந்த மாற்றத்தினால் அடைந்தவர்களைவிட அதிகம், இழந்தவர் களின் எண்ணிக்கை. அவர்களில் பெரும் லாபம் அடைந்தவர் அறைக்கல் பாஸ்கரன் நாயர்.

அறைக்கல் வீட்டு மருமகப் பையன்களிலேயே ஒழுங்காகப் படித்தவர் அவர் ஒருவர் மட்டுமே. அவரில் விடிவைக் கண்ட பெரிய மாமா அப்புக்குட்டன் நாயர் அவரை நாகர்கோயில் மிஷன் ஸ்கூலிலும், பிறகு கல்லூரியிலும் அனுப்பிப் படிக்க வைத்தார். ஆங்கிலக் கல்வி உடனடியாகப் பாஸ்கரன் நாயரை மாற்றி மறித்தது. லீவுக்கு ஊர் வரும் அவரைப் பார்க்க பாட்டிகள் கைத்தாங்கலாகத் திண்ணைகளுக்கு அழைத்து வரப்பட்டனர். கோட்டும் சட்டையும் தொப்பியும் பூட்ஸும் அணிந்த அவர் நடந்து பார்வையை விட்டு மறையும் வரை ஆச்சரியத்துடன் பார்த்து நிற்கும் பாட்டிகள், பின்பு நாலு பேர் கேட்க மார்பில் அறைந்து, "மகாதேவா, இன்னும் என்னென்ன கண்ட பிறகு இந்த ஜென்மம் ஒடுங்குமோ!" என்று அங்கலாய்த்துத் தர்ம வீழ்ச்சியைப் பற்றிப் பிரலாபித்தார்கள். பெண்களின் வம்புப் பேச்சில் அறைக்கல் சின்ன நாயர் இடம் பெறாத நாளே இல்லை. எல்லோரும் முடிந்தவரை பழித்தாலும்கூட தங்களுக்கு வேண்டியவர்கள் இப்படி கோட்டு சூட்டுப் போட

வேண்டும் என்று உள்ளூர ஆசைப்பட்டார்கள். அதன் விளைவாக மிஷன் ஸ்கூலுக்குப் போகும் நாயர்களின் தொகை அதிகரித்தது. அறைக்கல் பாஸ்கரன் நாயர் உள்ளூரப் பெண்களின் கனவு நாயகனாகவும் இருந்தார். அவரும் அதைச் சாதகமாய்ப் பயன் படுத்திக் கொண்டதாக வதந்திகள் உண்டு.

ஒருமுறை திரும்பி வந்தபோது பாஸ்கரன் நாயர் வேறு மாதிரியாக இருந்தார். தூய வெண்ணிறக் கதர் ஆடை, சிகரெட் இல்லை, பூட்ஸ் இல்லை மட்டுமல்ல சாத்தான் குடியிருக்கும் மகாதேவர் கோயிலை இடிக்க வேண்டும் என்று முழக்கமிட்டு வந்தவர், இப்போது அது பரிபாவனமான இடம் என்றும், கடவுள் முன் மனிதர்கள் அனைவரும் சமம் என்றும், தாழ்ந்த சாதிக் காரர்களைக் கோயிலுக்குள் விடுவதற்குத் தர்ம விதி இருக்கிறது என்றும் கூற ஆரம்பித்தார். அறைக்கல் நாயர் என்பதாலும் நடக்கிற காரியமா என்று எண்ணியதாலும் யாரும் அவரைச் சட்டை செய்ய வில்லை. பாஸ்கரன் நாயர் கதர்த் துணிகள் கொண்டு வந்து விற்க முயன்றார். அதை அழுக்குக் கரங்களுடன் பரிசீலனை செய்த நாடார் விவசாயிகள், அது சும்மா கிடைக்குமா என்று விசாரித் தார்கள். பாதிரிமார் சும்மா தருகிறார்களே என்று விவாதம் செய் தார்கள். காந்தி ஏழைகளுக்குத் தானம் செய்வதற்காய் ஒப்படைத்த துணிகளை அறைக்கல் பாஸ்கரன் நாயர் விற்பனை செய்கிறார் என வதந்தி பரவியது. எனினும் ஒரு நாயர் தங்கள் சேரிக்குள் வந்தது அவர்களுக்கு திருப்தி அளித்தது. அவர் மனநிலை சரியில்லாமையினால்தான் இப்படியெல்லாம் செய்கிறார் என நம்பினாலும்கூட, அவர் அவர்களிடையே செல்வாக்குப் பெற்றார். அவருக்கு சீடப் பிள்ளைகள் கிடைத்தனர். அவர் காங்கிரஸ் மாநாட்டுக்கு அங்கிருந்து நூறு நாடார் பையன்களைக் கூட்டிச் சென்றது முதல் செய்தி. பிறகு அவர் அங்கேயே ஒரு கதர் நூற்பாலையும் ஸ்தாபித்தபோது அவரை காங்கிரஸ் ஏமான் என்று பரவலாய் மதிப்புடன் கூற ஆரம்பித்தார்கள். அவர் கூப்பிட்ட குரலுக்கு வர நூறு பேர் எப்போதும் இருந்தார்கள். திறபரப்புக் கோயிலில் தாழ்ந்த சாதிக்காரர்களுக்கு பிரவேசனம் ஏற்படுத்தித் தர ஊர்வலமாய் அவர் நடத்திச் சென்ற நாடார் பையன்களுக்கு முரட்டுத்தனமாய் அடி கிடைத்தது. உடனே அவர் தெற்குத் திருவிதாங்கூரின் முக்கிய தலைவர் ஆனார். அக்காலங்களில் சுதந்திரமும் கிடைத்தது.

மீசை முளைக்காத பிராயத்திலேயே அறைக்கல் பாஸ்கரன் நாயர் தலைவராகவும், பேச்சாளராகவும் அறியப்பட்டார். திருவிதாங்கூர் மந்திரி சபையின் உறுப்பினராகவும் ஆக முடிந்தது

அவரால். அவரை விழத்தட்டியது மாவட்டப் பிரிவினை ரகளைதான். அதில் எந்த நிலைப்பாடு எடுக்க வேண்டும் என்று அவருக்குப் புரியவில்லை. தமிழ் – மலையாள போராட்டம், பழைய நாயர்–நாடார் போராட்டமாய் மாறுவதை அவர் கண்டார். பட்டம் தாணுப்பிள்ளையின் போலீஸ் நாடார் போராளிகளைத் தொடுவட்டியிலும் ஆற்றூரிலும் சுட்டுத் தள்ளியது. உள்ளூர் நாடார்கள் சிறுசிறு மல்லர் குழுக்கள் ஸ்தாபித்து நாயர்களைத் தாக்கினார்கள். சில வாரங்கள் அக்ரமமும் அராஜகமும் தாண்டவமாடியது. அந்தச் சில நாட்கள் கழிந்தபோது, அவருக்குப் பின்னால் ஒரு நாடார் பையன்கூட இல்லாத நிலை ஏற்பட்டிருந்தது. தாணுலிங்க நாடாரும் மார்ஷல் நேசமணியும் அவர்களின் பெருந்தலைவர்களாக, உருமாறினார்கள். ஏ.பி. கொஞ்ச நாள் அரசியல் வட்டாரங்களில் தலைகாட்டவில்லை. மாவட்டப் பிரிவினைக்குப் பிறகு அவர் தம்மை ஒரு கேரளத் தலைவராக நிலைநாட்டிக் கொள்ள முயன்றார். மருமக்கள் மானிய ஒழிப்பு இயக்கம் அப்போது கேரளாவில் உச்சகட்டத்தில் இருந்தது. ஏ.பி. வெகு விரைவில் நாயர் சொசைட்டியின் முக்கிய பிரச்சாரகர் ஆகவும், தந்தை வழி சொத்துரிமைக்காகப் போராட்டத்தின் முக்கிய போராளியாகவும் அறியப்படலானார். இதன்மூலம் திருவிதாங்கூர் நாயர்களின் முக்கிய தலைவராக அவரை நாயர் இளைஞர்கள் கருதத் தொடங்கினர். வயதானவர்கள் அவரைத் தீவிரமாக எதிர்த்தாலும்கூட, எதிர்ப்பாளர்களின் தொகை சுருங்கி வந்தது. அதற்குக் காரணம் ஏ.பி. கூறிய திட்டம் மொத்தத்தில் எல்லோருக்கும் கொஞ்சம் கொஞ்சமாக பணம் கிடைக்கக் காரணமாக அமைந்தது என்பதுதான்.

அறைக்கல் வீடு பங்கு போடப்பட்டது, ஏ.பி.யின் வாழ்வில் பெரிய திருப்புமுனையாக அமைந்தது. அறைக்கல் வீட்டுக்குள் ஏழெட்டுக் கட்சிகள் தங்களுக்குள் கடும் துவேஷத்துடன் மோதிக்கொண்டு விட்டிருந்தன. ஏ.பி. பாகப் பிரிவினையை முன்வைத்தார். எல்லாரும் ஒட்டு மொத்தமாய் எதிர்த்தார்கள். ஏ.பி. எல்லாரையும் பேசி சம்மதிக்க வைத்தார். பாகப் பிரிவினையில் எழுந்த பல நூறு சிறு பூசல்களால் அந்தப் பகுதியிலேயே பதற்றம் நிலவியது. அவர்கள் பரஸ்பரம் வீசிய அவதூறுகளால் ஊரே பல மாதங்கள் நாறியது. தனக்குக் கிடைத்த மிச்சத்துடன் ஏ.பி. திருவனந்தபுரத்தில் ஒரு மேனோனின் மகளை மணம் புரிந்துகொண்டார்.

அறைக்கல் வீடு பங்கு போடப்பட்டது, ஏ.பி.க்கு புதிய ஒரு பாதை காட்டியது. பரஸ்பரம் குத்துப் பழி கொலைப் பழி என்று நின்ற குடும்பத்து அங்கத்தினரிடையே பொதுக்கட்சியாக அவர்

இருந்து செயல்பட்டார். அதில் லாபமும் இருந்தது. தொடர்ந்து திருவிதாங்கூர் முழுக்க இந்த நூற்றுக்கணக்கான குடும்பங்களைப் பங்கிடும் செயலில் ஏ.பி. நடுவராய்ப் பணிபுரிந்தார். சட்ட நுட்பங் களை வளைக்கவும் ஒடிக்கவும் நிபுணர் என்று அறியப்பட்டார். சிறையின் கீழ் முதல் சுசீந்திரம் வரை ஓடி ஓடி உழைத்தார். அவர் சொத்து பெருகியது. விரைவில் திருவிதாங்கூரில் குறிப்பிடத்தக்க பணக்காரர்களுள் ஒருவராய் அவர் ஆனார். நாயர் சொசைட்டி அரசியல் கட்சியாக மாறியபோது, அவர் தலைவராகவும், மந்திரி சபைகளின் ஓரங்களில் ஒட்டிக்கொள்பவராகவும் ஆனார்.

திருவனந்தபுரம் பேட்டையில் இருந்த ஏ.பி.யின் பெரிய பங்களாவிற்கு முன்னால் இரண்டு சிவப்பு பியட் கார்கள் கிடப்பதைப் பெருவட்டர் பார்த்தார். அவருக்குள் ஏதோ அமைதி யின்மை நிறையத் தொடங்கியது. தன் காரை நிறுத்திவிட்டுப் பெட்டியை எடுத்தபடி, அவர் வெளியே வந்தபோது, வேலையாள் ஓடிவந்தான். பெட்டியை வாங்கக் கை நீட்டினான். "ஏமான் இருக்காரா?" என்றார் பெருவட்டர். "இருக்கிறார்" என்றான். இளஞ்சிவப்பு சுவர்களும், ரத்தச் சிவப்பு உறை போடப்பட்ட ஃபர்னீச்சரும், வெண்ணிற தரை விரிப்புமாய், அதி நவீன மோஸ்தரில் இருந்த ஏ.பி.யின் வரவேற்பறைக்குள் நுழையும் போதெல்லாம் பெருவட்டருக்கு எழும் பயம் இப்போதும் ஏற்பட்டது. அமைதியிழந்தவராய் சோபாவில் அமர்ந்துகொண்டார். வியர்வை வழியத் தொடங்கியது. உள்ளிருந்து இன்னொரு வேலையாள் வந்து, ஏ.பி. மேலே சிலருடன் பேசியபடி இருப்பதாகச் சொன்னார். அவர் வருகையை உடனடியாக அறிவித்துவிடுவதாய்ச் சொல்லிவிட்டு, மின்விசிறியைப் போட்டான். "குடிக்க ஏதாவது எடுக்கட்டுமா?" என்றான். குளுமையாக ஏதாவது கொண்டுவரச் சொன்னார் பெருவட்டர்.

பத்துப் பதினைந்து நிமிடம் காக்க வேண்டியிருந்தது. அதன்பின் வெளியே கார்கள் சீறும் ஒலி கேட்டது. ஹாலுக்கு வராமலேயே அவர்கள் போய்விடுவார்கள் என்று பெருவட்டர் எதிர்பார்த்திருக்கவில்லை. இனிமேல் எழுந்துபோய் யாரென்று பார்ப்பதும் மரியாதையான விஷயம் இல்லை. காரின் எண்களைக் குறித்துக்கொண்டிருக்கலாம் என்று எண்ணினார். ஒருவிதமான எரிச்சலும் பதைப்பும் பெருகிக்கொண்டிருந்தது.

அகலமான புன்னகையுடன் ஏ.பி. வெளி முற்றத்திலிருந்து உள்ளே வந்தார். கும்பிட்டபடி, கண்ணாடிக்குள் கண்கள் சிரிக்க, "வாங்க வாங்க" என்றார்.

பெருவட்டர் விநோதமாய், அவரை உற்றுப் பார்த்தபடி பேசாமல் நின்றார். நடிப்பும் சாதுரியமும் அவரை விட்டு விலகி விட்டிருந்தது. ஏ.பி. உட்கார்ந்தபடி, "ரவீ, சாருக்குக் குடிக்க என்ன கொடுத்தாய்?" என்றார். 'குடிச்சாச்சு' என்றார் பெருவட்டர். "நானே அங்கு வந்து பார்க்க வேண்டும் என்றிருந்தேன். எங்கே ஒழிகிறது பாருங்கள்" என்றார் ஏ.பி.

"என்ன ஆச்சி ஏல்பிச்ச காரியங்க?" என்றார் பெருவட்டர் கடுமையான குரலில்.

ஏ.பி.யின் புன்னகை மறைந்தது. சற்று முன்னோக்கிச் சரிந்து அமர்ந்தபடி, "பெருவட்டர் தப்பாய் நினைக்கக்கூடாது" என்று ஆரம்பித்தார். முகம் இறுக உறைய 'செல்லும்' என்றார் பெருவட்டர்.

"காரியங்கள் நாம் திட்டம் போட்டது போல இல்லை. எம்.எல்.ஏ.க்கள் காலை வாரி விட்டான்கள். எல்லாமே சிவப்பன் களுக்குத் தெரிந்துவிட்டது. அவர்களை ஆசை காட்டி வைத்திருக் கிறான். தாமோதரனுக்கு ஒரு கார்ப்பரேஷன் கிடைக்கப் போகிறது. தங்கப்பன்..." "எண்ணு சொன்னா...?" என்றார் பெருவட்டர்.

"பொறுமையாகக் கேட்க வேண்டும் பெருவட்டரே. என்னால் ஒன்றும் செய்ய முடியாத நிலை. எம்.எல்.ஏக்கள் கூட வராமல் நான் மட்டும் கட்சி மாறி என்ன பிரயோசனம்?"

பெருவட்டர் கண்களைச் சுருக்கியபடி, உற்றுப் பார்த்தபடியே இருந்தார். அவர் தலை நடுங்கியது. சட்டென்று ஒரு பெருமூச்சு அவரிடமிருந்து வந்தது. தளர்ந்து சோபாவில் சரிந்தார்.

இறுக்கமான சில நொடி மவுனம் கழிந்தது.

"ஓக்கே ஆயிப் போச்சு இல்லியா?" என்றார் பெருவட்டர்.

ஏ.பி. பதில் கூறவில்லை.

"இன்ன ஒரு வாரம் இருக்குமா இந்த சர்க்கார்?"

"ஒரு வாரம் ஆகாது."

"அது செரி, ஏ.பி.க்கு என்ன கிட்டும்?"

ஏ.பி. புன்னகைத்தார்.

"இரிகேஷன் அன்ட் ஃபாரஸ்ட். அதில் கொறஞ்சு ஒண்ணுக்கும் ஏ.பி. சம்மதிக்க மாட்டிய."

"பெருவட்டரே இப்போது ஒன்றும் குடிமுழுகிப் போய்விட வில்லை. நான் சிவப்பன்களிடம் பேசி..."

“நீரு மயித்தினதொக்கெ மதி; நான் குடுத்த பைசாவைத் திரும்பிக் குடுத்துப் போடும்.”

ஏ.பி.யின் முகம் இறுகியது. அவர் இளகி அமர்ந்தார்.

“பணம் – அது நாம் அட்ஜஸ்ட் செய்யலாம், பெருவட்டரே”

“அட்ஜஸ்டா? எடுவில பணத்த... கள்ளக் கூதறய்க்க மோனே, களிச்சுதியா?”

ஏ.பி. நிதானமாய், “இதோ பாருங்கள் பெருவட்டரே, சத்தியமாய்ச் சொல்கிறேன்; பணம் என்னிடம் இல்லை. எம்.எல்.ஏக்கள் திருப்பித்தர வேண்டும். மகா கள்ளப் பயல்கள். நான் கேட்டுப் பார்க்கிறேன். எல்லாமே பிளாக் மணி பாருங்கள். கேட்டால் விதண்டாவாதம் செய்வார்கள். நான் மந்திரி வேறு ஆகப் போகிறேன்” என்றார். பெருவட்டர் பாய்ந்து எழுந்தார். “கள்ள நாய்க்குப் பெறந்த பயலே; களிச்சுதியா? நீ மந்திரி எண்ணு சொன்னா பேடிச்சுப் போவேன் எண்ணு நெனச்சியா? எடுபில பணத்த!” பெருவட்டரால் பேச முடியவில்லை. மூச்சு இரைத்தது.

“பெருவட்டர் இப்படிச் சூடாகிப் பிரயோசனம் இல்லை. பணம் எங்கே போகிறது? ஒருவிதமான ஆதாரமும் இல்லாத பணம் அது. போகட்டும். பெருவட்டர் கோர்ட்டுக்குப் போக மாட்டீர்கள். கோர்ட்டுக்குப் போனால்தானே ஆதாரம் கேட்பான். நான் சிவப்பன்களிடம் பேசிப் பார்க்கிறேன்.”

“ஏ.பி.” என்றார் பெருவட்டர், சட்டென்று கம்மிய குரலில்.

“வயித்தில் அடிச்சுப்பிடாதியும்... இருவது வரியமாட்டுக் கூட்டுக்காரன் மாராட்டு இருக்கம். ஒக்கெ போவப்போவுது. ஏ.பி.க்கு எனக்க ஸ்திதி அறியிலாமில்லியா? எனக்கப் பணத்தக் குடுத்துப் போடும்.” கண்கள் சட்டென்று கலங்கி வழிய, விரல்களால் இமைகளை அழுத்திக்கொண்டார்.

“பெருவட்டர் போகணும், நாம் பிறகு பேசுவோம்” என்றார் ஏ.பி. “பெருவட்டர் இங்கே இப்போது பேசிப் பிரயோசனம் இல்லை.”

“ஏ.பி. நீரு ஒண்ணும் செய்யாண்டாம். குடுத்த பணத்தைத் திருப்பிக் குடுத்துப் போடுங்க போரும். கெதி கெட்டு ஓம்ம நம்பினேன்...”

“பெருவட்டர் போங்கள் – பிறகு பேசலாம்” என்றபடி ஏ.பி. எழுந்துவிட்டார்.

சட்டென்று தானிருக்கும் நிலைமை பெருவட்டரைத் தாக்கியது. உள்ளூர அற்பப் பதராக எண்ணியிருந்த ஒருவன் முன் கெஞ்சி மன்றாடி அழுது... சுய வெறுப்பும் ஆங்காரமும் அவர் மனசை எரித்தன. பெட்டியை எடுத்துக்கொள்ள முடியாமல் கை நடுங்கியது.

எழுந்தவர் ஏ.பி.யை உற்றுப் பார்த்தார். அவர் உடம்பு பதறியது. முகம் உருகிக்கொண்டிருந்தது. ஏ.பி.யின் முகத்தில் ஒருவித பொம்மைத்தனம் இருந்தது. ஈவிரக்கமற்ற அந்த முகபாவத்தை எந்தெந்த முகங்களில் எத்தனை காலமாய்க் கண்டு வந்தவர் அவர்! எத்தனை நுட்பமாய் அவற்றைக் கையாண்டவர்; ஒருவேளை, அன்று தன் முகமும் அப்படித்தான் இருந்ததா என்ன?

ஏ.பி. சிரித்தபடி, "பயப்பட வேண்டாம் பெருவட்டரே, எல்லாம் சரி செய்துவிடலாம்" என்றார்.

இரக்கம் துளியாவது இருக்காதா இந்த மனசில்! பெருவட்டரின் கண்கள் அதன்மீது அலைந்தன. "ஏ.பி. தயவு பண்ணும்" என அவர் கையைப் பற்றிக்கொள்ள பெருவட்டர் கை நீட்டினார்.

ஏ.பி. பின்னகர்ந்தபடி, "பெருவட்டர் இங்கே நின்று அழுது ஒரு பிரயோசனமும் இல்லை" என்றார்.

அடிபட்டதுபோலப் பெருவட்டரின் ஆக்ரோஷம் பீரிட்டது. "கள்ள நாயே... ஒன்ன சும்மா விட்டுப் போவேன் எண்ணு நெனச்சியா? நாயே. எனக்கும் ஆளு உண்டுல. ஒன்ன விடமாட்டேன் பாத்துக்க" என்று கத்தினார். "சரி; அப்படியானால் அவர்களிடமே போய்ச் சொல்லும்" என்றார் ஏ.பி. நிதானமாய்.

"ஒனக்கே சீவன் எனக்க கையிலதான் பாத்துக்க. நான் பொன்னு பெருவட்டனுக்கு மகன் எங்கி..."

"வசதிப்பட்டதைச் செய்யுங்கள் பெருவட்டரே" என்றார் ஏ.பி. சற்றும் நிதானம் இழக்காமல். அவர் முகம் மேலும் இறுகிச் செப்புச் சிலைபோல் ஆயிற்று.

பெருவட்டர் மூச்சிளைத்தபடி படிகளில் நின்றார். ஏ.பி. குரலைச் சற்றுத் தணித்து, "என்னிடம் கோபப்பட்டு என்ன பிரயோசனம் பெருவட்டரே? நான் சொன்னேனே. எம்.எல்.ஏக்கள் காலை வாரி விட்டார்கள். நான் என்றுமே பெருவட்டருக்கு வேண்டியவன்தான்... அப்புறம் ஒரு விஷயம்... லிவி ஏதோ பொண்ணைக் கொன்றுவிட்டதாய்ப் பேச்சு அடிபடுகிறதே... பெரு

வட்டர் இடைப்பட்டு அதைத் தற்கொலையாக மாற்றிவிட்டீர்களாம்... கேள்விப்பட்டேன், நான் நம்பவில்லை. கம்யூனிஸ்ட்காரப் பயல்கள் இங்கே வந்து கத்தினார்கள். சும்மா விடக்கூடாது. சி.பி.ஐ. விசாரணை வேண்டும் அது இது என்று. நான்தான் நம்ம பெருவட்டராயிற்றே என்று சமாதானப்படுத்தி அனுப்பினேன்."

பெருவட்டரின் வயிற்றுக்குள் குளிர் பரவியது. ஏ.பி.யின் சிரிக்கும் கண்கள் அவர்மீது படிந்திருப்பது பீதியூட்டியது. அவர் உடல் நடுங்க ஆரம்பித்தது. "பாவி" என்றார். அதற்குள் கண்கள் நிரம்பிவிட்டன. பாய்ந்து முற்றத்தில் இறங்கி காரை நோக்கித் துரத்தப்பட்டவர் போல ஓடினார்.

## ... 17 ...

வீடு மொத்தமும் பெருவட்டரின் மரணத்திற்காகக் காத்திருப்பது போலிருந்தது குஞ்சிக்கு... அது அவனை உள்ளூரத் தவிக்க வைத்தது. முப்பத்தைந்து வருடமாகிறது அவன் வீட்டோடு வந்து. வேறு வீடோ, குடும்பமோ, உறவோ அவனுக்கு இருந்ததில்லை. அன்று பெருவட்டர் ராட்சதன் போல உலவி வந்த காலம். எந்தக் கூட்டத்திலும் அவர் காலடியோசையே அமைதியை ஏற்படுத்தி வந்த காலம். பேணு எஸ்டேட்டில் ரப்பர் மரத்தில் ஒட்டியிருக்கும் எஞ்சிய ரப்பர் ஒட்டுக்கறையைத் திருடுவதற்காகப் புகுந்தவன், பிடிபட்டுக் கொண்டான். கை கால்களைக் கட்டி வைத்திருந்தார்கள். தினம் எஸ்டேட்டைப் பார்க்க வரும் பெரிய பெருவட்டரின் பார்வைக்காக, குஞ்சி மூத்திரம் பெய்து உடம்பை நனைத்துக்கொண்டவனாகக் கண்ணீர் வழிய அடிபட்டு வீங்கிய முகத்துடன், கைகள் ரப்பர் மரத்தில் பிணைக்கப்பட்டு நின்றான். மத்தியானம் பெருவட்டர் வந்தார். அதற்குள் அடியும் இம்சையும் அவனை அமைதியடையச் செய்துவிட்டிருந்தன. கண்களில் ஒருவித குரோதமான வெறிப்பு வந்துவிட்டிருந்தது. பெருவட்டர் வந்துவிட்ட கோலாகலங்கள் மிக மெலிதான ஒரு பதைப்பையே அவனில் ஏற்படுத்தின. அவர் காலடியோசை கேட்டு நிமிர்ந்து பார்த்தான். வானளாவிய கரிய உருவம் அவனுக்குள் ஒரு பிரமிப்பைத்தான் ஏற்படுத்தியது. அத்துடன் அவர் ஏதும் செய்யமாட்டார் என்ற நம்பிக்கையும் அவனுள் முளைத்தது. அவரையே பார்த்தான். அவரைச் சுற்றிப் பணியாட்களும் தோட்டக் காவலர்களும் கலவரத்துடன் நின்றிருந்தனர்.

பெருவட்டர் அவனைச் சற்று நேரம் உற்றுப் பார்த்தார். பிறகு, “மோட்டிச்சுத் தின்னலாம் எண்ணு நெனப்பாவில?” என்றார். அவன் ஒன்றும் சொல்லாமல் அவரையே பார்த்தான். “வாயைத் தெறந்து சொல்லுவில” என்று ஒரு காவலன் பெருவட்டர் சார்பாய் அதட்டினான். பெருவட்டர் அவனைத் திரும்பிப் பார்த்தார். அவன் பின்னடைந்தான். “ம்ம்?” என்றார் பெருவட்டர். குஞ்சி தைரியம்

பெற்று, "கெளங்கு வாங்கிச் சுட்டுத் தின்னுயதுக்குத்தான் எடுத்தேன்" என்றான்.

"அவன அவுத்துவிடு" என்றார் பெருவட்டர். குஞ்சியின் கைகள் ரப்பர் தண்டுகள் போல உயிரற்றுத் தொங்குவதாய்ப் பட்டது அவனுக்கு. "எந்த தேசத்தான் பீல?" என்றார் பெருவட்டர். "கொலேரம" என்றான் குஞ்சி. "அப்பனும் அம்மயும் என்ன செய்யினும்?" "ஆரும் இப்பம் இல்ல." "ம்ம்... சோலி வல்லதும் குடுத்தா செய்வியா? "ஓம்" என்றான் குஞ்சி.

பெருவட்டர் திரும்பி, "பிலேய் யோசப்பு! இந்தப் பெயலுக்கு வயித்துக்கு வல்லது குடு. இஞ்ச நின்னுகிடட்டு" என்றார். குஞ்சி திடீரென்று விம்மி விம்மி அழ ஆரம்பித்தான். பெருவட்டர் அவனைப் புறத்தலையில் மெல்ல அறைந்து "ஏம்பில கரயுதே?" என்று அதட்டினார். குஞ்சி அழுகையை நிறுத்தி, மூக்கைப் பிழிந்தபடி யோசப்புடன் போனான்.

அந்த அறை பின்பு வெகுகாலம் அவன் பின்தலையைத் தொட்டு ஸ்பரிசம் உணர்த்திக்கொண்டிருந்தது. பாதுகாப்பாய்ப் பரிவாய், அவனை அவர் கண்டபடி திட்டி இருக்கிறார். ஒருபோதும் இம்சிக்கும் நோக்கத்துடன் அறைந்ததில்லை. அவர் மிருகத்தனமாய் ஆட்களை அறைந்து கண்டதுண்டு. அது மிக அபூர்வம். அறை பட்டவன் பிறகு ஆரோக்கியத்துடன் வாழவும் முடியாது. பலவீனமானவர்களை அந்தப் பெரிய உருவம் ஏதும் செய்யாது என்பது குஞ்சிக்குத் தெரியும். தவறு செய்துவிட்டவர்களை மற்ற வேலையாட்கள் கையில் சிக்கும் முன் நேராக ஓடிப் பெருவட்டர் முன் போய்ச் சொல்ல அவன்தான் உபதேசிப்பான்.

பல வருடங்களுக்கு முன் அவன் தோட்டம் பங்களாவிற்கு வந்தான். அவனுக்குக் கலியாணம் செய்து வைக்கப் பெருவட்டத்தி முயன்றதுண்டு. ஆனால் தன்னைச் சுற்றி எப்போதும் தனிமையின் ஒரு படலத்தைத் தக்க வைத்திருந்த குஞ்சி அதைக் கலைக்க முன் வரவேயில்லை. பெரிய பெருவட்டத்தி கெஞ்சியும், பயமுறுத்தியும் பார்த்தாள். பெருவட்டர், "அவனவிட்டுப் போடு. அவன் கெட்ட மாட்டான். சவத்துப்பய" என்று சொல்லிவிட்டார். அந்த வீட்டின் உள்ளே நிலவிய அமைதியில் தனக்குள் ஆழ்ந்தவனாக கரைந் திருப்பது குஞ்சிக்கு மிகவும் பிடிக்கும். அவனுக்குச் சின்னப் பெருவட்டத்தி மீது கசப்பு. அவனைத் துச்சமாக நடத்தினாள் என்பதற்காக அல்ல. அவளைப் பெருவட்டருக்குப் பிடிக்காது என்பதை அவன் அறிவான். பிரான்ஸிஸைப் பெருவட்டரைப் போலவே அவனும் விரும்பினான்.

மெல்ல வீட்டுச் சூழல் மாறி வருவதை அவனது மூடமனமும், கிரகித்துக் கொண்டுதான் இருந்தது பெருவட்டத்தி கோபமும் ஆங்காரமும் மிகுந்தவளாக ஆனாள். அவள் வீட்டுக்குள் இருக்கும் நேரங்களில் வீடு ரணகளமாயிற்று. லிவி எப்போதும் வீட்டுக்குள், மாடி அறைக்குள், அடைப்பட்டுக் கிடந்தான். பெரிய பெரு வட்டரின் உடல்நிலை அனேகமாய் இறுதிக்கட்டத்தை எட்டி விட்டிருந்தது. அவரால் பேச முடியவில்லை. தலையை மட்டுமே அசைக்க முடிந்தது. தலையணையில் முகத்தைக் கசக்கியபடி, 'முனகியபடி, கண்ணீர் விட்டார். கண்டன்காணி வந்து போன நாள். அவரில் இருந்த அமைதியும் பிரகாசமும் மீண்டும் விடை பெற்றுக் கொண்டன. அவர் இம்சை இரவு பகல் என்றில்லாமல் தொடர்ந்துகொண்டிருந்தது. அவர் எதற்காகக் கண்ணீர் விடுகிறார் என்று குஞ்சிக்குப் புரியவில்லை. வாழ்வில் சகலத்தையும் அடைந்த பெருவட்டருக்கு என்ன குறை இருக்க இயலும்? அவர் துக்கத்துக்குக் காரணம் கடைசி நாளில் அவர் குடும்பம் அவரை நடத்தும் முறைதான் என்று குஞ்சி நம்பினான். அது அவர்கள் மீதான அவன் வெறுப்பைப் பீரிட்டு எழச் செய்தது. வீட்டில் வேறு யாரிடமும் பேசப் பிடிக்காதவனாக அவன் ஆனான்.

பெருவட்டரை உணவூட்டுவது முதல் மலம் வெளியேற உதவுவது வரை குஞ்சிதான் செய்ய வேண்டியிருந்தது. அப்போது அவர் முகம் கொடூரமாய் இருக்கும். அவனை வெறுப்புடன் விழித்துப் பார்ப்பார். கைகால்களில் பலம் இருந்தவரை அவர்தான் கடும் வலியைப் பொறுத்தபடி அவற்றைச் செய்து வந்தார். ஒரு புறம் தளர்ந்துவிட்ட பிறகு குஞ்சியின் உதவி தவிர்க்க முடியாமல் ஆகிவிட்டது. அவனை அடிக்க முயல்வார். அவர் கொள்ளும் அவமானத்தையும், இம்சையையும் காண்பவன் அவன் என்பதனால் அவர் ஆங்காரம் முழுக்க அவன் மீதுதான். முதல் முதலாகக் கட்டிலில் சிறுநீர் கழிக்க நேர்ந்துவிட்ட அன்று சற்றுப் பிந்தி அவரை அணுகிய குஞ்சியை ஸ்வாதீனம் உள்ள காலால் ஓங்கி மிதித்தார். குஞ்சி மேஜை மீது தலை மோதி விழுந்தான். பெருவட்டர் விக்கி விக்கி அழுதார். ஆங்காரமும், வெறுப்பும் பீரிடும் முகத்துடன், "பிலேய் குஞ்சி, திண்ண சோத்துக்கு நண்ணி காட்டுபில; நாய்க்குப் பெறந்த பயலே... ஒரு வாய் வெஷம் கொண்டாந்து குடுத்துப் போடுல" என்று கத்தினார். குஞ்சி எழுந்து நின்று மவுனமாய் அழுதான். ஆனால் சில நாட்களுக்குப் பிறகு, கைகளும் தளர்ந்தபின், ஒரு இரவில், அவர் நிதானமான குரலில் அவனைத் தூக்கத்திலிருந்து எழுப்பி அதையே சொன்னபோது அவன் மனம் குலுங்கிப் போனான். பெருவட்டரின் முகம் கூசிச் சிறுத்துப் போயிருந்தது. பிச்சை கேட்கும் கணவனைப் போல

அவர் கண்கள் எரிந்தன. "குஞ்சி, மனசறிஞ்சுதான் செல்லுதேன். மலக்கறி தோட்டத்துக்கு அடிக்குத மருந்து அங்க இருக்கும். எடுத்துக் குடுத்துப்போடு. இல்லெங்கி செல்லையன் முறியில ஒறக்க மருந்து இருக்கும். அத எடுத்துக் குடு. சத்தியமாட்டுச் செல்லுதேன். மனசால ஒன்ன கும்பிட்டுகிட்டுப் போய்ச் சேருவேன்." "பெரு வட்டரே!" என்றான் குஞ்சி குரல் உடைய. பெருவட்டர் கண்களை மூடிக் கண்ணீர் விட்டார். "நொம்பலம் ஒக்கே சகிச்சிலாம்... மானக் கேடு சகிச்ச ஒக்கேல்ல குஞ்சி, நீதான் என்ன ரெட்சிக்கணும்..." குஞ்சி அவர் கட்டிலருகே மண்டியிட்டான். அழுதபடி, "நான் பாத்துக்கிடுதேன் பெருவட்டரே. ஒரு மானக்கேடும் இல்லாம நான் பாத்துக்கிடுதேன்" என்றான். பெருவட்டரின் குரல் சட்டென்று எழுந்தது. "சீ நாறப்பயலே. சீவிச்சிருக்கும்பம் ஒருத்தனுக்க கிட்டயும் தணிஞ்சு போவேல்ல. சாவ கெடக்கும்பம் ஒனக்கே கிட்ட வருவேன் எண்ணு நெனச்சியா?" என்று மூச்சிரைக்க சீறினார். பிறகு எதையோ எண்ணியவராக விம்மி அழத் தொடங்கினார்.

குரலெடுத்து யாரும் எதிர்கொள்ளத் துணியாத பெரிய பெருவட்டரை, பிறர் மேசை நாற்காலிபோல நினைத்து நடந்துகொள்ள ஆரம்பித்தது குஞ்சியைக் கொதிக்க வைத்தது. ஒருமுறை ஏதோ சாவி தேடிய பெருவட்டத்தி சரசரவென்று வந்து, பெருவட்டரின் தலையணையைத் தூக்கி, தேடிவிட்டுப் போனது அவனை முகத்தில் காறித் துப்பியதுபோல இருந்தது. ஹாலிலும் அறைகளிலும் பேசும் பேச்சுகள் அங்கும் எட்டின. மருந்து சாப்பிட மறுக்கும் பிடிவாதம் பற்றிய கண்டனங்கள் மற்றவர்களுக்கு உபத்திரவம் இல்லாமல் செத்து ஒழிவதுதானே என்ற இடம் வரை வந்து நிற்கும்போது குஞ்சியின் உடம்பு வெடவெடவென நடுங்கும். பெருவட்டர் கேட்டதுபோல விஷம் கொடுத்துவிடலாமா என்று கூடத் தோன்றும். ஆக்ரோஷத்தில் பெருவட்டருக்கு விஷத்தைக் கொடுத்துவிட்டு, தானும் சாப்பிட்டுவிடுவது என்று நினைப்பான்.

அதே சமயம் பெருவட்டரில் சில சமயம் உதிக்கும் தெளிவும், உயிராசையும் அவனை பிரமிக்கச் செய்தன. அது ஒரு மனப் பிராந்தி மட்டும்தானா எனச் சந்தேகிப்பான். ஆனால் முற்றிலும் தெளிவாகவே இருப்பவர் போலத் தோன்றுவார். ஒருமுறை, பகலில் அவனை அழைத்தார். பிரான்ஸிஸைப் பற்றிக் கேட்டார். அவன் இல்லை என்றதும் முகம் பரபரப்படைந்தது. அவனிடம், "குஞ்சி, நான் ஒரு சொப்பனம் கண்டேம்பில" என்றார். "எடத்துவா கோயில்ல ஒரு நேர்ச்ச நேர்ந்தா ஒக்கே செரியாயிப் போடும். ஒரு வெள்ளிக் கையும் காலும் செய்து அங்க கொண்டு செண்ணு வச்சா மதி. எல்லா ரோகமும் போவும். மின்ன மாதிரி எழும்பி

நடக்கக்கூட ஒக்கும்." பெருவட்டரின் முகம் பிரகாசித்துக் கொண்டிருந்தது. "எல குஞ்சி; ஒருக்கா ஆத்தில செண்ணு குளிச்சுப் போட்டுப் பசுக்களவும் பாத்துப்போட்டு வந்தா மதிவில. நீ பாத்துக்க இதொக்கே இன்னும் ஒரு ஆழ்ச்சியில செரியாயிப் போடும்" என்று பரவசத்தால் கம்மிய குரலில் சொன்னார்.

கொந்தளிப்பின் நீண்ட நேர அலைகளுக்குப் பிறகு, பெருவட்டரில் தெரியும் இந்த சில நிமிட ஜ்வலிப்புதான் குஞ்சியைப் பயமுறுத்தியது. அது, பெருவட்டர் அவரது இறுதியை நோக்கிச் சென்று கொண்டிருப்பதன் அடையாளம் என்று அவன் உள்ளுணர்வு கூறியது. அவர் குரலும் நின்றுபோய், மாமிசக் குவியலாக ஆகிவிட்ட பிறகு, அந்த அபார சாந்தியும் நம்பிக்கையும் முகத்தில் வந்துகொண்டுதானிருந்தது.

சில நாட்களுக்கு முன், சிறிய பெருவட்டரும் பெருவட்டத்தியும் போட்ட சண்டை வீட்டையே உலுக்கிவிட்டது. பெருவட்டர் சொத்துக்களை விற்பதனால் பெருவட்டத்தி சத்தம் போடுகிறாள் என்று குஞ்சிக்குத் தெரிந்தது. அவனுக்குப் பெருவட்டத்தி மீதுதான் கோபம் கரித்தது. என்னமோ அவளுக்கு மத்தவன் சம்பாரிச்ச சொத்து எண்ணுதான் நெனப்பு, என்று கறுவிக்கொண்டான். அதைத் தொடர்ந்து தங்கத்தின் மரணம். அந்தச் செய்தி குஞ்சிக்குப் பெரிய அதிர்ச்சியை அளிக்கவில்லை. லிவியும் அவளும் கொள்ளும் உறவுகளை அவன் அறிவான். அவனுக்கு லிவியைப் பிடிக்காது என்றாலும், அவன் கோபம் தங்கத்தின் மீதுதான். அவள் பெருவட்டரின் மகனைக் கவர முயல்கிறாள் என அவன் நம்பினான். அவள் தற்கொலை செய்துகொண்டாள் என்று கேள்விப்பட்டபோது, 'வேணும் சவத்துக்கு' என்றுதான் அவனுக்குத் தோன்றியது. அதைத் தொடர்ந்து பங்களாவில் நிலவிய பதற்றம் தான் அவனைப் பீதியுறச் செய்தது. லிவியும் பெருவட்டத்தியும் ஒரு கட்சியாகவும், பெருவட்டர் ஒரு கட்சியாகவும், நின்று பரஸ்பரம் தாக்கிக் கொண்டார்கள். பெருவட்டர் சதா போதையில் இருந்தார். ஒருமுறை அவர் லிவியை அடிப்பதற்காகப் பாய்ந்தபோது, லிவி கால் செருப்பைக் கழட்டிக் கையில் எடுத்துக்கொண்டான்; "அப்பன் எண்ணு பார்க்க மாட்டேன். சொல்லியாச்சி" என்றான். பெருவட்டர் உறைந்து நின்றார். பெருவட்டத்தி "வலிய சூரத்தனம் காட்டுத ஆம்பிள்ளையா பாரு. ஒக்கே இஞ்ச, வீட்டுக்குள்ள காட்டுங்க, தூ..." என்றாள். பெருவட்டர் அவளை ஆபாசமாய்த் திட்ட ஆரம்பித்தார். லிவியும் மாறி ஆபாசமான வார்த்தைகளைக் கொட்டினான். குஞ்சி சட்டென்று ஒருவித உறுதியுடன் அவர்கள் இடையே புகுந்தான். "அடிக்கவோ சாகவோ என்ன எளவோ செய்யுங்க; நீங்கள் அப்பனாச்சு பிள்ளியளாச்சு. அங்க ஒரு

மனியன் சாவக் கெடக்குதாரு. ஓங்கிளுக்கொக்கெ கஞ்சி ஊத்துத ஆளு. அந்த மனியனக் கொஞ்சம் சமாதானமாட்டுக் கெடக்க விடுங்க" என்றான்.

ஒரு கணம் அமைதி நிலவியது. பெருவட்டர் அதிர்ந்து போய் குஞ்சியைப் பார்த்தார். வாய்விட்டு நாலுவார்த்தை பேசத் தெரியாத குஞ்சியின் ஆக்ரோஷம் அவரைத் தாக்கிவிட்டது.

"நீ ஆருல இஞ்ச...? வேலக்காரப் பட்டி" என்றான் லிவி வெறி மிளிர்ந்த முகத்துடன்.

"ஓம். பட்டிதான். அது கொண்டுதான் திண்ண சோத்துக்கு இம்பிடு நண்ணியெங்கிலும் காட்டுதது. ஒரு காரியம் செல்லியாச்சு; எனக்கு மின்ன பின்ன பாக்குயதுக்கு இல்ல. செயிலெங்கி செயிலு. போலீஸெங்கி போலீஸு, இன்னி ஆரெங்கிலும் இஞ்ச நிண்ணு வலிய பெருவட்டனுக்கக் காது கேக்கச் சத்தம் போட்டாச்சு, சவிட்டி எல்ல பிடுங்கிப் போடுவேன். ஆணு பெண்ணு எண்ணு பார்க்கமாட்டேன். செல்லியாச்சு" என்றான்.

"நீரு ஆருபில இஞ்ச? மரியாதைக்கி வெளியே போவில" என்றாள் பெருவட்டத்தி திணறிய குரலில்.

கையை ஓங்கியபடி, மூர்க்கமான கோபத்துடன், குஞ்சி ஓரடி எடுத்து வைத்தான். மூச்சை இழுத்தபடி பெருவட்டத்தி பின்னகர்ந்தாள்.

"மிண்டாத... ஆரு இந்த வீட்டுக்க ஆளு எண்ணு எனக்கு அறியிலாம், அவிய செல்லட்டு. இல்லெங்கிப் பிராஞ்சி செல்லுட்டு, நீ மிண்டாத, கொறெநாளட்டு பாக்குதேன்; அவளுக்க சாட்டமும் பெகளவும், சோறு போடுத தெய்வமாக்கும் அங்க கெடக்கியது. அது ஓர்மயில்லெங்கி..." குஞ்சியினால் பேச இயலவில்லை.

அறையை விட்டு வெளியேறும் முன், குஞ்சி திரும்பிப் பெருவட்டரிடம் சொன்னான். "ஆரும் பேடிச்சாண்டாம், வலிய தோட்டம் பெருவட்டன் எனக்க அப்பன் இல்லை, அவகாசம் சொல்லிக்கிட்டு வர மாட்டேன். எப்பம் அவிய தல சாயுதோ, அப்பம் நானும் எறங்கிடுதேன். கூடிப் போனா ரெண்டு நாள். கொஞ்சம் பொறுத்துகிட்டா மதி..." செல்லையா பெருவட்டர் தளர்ந்தவராய் நாற்காலியில் விழுந்தார். பிறகு தலையைக் கைகளால் மோதியபடி அழ ஆரம்பித்தார்.

## ... 18 ...

இனிமேலும் வீட்டுடன் ஒட்டுதலின்றி இருப்பது சரியல்ல என்று பிரான்ஸிஸ் உணர்ந்தான். நாகர்கோயிலுக்குப் போய், சுந்தர லிங்கத்தைக் கண்டு, பிஸினஸ் விஷயங்களைப் பற்றி அறிந்தான். அவராலோ அவனாலோ இனிச் செய்ய ஏதுமில்லை. குறைந்தபட்ச நஷ்ட ஈடு கொடுத்து, கான்ட்ராக்டை ரத்து செய்வதுதான் ஒரே வழி என்று தெரிந்தது. ஆனால் அதற்கும் கோடிகள் தேவைப்படும் என்றது கணக்கு. தொடர்ந்து ரப்பர் சப்ளை செய்வதாக இருந்தால் நஷ்டம் அதற்கு இரு மடங்கு ஆகும். கேரள ரப்பர் போர்டு மறு பிறவி எடுத்த கணம் முதல் ரப்பர் விலை எகிற ஆரம்பித்து விட்டிருந்தது. எல்லா வழிகளிலும் சுவர்கள்.

அதைவிட அவனை இம்சைப்படுத்திய விஷயம் மனிதர்களின் மாற்றம்தான்; தாத்தாவின் நோய் நிலை விசாரித்து யாரும் வராமல் ஆனார்கள். பரிச்சயமுள்ள முகங்களில் எல்லாம் ஏதோ திரை விழுந்துவிட்டது. எவ்வித உணர்ச்சியும் காட்டாத, ஈரமற்ற, பொம்மைத்தனம் அவற்றில் வந்துவிட்டது. அப்பாவின் நண்பர் களில் யாரையும் அவனுக்கு அதிகமாய் தெரியாது. எல்லாரும் அவனிடம் நெருங்கவும், நட்பு காட்டவும், ஒரு காலத்தில் முயன்ற வர்கள்தாம். அவன்தான் அப்போது விலகிப் போனான். இன்று அவனைக் கண்டபோது அந்த முகங்களில் விருப்பமின்மையும் எச்சரிக்கையும் உடனே குடியேறுவதைக் கண்டான். வக்கீலும் ஆடிட்டரும்கூட மிகவும் தொழில் மனநிலையுடன் பழக ஆரம் பித்தனர். யாரையும் அணுக அவனுக்கும் மனமில்லைதான். ஆனால் எல்லார் உதவியும் தேவையாக இருந்தது. விற்க; விலைபேச; கணக்குகளை முடிக்க. நாகர்கோவில் சுந்தரலிங்கம் மட்டும்தான் வித்தியாசமாக இருந்தார். திரும்பத் திரும்ப அவனுக்கு அவர் ஒரு உறுதி அளித்தார்; எல்லா அலைகளும் ஓய்ந்த பின் அவனைத் தன் பிஸினஸில் சேர்த்துக்கொள்வதாக. "கொள்ளாம். ஓங்க பிஸினஸ் இப்பம் ஒரு மாதிரி நடக்குது எண்ணு தோணுது" என்று சிரித்தான். "ஏன் சிரிக்குதிய? நீங்க வந்தா இன்னும் வலிய ரீதியில் நடத்திலாம்" என்றார். "பூச்சய்க்கு அடுப்பில மண்ணு

தோண்டத்தான் தெரியும் மாமா" என்றான். "கொள்ளாம் பொன்னுப் பெருவட்டனுக்க பேரனா இது செல்லுயது?" பிரான்ஸிஸ் உரக்கச் சிரித்தான். "எனக்க அப்பனும் பொன்னு பெருவட்டனுக்க மகன்தான், என்ன செல்லுது?" என்றான். சுந்தர லிங்கம் தலைகுனிந்தார். ஆனால் அவர் சொன்ன வார்த்தைகள் தாம் பிரான்ஸிஸை நம்பிக்கை குலையாமல் இருக்கச் செய்தன. அறைக்கல் நாயர் மீது அவன் வன்மம் கொண்டபோது, அதனால் எந்தப் பிரயோசனமும் இல்லை என்று உபதேசித்தார். எல்லா வியாபாரச் செயல்களிலும் அனுபவ முதிர்ச்சியுடன் உதவி செய்தார்.

இருவகையான ஆட்களைப் பிரான்ஸிஸ் பார்க்க நேர்ந்தது. பார்த்தவுடன் முகம் திருப்பிக்கொள்கிறவர்கள், சிரித்தபடி அருகே வந்து, அனுதாபம் காட்டி, ஊக்கமூட்டி, மெல்ல வியாபாரப் பேச்சுக்குத் தாவுகிறவர்கள்; முழுகும் கப்பலில் மரம் பிடுங்க முயல்கிறவர்கள். இரண்டாம் வகையினரிடம் திரும்பத் திரும்ப அவன் ஏமாந்துகொண்டிருந்தான். ஒவ்வொரு அனுபவமும் அவன் மேல் அடியாக விழுந்தன. அந்த உலகின் மீதான அவனது கசப்பை அதிகரிக்கச் செய்தன. அவன் மூச்சுத் திணறினான். ஒவ்வொரு இரவும், 'போதும் இனி முடியாது! விட்டுவிட்டு ஓடிவிடலாம்' என்று மனம் தாவும். அந்தப் பலவீனத்தை எதிர்த்துப் போராடப் போராட மனம் களைக்கும். காலையில் புதிய சவால்கள், புதிய பாரங்கள். முகங்களை அவன் வெறுக்க ஆரம்பித்தான். அவன் முன் ஒரு முகம் வந்து அமரும் போதே வெறுப்புக் குறி அவனில் குடியேறி, உரையாடல் இம்சையாகி மாறிவிடும். அந்த இம்சையிலிருந்து தப்பத் தனிமையில் அலைந்தான். மீண்டும் பழைய போதைகளில் அலைய சில சமயம் மனம் தாவும். ஆனால் ஏனோ அதற்கும் முடியவில்லை.

சொத்துகளின் விற்பனையில் பெரிய தடையாக லிவியும் பெருவட்டத்தியும் இருந்தார்கள். பெருவட்டர் ஐ.பி. கொடுக்கட்டும் தனக்கு ஒன்றுமில்லை என்றான் லிவி. பெருவட்டரின் ஐ.பி.யில் லிவியும் பெருவட்டத்தியும் பங்கு கொள்ளாமல் முடியாது என்ற சட்டப் பிரச்சனை அவர்களை மேலும் கோபம்கொள்ள வைத்தது. வக்கீல்களிடம் மாறி மாறி வாதாடினார்கள். ஆனால் எங்கும் வேறு வழி இருக்கவில்லை. அந்தக் கோபத்தைக் காட்ட ஆளில்லாமல் பெருவட்டத்தி குமுறிக்கொண்டிருந்தாள். ஊருக்குள் எங்கும் அவளால் போக முடியவில்லை. தங்கத்தை அவளும் லிவியும் ஆள் வைத்துக் கொன்றுவிட்டதாக ஊர் முழுக்க வதந்தி பரவி யிருந்தது. அவளது கார் ஜங்ஷனில் எப்போதாவது தயங்க

நேர்ந்ததால் 'கொலைகாரி' என்று குரல்கள் தெருவிலிருந்து கேட்டன.

அனைத்திற்கும் மேலாக பிரான்ஸிஸை ஆச்சரியப்படச் செய்த விஷயம், அத்தனை நாள் கழிந்து, பெரிய பெருவட்டர் பாஸ்டரை அடித்த விஷயம் ஒரு பிரச்சனையாக முளைத்து வந்ததுதான். அது சர்ச் நிர்வாகக் குழுவில் பேசப்பட்டு, பிஷப் பரிசீலனைக்குப் போயிருப்பதாகத் தெரியவந்தது. அவர்களுடன் தொடர்புகளை அறுத்துக்கொண்ட உள்ளூர்ப் பெரிய தனக்கார கிறிஸ்தவர்கள் சர்ச்சுக்கு இழைக்கப்பட்ட அவமானத்தையே பிரதான காரணமாகக் கூறினார்கள். கிறிஸ்தவரல்லாதவர்கள் தங்கத்தின் மரணத்தைக் காரணம் காட்டினார்கள். ஆனால் யாருமே பிரான்ஸிஸ் காது கேட்க அதைப் பற்றிப் பேசத் தைரியப்பட வில்லை.

எல்லாவற்றையும்விட பிரான்ஸிஸ் முக்கியமாகக் கருதியது, இந்த வீழ்ச்சி தாத்தாவை அடையக்கூடாது என்றுதான். அவர் உடல்நிலை மாற்றமே இல்லாமல் தொடர்ந்துகொண்டிருந்தது. முனகலும் கண்ணீரும் தொடர்ந்து கொண்டுதானிருந்தது. ஆனால், தான் வாழ்நாள் முழுக்க உபயோகித்துத் தேடியதெல்லாம் இழக்கப்படப்போகும் செய்தி அவருக்கு மிகப் பெரிய அடியாக இருக்கும் என்று அவனுக்குப் பட்டது. குஞ்சியையும் மற்றவர் களையும் அவன் கடுமையாகப் பயமுறுத்தி வைத்திருந்தான்.

பிற்பகலில் ஒருநாள், நாகர்கோயிலுக்குப் போவதற்காகக் காரில் போய்க் கொண்டிருந்தபோது, எதிரே வக்கீலின் கார் வந்தது. கை தட்டினார். பிரான்ஸிஸ் நின்றான். "எங்க போறாப்ல?" என்றார் வக்கீல். "நாவருகோயில் வரெ போணும் எண்ணு நெனைச்சேன்." "ரொம்ப அவசரமோ?" "ஓ... இல்ல. பிள்ள வரணும்..." "எங்கியாவது கொஞ்சம் உக்காந்து பேசணுமே" என்றார் அவர். பிரான்ஸிஸ் எச்சரிக்கையாகி, "என்னது?" என்றான். "வாருங்க சொல்றேன்" என்றார் பிள்ளை. இருவரும் காருடன் குலசேகரம் பாருக்குப் போனார்கள். உட்கார்ந்த பிறகும் பிள்ளை கொஞ்சம் தயங்கினார். "சொலுங்க, என்ன சங்கதி?" என்றான் பிரான்ஸிஸ்.

"என்னைத் தப்பா நெனைக்கக்கூடாது. நான் சொல்றது தப்பா இருந்தா மன்னிச்சுடணும். ஒண்ணு கேள்விப்பட்டேன்..." பிள்ளை தயங்கியபடி, "தெரியும் இல்லையா? நாங்க வக்கீல்கள் எதிர் வக்கீல் ஆபிஸ்களிலே ஒற்றறிய ஆள் வச்சிருப்போம். இது ஒரு குமாஸ்தா சொன்னது. ஏதானாலும் சொல்லி வைப்போம் என்று காரைப் போட்டுக்கொண்டு வந்தேன்."

"சொல்லுங்க."

"பெருவட்டத்தி கோர்ட்டுக்குப் போவப் போறதாப் பேச்சு..."

"கோர்ட்டுக்கா...?"

"ஆமா. தம்பியும் உண்டு கட்சி, ஒருவேளை ஒரு பலத்துக்காக டிவோர்ஸ் கேட்டாலும் கேக்கலாம்."

பிரான்ஸிஸ் தன் கண்களுக்குள் குபீரென்று வெப்ப ரத்தம் ஓடுவதை உணர்ந்தான். விரல் நுனிகள் நடுங்கத் தொடங்கின.

"பெருவட்டர் சூடாக வேண்டியதில்லை."

"என்னைப் பெருவட்டருண்ணு விளிச்சாண்டாம்."

"சரி... நான் எதற்குச் சொன்னேன் என்றால்... நாம் தயாராக இருக்க வேண்டும். தம்பி விடுதலைப் பத்திரத்துக்காக வாதாடிப் பார்க்கலாம். பின்னெ இன்னொரு விஷயம். தப்பாய் நினைக்கக் கூடாது... பெருவட்டத்தியும் தம்பியும் தனியாக வக்கீலைப் பார்க்கப் போகவில்லை. கூட..."

"மதி" என்றான் பிரான்ஸிஸ். மீதி விஸ்கியை ஒரே மடக்கில் ஊற்றிவிட்டு எழுந்தான்...

"மிஸ்டர் பிரான்ஸிஸ்" எனப் பிள்ளை பதறினார்.

"பயப்படாண்டாம். நீரு போவும், நான் அங்க வந்து பாக்குதேன். பெறவு யோசிப்பம்..."

"பிரான்ஸிஸ், நீங்க நிதானமாக இருக்கணும்."

"இதுவரை நிதானம் இருந்தது. இனியும் இருக்கும். போருமா?"

பிரான்ஸிஸ் வீட்டுக்கு வந்தபோது பெருவட்டத்தி வந்திருக்கவில்லை. ஆபீஸ் அறையில், பெருவட்டர் கோசடித்த குரலில் ஏதோ பாடுவது கேட்டது. கிட்டத்தட்ட பைத்தியத்தின் குரல் போல இருந்தது அது.

குஞ்சி வந்து தயங்கி நின்றான்.

"என்னது குஞ்சி?"

"பெருவட்டரு..."

"என்ன ஆச்சு?"

"பெருவட்டருக்கு நாக்கு வெளங்கியாச்சு – பேசுதாரு. ரண்டு மூணுதரம் பிறாஞ்சி எண்ணு விளிச்சாரு." பிரான்ஸிஸ் முது

கெலும்பு கூசுவதை உணர்ந்தான். இந்தத் தெளிவு எதன் குறியீடு என்று தெரியும்.

"செரி" என்றான், குஞ்சியின் கண்ணைப் பார்க்காமலே.

"ஒண்ணு வந்து பாத்தா கொள்ளாம்."

"செரி வாரேன். நீ போ."

குஞ்சி போனான். பிரான்ஸிஸ் மேலும் மேலும் அமைதி அடைந்து கொண்டிருந்தான். இரவு தாண்டிப் பெருவட்டத்தியும் லிவியும் வந்தனர்.

பிரான்ஸிஸ் உறைந்த குரலில், "எடி, ஒனக்க கிட்ட ஒரு காரியம் செல்லணும்" என்றான்.

பெருவட்டத்தியின் முகம் மாறுபட்டது. அவள் கையில் இருந்த ஃபைலை லிவி வாங்கிக்கொண்டான். "என்னது?" என்றாள்.

"மேலே போவம்" என்றான் பிரான்ஸிஸ்.

"எதுக்கு?"

"வாறது ஒனக்குக் கொள்ளாம்."

பெருவட்டத்தியின் முகம் வெளிறி, உதடுகள் துடிக்க ஆரம்பித்தன.

'வா' என்றபடி பிரான்ஸிஸ் படியேறினான். சற்று நேரம் கழிந்து பெருவட்டத்தி மேலே வந்தாள்.

அறைக் கதவின் ஒலி கேட்டு, பிரான்ஸிஸ் திரும்பிப் பார்த்தான். அவள் ஒருகணம் பக்கவாட்டில் திரும்பிப் பார்ப்பது கண்டு லிவியும் கூட வந்து வெளியே நிற்கிறான் என உணர்ந்தான். "உள்ள வா கேக்கட்டு" என்றான்.

அவள் சேலையை நுனி இழுத்துப் போத்தினாள். கைகள் நடுங்கின. அவன் கண்களைத் தவிர்த்தாள்.

"வக்கீலத் தேடிப் போனியாமே?" என்றான் பிரான்ஸிஸ். அவள் அதிர்வது தெரிந்தது.

"என்னவாக்கும் பிளான்?"

அவள் திரும்பிப் பார்த்தாள்.

"ஒனக்க கிட்டதான் கேட்டது. செல்லிப்போடு."

அவள் எச்சில் விழுங்கியபடி, தவித்தபடி நின்றாள்.

"செல்லுடி, என்னவாக்கும் ஒனக்க பிளான்?"

லிவி கதவருகே தென்பட்டான். "அம்மா நீ போ. நான் பேசிக்கிடுதேன்."

"ஒனக்க கிட்டே ஆருல பேசினா, பேடிப்பயலே."

லிவி முன்னகர்ந்து, "லேய்! மரியாதையா பேசினா ஒனக்கு கொள்ளாம்" என்றான்.

பிரான்ஸிஸ் ஒரே எட்டில் அவனை நெருங்கினான். லிவி சுதாரிப்பதற்குள் அவன் கால் லிவியின் அடிவயிற்றில் பாய்ந்தது. 'யம்ம' என்ற வினோதமான உறுமலுடன் லிவி மடங்கிச் சரிந்தான். பெருவட்டத்தி இரு கைகளாலும் தலையைப் பிடித்துக் கொண்டாள். ஒரு கணம் ஸ்தம்பித்தாள். பிறகு அவள் குரல் 'கிரிச்'சென்று எழுந்தது.

பிரான்ஸிஸ் லிவியை வெளியே தள்ளிக் கதவைச் சாத்தினான். கொதிக்கும் முகத்துடன், பெருவட்டத்தியை நோக்கித் திரும்பினான்.

"கூதற தேவிடிச்சி, ஒனக்குக் கள்ள புருஷன் வேணும் இல்லியாடி...?"

அவள் சட்டென்று வெறித்த கண்களுடன் ஸ்தம்பித்தாள் - பிரான்ஸிஸ் சற்று அசைய அவள் பயந்து பின்னகர்ந்து சுவரில் பதிந்தாள்.

பிரான்ஸிஸ் தனக்குள் மிருக வெறி கொந்தளிப்பதை அறிந்தான். உள்ளூர ஏதோ எக்களிப்பு பொங்கியது. அவன் உடம்பு விரைத்து நின்றது. ஆயினும் அவனால் இயங்க முடிய வில்லை.

அவனைக் கட்டுப்பாடிழக்கச் செய்ய அவளின் ஒரு சிறு அசைவு போதும்; ஆனால் அது இல்லாதவரை மவுனத்தில் யுகங்கள் தாண்டிச் செல்லும் என்று பட்டது.

அவள் சட்டென்று, தைரியம் பெற்று, 'கதவ தெறபில' என்றாள் கூர்மையான குரலில்.

பிரான்ஸிஸ் வெளி மடை திறந்தது - அவன் முரட்டுக்கரம் எழுந்து தாழ்ந்தது. அவள் அப்படியே சுவரை அறைந்து விழுந்தாள். அவன் அவளைச் சரமாரியாக அடிக்க ஆரம்பித்தான்.

கதவில் யார் யாரோ முட்டும் ஒலி, அவனைப் பின்பு சமநிலைக்குக் கொண்டுவந்தது. நிற்க இயலவில்லை. முகம் கொதித்தது. மூச்சிரைத்தது. வியர்வை கொப்பளித்தது.

சுவரில் சாய்ந்து அமர்ந்திருந்தாள். வாயும் மூக்கும் ரத்தம் வழிய, முகம் வீங்கி – அவள் கண்கள் பீதியில் பதைபதைத்தபடி அவனைப் பார்த்தன.

"இனிமேல் இந்த வீட்டுப்படி தாண்டினா கள்ள மோளே... ஒனக்க சவம்தான், இருவத்திநாலு மணிக்கூறுக்க உள்ள – மனசிலாவுதா?"

பிரான்ஸிஸ் கதவைத் திறந்தான். பெருவட்டரின் போதையில் வியர்த்த முகம்... குஞ்சி... வேலைக்காரி.

"செண்ணு சமாதானப்படுத்தும், அருமப் பெண்டாட்டிய. இல்லெங்கி கண்டவன் கூடப் போவா நாய்க்குப் பெறந்த கூதற" என்றான் பிரான்ஸிஸ். படி இறங்கிக் கொண்டிருந்தபோது அவனுள் வெறி தணிந்தது. முன் ஹாலில் சோபாவில் அமர்ந்தான். வியர்வை உலர்ந்து குளிரத் தொடங்கியது. மெல்ல மனம் அடங்கியது. தனக்குள் குற்ற உணர்வு ஏதும் உருவாகவில்லை என்பது அவனுக்கு வியப்பளித்தது. ஆனால் அவனை மீறிக் களைப்பு கண்களை அழுத்தியது.

குஞ்சி அவனருகே வந்தான்.

"சின்ன – பெருவட்டரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துருக்கு."

"ம் ம்" என்றான் பிரான்ஸிஸ் கண்ணைத் திறக்காமலேயே. பிறகு, "தாத்தா ஒண்ணும் அறியாண்டாம்" என்றான்.

"ஓம்" என்றான் குஞ்சி.

பிரான்ஸிஸ் அப்படியே சரிந்து தூங்க ஆரம்பித்தான். கனவுகளும் அலைக்கழிப்பும் இல்லாத, ஆழங்களில் படிந்து அமைதியடைந்த தூக்கம்.

# ... 19 ...

கார் ஊர் எல்லையைத் தாண்டிய பிறகுதான் பிரான்ஸிஸ் சரியாக மூச்சுவிட ஆரம்பித்தான். எங்கேயாவது காரை நிறுத்தி விட்டு அழ வேண்டும் போலிருந்தது. குமுறிக் குமுறி தலையில் அறைந்தபடி அழுது ஓய்ந்தால் மட்டுமே மனம் அடங்கும் என்று பட்டது. ஆனால் அழ முடியவில்லை. தூய மனசுடன் ஒரு துளிக் கண்ணீர் விட முடிந்தால் போதும். எல்லாம் சரியாகிவிடும். ஆனால் எப்படி, எங்கு, எவர் முன்னிலையில்? யாருமில்லை; அணைத்து ஒரு வார்த்தை கூற. குற்ற உணர்வு மேலெழும்போது தாத்தாவைத் தேடி ஓடிவருவான் முன்பு. இன்று போக இடமில்லை, இனி ஒருபோதும் புகலிடம் என்று ஒன்று இருக்கப் போவதில்லை. அவன் மனம் பதைத்தது. காரை அருமனை சர்ச்சை நோக்கிச் செலுத்தினான். அங்கு தன் முகம் தெரிந்தவர்கள் யாரும் இருக்கக் கூடாது என்று உள்ளூரப் பிரார்த்தனை செய்தான்.

வானோக்கி உயர்ந்த பிரம்மாண்டமான சுட்டுவிரல் போலக் கூம்புக் கோபுரத்துடன், புராதனப் பாறைகளின் மவுனத்துடன் நின்றுகொண்டிருந்தது சர்ச். காலையில் அங்கு யாரும் இல்லை. தூங்குமூஞ்சி மரங்களும், வேப்ப மரங்களும், சலசலத்த பெரிய செம்மண் முற்றம். திறந்த வாசல் வழியாக உள்ளே அலங்கார லாந்தர்கள் தெரிந்தன.

காரை நிறுத்திவிட்டு பிரான்ஸிஸ் மெல்ல நடந்தான். ஏனோ உள்ளே போக மனம் வரவில்லை. வானில் மேகத்தை அளைந்த சிலுவையை அண்ணாந்து பார்த்தபோது, பறவைபோல மனம் மேலெழுந்தது. அந்த உணர்வை உள்ளே நுழைந்தால் இழக்க நேரும் என்று பட்டது. வேப்பமரத்தடியில், சருகுகள் பரவிய சிமிட்டி பெஞ்ச் கிடந்தது. சருகுகளை விலக்காமலே அமர்ந்துகொண்டான். மனம் விரியும் உணர்வு சற்று நிம்மதியைத் தந்தது.

ஆனால் சில நிமிடங்களுக்குத்தான் அந்த உணர்வு நீடித்தது. பின்பு மனம் கலைந்து அலைகள் தொடங்கின. தாத்தா எப்படி இருக்கிறார்? மீண்டும் அவர் தெளிவு விடை பெற்றுக்கொண்டு

விட்டதா? அப்படித்தான் தோன்றியது. அவர் பிரக்ஞை அவன் கிளம்பும்போதே மங்கியபடித்தான் வந்துகொண்டிருந்தது. அவர் இறுதி நெருங்கிவிட்டது என்பது சந்தேகமறத் தெரிந்தது. வீட்டின் அலைக் கொந்தளிப்புகளைக் கூட அந்தச் சம்பவத்தின் தீவிரம் அமுத்திவிட்டது. லிவி ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பி வரவில்லை. பெருவட்டர் மெழுகு பொம்மை போல சோபாவிலேயே அமர்ந் திருந்தார். பெருவட்டத்தியை அவன் பார்க்கவில்லை. எல்லாரும் தங்கள் சுய இம்சைகளை இயற்கையின் மகா சம்பவத்தின் முன் மறந்துவிட்டவர்கள் போலக் காணப்பட்டார்கள். இரவில் ஏதோ கனவின் ஊடே புகுந்து குஞ்சியின் குரல் கேட்டது. "பிறாஞ்சி பிறாஞ்சி" என்று. திடுக்கிட்டுக் கண்விழித்தான். "ஆ...ஆரு?" "நாந்தேன்." "என்னது குஞ்சி?" "பெருவட்டரு..." ஜில்லிட்டது மனம். லுங்கியை வரிந்தபடி எழுந்து, "என்ன ஆச்சு தாத்தாவுக்கு?" என்றான். குஞ்சி, "விளிச்சுதாரு" என்றான்.

தாத்தாவின் முகம் அமைதியும் பிரகாசமும் உடையதாக இருந்தது. அவர் உதடுகளின் கோணலும், முகத்தின் சுருக்கங்கள் கூடவும் சரியாகிவிட்டன என்று தோன்றியது. அவன் வரும் காலடியோசையில் அவர் கண்கள் மட்டும் திரும்பின. யாரையோ பார்ப்பதுபோல அவர் அவனைப் பார்த்தார்.

"தாத்தா" என்றான் பிரான்ஸிஸ். அவர் அவனை அடை யாளம் கண்டுகொண்டதாகவே தோன்றவில்லை. அவர் முகம் கனவு காண்பவர் போல இருந்தது.

"தாத்தா" என்றபடி பிரான்ஸிஸ் முழந்தாளிட்டான். அவர் அருகே முகம் வைத்து அமர்ந்தான்.

"தணுக்குது" என்றார் அவர்.

அவனுக்குப் புரியவில்லை. "தாத்தா" என்றான்.

"தணுப்பு" என்றார்.

"தணுக்குது எண்ணு சொல்லுதாரு" என்றான் குஞ்சி, இன்னொரு போர்வையை எடுத்து மூடியபடி.

அவர் மீண்டும், "தணுக்குது" என்றார்.

"ஹீட்டர் எடுக்கட்டுமா?" என்றான் குஞ்சி.

"வேண்டாம், அது கொண்டு பிரயோசனம் இல்ல."

அவன் அதிர்ச்சியுடன் பார்த்தான்.

"பெருவட்டன் சமாதானமாட்டு இருக்கணும்." குஞ்சி பிரான்ஸிஸின் தோளைத் தட்டியபடி சொன்னான்.

பிரான்ஸிஸின் கண்களை நிறைத்தபடி கண்ணீர் வழிந்தோட ஆரம்பித்தது. விம்மல்களை அடக்கச் சிரமப்பட்டான்.

பெருவட்டர் அவன் கண்ணீரைச் சற்றும் உணர்ச்சியில்லாமல் பார்த்தார். குஞ்சி ஆத்திரத்துடன், "என்ன பிறாஞ்சி இது? ஆணுங்க கரயிலாமா?" என்றான்.

"தணுப்பு தாங்க ஒக்கேல்ல" என்றார் பெருவட்டர் குஞ்சியிடம்.

"சூடாட்டு என்னெங்கிலும் குடிச்சுதா?"

"வேண்டாம். இன்னி குடிச்சா எறங்காது..." பெருவட்டர் கண்களை மூடிக்கொண்டார். முணுமுணுப்பாய், "பிறாஞ்சி செண்ணு ஒறங்கு. காலத்த ஒக்கெ செரியாவும்" என்றார்.

பிரான்ஸிஸ் நிற்க முடியாமல் டீபாயில் அமர்ந்தான். குஞ்சி சுவரில் சாய்ந்தபடி, பெருவட்டரைப் பார்த்தபடி நின்றான்.

நொடிகள் கூட மணிகளாக ஊர்ந்தன. அந்த நிலைமையிலும் பசியும் தூக்கக் களைப்பும் தன்னைத் தாக்குவதை பிரான்ஸிஸ் உணர்ந்தான். அவனுக்கே அவன் மனநிலை அருவருப்பூட்டியது.

தாத்தாவின் இறுதிக் கணங்களில், கூட இருக்கவில்லை என்ற பழியும் குற்ற உணர்வும், பிற்பாடு தனக்கு வரக் கூடாது என்பதற்காகத் தான் விழித்திருக்கிறோமா என்றுபட்டது. தலையை உலுக்கிச் சிந்தனைகளை விரட்டினான். பெருவட்டரின் விக்கல் ஒலி அவனை எழுப்பியது. உடம்பு குலுங்க, மோவாய் இழுபடப் பெருவட்டர் 'ஈக்' என்ற ஒலி எழுப்பியபடி விக்கிக் கொண்டிருந்தார். கண்கள் மூடியிருந்தன. கடைவாயில் எச்சில் வழிந்தது. குஞ்சி மெதுவான குரலில், "அப்பன விளிச்சட்டு" என்றான்.

பிரான்ஸிஸ் வெளியே ஓடினான். அவன் கலவரமான முகம் கண்டதும் பெருவட்டர் பாய்ந்து வந்தார். சிறிது நேரத்தில் அறைக்குள் கூட்டம் கூடிவிட்டது. "அடுக்க இரியுங்க" என்றான் குஞ்சி. பிரான்ஸிஸ் கட்டிலோரம் அமர்ந்தான். குஞ்சி டம்ளர் நிறையப் பாலையும் ஸ்பூனையும் தந்தான். பிரான்ஸிஸ் அவன் என்ன செய்யச் சொல்கிறான் என்றுகூடப் புரிந்துகொள்ள முடியாத மந்த நிலையில் இருந்தான். "கொறெசெ வாயில விடுங்க" என்று குஞ்சி தணிந்த குரலில் சொன்னான்.

பால் விடும்போது பெருவட்டரின் வாய் சற்று அசைந்தது. நா தாகத்துடன் வாய்க்குள் துழாவுவது தெரிந்தது. பிரான்ஸிஸின் விரல் நடுங்கியது. உதடுகளை நன்கு அசைக்க முடியாமையினால், பால் ஒரு ஓரமாய் வழிந்தது. பிரான்ஸிஸின் கைகள் நடுங்கின.

"மதி" என்று குஞ்சு கிசுகிசுத்தான்.

பிரான்ஸிஸ் அந்த முகத்தையே பார்த்தபடி அமர்ந்திருந்தான். அது வெளிற ஆரம்பித்திருந்தது. முன்பு இருந்த ஒளி அதில் இல்லை. அது பொம்மை போல ஆக ஆரம்பித்துவிட்டிருந்தது. எப்போது எக்கணம் அது, அது அல்லாமல் ஆகும். பிரமிப்பும் ஆவலும் ஏற்பட்டது. மரணத்தைக் கண்ணால் பார்க்கும் அபூர்வ கணம். உடனே அந்த ஆவலுக்காகத் தன்னைச் சபித்தான்.

மெதுவாய்ப் பெருவட்டரின் கண்கள் அசைந்தன. முகம் உயிர்ச் சலனம் பெற்றது. மூச்சு சீரடைந்தது.

குஞ்சி, பிரான்ஸிஸிடம், "பிறாஞ்சி செண்ணு கெட. ஒறங்காம இருக்காண்டாம்" என்றான்.

"தாத்தா."

"இன்னி கொறெ நேரத்துக்கு ஒண்ணும் ஆகாது."

பிரான்ஸிஸ் மனமில்லா மனசுடன் எழுந்தான். 'ஆவலா, பாசமா எது தன்னைத் தடுக்கிறது? உதறு உதறு... யோசிக்காதே...'

தூக்கம் சீக்கிரமே வந்துவிட்டது.

காலையில் பெருவட்டர் மேலும் தெளிவாக இருந்தார். குஞ்சி தரையில் உட்கார்ந்தவாறே தூங்கிக்கொண்டிருந்தான். பிரான்ஸிஸ் அவர் போர்வையை இழுத்துவிட்டான். கால்மாட்டில் நன்கு செருகிக்கொண்டிருந்தபோது அந்த வினோதமான உணர்வு ஏற்பட்டது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். கிழவரின் பார்வை அவன்மீது படிந்திருந்தது. உணர்ச்சியற்ற பார்வை. மனிதப் பார்வை போலவே அது இல்லை.

"பிறாஞ்சி" என்றார்.

"தாத்தா" என்றான் மூச்சடைக்க.

"ஒக்கே வித்தாச்சாவில?"

"தாத்தா" என்று பிரான்ஸிஸ் கிசுகிசுப்பாகக் கூவினான்.

"நீ கிருஷி செய்யி. கையும் காலும் இருக்கே" என்றார் அவர் மிகத் தெளிவாக. ஆனால் அவர் முகத்திலோ குரலிலோ கனிவின் அம்சமே இல்லை.

"தாத்தா... இதொக்கெ ஆரு சென்னது?"

"ஆரு சென்னா என்ன? ம்ம் போட்டும்... நான் சாவியதுக்கு ஆரு காக்காண்டாம். தோணுயத செய்யுங்க..."

பிரான்ஸிஸ் தாத்தாவின் முகத்தைப் பதைப்புடன் கண்களால் வருடினான். விரக்தியா? ஆனால் அவர் அமைதியாகவும் சந்தோஷமாகவும் இருப்பது போலத்தான் இருந்தது.

குஞ்சி அதற்குள் எழுந்து அருகே வந்தான். அவர் பார்வை குஞ்சியிடம் திரும்பியது. "தணுக்குது" என்றார்.

"பெருவட்டர் பாலு குடிச்சுதா?"

"ம்... ம்..."

இரண்டு டீஸ்பூன் பாலைப் பெருவட்டர் ருசித்துக் குடித்தார். சப்புக் கொட்டியபோது அவர் முகத்தில் மகிழ்ச்சிக்குறி ஏற்பட்டது. போதும் எனத் தலையசைத்தார்.

"குஞ்சி..."

"பெருவட்டரே..."

"ஒனக்குக் கொற ரப்பர் எளுதி வச்சிட்டுண்டு."

"பெருவட்டர் பேசாண்டாம்" என்றான் குஞ்சி. அவன் கண்கள் கலங்கி வழியத் தொடங்கின."

"நீ பிறாஞ்சிக்க கூட நின்னுக்க..."

"பெருவட்டர் ஒறங்கணும்..."

"நல்ல தணுப்புண்டுல குஞ்சி..."

பெருவட்டர் கண்களை மூடினார். குஞ்சி இன்னொரு கம்பளியால் அவரை மூடினான். பெருவட்டரின் மூச்சு ஒலிக்கத் தொடங்கியது.

பிரான்ஸிஸ் நேராக காரை நோக்கி ஓடினான்.

பிரான்ஸிஸ் பெஞ்சில் மல்லாந்து படுத்தான். மனம் மீண்டும் சிறு இம்சைகளை உதறி விரிந்தது. வானின் அபார விரிவில், தனிமையில், நின்றது சிலுவை. நிதானமாய் நகர்ந்த மேகங்கள் மீது வட்டமிடும் கரிய பறவை.

அங்கே எவ்வளவு அமைதி!

தாத்தா சொத்துகளின் இழப்பைப் பற்றியோ, பிறர் தன் மரணத்திற்காகக் காத்திருப்பதன் அவலம் பற்றியோ வருந்தமாட்டார். அவர் இனி சருகுகள் மண்டிய பூமியோடு சம்பந்தப்பட்டவர் அல்ல. மேகம் ஜ்வலித்து நகரும் வானத்துடன் தொடர்பு கொண்டு விட்டவர்.

பிரான்ஸிஸ் காதுகளில் கண்ணீர் சொட்டுவதை உணர்ந்தான்.

வெயில் மங்கலடைந்துகொண்டிருப்பதாகத் தோன்றியது. பிரான்ஸிஸ் காரைக் கிளப்பினான். மீண்டும் வீட்டுக்குப் போவதா வேண்டாமா என்று மனம் குழம்பியது. மரண சமயத்தில் தாத்தாவின் அருகே இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அவருக்கு எல்லாமே ஒன்றுதான். தனக்காக என்றால் அந்த அலைக் கழிப்பில் இருந்து தப்புவதே மனசுக்கு உகந்ததாய் இருக்கிறது.

'இனி?' என்றது மனம். எல்லாவற்றையும் விற்றுவிட்டு மீண்டும் தரைக்கே வர அதிகபட்சம் ஒரு வருடம். பிறகு? ஒரு இருபது ஏக்கர் தோட்டம் மிஞ்சினால் போதும், அதில் விவசாயம் செய்து வாழலாம். ஆனால் ஏன் வாழ வேண்டும்? பிரான்ஸிஸ் சிரித்துக் கொண்டான். எவ்விதப் பிரயோசனமும் இல்லாமல் வாழ்ந்த போதெல்லாம் எழாத கேள்வி இப்போது எழுகிறது. விவசாயம் செய்யச் சொன்னார் தாத்தா. அவர் அவனில் எதிர்பார்த்த ஒரே விஷயம்; செய்யலாம், ஆனால்?

ஆனால் என்றால்? கவுரவமா? உழைக்கப் பயமா? எது? எது சவ்வு போல மெலிதாய் ஆனால் கிழிக்க இயலாத வன்மையுடன் இடையே இருக்கிறது?

ஆர்வமில்லாமைதான் என்று பிரான்ஸிஸுக்குப் பட்டது. எதற்காகச் சிரமப்பட வேண்டும்? முன்பு அந்தச் சோம்பல் நாட்களில், 'ஒரு நாள் உயிர்தெழுவேன். தாத்தாவிற்கும் ஏளனம் மறைத்த முகங்களுக்கும் முன் தன்னை நிறுவுவேன்' என்பது ஒரு கனவாக இருந்து வந்தது, இனி எங்கும் தன்னை நிரூபித்துக் கொள்ள வேண்டியதில்லை. இனி தாத்தா இல்லை. இனிமேல் பிறர் முகங்கள் அவனுக்குப் பொருட்டே அல்ல.

அதைவிடத் தீமையின் மீதிருந்த அந்தப் பரபரப்பான ஆர்வம் எங்கே போயிற்று? குடிக்க முடியவில்லை. சுகேசினியின் ஞாபகமே கூசச் செய்கிறது. அந்த எண்ணங்களை உதறுவதற்காக மீண்டும் மீண்டும் போராட வேண்டியிருக்கிறது.

சூனியமான வாழ்வைக் குற்ற உணர்வைப் போட்டு நிரப்பி வந்தவன் அவன், இனி?

பிரான்ஸிஸ் பெருமூச்சு விட்டான்.

சாகலாம்.

ஆனால், அதிலும்கூட ஒரு நோக்கம் தேவைப்படுகிறது. அவன் மரணத்தால் அவனைத் தவிர யாருக்கும் நஷ்டமில்லை. அவன் சொந்த நஷ்டத்தை அவனே அறியப் போவதில்லை.

மரணம் கையில் இல்லை; காலில் இருக்கிறது; தயாராக. செய்ய வேண்டுவதெல்லாம் ஒரு ஒடிப்பு. ஒரு அழுத்தல்.

முடிந்துவிடும். துரத்தித் துரத்திக் கொட்டும் கேள்விகளுக்குப் பதில் கிடைக்காது. ஆனால் முடிவு வந்துவிடும். கேள்விகளே அர்த்தமிழந்து போய்விடும்.

சாலை திரும்பியது. மாறப்பாடி ரோடு. அது குலசேகரம் போக சுருக்க வழி. செம்மண் படிந்த சாலையோரம் இருபுறமும் பறந்துகொண்டிருந்தது. அதிவேகமாய்ச் சென்றுகொண்டிருக்கிறோம். நேர் எதிரே ஒரு பாறை தெரிவதை பிரான்ஸிஸ் பார்த்தான். சாலை அதனருகே 'L' போல வளைந்தது. மோதிவிட்டால் என்ன என்று ஒரு எண்ணம் வந்தது. அவனுக்கே பீதியூட்டும் அளவு அது நொடிநொடியாக விசுவரூபம் கொண்டது. வேகம் செவிமடல்களை அறைந்தது. வயிற்றில் மூத்திரம் கூசியது. ஒரு நொடி.... ஒரு நொடி.... போதும். இனி வேண்டியதில்லை. எல்லாம் இதோ இத்துடன் –

கார் பாறையைத் தாண்டியபோது, சட்டென்று அம்பு விடுபட்ட வில் போல நரம்புகள் தளர்ந்தன. ஒரு நொடியில் மனசுக்குள் என்னென்ன வந்து போயின! என்னென்ன? நினைத்துப் பார்க்க முடியவில்லை. இளமை நினைவுகளா? தன் உடல் பற்றிய பிரக்ஞையா? மனக்கோட்டைகளின் உலகமா? – ஒரு நொடிக்குள் பிரவாகமாய்த் தன்மீது பொழிந்த உணர்வுகள் எவை? தன் கைகளையும் கால்களையும் தன் கட்டுப்பாட்டிலிருந்து பிடுங்கி, காரை நடத்தியது எது?

பிரான்ஸிஸ் காரை நிறுத்தினான். நெற்றியிலும், காதுக்குப் பின்புறமும், நரம்புகள் துடித்தன. மார்பு அறைந்தது. வியர்வை கொப்பளித்தது.

கோழை.

முகம் முன் – கைநீட்டி யாரோ குற்றம் சாட்டுவது போல், ஸ்டியரிங்கில் முகம் வைத்தான். அழுகிறேனா? – இல்லை முகத்தில் வழிவது வியர்வையா?

கோழைதான், ஆனால் யார்தான் கோழை இல்லை? இவ்விஷயத்திலாவது? அப்படியா? அப்படியானால் எப்படித் தற்கொலை செய்துகொள்கிறார்களாம்? உயிரை வெறுத்தா? உயிரை வெறுக்க இயலுமா?

உலகை வெறுக்கலாம். உலகைப் பழி தீர்க்க உயிரைப் போக்கலாம். நான் இன்னமும் பூமியை வெறுக்கவில்லை. எல்லா வழிகளும் மூடப்பட்ட பின் மரணம் ஏற்க இயலுமாக இருக்கலாம். எனக்கு உள்ளூரத் தெரிகிறது, என் வழிகள் அடைந்து மூடிப் போகவில்லை. இன்னமும் எங்கோ எதுவோ மீதி உள்ளது. அங்கு

போக வழி தெரியவில்லை. நான் காத்திருப்பவன். காத்திருப்பவன் பயணத்தை எப்படி முடித்துக்கொள்வான்? ஆம், வாழ்பவர்கள் எல்லாரும் காத்திருப்பவர்கள்தாம். காத்திருக்க ஏதுமற்ற கணம் மரணம். எதுவரை காத்திருப்பு? அடையும் வரை, அடைந்த பின் இன்னொன்று. என் இரண்டாவது தொடக்கம் ஆரம்பமாக வில்லை? அந்த இடைவெளியின் இம்சைதான் இது.

மனம் அடங்கிக்கொண்டிருந்தது. பைத்தியம்போல யோசித்துக் கொண்டிருப்பதாய்ப் பட்டது அவனுக்கு. காரைக் கிளப்பினான். மெல்லக் காற்று முகத்தை அறைந்தபோது குளிரடித்தது. மனப் பாரத்தைக் காற்று எடுத்துக்கொள்கிறது. ரணங்கள் மீது மூலிகை மலைக்காற்றுப் போல.

கார் மாறப்பாடி ஜங்ஷன் தாண்டி, செம்மண் மேட்டை அடைந்து, ஏறி, மெல்ல முன்புறம் சரிந்தது. தாழைப் புதர்க் கோட்டையின் வாசல் வழியாக ஆறு தெரிந்தது. காரை மெதுவாக இறக்கிக் கலுங்கை அடைந்தான். நீருள் மூழ்கிய சிமிட்டி கலுங்கின் மீது அலைகள் சுழித்தன. கண்ணாடிப் பட்டைபோல நீல ஜலம். கார் இறங்கியபோது நீரின் கலகலப்பு ஒலிக்கத் தொடங்கியது.

மழை வரப்போவது போல வானம் மங்கலாய் இருந்தது. எனவே தூரத்தில் நீர் கருநீல நிறம் பெற்றுவிட்டிருந்தது. இலேசாய் ஒளியில் விளிம்புகள் மினுங்கின. கருமேகங்கள் அந்தரத்தில் உறைந்த புகைப்படலம் போலத் தொங்கிக் கிடந்தன. சிறு ஓடைபோல கோடைகால ஆறு ஒடுங்கி ஓடியது. மறுபுறம் மணற்பரப்பில் வண்டித்தடம், கரிய வடுபோல. ஆற்றின் இருபுறமும் பசும் கோட்டைச் சுவர்கள் போலத் தாழைப் புதர்களின் அடர்த்தி. மணல் பல நிறங்களில் இருந்தது. தூய வெண்மையாய், இளம் சிவப்பாய், ஆங்காங்கே கரிய, நீலநிற மணல் தீற்றல்களுடன். கரிய கூழாங்கற்கள் பரவிய அடித்தளம் தெரியும் துல்லிய ஜலம். ஆற்றில் சில பெண்கள் குளித்துக்கொண்டிருந்தார்கள். மார்புவரை கட்டிய துணிக்கு மேல் வளைவான மாநிற, வெண்மஞ்சள் நிற, சந்தனநிற தோள்கள். சருமங்கள் ஈரமாய் நீர்த் துளிகளுடன் ஜொலித்தன. சில பெண்கள் கழுத்துவரை நீரில் கிடந்து பேசிக்கொண்டிருந் தார்கள். ஏழெட்டுப் பையன்கள் பிறந்த மேனியாய்ப் பாய்ந்து, குதித்துத் திமிறி, ஓவென்று கூவி, நீரில் ரகளை செய்துகொண்டி ருந்தனர். நீர்த்துளித் தெறிப்புகளில் மாலை ஒளி சிதறியது. கரையில் மணல் மீது நின்றிருந்த பெண் குழந்தை பெரிய டர்க்கி டவலை மார்மீது கட்டியிருந்தது. அது பையன்களின் கும்மாளம் கண்டு சிறு குதிப்புடன் சிரித்துக் குலுங்கிக்கொண்டிருந்தது. அது குளித்து முடித்திருக்க வேண்டும். அதன் சருமம் புதுசாய் இருந்தது. ஒரு பையன் கூவியபடி ஓடிவந்து, அந்தர் அடித்து, நீரில் விழ, நீர்த்

துளிகள் அதன்மீது தெறித்தன. அது உரக்க சிரித்தபடி, உடல் கூசி, கைகளைக் காலிடுக்கில் வைத்து, முன்னால் குனிந்தபடி, பின்னகர்ந்து சிரித்தது. அதன் கழுத்து நரம்பு புடைப்பதுகூடத் தெரிந்தது.

காரை ஒரு பையன் கவனித்தான். அவன் ஏதோ கூற எல்லாக் குழந்தைகளும் திரும்பிப் பார்த்தன. ஒன்று உரத்த குரலில், "அம்பாசிடேர் அம்பாசிடேர்" என்று கூவியது. உடனே மீதிக் குழந்தைகளும் அப்படியே கூவ ஆரம்பித்தன. தாளத்துடன் கூவியபடி அவை குதித்தன. பெண்கள் கூடத் திரும்பி வேடிக்கை பார்த்தனர். ஒருத்தியின் சிரிப்பும் பற்களும் அழகாய்த் தெரிந்தன. பளீரென்று மனசை அறையும் ஒரு கவர்ச்சி அவள் வாய் – மூக்கின் அமைப்பில் இருந்தது. நீரருகே, மணல்மீது, ஆப்பு அறைந்து கட்டப்பட்டிருந்த கன்றுக்குட்டி மிரண்டு ஓடிக் கயிறு இழுபட, விலுக்கென்று கால் பரத்தித் தலைகுனிந்து நின்று, வட்டமாய்ச் சுற்றி வந்தது. பிறகு நின்று, தலை திருப்பி, காதுகளை முன்னால் நீட்டி, கண்களை உருட்டி விழித்து, நாசியைத் தூக்கி, "மீப்ரே?" என்று விசாரித்தது.

பிரான்ஸிஸ் மனம் மலர்ந்தான்.

புன்னகையுடன் காரை மறுகரையில் நிறுத்தினான். எஞ்சினை நிறுத்திவிட்டு இறங்கினான். குழந்தைகள் கூட்டமாய் நின்று மிக மவுனமாய் அவன் அசைவுகளைக் கூர்மையாகக் கவனித்தன. பெண் குழந்தை குதித்ததனால் அவிழ்ந்துபோன டவலை இரு கைகளாலும் மார்போடு அள்ளிப் பிடித்திருந்தது. அவன் மிக முக்கியமான அல்லது ஆபத்தான எதையோ செய்யப் போகிறான் என எதிர்பார்ப்பதுபோல எல்லா முகங்களிலும் மவுனம் துடித்தது.

பிரான்ஸிஸ் டிக்கியைத் திறந்து தகர டப்பாவை எடுத்தான். அதை மெலிசாய்த் தட்டியபடி நீரை அணுகிக் குனிந்தான். நீர் ஒலி படபடத்தது. குழந்தைகளுக்கு வேடிக்கை காட்டத்தான் இதையெல்லாம் செய்கிறோமா என்று எண்ணியபோது சிரிப்பு வந்தது. அவன் காரை அணுகியபோது, ஈரம் சொட்டச் சொட்ட இரு பையன்கள் அருகே வந்துவிட்டிருந்தார்கள். பிரான்ஸிஸ் நிதானமாய்த் தண்ணீரை ரேடியேட்டரில் ஊற்றினான். "அம்பாசிடேர் மோளுது டோய்" என்றான் ஒரு பையன். உடனே மற்றவர்கள் கிளுகிளுப்புடன் சிரித்தார்கள். பிரான்ஸிஸ் அந்தக் கரிய பையனைப் பார்த்துப் புன்னகை புரிந்தான். அவன் ஈரத் தலையைத் தொட்டபடி, "இனக்க பேரு என்ன?" என்றான். பையன் தவிட்டு நிற ஈறுகள் தெரியச் சிரித்தபடி, பின்னகர்ந்து, "ஸ்டீபன்" என்றான். "ஸ்டீபன் எத்தனாம் கிளாஸ்ல படிக்குதே?" "மூணு..." "அய்யட, மூணாம் கிளாஸா?" என்றான் பிரான்ஸிஸ். "சார் இவேன் மூணுவரியம் தோத்தான் சார்" என்று ஒரு பையன்

சொன்னான். ஸ்டீபன் அவனை அடிக்கப் போக, அவன் சிரித்தபடி விலகி ஓடினான். "தோக்கல்ல சார். அப்பனுக்குத் தேக சொகம் இல்லாத்ததுக்கொண்டு வேலய்க்குப் போனேன்" என்றான் ஸ்டீபன். "அப்பனுக்கு என்ன ரோகம்?" அப்போது இன்னொருவன் "அவனுக்க அப்பன் பனயில இருந்து விளுந்தது சார்" என்றான். இன்னொரு பையன், "சார் நாங்க கேறட்டா?" என்றான், "செரி கேறுங்க" என்றான் பிரான்ஸிஸ். ஸ்டீபன் எட்டி உள்ளே பார்த்துவிட்டு, பிரான்ஸிஸிடம் "வண்டிக்குள்ள அளுக்கு ஆவும் சார், போலே, துணி உடுக்காத பய பிளஷர் கேற வந்திருக்கான்" என்று சொன்னான். "சார் நாளைக்கு வருவியளா?" "ஆட்டும்" என்றான் பிரான்ஸிஸ். அவன் வண்டிக்குள் ஏறிக் கொண்டான். ஸ்டீபன் அக்கறையுடன், "சார் தள்ளணுமா" என்று விசாரித்தான். பிரான்ஸிஸ் சிரித்தபடி "வேண்டாம்" என்றான். "வரட்டுமா" என்று விடைபெற்றபடி காரைக் கிளப்பினான். குழந்தைகள் மீண்டும், "அம்பாசிடேர் அம்பாசிடேர்" என்று கத்த ஆரம்பித்தன. சற்று முன் மனசை அழுத்திக் குடைந்த உணர்வுகள் எங்கோ விலகி, அவை வெகு காலத்திற்கு அப்பால் எனத் தெரிந்தன கடலில் மழை பெய்யும்போது மணற்கரையில் நிற்பது போல மனசுள் புத்துணர்வு சிலுசிலுவென்று பரவியது.

சட்டென்று அவனுக்கு டாக்டர் ராம் நினைவுக்கு வந்தார். டாக்டரிடம் பேச அவனுக்கு ஏதுமில்லை. அவரை அதிகமாய்த் தெரியவும் தெரியாது. உண்மையில் அவன் அவர் பிரியத்துக்குரிய முகத்தைப் பார்க்க விரும்பினான். அக்கணத்து மனநிலையைத் தக்கவைத்துக் கொள்ள ஆசைப்பட்டான். ஆனால் தனிமை பெரிய பாரமாக இருந்தது.

டாக்டர் ராம் கிளினிக்கில் இருந்தார். நோயாளிகளும் குறைவாகவே இருந்தனர். முடிந்தபிறகு அவர் அறைக்குள் பிரான்ஸிஸ் நுழைந்தான். அவனை அவர் ஒரு முறைதான் முன்பு பார்த்திருக்கிறார். அவனைப் பற்றிக் கேள்விப்பட்டவற்றை உறுதிப் படுத்துவதாக இருந்தது அப்போது அவன் முகம். இப்போதைய பிரான்ஸிஸ் வியப்பூட்டுமளவு வேறு மாதிரி இருந்தான். ஒரு நெகிழ்ந்த முகபாவத்துடன் அவன் கண்கள் அவர் முகத்தில் பதிந்திருந்தன. பெரிய கைகளை மேஜைமேல் ஊன்றி, விரல்களைப் பிணைத்தபடி, அதிகம் பேசாமல், அமர்ந்திருந்த அந்த மனிதனை அவருக்குப் பிடித்திருந்தது. அவனைப் பற்றிய கணிப்புகளில் எங்கோ தவறு இருக்க வேண்டும் என்று உள்மனம் கூறியது. பிரான்ஸிஸ் ஒரு கனவானாகவும், அற்ப விஷயங்களுக்கு அப்பாற் பட்டவனாகவும் அவருக்குத் தோற்றமளித்தான்.

பிரான்ஸிஸிடம் அவன் தாத்தாவைப் பற்றிப் பேச டாக்டர் தயக்கமாய் உணர்ந்தார். ஆனால் அதைப் பற்றிப் பேசாமலிருக்கவும்

முடியாது. ஆனால் பேசியபோது ஆச்சரியமாக பிரான்ஸிஸ் விடுபட்ட மனநிலையில் இருப்பது தெரிந்தது. கவனமின்மை அல்ல, மாறாகத் துயரங்களைக் கடந்துவிட்ட அமைதி அது என்று தெளிவாகத் தெரிந்தது. "தாத்தா மனசடங்கிச் சாவ மாட்டாரு எண்ணு சொன்னாரு. மனசடங்காம ஆருக்கும் சாவ ஒக்காது. சீவிக்கணும் எண்ணு ஆசை இல்லாம இருக்காது. ஆனா சாவும்பம் ஒரு மாதிரி ஒரு சமாதானம் கிட்டும் எண்ணுதான் தோணுது" என்றான். அதைப் பற்றிப் பேசுவதுகூட அறிவுடைமை அல்ல. அந்த நிலைமையை உயிருடன் உள்ளவர்கள் உணர மாட்டார்கள் என்றார் ராம். "அதுவும் செரிதேன். எங்கிப்பின்ன பூமியில் சண்ட உண்டுமா சச்சரவு உண்டுமா" என்றான் பிரான்ஸிஸ்.

கம்பவுண்டர் தள்ளுகதவை ஓசையெழுப்பினான். ராம் கண்களால் என்ன என்றார். டாக்டர் லாரன்ஸ் வந்திருப்பதாகக் கம்பவுண்டர் கூறினான். ராம் புன்னகையுடன் லாரன்ஸ் வந்து கலந்துகொள்வதில் ஆட்சேபனை இல்லையே என்றார். பிரான்ஸிஸ் பதறிப்போய், 'நான் வேணுமானா வெளிய காத்திருக்குதேன்" என்றான். "அய்யோ நீங்க இருங்க. நீங்க லாரன்ஸை ரொம்ப விரும்புவீங்க. உங்க தாத்தாவுக்கு ரொம்ப வேண்டியவர். அவருடைய கொள்ளுத் தாத்தா தெரியுமில்லையா? கண்டன் காணின்னு பேரு" என்றார் ராம்.

லாரன்ஸ் உள்ளே வந்தபோது, பிரான்ஸிஸ் கிட்டத்தட்ட எழுந்துவிட்டான். "கண்டன் காணிக்க பேரனா. அது செரி ஒங்கள இதுவரை பார்த்ததே இல்லியே" என்றான் முகம் பூரிக்க. "காணிய கொறை கண்டிருக்கேன். இருவது இருவத்தஞ்சு வரியம் மின்ன..." என்றான். லாரன்ஸ் சிரித்தபடி, "உங்களை எனக்குத் தெரியும். ரண்டு மூணி பிராவசியம் கண்டிருக்கம்" என்றான். பிரான்ஸிஸ் சற்றுக் கூசி, "அது மின்ன, நான்..." என்று தடுமாறினான். "சாரமில்லை, விடுங்க. இப்பம் கண்டாச்சு இல்லியா" என்றான் லாரன்ஸ். பிரான்ஸிஸ் சிரித்தான்.

"பெருவட்டர் எப்பிடி இருக்கினும்" என்றான் லாரன்ஸ். பிரான்ஸிஸ் சலனமின்றி, "அவிய மனசு இங்கேருந்து போயாச்சு" என்றான். சட்டென்று மீட்டப்பட்ட மனத்துடன் லாரன்ஸ் நிமிர்ந்து, பிரான்ஸிஸைப் பார்த்தான். அவன் கண்கள் மினுங்கின.

"என்ன சாப்பிடறீங்க?" என்றார் ராம். "ஒண்ணும் இப்பம் வேண்டாம். கொற பொதுக்காரியம். அத்தியாவசியமா கொறெ எடங்க கறங்கணும்" என்றான். "என்னது?" என்றார் ராம்.

லாரன்ஸ் மூக்குக் கண்ணாடியைத் தள்ளியபடி, முன்நகர்ந்து அமர்ந்தான். "இஞ்ச நாங்க கொறெ பேரு சேந்து ஒரு சொஸைட்டி

ஃபார்ம் பண்ணணும்னு நெனைக்கம். என்விறான்மென்டல் சொசைட்டி மாதிரி. கொறெ ஆளு சேக்கணும்."

"என்ன சொசைட்டி?" என்றான் பிரான்ஸிஸ்.

லாரன்ஸ் ஒரு நிமிடம் யோசித்தான். பிறகு "பூமி மனியனுக்கு மட்டுமா, இல்ல கடவுள் படைப்பில் உள்ள எல்லாத்துக்கும் பொதுவா?" என்றான்.

பிரான்ஸிஸ் சற்றுக் குழம்பினான். பின், "இதில கேக்க என்ன இருக்கு?" என்றான்.

"ஆனா மனியன் இப்பம் என்ன நெனைக்குதான்? எல்லாமே அவனுக்காட்டு தான் படைக்கப்பட்டிருக்கு எண்ணு நெனைச்சு ஆட்டம் போடுதான். மனியனுக்கு கொறெ சுதந்திரமொக்கெ கடவுள் குடுத்திருக்காரு. அத அவன் நல்ல வளியில உபயோகப் படுத்தேல்ல."

பிரான்ஸிஸின் கண்கள் மாற்றம் அடைந்தன. அவன் மிகவும் சரியாக, உணர்வு ரீதியாகப் புரிந்துகொள்கிறான் என்பதை அது காட்டியது. லாரன்ஸ் உற்சாகம் அடைந்தான்.

"நான் செல்லுயது மனசிலாவுதா? இப்பம் ஒக்கே ஒரு பாலன்ஸில நிண்ணுகிட்டு இருக்கு. கடவுள் உண்டு பண்ணின பாலன்ஸ். உங்களுக்குக் கடவுள் நம்பிக்க இல்லெங்கி இயற்கை வைச்ச பாலன்ஸ் எண்ணு செல்லுங்க. ஆனா ஒரு பாலன்ஸ் இருக்கு இல்லியா? காடும் கடலும் மிருகமும் பறவையும் புளுவும் பூச்சியும் ஒக்கெ சேந்து...?"

"ஆமா" என்றான் பிரான்ஸிஸ் தீவிரமான முகபாவத்துடன்.

"அத, திமிரினால, எப்படியும் லாபம் சம்பாதிக்கணும் எண்ணுள்ள பேராசையினால, சுகபோகங்கள் மேல உள்ள ஆசையினால, மனுஷன் நாசம் பண்ணிக்கிட்டு வாறான். அதுக்க பலன்கள் இப்பமே கிட்ட தொடங்கியாச்சு. இப்பம் சுத்தமான குடிவெள்ளம் உண்டுமா? சுவாசிக்க சுத்தமான காற்று உண்டுமா?"

"ஆனா நாம என்ன செய்ய ஒக்கும்?" என்றான் பிரான்ஸிஸ் தீவிரத்தன்மை மாறாத குரலில்.

"அதிப்பம் செல்லப் போனா, வலுதா ஒண்ணும் செய்ய ஒக்காதுதான். ஆனா, ஒண்ணும் செய்யாம இருக்கியறதக் காட்டியும் கொறையென்னெங்கிலும் செய்யியது நல்லது எண்ணு தோணுது – மனசுக்கு ஒரு சமாதானம். பின்ன ஆண்டவரும் இதயொக்கெத் தான் செய்தாரு, மிஸ்டர் பிரான்ஸிஸ். அதிகார வெறிக்கும் வெறுப்புக்கும் எதிரா அன்ப வச்சாரு. அவரு சிலுவையில துடிச்சுச்

செத்த பிறவும், இஞ்ச ஒண்ணும் நடக்கேல்ல. ஆனா ஒண்ணு; லோகத்தில கொறெயெங்கிலும் நன்ம மீதி இருக்குது எண்ணு சென்னா அதுக்கு ஆண்டவருக்க கண்ணீரும் சோரயும் ஒரு காரணம்தேன்..."

பிரான்ஸிஸ் நெகிழ்ந்து போனான். லாரன்ஸை அவனால் பார்க்க இயலவில்லை. பார்வையை மேஜைக்கு விலக்கிக் கொண்டான்.

"நாளைக்கு இது பெரிய பிரச்சனை ஆயிடும் மிஸ்டர் பிரான்ஸிஸ். இப்பம் மேற்கு நாடுகளிலே இது ஒரு பெரிய இயக்கமா ஆயிட்டது. கேரளாவில கூட சாதாரண ஜனங்கள்கூட இதைப் பற்றிப் பேசற நிலைமை வந்தாச்சு. நாம இங்க தொடங்கி வைப்போமே – அது கொண்டு பிரயோசனம் உண்டா இல்லையா என்று நம்ம பிள்ளைகள் சொல்லட்டும்." ராம் சொன்னார்.

"இப்பம் ரப்பரயே எடுத்துக்கிடுங்க. அது நம்ம ராஜ்ஜியத்து மரம் இல்ல. எக்கச்சக்கமா மள பெய்யுத நாட்டில் உள்ள மரம். லாபத்துக்காக இஞ்ச கொண்டு வந்தாவ. மலையும் காடும் எல்லாம் ரப்பர் தோட்டமா மாறியாச்சு. மலைகள் முளுக்க இப்பம் ஒரே மரம். ஒரே சருகு... ஒரே வேரு. சென்னேன் இல்லியா – இயற்கை யோட பேலன்ஸ் ஒக்கே போச்சு. ரப்பர் மரத்திலே பறவைகள் கூடணஞ்சு பாத்திருக்கியளா? ரப்பர் காட்டுக்குள்ள புளு உண்டா? பூச்சி உண்டா? சந்தயா இருந்த எடம் பட்டாளக் கேம்பா ஆனது மாதிரி இருக்கு சண்டா... வரிவரியா... போட்டும், இப்பம் நம்ம நதியில தண்ணி உண்டா? அணையில மணல் தானே கெட்டி கெடக்குது? ஏன் எண்ணு யோசிச்சியளா ஆரெங்கிலும்? ரப்பர் வந்த பெறவு மலையில ஈரம் இல்ல, ஊற்று இல்ல. மலை ஊறாம நதியில எங்க தண்ணிவரும்? வாய்க்கால் மாதிரிப் போவுது வள்ளியாறு! மீதி இருக்க காட்டயும் வெட்டிப் போட்டா மணலு கோரி டவுண்ல விக்கலாம். காங்கிரீட்டு வீட்டில ரப்பரும் திண்ணு கெடக்கிலாம். ரப்பர் மரங்க இந்த ஊரோட சீதோஷணத்தயே மாத்தியாச்சு. ரப்பர் வேணும்; வேண்டாமின்னு செல்லேல்ல. ஆனா, ரப்பர விட்டா வேற மரமே இல்லைங்குத நெலமை ரொம்ப ஆபத்தாக்கும். இப்பம் இதப் பிடிச்சுக் கெட்டேல்லெங்கி ஊரயே கொளம் தோண்டின பெறவுதான் அடங்கும்."

"இந்த ரப்பர் காற்று சுவாச நோய்களுக்குக் காரணம் என்று ஒரு கட்டுரை சமீபத்தில் படித்தேன்" என்றார் டாக்டர் ராம்.

"அதுக்கு வேற எங்க போகணும், இந்த ஊரு வயசாளிகளக் கண்டா போராதா?" என்றான் லாரன்ஸ்.

"மெம்பர்ஷிப் எதுவரை ஆயிருக்கும்?"

"ஆயிக் கெண்டிருக்கு எண்ணு செல்லணும்" என்றான் லாரன்ஸ்; பிரான்ஸிஸிடம் திரும்பி, "நீங்க ஒரு மெம்பர்ஷிப் எடுக்கணும்" என்றான்.

"நானா?" என்றான் பிரான்ஸிஸ் சிரித்தபடி.

"ஏன், எடுத்தா என்ன?"

"இவர் பெரிய ரப்பர் மொதலாளி" என்றார் ராம்.

பிரான்ஸிஸ் கடகடவென்று சிரித்தான். "அதொக்கெ இப்பம் ஒரு வளி ஆய்யாச்சு" என்றான்.

சட்டென்று அமைதி நிலவியது. லாரன்ஸ் சற்றுத் தயங்கி, "நாங்களும் கொறெயொக்கெ கேள்விப்பட்டம், என்னவாக்கும் சத்தியம்?" என்றான்.

"சத்தியம் ஒக்கெ செல்லாண்டாம்" என்று பிரான்ஸிஸ் சிரித்தான். "அப்பன் ஒரு எக்ஸ்போர்ட் பிஸினஸ் நடத்தினாவ. அவியளுக்குக் காரியங்க ஒண்ணும் தெரியாது. அது பொளிஞ்சு போட்டு. ஒரு மாதிரி மானத்தோட பிடிச்சு நிக்கணுமெங்கி கொறெ ரூவா ஆவும். கஞ்சிக்குள்ளது மிஞ்சுமா எண்ணு செல்ல ஒக்காது." மற்றவர்கள் முகங்களை மாறி மாறிப் பார்த்தபடி பிரான்ஸிஸ் சொன்னான். "நீங்க என்னத்துக்க கவலப்படுதிய? எனக்கு ஒரு துக்கமும் இல்ல. எளவு போனா அம்பிடும் ஆச்சு. மனியனுக்கு இம்பிடு பணம் வலிய பாரம்."

"பெருவட்டர் ரொம்ப ஆடிப் போயிருப்பாரே?"

"மீசேல்ல மண்ணு ஒட்டேல்லண்ணு செல்லுதாரு, இனி சிட்டம் ஜீவிதம் களிச்சு கூட்டணுமே? தாத்தா இருக்கும்பம் எஸ்டேட்டுகள விக்கியதுதான் கஷ்டம். செத்து ஒளியட்டும் எண்ணு அப்பன் நெனைக்குதாரு."

"சேச்சே..."

"என்ன சேச்சே? எனக்கும் அப்படித்தான் இருக்கு. வயசும் கொறை ஆச்சுதே. போற காலம்தானே?" சட்டென்று தன் தொண்டை தழதழப்பதை உணர்ந்து பிரான்ஸிஸ் கூசிப் போனான், உதட்டைக் கடித்துக்கொண்டபடி, சிறுத்து விகாரமடைந்த முகத்துடன், அவர்களை மாறி மாறிப் பார்த்தான்.

"பிரான்ஸிஸ்தான் இனிமேல் விவசாயத்தை எல்லாம் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்றார் ராம், பேச்சை மாற்றும் நோக்கத்துடன்.

"ஒரு எளவும் வேண்டாம், எப்பிடியேம் தொலஞ்சு போட்டும், எண்ணுதான் கொறெ நேரம் மின்னவர தோணிச்சு. இப்பம் அப்பிடி விட ஒக்காது எண்ணு தோணுது. செய்யியதுக்கு ஒருபாடு காரியங்க இருக்கு இல்லியா? படிப்பும் அறிவும் இல்லேங்கிலும் கையும் காலும் இருக்குதே..." பிரான்ஸிஸ் சிரித்தான். "சத்திய மாட்டுதேன் சொல்லுதேன் – பணம் போறதப் பத்தி எனக்கு ஒரு துக்கமும் இல்ல."

லாரன்ஸ் புன்னகையுடன், "ஆகாயத்துப் பறவைகள் விதைப்பதில்லை, அறுவடை செய்வதில்லை" என்றான்.

பிரான்ஸிஸ் சட்டென்று புல்லரித்தான். எத்தனை அற்புதமான வரிகள்! இவை ஏன் இதுவரை புரியவில்லை? திரும்பத் திரும்பக் கேட்டும் ஏன் மனசைத் தாக்கவில்லை? ஒவ்வொன்றுக்கும் ஒரு மனோபாவம் வேண்டுமா? ஒரு சந்தர்ப்பம், ஒரு காலம் வர வேண்டுமா? அந்த வார்த்தைகளைப் பலமுறை மனசுக்குள் திரும்பத் திரும்பக் கூறினான். சொல்லச் சொல்ல அவை மந்திரம் போல அவனுள் விரிந்தன. புதுப்புது அர்த்தங்களுடன் வளர்ந்தன. ஆகாயத்துப் பறவைகள்! ஆகாயத்தில் ஒரு பறவை!

நர்ஸ் எட்டிப் பார்த்தாள். "சார், போன்!" என்றாள்.

"ஒரு நிமிஷம்" என்றபடி ராம் எழுந்து போனார் சில நிமிடங்கள் கழித்து கதவு கிரீச்சிட்டது. உறைந்த முகத்துடன் ராம் உள்ளே வந்து, "பிரான்ஸிஸ்! உங்க வீட்லேருந்துதான் ஃபோன்" என்றார்.

"எனக்கா?" என்றான் பிரான்ஸிஸ்! சட்டென்று அறுபட்டது மான ஓட்டங்கள் அப்படியே உறைய.

"எனக்கு வந்த ஃபோன்தான், நீங்க இருக்கிறதா சொன் னேன்..."

பிரான்ஸிஸ் எழுந்தான். இதயம் உதறிக்கொண்டது. ஃபோனை அணுகும் முன் ராமிடம் "என்ன சங்கதி?" என்றான்.

"உங்கள் தாத்தா..."

பிரான்ஸிஸின் நெற்றி நரம்பு புடைத்தது. அவன் ரிஸீவரை எடுத்தான். சரியாகப் பிடிக்க முடியவில்லை. இரு கைகளாலும் பற்றிக்கொண்டான். ஆனால் போனில் ஏதும் கேட்கவில்லை, அவன் மூச்சொலி தவிர.

◆



ரப்பர் நாவலின் மையம் பிரான்ஸிஸ்தான். ஆரம்பம் முதலே தயக்கமும் குழப்பமும் கொண்டவனாக இருக்கிறான். இயல்பான நன்மனதுக்கும் காமத்துக்கும் பல்வேறு வகையான அகச்சிக்கல்களுக்கும் நடுவே அவன் அலைமோதுகிறான். அவனில்தான் ஒரு நூற்றாண்டு திசைமாறும் தருணத்தின் தத்தளிப்பு முழுக்க உள்ளது. அவன் அடையும் ஒரு தரிசனமே உண்மையில் இந்நாவல். ஆற்றின் குறுக்காக காரைக் கொண்டுசெல்லும்போது கூச்சலிடும் குழந்தைகளின் குதூகலம் கண்டு அவன் மலரும் கணம்.

இந்நாவலுக்கு உந்துதலாக இருந்ததே நான் என் இளமையில் மாறப்பாடி ஆற்றின் குறுக்காகச் சென்ற சாலையில் கண்ட ஒரு காட்சிதான். கார் மறுபக்கம் சென்றபின் சன்னல் வழியாக குழந்தைகளுக்குக் கையாட்டிச் சிரித்த அந்த இளைஞன், அவன் ஒரு நாவலாக மாறியிருப்பதை அறிந்திருக்கமாட்டான்.

- ஜெயமோகன்

நற்றிணை பதிப்பகம்

ISBN 978-93-82648-40-6

விலை
ரூ. 150